மேல்நோக்கி நகர்தல்

விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

வருடாந்த அறிக்கை 2022



விமான மற்றும் விமான சேவைகள்
(இலங்கை) (தனியார்) நிறுவனம்

மேல்நோக்கி நகர்தல்

எதிர்பார்ப்புகளைத் தாண்டிச் செல்லல் என்பது விமான மற்றும் விமான சேவைகளில் நாம் அடைய முயற்சிக்கும் ஒரு பண்பாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, விமானச் சேவை துறையில் எமக்கான இடத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் எமது பார்வையாளர்களின் பல தரப்பட்ட தேவைகளுக்கு அப்பால் சேவை செய்யும் திறன் முக்கியமானது. சொகுசு முதல் ஆடம்பரம் வரை, உபசரிப்புக்கு சுவையூட்டும் கலையாக, இலங்கைக்கு வருகை தரும் ஆயிரக்கணக்கானோருக்குத் தடையற்ற அனுபவமாக எமது ஒத்திசைக்கப்பட்ட பணி ஓட்டம் காணப்படுவதுடன், எமது சகிப்புத்தன்மைக்கும் அது ஒரு சான்றாகும். சில சவாலுக்குரிய வருடங்களிலும் அளவு கடந்த அர்ப்பணிப்பை நாம் வெளிப்படுத்தியுள்ளதுடன், தீர்மானம் மிக்க எமது இயல்பு, பயன்களை அறுவடை செய்ய விளைந்துள்ளது. நாம் ஒவ்வொரு நாளும் காண்பது போல, எமது குழுவின் வளர்ச்சி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியன எமது இலக்குகளை நோக்கிய நகர்வுகளில் புதிய உயரங்களை எட்டுகிறது.

உள்ளடக்கம்

தொலைநோக்கு மற்றும் செயற்பணி	3
வரலாற்று ரீதியான மைல்கற்கள்	6
நிதிச் சிறப்பம்சங்கள்	8
செயலாற்றுகைச் சிறப்பம்சங்கள்	9
நிறுவனம்சார் கட்டமைப்பு	10
முழு வருடமும் ஒரே பார்வையில்	11
தவிசாளரின் செய்தி	12
தலைமைத்துவ குழாம்	16
சிரேஷ்ட முகாமைத்துவ குழாம்	21
கம்பனியின் அலுவல்கள் தொடர்பான நிறைவேற்று நிர்வாகச் சபையின் அறிக்கை	26
கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் (AMC) அறிக்கை	31
முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்	37
நிதிநிலை மீளாய்வு	51
மனிதவள முகாமைத்துவம்	57
இடர் முகாமைத்துவம்	63
கூட்டிணைந்த நிர்வாகம்	69

நிதி அறிக்கைகள்

நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	78
முழுமையான வருமானம் பற்றிய அறிக்கை	86
நிதி நிலை தொடர்பான அறிக்கை	87
பங்கில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் தொடர்பான அறிக்கை	88
பணப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை	89
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்	90
இணைப்பு மற்றும் பரிமாணங்கள்	118
கூட்டிணைந்த தகவல்	120

தவிசாளரின் செய்தி

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு இந்த மீளாய்வை எழுத எனது சிந்தனையினை ஒருங்கிணைக்கின்ற வேளையில், அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தது போன்று, விடிவொன்று ஆரம்பித்திருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்...

மேலும் படிக்க பக்கம் 12

முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

மேலும் படிக்க பக்கம் 37

நிதிநிலை மீளாய்வு

மேலும் படிக்க பக்கம் 51

மனிதவள முகாமைத்துவம்

மேலும் படிக்க பக்கம் 57



தொலைநோக்கு

“ஒரு நிலைபேறான பொருளாதாரத்தை கட்டமைக்கும் நோக்கோடு உலகளாவிய இணைப்பை ஏற்படுத்துவதில் நட்புநேய விமானச் சேவைப் பங்குதாரர்.”

பணிக்கூற்று

“பங்குதாரர் திருப்தியை உறுதிப்படுத்துவதற்கு சிறந்த நடைமுறைகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் போட்டித்தன்மை வாய்ந்த, பாதுகாப்பான விமானச் சேவைகள் மற்றும் உயர்ந்தபட்ச பயணிகள் அனுபவத்தை வழங்குதல்”





வரலாற்று ரீதியான மைல்கற்கள்

இலங்கை விமான சேவையின் வரலாறு 'சிலோன்' எனும் நாமத்தில் விமானச் சேவை ஒன்றை நிறுவியது முதல், 1932ஆம் ஆண்டு விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) லமிடட்டின் உருவாக்கம் வரை நீண்டு செல்கிறது. அதிலிருந்து 91 வருடங்கள் கடந்துள்ள நிலையில், விமானச் சேவைத் தளமானது, அதன் அனைத்து அடையாளங்களையும் கடந்து மாற்றத்தை எதிர்கொண்டுள்ளது. அதன் ஒவ்வொரு தசாப்தமும் புதிய அபிவிருத்திகள் மற்றும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. அவை அதன் எதிர்காலத்துக்கான பாதையையும் செப்பனிட்டுள்ளது. "*ஒரு நிலைபேறான பொருளாதாரத்துக்காக உலகளாவியத் தொடர்பில் நட்புறவான விமானச் சேவைகள் பங்குதாரர்*" எனும் தொலைநோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, மேன்மையை நோக்கிய அதன் பயணத்தில் இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள்இ அதற்கே உரித்தானதை அதுவாகவே வடிவமைத்துக் கொண்டுள்ளது. உலகளவிலுள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் சிறப்பானதொரு சேவையை வழங்குவதில் இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள் முன்னிற்கிறன.

1983ஆம் ஆண்டு இலங்கையிலுள்ள அனைத்து விமான நிலையங்களிலும் முழுமொத்த அபிவிருத்தி, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் சேவை வழங்கலாகத் தனது தொழிற்பாடுகளை இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள் அமைப்பு ஆரம்பித்தது. அதன் கூட்டிணைவைத் தொடர்ந்து, சர்வதேச சிவில் விமானச் சேவைகள் அமைப்பின் (ICAO) உறுப்பினராக கடமைகளை விடுவிப்பதற்கு அரசாங்கத்தின் முகவராக இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள் நியமிக்கப்பட்டது.

மேன்மை தங்கிய இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் பயணம் பின்வரும் மைல்கற்களை உள்ளடக்கியுள்ளது:

1930

- சிலோனூடாக இந்தியா மற்றும் பிரித்தானியாவுக்கு இடையேயான விமான அஞ்சல் சேவையை ஆரம்பிப்பதற்கு சிலோன் ஆளுநர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தார்.

1934

- இரத்மலானையில் ஒரு தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு சிலோன் அரச சபை முடிவெடுத்தது.

1936

- இரத்மலானை தள விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுற்றன.
- பொதுமக்களுக்கான விமானப் பயணத்துக்கான வாய்ப்புகளை வுாந யுநசழ ஊடரடி ழக ஊநலடழடி ஏற்படுத்திக் கொடுத்தது.

1937

- முதலாவது வான்வழிச் செலுத்துகைக்கான ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்டன.
- இலங்கைப் பதிவுக் குறியீட்டைத் தாங்கிய முதல் மூன்று விமானங்களும் விமானப் பதிவேட்டில் பதிவேற்றப்பட்டன.

1938

- பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி இரத்மலானை விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
- பொது வேலைகளின் பணிப்பாளர், சிவில் விமான சேவையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1939

- புத்தளத்தில் உடனடித் தரையிறக்கம் ஒன்று நடைபெற்றது.

1942

- 2ஆம் உலக மகா யுத்தம் தொடங்கிய பின்னர், இரத்மலானையின் தொழிற்பாடுகள் ரோயல் விமானப் படையின் கரங்களைச் சென்றடைந்தன.

1945

- ஐக்கிய இராச்சியம் - அவுஸ்திரேலியா - 'LANCASTRIAN' சேவை சிலோனூடாக அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது.

1946

- போக்குவரத்து அமைச்சின் கீழ் சிவில் விமானச் சேவைத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.
- சிவில் விமான சேவைக்காகவென ரோயல் விமானப்படையிடம் இருந்து இரத்மலானை தள விமான நிலையம் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

1947

- ஏயார் சிலோன் - தொடர்பாடல் மற்றும் வேலைகள் அமைச்சின் கீழ் தேசிய சேவை (National Carrier) உருவாக்கப்பட்டது
- யாழ்ப்பாணம் ஊடாகக் கொழும்பிலிருந்து மெட்ராஸுக்கு சர்வதேச விமானச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1948

- சர்வதேச சிவில் விமானச் சேவை அமைப்பின் உறுப்பினராக இலங்கை நியமிக்கப்பட்டது

1950

- 1950ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டம் பகிரங்கப்படுத்தப்பட்டது.
- விமான ஓட்டுநர்களுக்கான பயிற்சி நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டது.

1955

- முடுஆ ரோயல் டச்சு விமானச் சேவையுடன் எயார் சிலோன் ஒரு உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டது.

1959

- சர்வதேச விமானத் தொழிற்பாடுகள் கட்டுநாயக்கவை நோக்கி நகர்த்தப்பட்டன.

1963

- கட்டுநாயக்க விமான நிலையத்தின் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- கனடா அரசாங்கத்தின் உதவியுடன் 1,840 மீட்டர்களாக இருந்த சுயுகு ஓடுபாதை 3,350 மீட்டர்களாக விரிவாக்கம் செய்யப்பட்டது.
- வருடாந்தம் 150,000 பயணிகளுக்கு வசதியளிக்கக்கூடிய முனையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

1967

- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் தாபிக்கப்பட்டது

1968

- விசாலமான முனையம், விமானத்துக்கான பொருட்கள் ஏற்றிடம் மற்றும் வான்கல வழி ஆகியன நிர்மாணிக்கப்பட்டன.

1979

- தேசிய சேவை – எயார் லங்கா – தாபிக்கப்பட்டது
- 1979ஆம் ஆண்டின் விமான நிலையங்கள் அதிகார சபைச் சட்டம் பகிரங்கப்படுத்தப்பட்டது, மேலும் விமான அதிகார சபை தாபிக்கப்பட்டது.

1980

- சிவில் விமானச் சேவைத் திணைக்களத்திடமிருந்து சிவில் தொழிற்பாடுகளை விமான நிலைய அதிகார சபை கையகப்படுத்திக் கொண்டது.

1981

- இலங்கையில் சிவில் விமானச் சேவையைக் கையாள்வதற்காக அரசாங்கத்திற்குச் சொந்தமானதொரு நிறுவனத்தைத் தாபிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது

1982

- வான்வழிச் செலுத்துகை சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1983

- விமான நிலையங்களின் முழுமொத்த அபிவிருத்தி, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகளைத் தாபித்தல்

1984

- ஒரு புதிய ஓடுபாதை, பயணிகளுக்கான முனையத்தைக் கொண்ட கட்டடம், கார்கோ நிலையம், கட்டுப்பாட்டுக் கோபுரம் மற்றும் வழி செலுத்துகை சேவைகள் மற்றும் பராமரிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ஒரு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

1987/88

- ஒரு புதிய ஓடுபாதை ஒன்றும், 3.5 மில்லியன் பயணிகளை வருடாந்தம் கையாளக்கூடிய திறன் படைத்த முனையம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

1992

- எயார் கார்கோ கிராமம் உருவாக்கப்பட்டது.

1998

- டுபாயைத் தளமாகக்கொண்டு இயங்கி வரும் எமிரேட்ஸ் குழு, எயார் லங்காவைப் பகுதியாகக் கையகப்படுத்தியதும், அது "ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2005

- எட்டு பயணிகளை ஏற்றும் பாலம், விரிவுபடுத்தப்பட்ட முனையம், ஓய்வறைகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய ஒரு புதிய தோற்றத்தை விமான நிலையம் தழுவிக் கொண்டது.

2008

- இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள் அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடியது.

2010

- 14ஆம் இலக்கம் சிவில் விமானச் சேவை சட்டம் 2010ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது.
- நியதிச் சட்ட சேவை வழங்குநராக இலங்கையில் சிறிய சிவில் விமானத் தளங்களை செயல்படுத்துவதற்கான சான்றிதழ் மற்றும் உரிமத்தை இலங்கை சிவில் விமானச் சேவை அதிகார சபை, இலங்கை விமான மற்றும் விமானச் சேவைக்கு வழங்கியது.

2012

- 1912 டிசம்பர் 7ஆம் திகதி ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் முதலாவது விமானம் அதன் வான்வழிப் பயணத்தை நிறைவு செய்ததோடு, சிவில் விமானச் சேவைத் துறை அதன் 100 வருடச் சேவையைப் பூர்த்தி செய்தது.

2013

- ஹம்பாந்தொட்டையில் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

2015

- மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை விளம்பரப்படுத்தும் நோக்கோடு, வான்வெளியின் அனைத்து சுதந்திரங்களும் விமானச் சேவைகளுக்குக் கிடைக்கும்படியாக மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் அமுல்படுத்தப்படவென "திறந்த வான்வெளிக் கொள்கை" ஒன்று அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

2017

- A380 விமானங்களைத் தரையிறக்க முடிந்தவாறு, 60 மீற்றர்களாக இருந்த பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் 75 மீற்றர்களாகப் புதுப்பிக்கப்பட்டு, "குறியீடு F" எனும் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டது.

2018

- சிவில் தொழிற்பாடுகளுக்காக மட்டக்களப்பு விமான நிலையம் மீளத் திறந்து வைக்கப்படுமெனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

2019

- யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

2020

- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முனையம் 2இன் தொடக்க விழா.

2021

- புதிதாக புதுப்பிக்கப்பட்ட "அராலியா லவுஞ்ச்" வணிக வகுப்பு பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கூகுள் உள்ளக வரைபடங்கள் வெளியிடப்பட்டன, இலங்கையில் இந்த சிறப்புக்கூறை முதலாவதாக அறிமுகப்படுத்திய உள்ளக வசதியாக வரலாற்றில் அது தடம் பதித்தது.

2022

- முதல் வகுப்புப் பயணிகளுக்கு 'காப்பீட்டு வரிக்கான விமான அனுபவம்' ஒன்றின் ஊடாகப் பயனடைவதற்கு **'GOLD ROUTE'** தயாரிப்பு வெளியிடப்பட்டது.


நிதிச் சிறப்பம்சங்கள்

	2022 இ ரூ மில்	2021 இ ரூ மில்	2022/21 +/- %	2020 இ ரூ மில்	2021/20 +/- %
இலாபம் மற்றும் நட்டம்					
வருமானம்	27,647	7,879	+100%	8,011	-2%
பணவீக்கத்திற்கு முன்னரான நிர்வாக செலவீனம்	12,575	9,006	40%	9,768	-8%
EBITDA	15,023	(1,176)	+100%	(1,805)	35%
நிலையான சொத்துக்களது தேய்மானம்	2,367	2,648	-11%	2,854	-7%
நிகர நிதிச்செலவீனம் / (வருமானம்)	6,272	(2,815)	-100%	(878)	+100%
வரியிடலுக்கு முன்னரான இலாபம்	6,433	(961)	+100%	(3,733)	74%
வருமான வரி	1,630	1,123	45%	(1,228)	-100%
வரியிடலுக்கு பின்னரான இலாபம்	4,803	(2,084)	+100%	(2,504)	17%
பங்கு உரித்தாளர்களுக்கு தாக்கமேற்படுத்தும் இலாபம்/(நஷ்டம்)	4,803	(2,084)	+100%	(2,504)	17%
பணப் புழக்கம்					
பங்கிலாபம்	500	-	+100%	-	-
டிசெம்பர் 31 வரையிலான பணம் மற்றும் பண நிகரன்கள்	642	413	56%	826	-50%
வருடத்துக்கான மொத்த மூலதனச் செலவுகள்	7,016	22,960	-100%	2,169	+100%
நிதி நிலைமை					
டிசெம்பர் 31 வரையிலான பங்குடைமையாளர் நிதியம்	45,257	41,314	10%	36,983	12%
டிசெம்பர் 31 வரையிலான தற்போதைய சொத்துகளற்றவற்றின் மொத்த கொண்டு நடாத்தப்பட்ட அளவு	89,790	79,414	13%	55,571	43%
டிசெம்பர் 31 வரையிலான மொத்த தற்போதைய சொத்துக்கள்	89,740	47,430	89%	47,645	0%
டிசெம்பர் 31 வரையிலான மொத்த தற்போதைய பொறுப்புக்கள்	21,195	7,927	+100%	6,202	28%

தற்போதைய வருடத்தின் முன்வைப்புக்களை உறுதிப்படுத்தவேண்டிய அத்தியாவசிய சந்தரப்பங்களில் முந்தைய வருடத்தின் அளவீடுகள் மீளஒழுங்கமைக்கப்பட்டன.

100% க்கும் அதிகமான மாறிகளை குறிக்கும் -100% அல்லது +100%

அனைத்து அளவுகளும் கிட்டிய மட்டம் தட்டலிற்கு உட்பட்டவை



செயலாற்றுகைச் சிறப்பம்சங்கள்

		2022	2021	2020	2019	2018
செயற்பாட்டு மேற்கோள்கள்						
சரவதேச விமான இயக்கங்கள்	எண்ணிக்கை.	37,641	21,204	20,881	62,195	67,351
பயணிகள் இயக்கங்கள்*	எண்ணிக்கை.	5,503,198	1,505,479	2,375,056	9,958,688	10,884,028
சரக்கு இயக்கங்கள்**	மெ.தொ.	173,597	200,179	150,075	259,089	279,559
பறத்தல் இயக்கங்கள்	எண்ணிக்கை.	23,846	9,339	16,370	45,674	43,804
டிசெம்பர் 31 வரையிலான மொத்த தொழிலாளர்கள்	எண்ணிக்கை.	3,854	3,985	4,098	4,182	3,836
விகிதங்களில் மேற்கோள்கள்						
பங்குகளின் மீளல்	%	11	(5)	(7)	28	19
மொத்த நிகர வருவாய் வரிக்கு முன்னரான இலாபம்	%	23	(12)	(47)	59	36
பங்குதாரர் நிதிய வரிக்கு முன்னரான இலாபம்	%	14	(2)	(10)	39	37
மொத்த சொத்துக்களுக்கான மொத்த வருவாய்	தடவைகள	0.15	0.06	0.08	0.24	0.29
தொழிலாளி ஒருவருக்கான மொத்த சொத்து	ரூபா'000	46,583	31,830	25,187	25,891	26,286
தொழிலாளி ஒருவருக்கான மொத்த பணியாள் செலவு - ஆண்டொன்றுக்கு	ரூபா'000	2,594	1,881	1,811	1,944	1,947
விமான இயக்கத்துக்கான மொத்த செலவு	ரூபா'000	727	574	738	235	318
பயணிகள் இயக்கமொன்றிற்கான வருவாய்	ரூபா	5,024	5,234	3,373	2,580	2,640
பயணிகள் இயக்கமொன்றிற்கான வரியின் பின்னரான இலாபம்	ரூபா	873	(1,384)	(1,054)	1,104	488
பணியாள் ஒருவருக்கான விமான இயக்கம்	எண்ணிக்கை.	10	5	5	15	18
விமானமொன்றுக்கான பயணிகள்	எண்ணிக்கை.	146	71	114	160	162
பணியாளொருவருக்கான பயணிகள்	எண்ணிக்கை.	1,428	378	580	2,381	2,837
முடுக்கும் விகிதங்கள்	%	41	39	19	13	20
மொத்த சொத்துக்களின் மீளல்	%	3	(2)	(2)	10	5
நிகர இலாப விகிதம்	%	17	(26)	(31)	43	18
மூலதன உற்பத்தித்திறன் குறிகாட்டி	தடவைகள	0.00	0.00	0.10	0.25	0.29
பங்கொன்றின் ஈட்டல்	ரூபா	24,013	(10,417)	(12,522)	54,979	26,566
தற்போதைய விகிதம்	தடவைகள	4.23	5.98	7.68	7.23	3.49
மொத்த செலவீனத்துக்கான மொத்த வருமானம்	தடவைகள	1.24	0.92	0.76	2.04	1.49

* உள்வருகை, வெளியேறல், பறிமாறல் மற்றும் உள்ளூர் பயணிகள் தவிர்த்த போக்குவரத்தினை உள்ளடக்கும் பயணிகள் இயக்கம்

** ஏற்றுமதி.இறக்குமதி மற்றும் உள்ளூர் சரக்கு மற்றும் வான்வழி தபால் தவிர்த்த சரக்கு அனுப்புதல்



நிறுவனம்சார் கட்டமைப்பு

பணிப்பாளர்கள் சபை



தவிசாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

உப தவிசாளர்

- இயந்திரப் பொறியியல் பிரிவு
- விநியோகச் சங்கிலி முகாமைத்துவப் பிரிவு
- மனித வளங்கள் பிரிவு
- சிவில் விமானச் சேவைப் பயிற்சிப் பிரிவு
- சிவில் பொறியியல் (பராமரிப்பு) பிரிவு
- கட்டடக்கலை, நிலத்தோற்ற வடிவமைப்பு மற்றும் உட்புற வடிவமைப்பு
- தீயணைப்பு மற்றும் மீட்புச் சேவைகள் பிரிவு
- இலத்திரனியல் பொறியியல் பிரிவு
- பாதுகாப்புப் பிரிவு

- தகவல் தொழில்நுட்பப் பரிவு
- நிதியியல் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதப் பிரிவு
- பாதுகாப்புச் சேவைகள் பிரிவு
- வணிகம்சார் மற்றும் சொத்துகள் பிரிவு
- சட்டப் பிரிவு
- விமான நிலைய முகாமைத்துவப் பிரிவு
- சிவில் பொறியியல் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவு
- இலத்திரனியல் மற்றும் வான் பயணப் பொறியியல் பிரிவு
- வான் பயணப் பொறியியல் சேவைகள் பிரிவு
- செயற்றிட்டப் பிரிவு
- மூலோபாய முகாமைத்துவப் பிரிவு
- சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டிணைந்த தொடர்பாடல்கள் பிரிவு
- கார்கோ மற்றும் எயார் கார்கோ முகாமைத்துவப் பிரிவு
- நுண்ணறிவு மற்றும் பாதுகாப்புத் தொழிற்பாடுகள் பிரிவு
- வான்வழித் தகவல் முகாமைத்துவப் பிரிவு

"மருத்துவ சேவைகள் பிரிவு" விமான நிலைய முகாமைத்துவப் பிரிவின் கீழ் பேணப்படுகிறது.

முழு வருடமும் ஒரே பார்வையில்

5,503,198
சர்வதேச பயணி அமைப்புகள்

37,641
சர்வதேச விமான அமைப்புகள்

23,846
வான்வழி அமைப்புகள்

173,597 மெ.தொ.
கார்கோ அமைப்புகள



27,647 மில்லியன் ரூபா
கொள்முதல்

4,803 மில்லியன் ரூபா
வரிக்குப் பின்னரான நிகர இலாபம்

179,530 மில்லியன் ரூபா
மொத்த ஆதனங்கள்

3,854
பணியாளர் எண்ணிக்கை

தவிசாளரின் செய்தி



“வெற்றி இறுதியானதும் அல்ல, தோல்வி என்பது மரணமும் அல்ல: துணிவுடன் தொடர்வதே முக்கியம்”- வின்ஸ்டன் சேர்ச்சில்

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு இந்த மீளாய்வை எழுத எனது சிந்தனையினை ஒருங்கிணைக்கின்ற வேளையில், அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தது போன்று, விடிவொன்று ஆரம்பித்திருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இலங்கை அதன் வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத மோசமான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறது. குறிப்பாக சுற்றுலாத்துறை படிப்படியாக வளர்ந்து வருகிறது, அது எமக்கு முக்கியமான நலன்களை ஏற்படுத்துகின்றது.

மீளாய்வின் கீழ் உள்ள ஆண்டினை நான் திரும்பிப் பார்க்கும்போது, அது ஒரு கொந்தளிப்பான மற்றும் சவாலான காலகட்டமாக இருந்தது என்பதை நான் நினைவுகூர்கிறேன். கொந்தளிப்பு என்பது விமானப் போக்குவரத்துத் துறைக்கு பழக்கமான ஒன்றுதான் அதேவேளையில் அந்த நிலைமையினை எதிர்கொள்ளும் போது, அதனூடாக நிலைத்திருக்கும் தன்மை மற்றும் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டிய சரியான திசை ஆகியவற்றைப் பார்க்கின்றோம். எமது நிறுவனத்தில், நான் முதற்கொண்டு மிகவும் கடைசி நிலைப் பணியாளர் வரை, அனைவரிடமும் இந்த நற்பண்புகள் ஏராளமாக உள்ளன என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். நாங்கள் உண்மையில் அந்தச் சவால்களைக் கடந்து வந்துள்ளோம், அந்த சாதனைக்கு தலைமைத்துவத்தை வழங்கியதில் நான் உளப்பூர்வமாக பெருமிதமடைகின்றேன்.

BIA முனையம் II திட்டம் நிறுத்தப்பட்டமை இந்த ஆண்டில் நாம் எதிர்கொண்ட பாரிய பின்னடைவாகும். 2018 இன் போது (தொற்றுநோய் வருவதற்கு சற்று முன்பு), BIA வரலாற்றில் மிகப்பெரிய பயணிகளின் வருகை எண்ணிக்கையை பதிவு செய்துள்ளோம், அது BIA க்கு அவசரமாக ஆற்றல் விரிவாக்கங்கள் தேவை என்பதைத் தெளிவாகக் காட்டியது. தொற்றுநோயின் காரணமாக பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்தமை எம்மை ஆசுவாசப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பத்தைக் கொடுத்தது, இருப்பினும் இது எங்களின் அனைத்து முக்கிய வருமான வழிகளையும் அடைத்துவிட்டது. முனையம் II திட்டத்தைத் திரும்பப் பெறுவது அவசியம், இது எங்களின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

எரிபொருளின் பற்றாக்குறை எங்கள் செயல்பாடுகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியது, சாதனங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை கொண்டு செல்வதும் பெரும் சவாலாக இருந்தது. எவ்வாறாயினும், விரைவாக முடிவெடுத்தல் மற்றும் தூரநோக்கு சிந்தனையுடன் செயற்பட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் அர்ப்பணிப்புடனான விநியோகத் திட்டத்தினை நிறுவி, எமது எரிபொருள் தேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆனால் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது. இது எமது செயல்பாடுகளுக்கு போதுமான எரிபொருளைப் பெறவும், எமது ஊழியர்களின் போக்குவரத்தை உறுதி செய்வதற்குத் தேவையான எரிபொருளை வழங்கவும், எமது விமான நிலையங்களில் நீடித்த செயல்பாடுகளுக்கு வழி வகுத்த ஏனைய பங்குதாரர் நிறுவனங்களுக்கும் கூட உதவியாக அமைந்தது. இச் செயற்பாடு நாட்டின் பொருளாதார மீட்சிக்கான முதுகெலும்பின் ஒருங்கிணைந்த பகுதியாக எங்களை மாற்றியது.

இவை அனைத்திற்கும் மேலாக, நாங்கள் படிப்படியான மூளைசாலிகளின் வெளியேற்றத்தை எதிர்கொண்டோம். தொழில்சார் நிபுணத்துவம்வாய்ந்தவர்களுள் கணிசமான எண்ணிக்கையிலான பணியாளர்கள் தமது எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர். எமது சேவைகளும் அபிவிருத்திகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இது குறுகிய காலத் தீர்வுகள் இல்லாத ஒரு தேசியப் பிரச்சினையாக மாறி வருகிறது, ஆனால் நிறுவன மட்டத்தில் நாம் அதை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மாற்றுத் திட்டமாக, ஆட்சேர்ப்புகளைச் செய்யவும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், அவர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும், அதன் மூலம் நமது மனித வளத்தைப் பராமரிக்கவும், தேசிய நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் தளர்வுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்தச் சவால்களுக்கு மத்தியிலும், குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பலன்களைக் கொண்ட பல முன்னேற்றகரமான திட்டங்களை எங்களால் செயல்படுத்த முடிந்தது. தீர்வைகளற்ற (டியூட்டி பிரீ) செயல்பாடுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பில் பாரிய அபிவிருத்திகளைச் செய்துள்ளோம். பயணிகளுக்கான வசதிகளை நாங்கள் மேம்படுத்தியுள்ளோம், அதில் மிகவும் குறிப்பிடத்தக்கது கோல்ட் ரூட் லவுஞ்ச் திறந்து வைக்கப்பட்டமையாகும். இது ஏற்கனவே மிகவும் பிரபலமாகிவிட்டது. அதுமட்டுமல்லாது ஒரு முக்கியமான கவரக்கூடிய இடமாகவும் நிலையான வருமான மூலமாகவும் காணப்படுகின்றது. BIA இல் பொருட்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக ஒரு அதிநவீன பாதுகாப்பு ஒருங்கிணைப்பு மையத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம், மேலும் புதிய இறக்குமதிப் பொருட்களுக்கான முனையத்தின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்தும், பொருட்கள் மற்றும் பெருட்கள்சார்ந்த தொழிற்துறையின் சர்வதேச தரத்திற்கு இணங்க, இறக்குமதி.ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு மிகப்பெரிய சொத்துகளாக இருக்கும். வானத்தில் இருந்து டொலர்கள் கொட்டுகின்றது என கூறுமளவிற்கு, அதிகமான பயணத்தில் ஈடுபடும் விமானங்களுக்கு விதிக்கப்படும் கட்டணத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்தோம். மேலும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் புதிய விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் இந்த வருடத்தில் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பித்தது. துல்லியமான திட்டமிடல், வசீகரத் தலைமைத்துவம் மற்றும் சரியான வழிகாட்டல் ஆகியவை மேற்படி சவால்களுக்கு மத்தியில் இவ்வாறான முன்னேற்றங்களை அடைய எமக்கு உதவியது எனக் கூறினால் மிகையாகாது.

எதிர்பார்த்தபடி, இந்த முன்னேற்றங்கள் படிப்படியாக மீட்சிக்கான அறிகுறிகளைக் கொடுத்தன. 2019 ஆம் ஆண்டில் நாங்கள் 26 பில்லியன் ரூபாய் வருமானத்தைப் பதிவு செய்துள்ளோம், இது 2018 இல் இருந்ததை விட 11% வீழ்ச்சியாகும். பின்னர், தொற்றுநோயின் நேரடி விளைவாக, 2019 உடன் ஒப்பிடும்போது 2020 மற்றும் 2021 ஆகிய இரு ஆண்டுகளிலும் எமது வருமானம் புள்ளிவிவரங்களின் பிரகாரம் மேலும் 70% சரிந்தன. வருமானம் சொற்ப வருமானமான 7.9 பில்லியன் ரூபாய் செயல்பாட்டு ரீதியான இழப்பை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் நாம் 27.6 பில்லியன் ரூபாயை வருமானமாகப் பதிவு செய்துள்ளோம், இது 2019 இல் இருந்ததை விட 7.5% அதிகரிப்பாகும் அத்துடன் 2021 இல் இருந்ததை

விட 251% அதிகரிப்புமாகும். 2022 இல் எமது வர்த்தக நடவடிக்கைகளின் மூலமாகக் கிடைத்த நிகர வருமானம் 15 பில்லியன் ரூபாய் ஆகும். இது சந்தேகத்திற்கு இடமின்றி சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்ததன் நேரடி விளைவாகும். தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவும் வகையில், 500 மில்லியன் ரூபா இலாபத் தொகையை எம்மால் அரசுக்கு வழங்க முடிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வளர்ச்சியைத் தக்கவைத்து மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். T2 மேம்பாட்டுத் திட்டம் நின்றுவிட்ட போதிலும், பயணிகளின் எண்ணிக்கையின் வளர்ச்சியைச் சமாளிக்க உட்கட்டமைப்புகள் மற்றும் வசதிகளை மேம்படுத்தியுள்ளோம். எவ்வாறாயினும், T2 அபிவிருத்தியினை மீண்டும் ஆரம்பிப்பது ஒரு முழுமையான தேவை என்பதை நாங்கள் நினைவில் வைத்திருக்கின்றோம், இது இல்லாமல் தற்போதைய விகிதத்தில் அதிகரித்து வரும் பயணிகளின் வருகைக்கு ஏற்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது.


இதனிடையே, MRIA இல் மூன்று புதிய விமான நிறுவனங்கள் செயல்பட ஆரம்பித்திருப்பது மத்திய ஆசியப் பகுதியிலிருந்து வரும் பயணிகள் கவரப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. சீனா படிப்படியாக சுற்றுலாவுக்கான கதவுகளை மீண்டும் திறக்கிறது மற்றும் சீன சுற்றுலாப் பயணிகளும் அதிக பயணத்தை மேற்கொள்வதால், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை நாம் எதிர்பார்க்கிறோம். அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன், MRIA இல் புதிய முயற்சிகளைத் தொடங்க நடவடிக்கை எடுத்துள்ளோம், இதில் விமானங்களை தரித்து வைத்தல், பொருட்கள் பரிமாற்றம், விமானப் பராமரிப்பு பழுது மற்றும் அழகுபடுத்தல் (MRO), மற்றும் விமானங்களை பிரித்தெடுத்தல் மற்றும் மீள்சுழற்சி ஆகியவை அடங்கும், இவை அனைத்தும் வருமானம் ஈட்டக்கூடியவை. மாலைதீவின் ஜலண்ட் ஏவியேஷன் மூலம் இயக்கப்படும் விமான நிறுவனம் கொழும்பு சர்வதேச விமான நிலையமான இரத்மலானைக்கு (CIAR) மீண்டும் செயற்படத் தொடங்கியது.

நிறுவனத்தின் எல்லைகளுக்கு அப்பால், ஒரு அரசுக்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில், நிதி நெருக்கடியை சமாளிபதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எமது முழு ஆதரவையும் வழங்குவதென்ற எமது கடமையில் நாங்கள் மிகவும் கவனமாக இருந்தோம். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு நாம் தீவிரமாக ஆதரவளித்தோம். தற்போதைய சூழ்நிலையில், சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உதவுவதும், ஆதரவளிப்பதும் எங்களால் செய்யக்கூடிய மிக முக்கியமான பங்களிப்பாகும் என்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். சுற்றுலாப் பயணிகள் அதிக இலாபம் தரக்கூடிய பயணிகள் துறை என்பதையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். உக்ரேனில் இடம்பெற்ற யுத்தம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுற்றுலாத் தலங்களின் தெரிவுகளை மாற்றியமைத்துள்ள அதேவேளை, மத்திய ஆசிய பிராந்தியத்தில் இருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு ஆர்வமாக உள்ளனர். எனவே, இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள சுற்றுலாத் துறை மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டோம்.

வர்த்தகத்தின் பிரதான இலக்கான பங்குதாரர் மதிப்பினை கூட்டுதல் என்ற பட்டறிவினை மூலதனமாக்குவதன் மூலம் - வர்த்தப் பங்காளிகள்/ பங்குதாரர்களுடன் கூட்டுசேர்வதன் ஊடாக திறம்பட நிறைவேற்ற முடியும் என்ற பட்டறிவினைப் பயன்படுத்தி, 2023 மற்றும் அடுத்த 3 ஆண்டுகளுக்கு எமது முக்கிய மூலோபாயம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்கருப்பொருள் - பங்குடமை மூலம் வளர்ச்சி". இந்தப் பங்குடமையின் தேவை பல பரிமாணங்கள் கொண்டது. சில பங்குடமை தேவைகள் கூட்டு முயற்சிகளுக்கானவை (உதாரணமாக, சுற்றுலா அதிகாரிகளுடன் இணைந்து நாட்டிற்கு சுற்றுலா பயணிகளின் வருகையினை அதிகரிக்க அடிப்படையான சந்தைகளுக்கு உத்வேகமளித்தல்) அதேசமயம் சில பங்குடமை தேவைகள் தரவு பகிர்வுகளுக்கானவையாகும் (உதாரணமாக : விமான நிறுவனங்கள் மற்றும் விமான நிலையங்களால் சனத்தொகை காரணிகளின் மூலமாக பயணிகளின் விருப்பத்தேர்வுகளின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தரவுகளை விமானத்தள நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளல்). அந்தத் தரவுகள் ACI மற்றும் IATA போன்ற தொழில்சார் அமைப்புகளிடம் உள்ளன, மேலும் அவற்றை அணுக நாம் திட்டமிட்டுள்ளோம். இது தவிர, சேவை மட்ட ஒப்பந்தங்கள் (SLA) ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகளை வழங்குவதில் ஒரு முக்கிய கருவியாகும். எனவே, பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட KPI களில் ஒடுதளத்தைக் கையாளுபவர், எல்லை முகமைகள் மற்றும் சுங்கம் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் உத்திகளை வகுத்துள்ளோம்.

தொற்றுநோய்க்குப் பின்னர், புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ள மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த வர்த்தகச் சூழல் காரணமாக, நாம் எமது வர்த்தகத்தை விரிவாக்கவும் ஊக்குவிக்கவும் முறையாக கவனம் செலுத்தினோம். இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையமான கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானை (CIAR) இன் 84 வது ஆண்டு நிறைவு இதற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வை இரத்மலானையில் நடத்தினோம். அனைத்து மதத்தினரின் மத அனுஷ்டானங்களும் இடம் பெற்றன. இது தொழில்துறைக்கான மதிப்பை அங்கீகரிக்கும் வகையிலும் எதிர்கால சந்ததியில் உருவாகவுள்ள விமானிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், 'விமானக் கல்வி மற்றும் விமான நிலைய அறிமுகம்' என்ற தலைப்பில் CSR திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இது தவிர, புதிய விமான நிறுவனங்கள் அல்லது எமது விமான நிலையங்களில் சேவையினை ஆரம்பித்துன்ன விமான நிறுவனங்களை வரவேற்க நாம் நடத்திய ஒவ்வொரு நிகழ்வும் எமது புதிய வர்த்தக முயற்சிகளை விளம்பரப்படுத்துவதற்கான வாய்ப்பாக மாறியது.

பின்னோக்கிப் பார்க்கையில், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு சவால்கள் நிறைந்த ஆண்டாகவும், எமது உறுதித் தன்மையினை மீண்டும் நிலைநாட்டி, எமது செயல்பாட்டை விரிவுபடுத்திய ஆண்டாகவும் இருந்தது. நாம் மீண்டும் அரசுக்கு நம்பகமான வருமானம் ஈட்டக்கூடியவர்களாக மாறியுள்ளோம். என் மீதும் எமது பணிப்பாளர் சபை மீதும் நம்பிக்கை வைத்துள்ள கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுங்கம், சுகாதார அதிகாரிகள் மற்றும் எமது சேவைத் தொடரிலுள்ள ஏனைய முகவர் நிலையங்கள் எப்பொழுதும் எங்களுடன் ஒன்றாக இருந்து, பொதுவான இலக்கை நோக்கிப் பயணிக்க உதவியமைக்காக நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். எமது நிறுவனத்தை அதன் நோக்கத்தில் வழிநடத்துவதில் எப்போதும் குறையாத உற்சாகம் மற்றும் நம்பிக்கையாக இருந்த இணைத் தவிசாளர் மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது நிறுவனத்தின் அனைத்து பணியாளர்கள், பிரிவுகளின் தலைவர்கள் தொடக்கம் 24 மணி நேரமும் முன்களத்தில் பணியாற்றும் ஊழியர்கள் வரை, மிகவும் கடினமான காலகட்டத்தில் எங்களுடன் இணைந்திருந்தமைக்காகவும், உண்மையிலேயே எமது மீட்சியின் ஒரு பகுதியாக இருந்தமைக்காகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி ஏ சந்திரசிறி RWP USP VSV ndc psc
தவிசாளர்

26 மே 2023


22

தலைமைத்துவ குழாம்



1. மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ. சந்திரசிறி RWP USP VSV ndc psc - தவிசாளர்
2. டாக்டர். யூ.ஏ. மென்டிஸ் - உப தவிசாளர்
3. டபிள்யு.ஏ.ஏ. விஜயசூரிய - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
4. ஜி.ஏ.ஏ. பிரியந்த - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்.̇. திறைச்சேரி பிரதிநிதி
5. ஏ.எச்.எஸ். குணவர்த்தன - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
6. டபிள்யூ. எஸ். டீ டி சில்வா - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்



7. எஸ்.என். சுமணசேகர - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
8. கேப்டன் மிலிந்த ரத்நாயக்க - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
9. ஏ.ஏ. ரந்தெனிய - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
10. ஏ.எஸ்.சி. வருஷஹென்னடிகே - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
11. ஜி.யு.கே அல்கேவத்தகே - நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்
12. எம்.எம். ரேணுகா பி குணசேகர - கம்பனி செயலாளர்

மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி. ஏ. சந்திரசிறி RWP USP VSV ndc psc
தவிசாளர்

மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அவர்கள் 2019 டிசெம்பர் முதல் யுயுளுடு இன் தவிசாளராக நியமிக்கப்பட்டதுடன் அன்று முதல் AASL இன் தவிசாளராகவும் பிரதம நிறைவேற்று பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் AASL இன் பணிப்பாளர் சபையின் நிதி முகாமைத்துவம் மற்றும் வருமான உருவாக்க உப குழுக்களிற்கு தலைமை தாங்கினார்.

அவர் இலங்கை வங்கி பிஎல்சியில் சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். அவரது 35 வருடகால நீண்ட இராணுவ சேவையில், இலங்கை இராணுவத்தின் படைக்கள பிரதானி, கூட்டு இராணுவ நடவடிக்கை கட்டளைத் தலைமையகத்தின் பிரதான பணியாள் அலுவலர், இலங்கை இராணுவ விசேட படையணியின் ரெஜிமெண்டல் கட்டளைத் தளபதி, மற்றும் பாதுகாப்புப் படைகள் தலைமையக கட்டளைத் தளபதி - யாழ்ப்பாணம், அதிமேதகு ஜனாதிபதியின் பாதுகாப்பு படையணி தலைமையகத்தின் இராணுவ பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் யுத்தத்திற்கு பின்னர் வட மாகாணத்தின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றத்திற்கான தகைசார் அதிகாரி உள்ளிட்ட பல முக்கிய கட்டளை மற்றும் பணியாள் நியமனப் பதவிகளை அவர் வகித்திருந்தார். ரண விக்கிரம பதக்கம், விசிஸ்ட சேவா விபூசனயா மற்றும் உத்தம சேவா பதக்கம் முதலிய பெருமைமிகு அங்கீகார விருதுகளிற்கும் அவர் உரித்தானவராவார். அத்துடன் 2009 முதல் 2015 வரையில் வட மாகாணத்தின் ஆளுநராகவும் பணியாற்றியிருந்தார்.

அவர் இந்தியாவின் பாதுகாப்பு பல்கலைக்கழகத்திலும் பங்களாதேஷின் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாள் கல்லூரியிலும் பட்டங்களைப் பெற்றிருக்கிறார். அவர் கொவிட்-19 பெருந்தொற்று தடுப்பு தேசிய படையணியின் ஒரு உறுப்பினராகவும் அதைப்போலவே கொவிட்டிற்குப் பின்னரான காலப்பகுதியில் சுற்றுலா மீட்பு படையணியின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

டாக்டர். யூ.ஏ. மெண்டிஸ்
உப தவிசாளர்

கலாநிதி உபுல் அஜித் மெண்டிஸ் MBBS, DLM/MCMA/FCMA அவர்கள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் லிமிட்டெட்டின் உப தலைவராக 2022 ஜூன் அன்று நியமிக்கப்பட்டார். அவரது தற்போதைய பதவி நியமனத்திலிருந்து, அவர் AASL இன் கீழான ஐந்து சர்வதேச விமான நிலையங்களது நிர்வாக மற்றும் நிர்வாக செயற்பாடுகளை கண்காணிக்கும் முக்கிய வகிபாகத்தை ஆற்றிக்கொண்டிருக்கின்றார். மேலதிகமாக, பிரதான பங்குதார கைத்தொழிற்துறையின் தலைவர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் நிறுவனத்தின் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடனும் விமான நிலையத்தினது பொதுமக்கள் பார்வையை விருத்திசெய்வதற்காகவும் மிக நெருக்கமாக பணியாற்றினார்.

கலாநிதி மெண்டிஸ் அவர்கள் சுகாதாரத் துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 27 வருட அனுபவத்தை கொண்டிருப்பதுடன் புகழ்பெற்ற அரச மற்றும் தனியார் தாபனங்களிலும் பல்வேறு பதவிகளை வகித்திருந்தார். சுகாதாரத் துறையிலான அவரது அத்தகைய சிறப்பான பணிக்காலத்தில் 2007 முதல் 2012 வரையிலான ஐந்து வருட காலப்பகுதியிற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றினார். கலாநிதி மெண்டிஸ் அவர்கள் நெவில் பெர்ணாண்டோ போதனா வைத்தியசாலையின் தலைவராகவும் இலங்கை மருந்தாக்க கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் விளங்கினார். தற்போது, இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார். கலாநிதி மெண்டிஸ் அவர்கள் சமுதாயத்திற்காக அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளதுடன் ஐக்கிய இராஜ்ஜியத்தின் சனத்தொகை சேவைகளிற்காக தேசத்திற்கான தலைவராகவும் அதனை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனத்தினதும் தலைவராகவும் பணியாற்றினார்.

கலாநிதி மெண்டிஸ் அவர்கள் சுகாதாரத் துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 45 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுகாதாரத் துறையில் அவருடைய சிறப்பு வாய்ந்த சேவையில், 2007 முதல் 2012 வரையான 5 வருட காலப்பகுதிக்கு சுகாதாரச் சேவைகளுக்குப் பணிப்பாளர் நாயகமாகச் சேவையாற்றினார். கலாநிதி நெவில் பெர்ணாண்டோ போதான வைத்தியசாலையின் தவிசாளராகக் கலாநிதி மெண்டிஸ் கடமையாற்றி வந்ததுடன், இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகவும் கடமையாற்றி வந்தார். தற்போது, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் குழு உறுப்பினராகக் கடமையாற்றி வருகிறார். கலாநிதி மெண்டிஸ் சமூகத்துக்குப் பாரியளவில் பங்களிப்பாற்றியுள்ள அதே சமயம், ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் அரசுசாரா நிறுவனமான இன் இலங்கை நாட்டுப் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி மெண்டிஸ் அவர்கள், யுயுளுடு இன் பன்முகப்பட்ட வியாபார பகுதிகளிற்கு எண்ணிறந்த நிபுணத்துவங்களை கொண்ர்ந்ததுடன், சர்வதேச சிவில் விமான நிலையங்களது அபிவிருத்திகளிற்கும் விமானச் சேவைகள் துறையை உயர்த்திப்பிடிப்பதற்கும் அர்ப்பணிப்பு மிக்கவராக காணப்படுகின்றார்.

கேப்டன் மிலிந்த ரத்நாயக்க
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

மூத்த விமானச் சேவையாளரான, கேப்டன் மிலிந்த ரத்நாயக்க அவர்கள் 15,000 மணித்தியாலங்களிற்கும் மேலாக பயணிகள் விமானத்தில் பறந்துள்ளதுடன், எயார் சிலோன், எயார் லங்கா மற்றும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றில் 40 ஆண்டுகளிற்கும் மேலான அனுபவமுடையவராகவும் காணப்படுகின்றார். அவரது விமானத் தொழிலிற்கும் அப்பால், விமான செயற்பாடுகள் மற்றும் சேவை வழங்களை (பாதுகாப்பினை முகாமைத்துவம் செய்தல், விமானவோட்டி அறை குழுக்கள் மற்றும் தரையிறக்க கையாளல்) மேற்பார்வையிடும் முகாமைத்துவ அனுபவ முதுசத்தையும் கொண்டுள்ளார். அத்துடன் அவர் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் லிமிட்டெட்டின் உப தலைவர் பதிவியையும் 2018 ஆம் ஆண்டில் வகித்திருந்தார்.

IATA விற்கான விமான செயற்பாட்டு குழுவின் பிரதிநிதியாக விளங்கவுள்ள ஒரேயொரு இலங்கை நபரும் இவராவார். அற்புதமான கோல்ப் ஆட்டக்காரரான கேப்டன் ரத்நாயக்க அவர்கள் விமான கைத்தொழிலில் நேர்க்கணிய மாற்றங்களையும் மேம்பாடுகளையும் கொணர விளைகின்றார். அவர் அவுஸ்திரேலியா, தூரக் கிழக்கு நாடுகள், ஐரோப்பா மற்றும் வட மற்றும் தென்னமெரிக்க நாடுகளிற்கு பிரத்தியேகமாக பயணித்திருக்கின்றார்.

அவர் பணிப்பாளர் சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ உபகுழுவின் ஒரு உறுப்பினருமாவார்.

திரு ஏ எஸ் வரு'ஹென்னடிகே
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

திரு ஏ எஸ் வருஷஹென்னடிகே அவர்கள் 2019 டிசெம்பர் முதல் AASL பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராவார். இவர் மூலதன சந்தை கைத்தொழிற்துறை, விமானநிலைய நிர்வாகம், சர்வதேச விமானப் போக்குவரத்து முகாமைத்துவம், சந்தைத் திட்டமிடல், வர்த்தக நாமச் செயற்பாடுகள் மற்றும் விமானச்சேவை மூலோபாய அபிவிருத்தி என்பனவற்றில் அளப்பரிய அனுபவங்களுடன் தவிசாளர்/ நிறைவேற்றதிகார பணிப்பாளர் அனுபவமிக்கவருமாவார்.

திரு. வருஷஹென்னடிகே அவர்கள் இலண்டன் சௌத்பேங்க் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சந்தைப்படுத்தல் துறையில் முதுவிஞ்ஞானமானி பட்டத்தை பெற்றவராவார். அவரது பதவிக்காலத்தின் போது மே 2022 வரையில் AASL இன் அனைத்து விமானச்சேவை

செயற்றிட்டங்களையும் கண்காணிப்பதற்கென AASL இன் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. எஸ் என் சுமணசேகர
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

திரு. ஷேஹான் சுமணசேகர அவர்கள், டிசெம்பர் 2019 முதல் AASL இன் ஒரு பணிப்பாளர் சபை உறுப்பினராவார். வர்த்தக தரம்பெற்ற ஒரு விமானவோட்டியான இவர், விமானச்சேவைகள் கைத்தொழிற்றுறையில் வாய்ப்புக்களையும் சமகால கேள்விகளையும் அடையாளப்படுத்த தேவைப்படுத்தப்படும் அனுபவச்செழுமை மற்றும் தொழினுட்ப அறிவு என்பவற்றை கொண்ர்கிறார். அவரது பன்முக ஆளுமையானது விமானச்சேவைகள், எண்ணெய் மற்றும் வாயு, கப்பற்றொழில் மற்றும் தர்க்கவியல், நிலக்கரி, இரசாயனம் மற்றும் புகைமலி நிலக்கரி தயாரிப்பு உற்பத்தி என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

இவர் மெக்லோய்ட்ஸ் ஹோல்டிங்ஸின் முகாமைத்துவ பணிப்பாளர்/ சிரேஸ்ட நிறைவேற்றதிகார பணிப்பாளரும் ஆவார் என்பதுடன் ஏனைய பல்வேறு நிறுவனங்களது இயக்குநர் பதவியையும் வகிப்பவராவார். திரு. சுமணசேகர அவர்கள் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் (ஐக்கிய இராச்சியம்) வியாபார நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தினை கொண்டிருப்பதுடன் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வர்த்தக விமானவோட்டி அனுமதிப்பத்திரத்தினையும் கொண்டுள்ளார்.

மேலும் அவர், தேசத்தின் மின்சார உற்பத்தியில் 40% கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் லக்விஜய நிலக்கரி மையத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்து சக்தி வழங்கும் லங்கா நிலக்கரி கம்பனி (தனியார்) லிமிட்டெட்டின் தவிசாளராகவும் 2022 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

பல வருடங்களாக, தான் முகாமைத்துவம் செய்து பிரதிநிதித்துவப்படுத்திய கம்பனிகளது குழுக்களிற்கு வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி மற்றும் சேவை அனுபவங்கள் மற்றும் விநியோக சங்கிலி முகாமைத்துவம் என்பவற்றிற்காக பாரிய பங்களிப்பினை நல்கியுள்ளார்.

திரு. சுமணசேன அவர்கள், சமுதாயங்களில் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் கல்வியில் ஒரு தரத்தினை எட்டுவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களின் மூலம் இலங்கையிலுள்ள பல்வேறு சிறுவர்களது வாழ்வினை மாற்றவும் பாடுபட்ட "ஜன சஹன பதனம" எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் தலைவராகவும் செயற்பட்டார்.

அவர், மே 2022 வரையிலான தன்னுடைய பணிக்காலத்தில் MRIA யாவின் பொறுப்பு பணிப்பாளராகவும் AAS இன் அனைத்து விமான நிலைய செயற்பாடுகளிற்குமான பொறுப்புப் பணிப்பாளராகவும் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டார். அத்துடன் அவர் பணிப்பாளர் சபையின் நிதி முகாமைத்துவம் மற்றும் வருவாய் உற்பத்தி உபகுழுவின் உறுப்பினருமாவார்.

திரு. ஜி ஏ ஏ பிரியந்த
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்/ திறைச்சேரி பிரதிநிதி

திரு. ஜி ஏ ஏ பிரியந்த அவர்கள் ஜூன் 2021 முதல் AASL இன் பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இந்நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். முகாமைத்து சேவைகள் திணைக்களம் மற்றும் பொது நிறுவனங்கள் திணைக்களம் என இரண்டினதும் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பல பதவிகளில் நிதி அமைச்சில் பணியாற்றியுள்ள அவர் 18 வருட அனுபவத்தினையும் கொண்டுள்ளார். திரு. பிரியந்த அவர்கள் பொது நிதி திணைக்களம் மற்றும் பிஸ்கால் கொள்கை திணைக்களம் என இரண்டிலும் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக (பதில்) பணியாற்றுகின்றார். 2005 ஆம் ஆண்டு முதல் பல பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரச கம்பனிகளின் பணிப்பாளர் சபைத் தலைவராக பணியாற்றியுள்ளார். திரு. பிரியந்த அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி கற்கைகள் முதுமானிப் பட்டத்தையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்தவ இளவிஞ்ஞானமானிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

திரு. ஏ ஏ ரந்தெனிய
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

அமல் ஏ. ரந்தெனிய அவர்கள் குற்றவியல் மற்றும் சுங்க சட்ட பகுதிகளில் விசேடத்துவம் வாய்ந்த ஒரு சட்டத்தரணியாவார். அவருக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டப்போர்ட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச வியாபாரத்தில் சட்ட முதுமாணி பட்டமும் வழங்கப்பட்டுள்ளது. அவர் தற்போது இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆணையாளராகவும் கைத்தொழில் நீதிமன்றத்தின் மத்தியஸ்தராகவும் அதைப்போலவே இலங்கை உச்சநீதிமன்றத்தில் சட்டத்தரணிகளிற்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளுக்கான நடுவர் குழு உறுப்பினராகவும் காணப்படுகின்றார். அவர் கல்வி அமைச்சின் தேசிய கல்வி நிறுவக பேரவை உறுப்பினராகவும் காணப்படுகின்றார். அவர் நாட்டின் ஜனநாயக எல்லை நிர்ணய குழு, சொத்துக்களை கழிவகற்றுவதற்கும் புதிய உற்பத்தி கழிவகற்றல் பொறிமுறையை பிரேரிக்கும் விசேட சட்டத்தினை விருத்திசெய்வதற்கான குழு, சிறையிலடைப்பதற்கு மாற்றீடாக வீட்டுக்காவலினை அறிமுகப்படுத்தும் குழு மற்றும் பரிவர்த்தனை சட்டத்தினை மீளாய்வதற்கான சட்டமூல குழு ஆகியன உள்ளடங்கலாக நீதி அமைச்சின் பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார். அவர் 2016 தொடக்கம் 2018 வரையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராகவும் 2013/15 காலப்பகுதியில் கொழும்பு சட்ட சமூகத்தின் தவிசாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. டபிள்யு ஏ ஏ விஜயசூரிய
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

அமித விஜயசூரிய அவர்கள் 1981 ஆம் ஆண்டில் தேசத்தின் சொத்தாக காணப்பட்ட எயார் லங்கா லிமிட்டெட்டில் இணைந்தார். தன்னுடைய 38 வருட பதவிக்காலத்தில், இலங்கை மற்றும் வெளிநாடுகள் என இரண்டின் அடிப்படையிலும் இலங்கை விமானச்சேவையில் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை அவர் வகித்திருக்கின்றார்.

அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், அனைத்து அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து அதிமுக்கிய பிரமுகப் பயணங்களையும் மேற்பார்வையிடுவது அவரது செயற்பாட்டு தளத்தில் மிகமுக்கியமானதாகும். அத்துடன் அவர் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட ஆயதப்படையின் தலைவர்களது வெளிநாட்டு பயணத்தையும் கண்காணிப்பதற்கான பொறுப்பாளராகவும் காணப்பட்டார். திரு. விஜயசூரிய அவர்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், ஊக்குவிப்பு மற்றும் அரசாங்க மற்றும் பொதுத்துறை அலுவல்கள் என பல்வேறு மட்டங்களில் வேறுபடும் விமானச்சேவையிலான அளப்பரிய அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவரது ஓய்வின் பின்னர், ஸ்ரீ லங்கன் எயார்லைன்சில் பொது மற்றும் அரசாங்க அலுவல்கள் ஆலோசகராக மீளவும் நியமிக்கப்பட்டார்.

31 டிசெம்பர் 2019 முதல் 12 ஒகஸ்ட் 2022 வரையில் உப தலைவராக தன்னுடைய கடமைகளை ஆற்றினார். 31 டிசெம்பர் 2019 முதல் 12 ஒகஸ்ட் 2022 வரையில் இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் உப தலைவராக தன்னுடைய கடமைகளை ஆற்றினார்.

திரு. டபிள்யூ. எஸ். டீ டி சில்வா
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

திரு சுனில் டி சில்வா அவர்கள் கூட்டுத்தாபன வங்கியியல், சில்லறை வங்கியியல், நுண்நிதி, படுகடன் முகாமைத்துவம் மற்றும் மீட்பு முதலிய துறைகளிலான 41 வருட அனுபவத்தினைக் கொண்ட தொழில்முறை வங்கியியலாளர் ஆவார். அவர் தன்னுடைய பணியை இலங்கை வங்கியில்

ஆரம்பித்ததுடன் இலங்கை வங்கிக்காக, அதன் இலண்டன் கிளையில் 3 வருட அனுபவங்களுடன் 26 வருடங்களாக உழைத்துள்ளார். அத்துடன் அவர் செலான் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளராகவும் பான் ஏசியா வங்கியின் பிரதி பொது முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் இலங்கை வங்கியியலாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினர் என்பதுடன் 2 தசாப்தங்களிற்கும் மேலாக அந்நிறுவனத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். திரு டி சில்வா அவர்கள் IBSL வங்கியியல் பரிட்சைக்கு பரிந்துரைக்கப்படும் 'கடன் முகாமைத்துவம்' எனும் நூலின் வாயிலாக இலங்கையின் முதல் வங்கியியல் எழுத்தாளராகவும் விளங்கினார். திரு. டி சில்வா அவர்கள் இலங்கையின் தொழில்சார் வங்கியியலாளர்கள் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர் என்பதுடன் தற்போது அச்சங்கத்தின் ஆலோசனை குழு மற்றும் நிதி முகாமைத்துவ குழுவிலும் கடமையாற்றுகின்றார். அவர் இலங்கை வர்த்தக சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினருமாகவும் காணப்படுகின்றார்.

திரு. டி சில்வா அவர்கள் பேராதெனிய பல்கலைகழகத்தின் கலைமாணிப் பட்டத்தினையும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் வியாபாரம் மற்றும் நிதி நிர்வாக பட்டப்பின் கற்கை டிப்ளோமாவையும் கொண்டுள்ளார்.

இவர் 2005-2010 வரையிலான காலப்பகுதியில் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் 2020-2022 காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட தனியார் சர்வோதய நிதி கூட்டுத்தாபனத்தின் சுயாதீன பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

திரு. சுனில் டி சில்வா அவர்கள் 2015-2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னாபிரிக்காவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக செயற்பட்டதுடன் 2018-2019 காலப்பகுதியில் கென்யாவிற்கான உயர்ஸ்தானிகராகவும் செயற்பட்டுள்ளார்.

திரு. டி சில்வா அவர்கள் 2018-2019 காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் சுற்றச்சூழலியல் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஜீ. யூ. கே. அல்கேவத்தகே
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்

திரு. கயான் உதார கௌசல்யா அல்கேவத்தகே அவர்கள் தற்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக செயற்படுவதுடன் தென்னாசிய நுழைவாயில் முனையம் தனியார் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம், ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுக்கள் கம்பனி தனியார் லிமிட்டெட் மற்றும் இலங்கை கப்பற்றொழில் கூட்டுத்தாபன லிமிட்டெட் போன்ற பல பொதுப்பட்டியலிடப்பட்ட மற்றும் தனியார் கம்பனிகளின் பணிப்பாளர் சபையிலும் அங்கம் வகிக்கின்றார்.

திரு. அல்கேவத்தகே அவர்கள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தின் பொதுத்துறை நிர்வாக முதுமாணிப் பட்டத்தினையும் நாவல திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

அவர் பன்முக ஆளுமைமிக்கவராகவும், அர்ப்பணிப்பும், பொறுப்புணர்ச்சியும் கொண்டவராகவும் காணப்படுவதுடன் அதிசிறந்த தலைமைத்துவம் மற்றும் பரந்த முகாமைத்துவ நிபுணத்துவம் கொண்டவொரு அனுபவம்வாய்ந்த சிரேஷ்ட நிர்வாக அதிகாரியுமாவார். அவர் ஒரு நிறுவனத்திற்குள் மேலதிகாரிகளும் அவர்களிற்கு கீழுள்ளவர்களும் இடைவினைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளையும் நேர முகாமைத்துவத்தினையும் கடுமையாக முன்னெடுத்த வலுவான, வென்றுகாட்டிய ஒரு தொடர்பாளர் ஆவார்.

அவர் தேசிய உற்பத்திவியல் செயலகத்தின் பணிப்பாளராக கடமையாற்றியதுடன் தன்னை ஒரு உற்பத்திவியல் பயிலுநராக ஒக்டோபர் 2018- ஜூன் 2022 வரையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் இருத்திக்கொண்ட ஆசிய உற்பத்திவியல் ஒழுங்கமைப்பின் மாற்று பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அவர் 2006 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் தன்னுடைய பணியை ஆரம்பித்ததுடன் தற்போது இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு -1 பதவியை வகிப்பதுடன் 16 வருட சேவையில் ஒரு கௌரவமான பதவிக்காலத்தையும் கொண்டுள்ளார். நிர்வாக சேவையில் ஒரு பிரதேச செயலாளராக இக்காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவமானது பல்வேறு பிரதேச சபைகளில் 10 ஆண்டுகளிற்கும் மேற்பட்டதாகும்.

திரு. ஏ.எச். சுனில் குணவர்த்தன
அமைச்சு அவதானிப்பாளர்

திரு. ஏ ஏச் எஸ் குணவர்த்தன அவர்கள் விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்/அமைச்சு அவதானிப்பாளர் ஆவார். ஒரு இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக தன்னுடைய பணியை ஆரம்பித்துள்ள, திரு. குணவர்த்தன அவர்கள், பொதுத்துறையில் 25 இற்கும் மேற்பட்ட அனுபவத்தினை கொண்டவராவார். இவர் முதலில் 1998 ஆம் ஆண்டில் திட்ட அமுலாக்கம் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக (இநிசே II/II) நியமிக்கப்பட்டதுடன் அவர் பரந்த அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் சிரேஷ்ட பதவிநிலைகளை வகித்து முன்னேறியுள்ளார். நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தேசிய பாதீடு திணைக்களத்தின் பணிப்பாளராக (இநிசே I) நியமிக்கப்பட்ட காலப்பகுதியில், அவர் தேசிய மருந்தாக்க கூட்டுத்தாபனம், தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி, காணிப் பெறுகை ஆணைக்குழு, உயிரியல் பூங்கா நம்பிக்கை நிதியம், தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் போன்ற அரசுடைமை நிறுவனங்களின் பணிப்பாளர் சபையில் திறைச்சேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

தற்போது அவர் துறைமுக, கப்பற்றொழில் மற்றும் விமானச்சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக (விமானச் சேவைகள்) கடமையாற்றுகின்றார். அவரது பதவிக்காலத்தில் மூன்றாண்டுகளிற்கு பிரதிப் பணிப்பாளர்/ சுங்கப் பணிப்பாளராக இலங்கைச் சுங்கத்திலும் இரண்டு வருட காலத்திற்கு தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளராகவும் 2019 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் விமானச்சேவைகள் அமைச்சில் இணைவதற்கு முன்னதாக பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளராகவும் (நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி) கடமையாற்றியிருந்தார்.

திரு. குணவர்த்தன அவர்கள் AASL மற்றும் CAASL என்பவற்றில் முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் குறுகிய காலத்திற்கு பதில் தவிசாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

திரு. குணவர்த்தன அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார இளமாணிப் பட்டத்தையும் பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார். அத்துடன் அவர் அதேப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார். தன்னுடைய கல்வியியல் செயற்பாட்டில் தன்னுடைய உயர்கல்வி சார்ந்து இரு ஆய்வேடுகளையும் வெளியிட்டுள்ளார்.

சிரேஷ்ட முகாமைத்துவ குழாம்



எச்.எஸ். ஹெட்டியாராச்சி
விமானநிலைய முகாமைத்துவ தலைவர்



ஜே.ஏ.எம்.டீ.எஸ்.எஸ். அபேவர்தன
நிதித் தலைவர்



ஏ.ஐ.பீ. கருணாரத்ன
செயற்றிட்ட தலைவர்



எம். ரத்னசிங்கே (திருமதி)
சட்டத் தலைவர்



எச்.பி.எஸ். சிரிமான்னே
விநியோகப் பிரிவின் தலைவர்



கே.டி.வை.சாந்தனீ (திருமதி)
முலோபாய முகாமைத்துவ தலைவர்



யு.எம். வீரவர்தன
மின் பொறியியல் தலைவர்



ஜே.எம். த குரூஸ் ரூபின்
கட்டடக்கலை, நிலஅளவை மற்றும் உள்ளக வடிவமைப்பு தலைவர்



யு.ஜே. லொக்குவாராய்ச்சி
தகவல் தொழினுட்ப தலைவர்

சிரேஷ்ட முகாமைத்துவ குழாம்



யு.எஸ். ஜாகோட
சிவில் பொறியியல் (பராமரிப்பு) தலைவர்



சீறக கட்டளைத்தளபதி (விங் கமாண்டர்) (ஓய்வு) எஸ்.எம்.டீ. விஜேசூரிய
தீபணைப்பு மற்றும் மீட்பு பணிகள் தலைவர்



எஸ்.எஸ். த சில்வா
சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டுத்தாபன தொடர்பாடல் தலைவர்



எம்.கே.பி.தென்னகே (திருமதி)
உள்ளக கணக்காய்வு மற்றும் தரஉத்தரவாத தலைவர்



ஜே.கே. ரத்நிந்த
மின் மற்றும் வான்வழிகாட்டல் பொறியியல் தலைவர்



என்.சி. அபேவர்த்தன
வான்வழிகாட்டல் சேவைகள் தலைவர்



ஆர்.டபிள்யு.எல்.பீ. மெடவெவ
சரக்கு மற்றும் வான் முகாமைத்து தலைவர்




டீ.ஜே.யு. புரசிங்ஹ
வர்த்தக மற்றும் சொத்துக்கள் தலைவர்



மேஜர்.ஜெனரல் (ஓய்வு) ஏ.பி.பல்லேவல RWP RSP
பாதுகாப்பு சேவைகள் தலைவர்



லெப்டினன்ட் கேணல் (ஓய்வு) கே.எச்.சி. குமாரசிங்க
புலனாய்வு மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகள்
-அனைத்து விமானங்கள் தலைவர்



எஸ்.பி. பாலகம
இயந்திர பொறியியல் தலைவர்



எஸ்.டீ.ஏ.எஸ். நி'ாந்த
கம்பனி மருத்துவ அதிகாரி



ஆர். வீரசிரி (திருமதி)
சிவில் பொறியியல் (திட்டமிடல் மற்றும்
வடிவமைப்பு) பதில் தலைவர்



கே.ஏ.ஆர். கோடிகர
மனித வளங்கள் பிரதித் தலைவர்

*** படத்தில் காணப்படாதவர்கள்**
எச். ஏ.ஏ.கே.எம். செனவிரத்ன
சிவில் விமான பயிற்சி தலைவர்

அதிகரிக்கும் வாய்ப்புகளை மறுத்தல்


SriLankan
oneworld
SriLankan
SriLankan
SriLankan

கம்பனியின் அலுவல்கள் தொடர்பான நிறைவேற்று நிர்வாகச் சபையின் அறிக்கை

31 டிசெம்பர் 2022 ஆம் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களுடன் எமது அறிக்கையை சமர்ப்பிப்பதில் நம் மகிழ்வடைகின்றோம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினாலும் சிறந்த கணக்காய்வு நிபுணர்களினால் வழிகாட்டப்பட்டவற்றினாலும் வேண்டப்படும் உத்தியோகப்பூர்வத் தகவல்களை வழங்குகின்றது.
இத்திருத்தவறிக்கையின் ஊடாக, பங்குதாரர்கள் கம்பனி அலுவல்களது நிலை குறித்தும் கணக்காய்வு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் குறித்தும் ஒரு மதிப்பாய்வினை மேற்கொள்வதற்கான விடய வெளிப்படுத்தல்கள் பூரணமாக விளக்கப்பட்டுள்ளமையை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

1. கம்பனி குறித்து

வரையறுக்கப்பட்ட விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள் (இலங்கை) (தனியார்) (AASL) நிறுவனமானது இலங்கையின் சிவில் விமான நிலையங்களை முகாமை செய்வதற்கும் விருத்திசெய்வதற்குமான அதிகாரத்துடனான இலங்கையின் முழு அரசுடைமை கம்பனியாகும்.

2. அடிப்படை செயற்பாடுகள்

AASL இன் அடிப்படை பணிகளாவன 04 நவம்பர் 2010 அன்றைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானச்சேவைகள் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பின்வரும் விமானத்துறைச் சேவைகளிற்கான தனித்த சட்டப்பூர்வ சேவை வழங்குநர் எனும் அதன் வகிபாகத்தினை பூர்த்திசெய்யவதாக தொடர்கின்றது:

2.1 பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் , மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் , கொழும்பு இரத்மலானை சர்வதேச விமானநிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம் என்பவற்றை அபிவிருத்திசெய்தல், நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல்

2.2 மேற்குறித்த விமானத்தளங்களில் தேடுதல், மீட்பு மற்றும் தீயணைப்பு சேவைகள் மற்றும் விமானப் பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்.

2.3 விமானப் போக்குவரத்து சேவைகள், விமான தகவல் சேவைகள், விமான தொடர்பாடல் சேவைகள் மற்றும் தொடர்பாடல், வழிகாட்டல், கண்காணிப்பு சேவைகளை வழங்குதலும் கொழும்பு விமானத்தளத்திற்கு மேலான அனைத்து விமானங்களினதும் பயணிகளினதும் பாதுகாப்பினை உறுதிசெய்தலும்

3. நிர்வாக மீளாய்வு

31 டிசெம்பர் 2022 முடிவடைந்த ஆண்டுக்கான நிதி மற்றும் நிர்வாக செயலாற்றுகைகள் மற்றும் AASL இன் எதிர்கால வியாபார விருத்திகள் என்பன குறித்த மீளாய்வுகள் தவிசாளரது செய்தி (பக்கம் 12-14) முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வுகள் (பக்கம் 37-49) மற்றும் நிதி ஆய்வுகள் (பக்கம் 51-56) என்பவற்றில் விவரிக்கப்பட்டுள்ளன. கம்பனியின் கணக்காயப்பட்ட நிதிக் கூற்றுக்களுடனான இவ்வறிக்கைகளானவை பணிப்பாளர் சபையினது வருடாந்த அறிக்கையில் முக்கிய பாகத்தை உருவாக்கிய அலுவல்களது மதிப்பிற்குரிய ஸ்தானத்தை காட்டுகின்றது.

பணிப்பாளர் சபையானது, "நிலைபேண் பொருளாதாரத்தை நோக்கிய பூகோள பிணைப்புக்கான சிநேகபூர்வ விமான பங்குதாரர்" எனும் AASL இன் பணிக்கூற்றின் பொருட்டான முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளை அமுல்படுத்துவதனால் தொடர்ச்சியான நிர்வாக செயலாற்றுகைகளை கண்காணிக்கின்றது.

4. நிதிக் கூற்றுக்கள்

சபையின் சார்பாக இரு பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்ட கம்பனியின் நிதிக் கூற்றுக்களானவை பக்கம் முதல் பக்கம் 86 -117 வரையில் வழங்கப்பட்டுள்ளது.

5. கணக்காய்வு கொள்கைகள் மற்றும் வருடத்திலான மாற்றங்கள்

கம்பனியானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLFRSs/LKASs) அமைவாக நிதிக் கூற்றுக்களை தயாரித்துள்ளது. கம்பனியின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பான கணக்காய்வு கொள்கைகள் பக்கம் 90-99 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளது. மீளாய்வுக்கான காலப்பகுதியில் கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கொள்கைகளில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த விளைகின்றது.

6. நிதிக் கூற்றுகளுக்கான பணிப்பாளர்களது பொறுப்புடைமை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமானது தன்னுடைய உண்மையான அலுவல்கள் நிலையை வெளிப்படுத்தும்விதமாக ஒவ்வொரு நிதியாண்டுக்குமான நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்க பணிப்பாளர்களை தேவைப்படுத்துகின்றது. இந்நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்காய்வு நியமங்கள், கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஏனைய நிதி அறிக்கையிடல் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு பக்கம் 86-117 இல் காணப்படுகின்றது என்பதனை பணிப்பாளர்கள் கருத்திற்கொள்கின்றனர்.

7. சுயாதீன கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் வருமானம்

15 மே 2015 இல் அரசியலமைப்பின் 154 ஆம் சரத்திற்கான 19வது திருத்தம் இயற்றப்பட்டதன் பிரகாரம், எந்தவொரு எழுதப்பட்டச் சட்டத்தின் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து அரசாங்க நிறுவனங்களது கணக்காய்வையும் முன்னெடுத்துச்செல்ல கணக்காய்வாளர் நாயகம் அதிகாரமுடையவராகின்றார். இப்பணிப்பின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டிற்கான யுயுளுடு இன் கணக்காய்வானது கணக்காய்வாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்டது.

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மீதான சுயாதீன கணக்காய்வாளர்களது அறிக்கையானது இவ்வறிக்கையின் பக்கம் 78-85 வரையில் வழங்கப்பட்டுள்ளது. 31 டிசெம்பர் 2022 உடன் முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு கொடுப்பனவானது 1,096,500 இலங்கை ரூபாய்கள் (2021: 1,200,000 இலங்கை ரூபா) என்பதுடன் கணக்காய்வு தொடர்பான சேவைகள் மற்றும் கணக்காய்வற்ற சேவைகள் தொடர்பில் கணக்காய்வாளர்களுக்கு செலுத்தப்படவேண்டிய வேறெந்த கொடுப்பனவுகளும் காணப்படவில்லை. கணக்காய்வாளர்களுக்கு கம்பனியின் கணக்காய்வாளரைத் தவிர்த்து வேறெந்த தொடர்புகளும் இல்லை என்பதில் பணிப்பாளர்கள் விழிப்பாய் காணப்படுகின்றனர்.

8. உள்ளக கட்டுப்பாடு மற்றும் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறை

கம்பனியின் பணிப்பாளர் சபையானது மோசடிகள் மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களை கண்டுபிடிப்பதற்கும் தடுப்பதற்குமாக அதனது சொத்துக்களை பாதுகாப்பதற்கான நியாயமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இந்நோக்கத்துக்காக, இவ்வருடத்தில் கம்பனியினால் எதிர்கொள்ளப்படும் விசேட இடர்களை அடையாளங்காணல், பதிவுசெய்தல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைசெய்தலுக்காக உள்ளக கட்டுப்பாடுகளது வினைத்திறனானதும் பொருத்தமானதுமான முறைமையை பணிப்பாளர்கள் தாபித்திருந்ததுடன் அது பணிப்பாளர் சபையினால் கிரமமாக கண்காணிக்கவும்பட்டது.

இது உள்ளக மதிப்பாய்வு, உள்ளக கணக்காய்வு மற்றும் ஒரு ஒழுங்கில் நிர்வாகத்தினை கொண்டுநடாத்த தேவைப்படுத்தப்பட்ட நிதியியலின் முழுதளாவிய முறைமை மற்றும் எனைய கட்டுப்பாடுகள், சொத்துக்களை பாதுகாத்தல், மோசடிகள் மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களை தடுத்தலும்

கண்டுபிடித்தலும், மற்றும் பதிவுகளை கூடுமானவரையில் நடைமுறைச்சார்ந்து துல்லியமாகவும் நம்பகமாகவும் பாதுகாத்தல் முதலியவற்றை உள்ளடக்கியிருந்தது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர்கள், அரச கணக்காய்வாளர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளினால் அடையாளப்படுத்தப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு பிரச்சினைகளை கிரமமாக மீளாய்வு செய்தது. முகாமைத்துவமானது உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் நிறைவானத்தன்மையை மதிப்பிட்டது.

9. வருமான கூற்றுக்களும் கம்பனியின் நிதியியல் நிலையும்

9.1 வருமானம்

2022 ஆம் ஆண்டில் கம்பனியினால் ஈட்டப்பட்ட வருமானமானது 27.6 பில்லியன் இலங்கை ரூபா (2021: 7.9 பில்லியன் இலங்கை ரூபா) என்பதுடன் அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 251% இற்கு சமமான குறிப்பிடத்தக்க அதிகரிப்புமாகும். வியாபார பிரிவின் அடிப்படையில் கம்பனியின் வருமானத்தின் பகுப்பாய்வானது நிதிக் கூற்றுக்கான குறிப்பு 5 இன் பக்கம் 100 இல் விளக்கப்பட்டுள்ளது.

9.2 நிர்வாக பெறுபேறுகள்

கம்பனியானது 2022 ஆம் ஆண்டுக்கான நிர்வாக இலாபமாக 12.7 பில்லியனை கொண்டிருந்தது. இது 3.8 பில்லியன் இலங்கை ரூபா நிர்வாக நஷ்டமாக காணப்பட்ட முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 436% முன்னேற்றமாகும.

கம்பனியானது 2021 ஆம் ஆண்டில் 2.1 பில்லியன் இலங்கை ரூபா நிகர நஷ்டமாக காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டுக்கு 4.8 பில்லியன் இலங்கை ரூபா நிகர இலாபத்தை பதிவுசெய்திருந்தது.

9.3 ஒதுக்குகள்

கம்பனியின் ஒதுக்குகள் பங்கு மூலதனம் ஏனைய ஒதுக்குகள் மற்றும் தக்கவைக்கப்பட்ட ஈட்டல்கள் என்பவற்றை உள்ளக்கியுள்ளது. இவ்வருடத்திலான இலாபத்தின் அதிகரிப்பு காரணமாக கம்பனியின் ஒதுக்குகளில் அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது. அதன்பிரகாரம், முந்தைய வருடத்தில் பதிவுசெய்யப்பட்ட 41.3 பில்லியனுக்கு எதிராக 31 டிசெம்பர் 2022 இல் 45.3 பில்லியனாக மொத்த ஒதுக்குகள் பதிவுசெய்யப்பட்டன. கம்பனியின் ஒதுக்குகளின் அசைவானது சமன்களின் மாற்றக் கூற்றில் பக்கம் 88 இல் காட்டப்பட்டுள்ளது.

9.4 பங்குலாபம்

மதிப்பீட்டுக்கான வருடத்தில், கம்பனியானது 500 மில்லியன் இலங்கை ரூபாய்களை பங்குலாபமாக அறிவித்து செலுத்தியது.

9.5 நன்கொடை

2022 ஆம் வருடத்தில் கம்பனியானது 510,000 இலங்கை ரூபாய்கள் பெறுமதியான நன்கொடைகளை மேற்கொண்டிருந்தது (2021: 20,047,158 இலங்கை ரூபா).

9.6 மூலதன செலவீனங்கள்

2021 ஆம் ஆண்டின் 23 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில், மதிப்பாய்வுக்கான வருடத்தில் கம்பனிக்கு 7 பில்லியன்கள் மூலதனச் செலவீனங்களாக ஏற்பட்டது. சொத்து மையம், உபகரணங்கள் மற்றும் கட்புலனாக சொத்துக்கள் மீதான முதலீடுகள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளது 11 மற்றும் 12 ஆம் குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளது.

9.7 அரசாங்கத்திற்கான பங்களிப்பு

யுயுஎடு ஆனது இலங்கை விமானப் படை, இலங்கை சுங்கம், ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் முதலியன போன்ற ஏனைய அரசாங்க அதிகாரசபைகளினால் வேண்டப்பட்ட விமான நிலையங்களுக்குள்ளான சேவைகளை வழங்குவதற்காக அடிப்படை வசதிகளையும் உட்கட்டுமானங்களையும் வழங்குவதனை தொடர்ந்தும் செய்தது. இப்பரிமாற்றங்கள் மற்றும் கணக்கு நிலுவைகள் என்பன பக்கம் 116 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பின் 32 ஆம் குறிப்பினில் தொடர்புடைய தரப்பினரது பரிமாற்றங்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த மூன்று வருடங்களிலான வரிக் கொடுப்பனவுகள் மூலமான அரசாங்கத்துக்கான நேரில் பங்களிப்புக்கள் கீழுள்ள அட்டவணை மற்றும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளாக வரி செலுத்துகைகளினூடாக அரசாங்கத்திற்கு மறைமுகமாக வழங்கப்பட்ட பங்களிப்பு படங்களுடன் கீழே விளக்கப்பட்டுள்ளன:

வருடம்	மில்லியன் இலங்கை ரூபா				
	பங்குலாபம்	வற்	வருமான வரி	எஸ்எஸ்சிஎல்	பேயி
2020	-	207	-	-	7
2021	-	117	15	-	6
2022	500	1,281	117	70	15

9.8 முதலீடுகள

வருட முடிவில் முதலீட்டு சொத்துப்பட்டியல் ரூபா பெறுமதியானது 41.4 பில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்ததுடன் அது கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்படுகின்றன.

முதலீடுகள	(மில்லியன் இலங்கை ரூபா)	
	31.12.2022 வரையின் படியாக	31.12.2021 வரையின் படியாக
திறைச்சேரி உண்டியல்கள்/ முறிகள்	22	20
குறுங்கால வங்கி வைப்புகள்	78,025	41,515
தங்கியிருப்பனவற்றிலான முதலீடுகள்	3,298	4,088
நீண்ட கால வங்கி வைப்புகள்	6,963	1,267
மொத்தம்	**88,308**	**46,890**

9.9 அரச மூலதனம்

கம்பனியின் பங்கு மூலதனமானது ஒவ்வொன்றும் 100/- எனும் சாதாரண பங்குகளை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்றது. 31 டிசெம்பர் 2022 வரையிலான பங்குடைமையானது பின்வருமாறு

உரித்தாளர்	பங்குகளது எண்ணிக்கை	பெறுமதி (இரூ)
திறைச்சேரி செயலாளர்	200,000	20,000,000
துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சகம்	1	100
சிவில் விமானச்சேவைகள் பணிப்பாளர் நாயகம்	1	100
மொத்தம்	**200,002**	**20,000,200**

கம்பனியின் அலுவல்கள் தொடர்பான நிறைவேற்று நிர்வாகச் சபையின் அறிக்கை

9.10 அறிக்கை காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

பக்கம் 117 இன் நிதிக் கூற்றுக்கான 33 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டதைப் போன்று அன்றைய தினம் வரையிலான நிதிக் கூற்றுக்களது நிலைகளின் நிதிக் கூற்றுக்களில் திருத்தங்கள் அல்லது வெளிப்படுதல்களை தேவைப்படுத்தும் பொருளார்ந்த நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை.

9.11 கருத்திற்கொள்ளப்படுவன

திறமான விசாரணைகள், சாதாரண எதிர்வுகூறல் செயன்முறைகளை ஏற்றல் மற்றும் எதிர்கால செழுமையையும் இடர் சாத்தியக்கூறுகளையும் கருத்திற்கொள்ளுதலையும் மேற்கொண்டதன் பின்னர், AASL ஆனது போதுமான வளங்களை கொண்டுள்ளதுடன் கணிக்கக்கூடிய எதிர்காலத்திற்காக நிர்வாக நிலைப்பை தொடர்வதற்கு வசதிகளை கடன்வாங்கவும் அர்ப்பணிப்பினை கொண்டுள்ளமையையும் பணிப்பாளர்கள் கருத்திகொள்கின்றனர்.

9.12 நிகழ்தகவுகளும் ஈடுபாடுகளும்

நிகழ்தகவு பொறுப்புக்கள் குறித்த விபரங்கள் 114 ஆம் பக்கத்தின் நிதிக்கூற்றுக்களுக்கான 29 ஆம் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன.

10.பணிப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் குறித்த தகவல்கள்

10.1 பணிப்பகம்

தவிசாளரினதும் (உறுப்புரை 79) மற்றும் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களதும் (உறுப்புரை 82) நியமனங்கள் யுயுளுடு இன் கூட்டாக்கத்துக்கான மேற்குறிப்பிடப்பட்ட சரத்துக்களது கட்டளைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10.2 2022 ஆம் நிதியாண்டின் நிறைவில் பதவிகளை வகிக்கும் தற்போதைய பணிப்பாளர்களது விபரங்கள்.

பணிப்பாளர் சபை	பதவி	நியமனத் தகதி	சுயாதீனம்
மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ. சந்திரசிறி RWP USP VSV ndc psc	தவிசாளர்	12.12.2019	இல்லை
டாக்டர். யூ.ஏ. மெண்டிஸ்	உப தவிசாளர்	15.06.2022	இல்லை
ஏ எஸ் வருஷஹென்னடிகே	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	12.12.2019	ஆம்
எஸ். என். சுமனசேகர	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	12.12.2019	ஆம்
கேப்டன் மிலிந்த ரத்நாயக்க	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	20.06.2022	ஆம்
ஜி. யூ. கே. அல்கேவத்தகே	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	15.06.2022	ஆம்
டபிள்யூ. ஏ. ஏ விஜயசூரிய	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	13.09.2022	ஆம்
டபிள்யூ. எஸ். டி டீ சில்வா	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	30.11.2022	ஆம்
ஏ. ஏ. ரந்தெனிய	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	30.11.2022	ஆம்
ஜி ஏ ஏ பிரியந்த	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் / திறைச்சேரி பிரதிநிதி	11.06.2021	இல்லை
ஏ ஏச் எஸ் குணவர்த்தன	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் / துறைமுக, கப்பற்றொழில் மற்றும் விமானச்சேவைகள் அமைச்சின் அவதானிப்பாளர்	31.12.2019	இல்லை

10.3 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பதவிவிலகிய பணிப்பாளர்களது விபரங்கள்

பணிப்பாளர் சபை	பதவி	நியமனத் திகதி	பதவிவிலகியத் திகதி
ஆர். சூரியஆராச்சி	உப தவிசாளர்	06.12.2019	10.06.2022
யு. மன்ச்சநாயக்க	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	12.12.2019	12.08.2022
சி. விதாரண	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	31.12.2019	31.05.2022
திருமதி. டி.ஏ. டி லிவேரா	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	31.12.2019	11.06.2022
ஆர்.ஏ.பி. விஜேரத்னசேகர	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	31.12.2019	10.06.2022
ஜனாதிபதி சட்டத்தரணி டி.ஏ.பி. வீராத்னே	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	02.03.2020	11.06.2022
டபிள்யு. எம். ஜிஹான் ரஷந்த	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	05.02.2021	10.06.2022
என்.எம்.பி.பி.கே.கே. நவரத்னே	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்	20.06.2022	29.11.2022

10.4 பணிப்பாளர் சபை உப குழுக்கள்.

பணிப்பாளர் சபையானது தனக்கு உதவுவதற்காக, ஏழு உப குழுக்களை நியமித்துள்ளது. நியமிக்கப்பட்டதிருந்தான மேற்குறித்த உப குழுக்களது உள்ளடக்கங்கள் பின்வருமாறு.

உபக்குழு	உள்ளடக்கம்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு	ஜி.ஏ.ஏ.பிரியந்த- தவிசாளர்
	கேப்டன் மிலிந்த ரத்நாயக்க- உறுப்பினர்
	டபிள்யு.எஸ்.டி டி சில்வா- உறுப்பினர்
	எம்.கே.பி.தென்னக- கோருநர்
	எம்.எம்.ரேணுக பி. குணசேகர- செயலாளர்
	கே.ஏ.ஏ. குலதுங்க (முன்னர் எஸ்.ஏ.டி. டில்ருக்சி)-கண்காணிப்பாளர்-அரச கணக்காய்வு கண்காணிப்பாளர்
மனித வள மற்றும் வருமானக் குழு	டாக்டர். யு.ஏ. மெண்டிஸ்- தவிசாளர்
	ஜி.யு.கே அல்கேவத்தகே- உறுப்பினர்
	கே. ஏ. ஆர். கொடிகார- கோருநர;/ அல்லது செயலாளர்
நிதி முகாமைத்துவம் மற்றும் வருவாய் ஈட்டல் குழு	மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ.சந்திரசிறி RWP USP VSV ndc psc - தவிசாளர்
	எஸ்.என்.சுமணசேகர- உறுப்பினர்
	டபிள்யு.எஸ்.டீ. டி சில்வா- உறுப்பினர்
	ஜே.ஏ.எம்.டீ.எஸ்.எஸ். அபேவர்த்தன- கோருநர்/ அல்லது செயலாளர்
இடர்முகாமைத்துவ குழு	கேப்டன் மிலிந்த ரத்நாயக்கே- தவிசாளர்
	ஏ.எஸ்.சி.வருஷஹென்னடிகே- உறுப்பினர்
	கே.டீ.வை. சந்தைகே- கோருநர் மற்றும்/ அல்லது செயலாளர
அனைத்து விமான நிலைய வே போர்வர்ட் குழு	மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ.சந்திரசிறி RWP USP VSV ndc psc - தவிசாளர்
	ஏ. எச். எஸ். குணவர்தன - உறுப்பினர்
	ஏ.எஸ்.சி. வருஷஹென்னடிகே- உறுப்பினர்
	எச்.எஸ். ஹெட்டியாராச்சி - கோருநர் மற்றும்/ அல்லது செயலாளர
செயற்றிட்ட முகாமைத்துவ உப குழு	டபிள்யு.ஏ.ஏ.விஜேயசுரிய சில்வா-தவிசாளர்
	ஏ.எஸ்.சி.வருஷஹென்னடிகே- உறுப்பினர்
	ஏ.ஐ.பி.கருணாரத்னே- கோருநர் மற்றும்/ அல்லது செயலாளர்
AASL இற்கான பெறுகை பத்திர தயாரிப்பு	ஜி.ஏ.ஏ.பிரியந்த- தவிசாளர்
	எச்.பி.எல்.சிறிமான்னே- கோருநர் மற்றும்/ அல்லது செயலாளர்

10.5 பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களுடன் தொடர்புறும் பணிப்பாளர்களது விபரங்கள்

எந்தவொரு பணிப்பாளரும் எந்தவொரு பங்குகளையோ அல்லது கடன்பத்திரங்களையோ கொண்டிருக்கவில்லை.

10.6 ஒப்பந்தங்கள் மற்றும் பிரேரிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் மீதான பணிப்பாளர்களது ஆர்வங்கள்

மீளாய்வுக்கான வருடத்தின்போது, கம்பனியின் வியாபாரத்துடன் தொடர்புடைய எந்தவொரு ஒப்பந்தம் அல்லது பிரேரிக்கப்பட்ட ஒப்பந்தத்திலும் எந்தவொரு பணிப்பாளரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புறவில்லை.

10.7 பணிப்பாளர்களது வருமானமும் ஏனைய நலன்களும்

பணிப்பாளர்களது ஊதியமாக 8.4 மில்லியன் இலங்கை ரூபாக்களை (2021 - 11.3 மில்லியன் இரு) கம்பனி வழங்கியுள்ளது. வருடாந்த வருமானமாக 2.6 மில்லியன் இலங்கை ரூபாக்களை பெற்ற இரு நிறைவேற்றதிகார பணிப்பாளர்கள் இவ்வருடத்தில் காணப்பட்டனர். இது பணிப்பாளர் கொடுப்பனவுகள், ஊசேநி, ஊநநி, ஊக்கத்தொகை, பொழுதுபோக்கு செலவுகளது மீள்கொடுப்பனவு, தொலைபேசி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் பணிப்பாளர் சபை கூட்டங்களிற்கு வருகைத் தருவதற்கான போக்குவரத்து மற்றும் பணிப்பாளர் கொடுப்பனவுகளுடன் வருடத்திற்கு 5.8 மில்லியன் இலங்கை ரூபாக்களை இவ்வருடத்தின்போது பெற்றுக்கொண்டனர்.

கம்பனியின் அலுவல்கள் தொடர்பான நிறைவேற்று நிர்வாகச் சபையின் அறிக்கை

11. கூட்டுத்தாபன ஆட்சி

பணிப்பாளர் சபையானது வினைத்திறனான கூட்டுத்தாபன ஆட்சி சட்டகத்தை பேணுவதிலும் கூட்டுத்தாபன ஆட்சியினது சிறப்பான செயற்பாடு மற்றும் அதனது வினைத்திறனான நடைமுறைப்படுத்தல்களுக்கு தேவைப்படுத்தப்படும் முறைமை மற்றும் கட்டமைப்புக்களை அமுல்படுத்துவதிலும் அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது,

12. நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

கம்பனியினால் செலுத்தப்படவேண்டிய அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள், கம்பனியின் ஊழியர்கள் சார்பிலும் தொடர்பிலுமாக செலுத்தப்படவேண்டிய அனைத்து பங்களிப்புகள், தீர்வைகள் மற்றும் வரிகள் மற்றும் திகதி வரையிலான கம்பனியின் நிதிக்கூற்றின் பிரகாரம் கம்பனியினது கொடுப்பனவாகவும் செலுத்தப்படவேண்டியதாகவும் காணப்பட்ட அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன அல்லது அது தொடர்பில் வழங்கப்பட்டுள்ளன என்பதனை தங்களது கவனத்திற்கு எட்டிய வகையில், பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

13. சட்ட ஒழுங்குகளுடனான பிணைப்பு

பணிப்பாளர் சபையின் சார்பிலும் அதனது அறிகையிலுமாக, நாட்டின் சட்ட ஒழுங்கை மீறியதாக எந்தவொரு நடவடிக்கையிலும் கம்பனி ஈடுபடவில்லை.

14. வருடாந்த பொதுக்கூட்டம்


வருடாந்த பொதுக்கூட்டமானது AASL இன் பணிப்பாளர் சபை அறையில் 30 மே 2023 அன்று பி.ப 3:00 க்கு இடம்பெறும்.

15. அறிவித்தல்

சவால்களுக்கு மத்தியிலும் கம்பனியின் மற்றொரு நிதியாண்டினை பூர்த்திசெய்தமைக்காக முகாமைத்துவ அணியை வாழ்த்துவதில் பணிப்பாளர் சபை பெருமைக்கொள்கின்றது. கொவிட் பெருந்தொற்றினைத் தொடர்ந்த உலகளாவிய பயண கட்டுப்பாடுகளின் விளைவாக விமானத்துறைக்கு இது சவாலான ஆண்டாக விளங்கியது. கம்பனியின் பங்குதாரராகவும் ஒழுங்குபடுத்துநராகவும் விளங்கி கம்பனிக்கான தங்களது உதவிகளை தொடரும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கும் இக்கணத்தில் எங்களுடைய நன்றிகளை பதிவுசெய்கின்றோம்.

மேலும், தொடர்ந்தும் எம்மீது நம்பிக்கையை கொண்டிருக்கும் எமது வாடிக்கையாளர்கள் உட்பட, கம்பனியின் தொடர்ச்சியான செயற்பாட்டினை நோக்கி பங்கேற்று பங்களித்த அனைத்து பங்குதாரர்களிற்கும் எமது உண்மையான பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வெதிர்பாரா சவால்மிக்க வருடத்தில் தங்களது அர்ப்பணிப்புக்களையும், ஒருமைப்பாட்டையும் மற்றும் கடின உழைப்பையும் வெளிப்படுத்திய AASL இன் அனைத்து பணியாட்களுக்கும் எம்முடைய நன்றிகள் உரித்தானதாகும்.

பணிப்பாளர் சபையின் உத்தரவின் பேரில்



மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி ஏ சந்திரசிறி RWP USP VSV ndc psc
தவிசாளர்

26 மே 2023

குணுக்குர்ய்வு முற்றும் நீர்வுர்குக் குழுவீனு (AMC) ஆறீக்ஜகு

குழுவின் வகிபாகம்

கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவை நியமித்த சபை, பணிப்பாளர் சபையின் உப குழுவை முறையாகக் கொண்ட சபையாகும். அது சபைக்கு அறிக்கை வழங்குவதுடன், சபைக்குப் பொறுப்புக் கூறவும் கடமைப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் முதன்மை வகிபாகமாக அமைவது, குழுவின் பொறுப்புகளையும் பிரயோகங்களையும் துறப்பதற்கு உதவி புரிவதும், நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளக மற்றும் வெளிவாரிக் கணக்காய்வுகளைக் கண்காணித்தல் போன்றனவாகும்.

கட்டமைப்பு

பணிப்பாளர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விசாரணை நியதிகளின்படி (வுழுசு), குழு நடவடிக்கை முறைகளை நடத்தும் மூன்று (03) நிர்வாக அதிகாரமற்ற பணிப்பாளர்களை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உள்ளடக்கியிருக்கும். மீளாய்வுக்குட்படுத்தப்பட்டிருந்த வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு;

AMC கட்டமைப்பு			
பணிப்பாளரின் பெயர்	பதவிக்காலம்		பதவி
ஜீ. ஏ. ஏ. பிரியந்த	29.06.2021	தற்போது வரை	தவிசாளர்
கேப்டன் மிலிந்த ரத்நாயக்க	20.06.2022	தற்போது வரை	உறுப்பினர்
திரு. டபிள்யூ. எஸ். டீ டீ சில்வா	30.11.2022	தற்போது வரை	உறுப்பினர்
திரு. எஸ். எம். ஏ. யூ. எஸ் மஞ்சநாயக்க*	12.12.2019	12.08.2022	உறுப்பினர்
திரு. டீ. ஏ. பீ வீரத்ன**	23.10.2020	11.06.2022	உறுப்பினர்
திரு. என். எம். பீ. பீ. கே. கே. நவரத்ன***	20.06.2022	29.11.2022	உறுப்பினர்

* 12.08. 2022 அன்று திரு. எஸ். எம். ஏ. யூ. எஸ் மஞ்சநாயக்க தனது பதவியை இராஜனாமா செய்தவுடன், கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவுக்கு தளபதி. மிலிந்த ரத்நாயக்க நியமிக்கப்பட்டார். 17.02.2022 அன்று நடந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தில் இறுதியாக திரு. எஸ். எம். ஏ. யூ. எஸ் மஞ்சநாயக்க கலந்து கொண்டிருந்தார்.

** 11.06.2022 அன்று திரு. டீ. ஏ. பீ வீரத்ன தனது பதவியை இராஜனாமா செய்தவுடன், கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவுக்கு திரு. என். எம். பீ. பீ. கே. கே. நவரத்ன நியமிக்கப்பட்டார்.

*** 29.11.2022 அன்று திரு. என். எம். பீ. பீ. கே. கே. நவரத்ன இராஜனாமா செய்தவுடன், கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவுக்கு திரு. சுனில் டீ சில்வா நியமிக்கப்பட்டார்.

ஆநுறுவுஜபேளு

2022ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆறு (06) கூட்டங்களை நடத்தியது. கூட்டத்திற்கு வருகை தந்தோரின் விபரம் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	வருகை தரவிருந்த கூட்டங்களின் எண்ணிக்கை	வருகை
ஜீ. ஏ. ஏ. பிரியந்த	06	06
கேப்டன். மிலிந்த ரத்நாயக்க	05	05
என். எம். பீ. பீ. கே. கே நவரத்ன	05	01
ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். எம். ஏ. யூ. எஸ் மஞ்சநாயக்க	01	01
டீ. ஏ. பீ. வீரத்ன	01	01
டபிள்யூ. எஸ். டீ டீ சில்வா	-	-

கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவுக்கான தொழிற்படும் செயலாளராகக் கடமையாற்றும் நிறுவனத்தின் செயலாளரினால் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டங்களின் நடவடிக்கைமுறைகள் பதிவு செய்யப்படும், மற்றும் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டங்களின் அறிக்கைகள், அடுத்து நடைபெறும் கூட்டத்தில் பணிப்பாளர் குழுவினரிடம் வழங்கப்படும்.

விசாரணை நியதி

சபை அங்கீகரித்த விசாரணை நியதிகளின்படி, கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு நடவடிக்கைமுறைகளை நடத்தும் மற்றும் அதன்படி, குழுவினால் பின்வரும் அதிகாரங்கள் சபைக்கு வழங்கப்படுகின்றன.

1. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயற்பரப்பு மற்றும் பொறுப்புகளை வரையறை செய்தல்
2. வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் பணிச் செயற்றிட்டத்தை மீளாய்வு செய்து ஒப்புதல் அளித்தல். கணக்காய்வாளர் நாயகத்தின் (வெளிவாரி கணக்காய்வாளர்) ஆலோசணையுடன் உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படல்.
3. நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான உள்ளக கட்டுப்பாட்டுப் பொறிமுறையை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
4. வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடி, கணக்காய்வாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் அதற்கான நிர்வாகத்தின் பதில் ஆகியவற்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள முயலுதல்.
5. முதல்நிலைப் பாதீட்டு மீளாய்வு அறிக்கைகள் உள்ளடங்களாக உள்ளக நிதிநிலை அறிக்கைகளின் மீளாய்வு
6. கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு ஏற்ப வருடாந்த நிதிநிலை அறிக்கைகளின் மீளாய்வு
7. உள்ளக மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனான தொடர்பாடல்.
8. சிரேஷ்ட நிர்வாகப் பணிக்குழாம் நியதிச்சட்ட மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகளுடன் பரிச்சயமாக இருப்பதை உறுதி செய்தல் மற்றும் நியதிச்சட்ட மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகள் குறித்த இணக்கப்பாட்டையும் மீளாய்வு செய்தல்

9. உள்ளக கணக்காய்வாளர்களின் அறிக்கை.ீ. கேள்விகளைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் குறித்துக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக ஒவ்வொரு பிரிவினதும் தலைமைகள் எடுத்த துரித நடவடிக்கையை உறுதிப்படுத்துதல்
10. வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் அறிக்கை/ கேள்விகள் மீள்நிகழ்வதைத் தவிர்ப்பதற்கு தேவைப்படுவது போல திருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்
11. அரச நிறுவனங்கள் (COPE) மற்றும் கண்காணித்தல் செயற்பாடுகள்/ காலத்துக்குக் காலம் அவற்றின் மீதான ஏற்புறுதி தொடர்பாகக் குழுப் பரிந்துரையின் நடைமுறைப்படுத்தலை மீளாய்வு செய்தல்
12. உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் பயனுறுதிறனின் தொடர்ச்சியான பாரபட்சமின்மையை மீளாய்வு செய்தல்.
13. உள்ளக.ீ.வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல். நிர்வாகக் கடிதங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் சீராக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபைக்கு உதவுதல்
14. போதியளவு உள்ளக கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் சபைக்கு உதவுதல்.
15. குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையேனும் ஒன்றுகூடி, உடனடியாக அதன் பரிந்துரைகளை - திருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கூட்டத்தின் அறிக்கை உள்ளடங்களாக - பணிப்பாளர்கள் சபைக்கு அறிவித்தல்

நிதிநிலை அறிக்கையிடல்

அறிக்கையிடல் காலப்பகுதியில் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள நிதிநிலை அறிக்கையிடல் பொறிமுறையின் பயனுறுதிறனைக் குழு மீளாய்வு செய்தது. கணக்காய்வுப் புத்தகங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான நிதிநிலை அறிக்கைகளைத் தயார் செய்யும் அவர்களுடைய பொறுப்பை விடுவிப்பதற்குப் பணிப்பாளர் சபைக்கு குழு உதவி புரிந்தது. அனைத்துப் பரிமாற்றங்களும் துல்லியமாகவும், முழுமையாகவும் கணக்கீட்டுப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கான நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை மற்றும் நடவடிக்கைமுறை ஆகியவற்றின் நிறைவைக் குழு மீளாய்வு செய்தது. நிதிநிலை அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் வழங்கலின் போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய அனுமானங்கள் மற்றும் தீர்ப்புகளை உள்ளடக்கிய துணைத் தகவல்களுடன், மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கைகளைக் குழு மீளாய்வு செய்தது. கடந்த வருடம் 2022 டிசம்பர் 31ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் வரைவுகள் மற்றும் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்பதாக 2023க்குத் தயாரிக்கப்பட்ட பாதீட்டு வரைவு ஆகியவற்றையும் குழு மீளாய்வு செய்தது.

நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுபாட்டுப் பொறிமுறைகள் மற்றும் நடைவடிக்கைமுறைகளை மதிப்பாய்வு செய்த பின்னர், நிறுவனத்தின் நிதிநிலை நன்கு கண்காணிக்கப்படுவதாகவும், துல்லியமாக அறிக்கையிடப்படுவதாகவும் உறுதிப்படுத்துவதற்கு போதியளவு கட்டுப்பாடுகள் மற்றும் நடைவடிக்கைமுறைகள் காணப்படுகின்றன என்னும் நிலைப்பாட்டில் குழு இருக்கிறது

உள்ளகக் கட்டுப்பாடு

2022ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதிறனைக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மதிப்பீடு செய்தது. சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், வெவ்வேறு ஆபத்துகளைத் தணிப்பதற்குமான உள்ளகக் கட்டுப்பாடுகளின் நிறைவு மற்றும் பயனுறுதிறன் ஆகியவற்றைச் செயல்முறை மதிப்பீடு செய்தது. இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் பயனுறுதிறனை மேம்படுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதத்தின் தலைமையுடைய (IA&QA) பரிந்துரைகள் தொடர்பாக நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளைக் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு உறுதிப்படுத்துகிறது. உள்ளகக் கட்டுப்பாட்டுச் சட்டகத்தின் அடித்தளமானது பணிப்பாளர் சபைக்கு அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இயலுமாக்குகிறது.

உள்ளகக் கணக்காய்வு

விமான மற்றும் விமானச் சேவைகளின் முழுமொத்தக் கட்டுப்பாட்டுச் சட்டகத்தையும் மேம்படுத்துவதில் ஆதரவளிக்கும், சுயேச்சையான மற்றும் புறவய உறுதிப்பாட்டுத் தொழிற்பாடாக உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு (IA) காணப்படுகிறது. இலங்கை விமானம் மற்றும் விமானச் சேவையின் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் அரசாங்க செயல்முறைகளின் பயனுறுதிறன் மற்றும் வடிவமைப்பை மதிப்பிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் ஒரு முறையான மற்றும் கட்டுக்கோப்பான அணுகுமுறையின் பேணலுக்கு உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு பங்காற்றுகிறது.

இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் நிதிநிலை மற்றும் கணக்காய்வுத் தொழிற்பாட்டை உண்மையாக நடத்திச் செல்வதற்குப் பொறுப்பாக உள்ளவர்களினதும், அதே போல, பாரபட்சமின்மை, செயற்றிறமை மற்றும் உரிய தொழில்முறைப் பராமரிப்புடன் நடத்தப்படும் நல்ல கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கு அமைவாக இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள் மூலமாக அளிக்கப்படும் திட்டம் மற்றும் செயற்றிட்டம் ஆகியவற்றின் பிரயோகம் அல்லது பணிகள் மற்றும் சேவைகளின் செயலாக்கம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களினதும் கட்டுப்பாட்டை விட்டு சுயேச்சையாக உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு செயல்படுகிறது என்பதை கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு உறுதிப்படுத்தியது. உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதப் பிரிவின் செயல்பாடுகளுடைய செயற்பரப்பு, வளங்கள், அளவு மற்றும் பயனுறுதிறன் ஆகியவற்றைக் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு கண்காணித்து மதிப்பாய்வு செய்தது.

2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு மீளாய்வு மற்றும் மதிப்பாய்வுக்குட்படுத்தி அங்கீகரித்தது. உள்ளக மதிப்பாய்வின் முக்கிய கணக்காய்வுக் கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான நிர்வாகத்தின் பொறுப்புணர்ச்சியையும் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு மீளாய்வு செய்து, கண்காணித்தது.

வெளிவாரிக் கணக்காய்வு

அரசியலமைப்பின் 154ஆவது உறுப்புரைக்கு அமைவாக, இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் வெளிவாரிக் கணக்காய்வை மேற்கொள்வதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, நிறுவனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வெளிவாரிக் கணக்காய்வாளராகக் கணக்காய்வாளர் நாயகம் பணியாற்றுவார். இலங்கை கணக்காய்வு நியமங்களின் நிதிநிலை அறிக்கைகளுக்கு அமைவாக நடக்கும் கருத்து ஒன்றைத் தெரிவிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வெளிவாரிக் கணக்காய்வாளருடன் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு கலந்துரையாடும்.

ஒரு சுயேச்சைக் கண்காணிப்பாளராக, வெளிவாரிக் கணக்காய்வாளர் அனைத்து கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டார், அது ஒழுங்குவிதிசார் மற்றும் அமைவான தேவைப்பாடுகள் குறித்த ஒரு கண்ணோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் கட்டுப்பாடு அல்லது நடவடிக்கைமுறைசார் பலவீனங்கள் ஏதும் இருப்பின், அவற்றைக் கலந்துரையாடுவதற்கும் சபைக்கு இயலுமாக்கியது.

நல்லாட்சி

அரசாங்க சுற்றறிக்கைகள் போன்ற ஒழுங்குவிதி சார்ந்த தேவைப்பாடுகளைத் தொடர்வதன் முக்கியத்துவம் மற்றும் தேவை குறித்து விழிப்பூணர்வூட்டுவதனூடாக இலங்கை விமான மற்றும் விமான சேவைகளில் நல்லாட்சி மற்றும் முனைப்புக் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கு கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு அளப்பரிய பங்காற்றும்.

முடிவுரை

அதன் கடும் முயற்சியின் போது, கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவானது, நிதிநிலை அறிக்கையிடல் செயல்முறைகள், உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளின் நிறைவு மற்றும் பயனுறுதிறன், வெளிவாரிக் கணக்காய்வு, மற்றும் சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இருப்பதைக் கண்காணிக்கும் இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளுடைய செயல்முறை ஆகியவற்றுடன் தொடர்புடைய அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர் சபைக்கான ஆதரவு மற்றும் வழிகாட்டலுடன் இலங்கை விமான மற்றும் விமானச் சேவையுடைய வணிகங்களின் சுயேச்சையான அசிரத்தையை சமப்படுத்துவதற்கு கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு முயல்கிறது. கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு அதன் கடமைகளை இவ்வருடம் சரிவரவும், உயர் தரத்தைப் பேணும் வகையிலும் நிறைவேற்றியுள்ளமையால் அது நம்பிக்கையுடன் செயல்படுகிறது, அதன் காரணமாக நிறுவனத்தின் விழுமியங்களை வளப்படுத்த உதவுகிறது.

திரு. ஜீ. ஏ. ஏ. பிரியந்த
தவிசாளர் - கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு (AMC)

26 மே 2023

எமது சேவையின் உச்சத்தை நுகர்தல்


NESCAFÉ

436% வளர்ச்சியுடன்

13 பில்லியன் ரூபாய்

நிர்வாக இலாபம்

266% வளர்ச்சியுடன்

5,503,198

பயணிகள்

155% வளர்ச்சியுடன்

23,846

பறத்தல் இயக்கங்கள்

78% வளர்ச்சியுடன்

37,641

வானூர்தி சேவைகள்



முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

1) பூகோள மற்றும் உள்ளூர் விமானச்சேவைகள் கைத்தொழிலின் மதிப்பீடு மற்றும் வெளித்தோற்றம்

பூகோள விமானச் சேவைகள் கைத்தொழிற்துறையானது 2022 ஆம் ஆண்டில் சவாலிற்குட்பட்டதாக காணப்பட்டதுடன் விமானப் போக்குவரத்து மற்றும் பயணிகளது நகர்வுகளிலும் குழப்பகரமானவொரு சூழ்நிலையை எதிர்கொண்டிருந்தது. கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக பயணத்தடைகளின் அமுலாக்கம் மற்றும் சர்வதேச எல்லைகளது மூடல் என்பனவும் விமான எரிபொருட்கள் மற்றும் பயணச்சீட்டுக்களது விலை அதிகரிப்பு என்பனவும் 2022 ஆம் நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் விமானச் சேவையின் மீது மறைக்கணிய தாக்கத்தினை ஏற்படுத்தின. எனினும், இத்தேய்மானமானது அவ்வருடத்தின் பின்னைய பகுதிகள் முழுமையிலும் அதிகரித்த விமானப் போக்குவரத்தின் தேவை காரணமாக, ஒரு சாய்தளத்தினை நோக்கி உந்தப்பட்டது. இவ்வாறாக பூகோள விமானச் சேவைகள் துறை 2022 ஆம் ஆண்டின் நிறைவில் சாதாரண நிலையை எட்டியது. இம்முக்கிய வளர்ச்சியானது நேர்க்கணிய குறிப்பும் திண்மையான அடித்தளமுமாக ஆரம்பித்த 2023 ஆம் நிதியாண்டினை மேலும் உந்தியது. நிச்சயமற்ற ரஷ்ய-உக்ரேனிய யுத்தம் மற்றும் சீனாவின் மட்டுப்படுத்தப்பட்ட பயணக் கொள்கைகள் என்பன இவ்வெளித்தோற்றத்திலான மேலதிக இடர்களாக காணப்பட்டன.

புத்தாக்கத்தின் முன்னரங்கினில் பூகோள விமானச்சேவைகள் காணப்படுகின்றமையினால், இன்றளவிலும் இதுவே பாதுகாப்பானதும் அதிக நம்பகத்தன்மைமிக்கதுமான போக்குவரத்து முறைமையாக காணப்படுகின்றது. விமானச் சேவைகளானது பல்வேறு நாடுகளிற்கும் நகர்களிற்கும் இடையிலான போக்குவரத்தினை விரைவுபடுத்துவதுடன் போக்குவரத்திலான வினைத்திறனையும் வளப்படுத்துகின்றது. இவ்வாறாக, புள்ளிவிபரத்தின்படியாக, நாளொன்றிற்கு 100,000 வர்த்தக விமானங்கள் பயணத்தில் ஈடுபடும் அதேவேளை மணித்தியாலமொன்றிற்கு 400 வர்த்தக விமானங்கள் பறப்பதற்காக அட்டவணைப்படுத்தப்படுகின்றன. உலகின் மொத்த பூகோள உற்பத்தியில் 4.2% வீதமாகவும் உலகளவிய ரீதியில் 65 மில்லியன் வேலைவாய்ப்புக்களை உருவாக்கியும் உலக பொருளாதாரத்தில் முக்கிய தாக்கத்தினை விமானச்சேவைகள் ஏற்படுத்துகின்றது.

மூலோபாய அமைவிடத்தை கொண்டுள்ளமையிலும் தென்னாசியாவிற்கான நுழைவாயிலாக காணப்படுவதிலும் இலங்கை பெருமிதம் கொள்கின்றது. 2022 ஆம் ஆண்டு மிக்க சவாலானதாகவும் கொந்தளிப்பான ஆண்டாகவும் காணப்பட்டது. 2022 ஆம் வருடத்தில் இலங்கை எதிர்பாரா பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை எதிர்கொண்டது; மின்துண்டிப்பு, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மற்றும் மக்கள் எழுச்சி என்பவற்றை உள்ளடக்கியிருந்த இது உள்ளூர் பொருளாதாரம் மற்றும் விமானச்சேவைகளில் அழிவுமிக்க தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 9.2% இனால் குறைவடைந்ததுடன் மறைக்கணிய வளர்ச்சியையும் கொணர்ந்த அதேவேளை டிசெம்பர் மாத நிறைவில் பணமதிப்பிழப்பானது 59% மாக காணப்பட்டது.

பொருளாதாரத்தில் எதிர்கொண்ட தாழ்வுகளிற்கு மத்தியிலும் நான்காம் காலாண்டில் சரிவுதளத்தினதான செயற்பாடுகளின் காரணமாக மதிப்பாய்வின் பிரகாரம் சர்வதேச சுற்றுலாப்பயணிகளது வருகையானது 700,000 கடந்தது.

1.1 சர்வதேச சிவில் விமானச்சேவை ஒழுங்கமைப்பினது நீண்ட கால போக்குவரத்து எதிர்வுகூறல்களில் கொவிட்-19 இனின் தாக்கம்

சர்வதேச சிவில் விமானச்சேவை ஒழுங்கமைப்பின் செயலக பிரிவானது நீண்டகால போக்குவரத்து எதிர்வுகூறல்களின் மீதான பல்துறை பணியாற்றல் குழுமத்தின் 2018 முதல் 2050 வரையில் வழிப்பாதை குழுமத்தினால் கொவிட்-19 இனிற்கு பின்னரான ஒரு தொகுதி எதிர்வுகூறல் காட்சியமைப்புகளை விருத்திசெய்திருக்கின்றது. இவ்வெதிர்வுகூறல்களானது பயணிகளுக்கும் விமான போக்குவரத்துக்குமென அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளதுடன் இது மத்திய, உயர் மற்றும் தாழ் என மூன்று காட்சியமைப்புக்களை உள்ளக்கியுள்ளது.

கொவிட்-19 இனிற்கு பின்னராக எதிர்வுகூறல்களது நோக்கமாவது விமானச்சேவைத் துறைக்கான மேம்படுத்தப்பட்ட பேரண்ட பொருளாதார தரவுகள் மற்றும் கேள்வி அதிர்வுகளது சமீபத்திய மதிப்பீடுகளது (கிலோமீட்டருக்கான வருமான பயணிகளிற்கான மாற்றங்களினால் அளவிடப்பட்டது) கூட்டினை தேவைப்படுத்துகின்ற கொவிட்-19 இனின் குறுங்கால தாக்கங்கள் மற்றும் அதன் தொடர்ச்சியான நீண்டகால மீட்பு எனும் இரண்டின் பாற்பட்டதான பயணிகளது நீண்டகால எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதாகும்.

சரக்குசேவை நீண்டகால எதிர்வுகூறலானது 2018 ஆம் ஆண்டின் அடித்தளத்துடன் மேம்படுத்தப்பட்ட பொருளாதார எதிர்வுகூறல்கள், 2020 ஆம் ஆண்டின் அடிவருமானத்தின் விரிவு மற்றும் நீண்டகால போக்குவரத்து எதிர்வுகூறல்களின் மீதான பல்துறை பணியாற்றல் குழுமம் மற்றும் கைத்தொழிற்றுறையின் தகவல்கள் என்பவற்றிலிருந்தான உள்ளீடுகளினால் வழிநடாத்தப்படும் குறுகிய கால மீட்பு என்பவற்றிலிருந்து சர்வதேச சிவில் விமானச்சேவை ஒழுங்கமைப்பின் நீண்டகால எதிர்வுகூறல்களை பயன்படுத்தும் பயணிகள் எதிர்வுகூறல்களிற்கு ஒப்பாக மீள்மதிப்பிடப்பட்டது.

நிச்சயமற்ற இக்காலகட்டங்களில், செயலகம் மற்றும் நீண்டகால போக்குவரத்து எதிர்வுகூறல்களின் மீதான பல்துறைப் பணியாற்றல் என்பவற்றினால் விருத்திசெய்யப்பட்டதும் விமானச்சேவைகள் தரவுகள் மற்றும் பகுப்பாய்வு குழுவினால் அனுமதிக்கப்பட்டதுமான கொவிட்-19 இற்கு பின்னரான எதிர்வுகூறல் காட்சியமைப்புகளானவை, அரசு, விமானநிறுவனங்கள், விமானநிலையங்கள், விமான வழிகாட்டல்கள் சேவை வழங்குநர் மற்றும் ஏனைய பங்குதாரர்களது திட்டமிடல் தேவைகளை வளப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.1.1 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய பசுபிக் விமானநிலையங்கள் மீட்பு எதிர்வுகூறல்

சர்வதேச விமானநிலையங்கள் சபையின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் விமானநிலையங்கள் 2019 ஆம் ஆண்டின் கொவிட்டிற்கு முன்னதாக காணப்பட்ட 3.4 பில்லியன் எனும் பயணிகள் கொள்ளளவை அடைய எதிர்ப்பார்க்கப்படுகின்றன. சர்வதேச விமானநிலையங்கள் சபையானது அதனது உலக விமான போக்குவரத்து எதிர்வுகூறல்களில், அடுத்த 20 வருடங்களில், ஆசிய பசுபிக் மற்றும் மத்திய கிழக்கு பகுதிகளே அனைத்து பூகோள வலயங்களிலும் விரைவாக வளர்ச்சியடையும் பகுதியாக காணப்படும் பகுதி என்கிறது. மொத்த பயணிகள் போக்குவரத்தானது 2040 இல் மத்திய கிழக்கில் +5.2% மாகவும் ஆசிய பசுபிக் வலயத்தில் +4.7% மாகவும் கூட்டுமொத்த வளர்ச்சியாக வளர எதிர்பார்க்கின்றது. 2020 ஆம் ஆண்டில், உறுதிப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தப்படவேண்டிய இறுதி எண்ணிக்கையாக, ஆசிய பசுபிக் விமானநிலையங்களானவை -58% வீதத்தினாலும், மத்திய கிழக்கு பகுதி -72% வீதத்தினாலும் குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. கொவிட்டிற்கு முன்னரான மத்திய கிழக்கின் மீளும் மட்டமானது 2024 ஆம் ஆண்டில் அடைந்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச விமானநிலையங்கள் சபையின் ஆசிய-பசுபிக் பிராந்திய பணிப்பாளர் நாயகம் ஸ்டெபானோ பரோன்சி அவர்கள்: "இவ்வெதிர்கூறலானது 2021 ஆம் ஆண்டில் வினைத்திறனான தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டதினையும் பரந்தளவிலான மக்களிற்கு தடுப்பூசி வழங்கலானது பூர்த்தியடைந்திருப்பதினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட தடுப்பூசி விநியோகம் மற்றும் மெதுவான விநியோகம் என்பன நீடித்த பொருளாதார கீழிறக்க இறக்கங்கள் ஒட்டுமொத்த வலயத்தையும் 2024 ஆம் ஆண்டு வரையில் மீட்பிலிருந்து பிற்போடுகின்றன." என்கிறார். விரைவாக வளரும் பத்து நாடுகளிலிருந்து, 2019 இலிருந்து 2040 இற்குள்ளான ஒட்டுமொத்த வளர்ச்சியாலான 50 மில்லியன் பயணிகள், மத்திய கிழக்கின் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஈரானிலிருந்தும், ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் இந்தோனேசியா, இந்தியா, வியாட்நாம் மற்றும் சீனா அகிய நாடுகளிற் வருகைத்தருவர். பூகோள தடுப்பூசி வழங்கல் பொறுப்பேற்பிற்கான முக்கிய சேவைகள் மற்றும் ஆதரவினை விமானச்சேவை கைத்தொழிற்துறையானது தொடர்ந்தும் வழங்குவதில், சர்வதேச விமானநிலையங்கள் சபையின் ஆசிய-பசுபின் பிராந்தியமானது நோயெதிர்ப்பு பரிந்துரைகள் மற்றும் தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டங்கள் குறித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலோபாய ஆலோசனை குழும நிபுணர்களது ஒரு பகுதியின் அத்தியாவசிய தொழிலாளர்களாக அனைத்து விமானச்சேவைகள் தொழிலாளர்களையும் உள்ளடக்க நிர்ப்பந்தித்தது.

1.2 2024 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் மீட்டெடுக்கவேண்டிய பூகோள வான்வழி பயணிகளது எண்ணிக்கை


சர்வதேச வான்வழி போக்குவரத்து சங்கமானது கொவிட்-19 இற்கு முன்னரான மட்டங்களை (2019 ஆம் ஆண்டின் மொத்தமான 103%) விஞ்சியதாக 2024 ஆம் ஆண்டில் அனைத்தளாவிய பயணர்களின் எண்ணிக்கையானது 4.0 பில்லியன்களை (பல்துறை இணைப்பு பயணங்களை ஒரு பயணியாக எண்ணுதல்) அடையவேண்டுமென எதிர்ப்பார்க்கின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்


முன்னேற்றகர ஓய்வு அல்லது பல சந்தைகளின் பயண தடைகளின் நீக்கம் என்பவற்றின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இதுவொரு சிறிது நம்பிக்கை மிகுந்த குறுங்கால சர்வதேச மீட்பு காட்சியமைப்பாகும். 2021 இல், 2019 ஆம் ஆண்டின் மட்டத்திலும் பார்க்க உள்ளூர் பயணிகளின் எண்ணிக்கை 61% அதிகமாக காணப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டில் 93% மாகவும், 2023 ஆம் ஆண்டில் 103% மாகவும், 2024 ஆம் ஆண்டில் 111மு மாகவும் மற்றும் 2025 ஆம் ஆண்டில் 118% மாகவும் முன்றேற்றமடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச வான்போக்குவரத்து சங்கத்தினால் எதிர்வுகூறப்பட்டதன் பிரகாரம், 2040 ஆம் ஆண்டின் நிறைவில், அட்டவணை 01 இல் குறித்துரைக்கப்பட்டவாறு மொத்த பூகோள வான்வழி பயணிகள் 8 பில்லியன்களாக காணப்படுவர். சர்வதேச வான்வழி போக்குவரத்து சங்கத்தின் பிரகாரம், ஆசிய பசுபிக் பிராந்தியமானது அதனது இயல்பு நிலை சுட்டியை (2019=100) 2025 ஆம் ஆண்டில் அடையும் என்பதுடன் அட்டவனை 02 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக இவ்வுச்ச எண்ணிக்கையை 2040 ஆம் ஆண்டளவில் அடையும்.

அட்டவணை 01 - பூகோள வான்வழி பயணிகள். கடந்த கால மற்றும் எதிர்வுகூறல்கள், பில்லியன்கள்



அட்டவணை 02 - பிராந்திய பயணிகள் மொத்தக் குறியீடு 2019=100



(மூலம்: சர்வதேச வான்வழி போக்குவரத்து சங்கம்/ சுற்றுலா பொருளாதார வான்வழி பயணிகள் எதிர்வுகூறல்)

1.3 2022 ஆம் ஆண்டின் போதான சவாலான நிலைமைகளை கையாள்வதற்கு முகாமைத்தவத்தினால் கைக்கொள்ளப்பட்ட பொறிமுறை

கொவிட்-19 இனின் காரணமாக ஒட்டுமொத்த உலகிற்கும் விதிவிலக்கின்மையாக யுயுளுடு இற்கும் 2022 ஆம் ஆண்டு சவால்மிக்க வருடமாக விளங்கியது. பெருந்தொற்றானது பல்வேறு காரணிகளின் நிமித்தம் முழுவுலகிலுமாக விமானச் சேவைகள் கைத்தொழிற்துறையை கடுமையாக தாக்கியது. விமானநிலையங்களை பாலைவனமாக்கிய உள்ளக முடக்கல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான விமானங்கள் இரத்துசெய்யப்பட்டன. தொற்றேற்படும் உயர் அபாயம் அதைப்போன்றே அதிகடுமையான சுகாதார ஒழுங்குமுறைகள் மற்றும் இணைக்கப்பட்ட ஆவணவாக்கல்களின் நிமித்தமான கடும் சிரமங்களுடன் உலகம் முழுவதிலும் பயணிகளினால் அத்தியாவசிய வான்வழி பயணங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. ஆச்சரியமேதுமின்றி, யுயுளுடு உம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்ததுடன் அவற்றை கையாளவும் பல்வேறு பொறிமுறைகளை கைக்கொண்டிருந்தது.

1.3.1 பிசிஆர் சோதனை சேகரிப்பு, சுகாதார பிரமாணச் செயன்முறை, தொற்றுக்குள்ளான பயணிகளிற்கு தனிமைப்படுத்தல், சுயதனிமைப்படுத்தல் மற்றும் வைத்திய வசதிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் இன்னோரன்ன வசதிகளை வழங்குதல்

AASL ஆனது இடம், பணியாளர்களை ஒதுக்கியளித்து பல்வேறு மூலோபாயங்களுடனும் அதேப்போல் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட மாறிக்கொண்டேயிருக்கும் சுகாதார வழியுரைப்புகளினால் எழுந்த புத்தம்புதிய தேவைப்பாடுகள் போன்ற வசதிகளினை வழங்கும் முகமாக காலத்திற்கு காலமான செயன்முறைகளையும் வெளிக்கொணரவேண்டியிருந்தது. AASL ஆனது கம்பனிக்கு மேலதிக செலவீனங்களை ஏற்படுத்தாது அத்தகைய தேவைப்பாடுகளிற்கு முகம்கொள்ள காணப்படும் வளங்களை உச்சமாக பயன்படுத்தவேண்டியிருந்ததுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பயணிகளது அனுபவங்களிலின் குறைந்தளவான தாக்கங்களுடனான பயணிகள் நகர்வு மற்றும் செயன்முறைகளிற்காக தொடர்ச்சியாக மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியுமிருந்தது.

1.3.2 கொவிட்-19 இலிருந்து ஊழியப்படையை பாதுகாத்தல்

கொவிட்-19 வைரசின் அதிகரிக்கும் எண்ணிக்கையும் பணியாட்களிற்கு பரவாது தொடர்ந்தும் அறிவுறுத்தவேண்டியிருந்தமையினாலும் பகல் கடமை அல்லது அலுவல் நேரத்திற்காக குறைந்தபட்ச ஊழியப்படையை பேணுவதானது பாரிய சவால்மிக்கதாக காணப்பட்டது. எனினும் AASL ஆனது இதனை அடைந்துக்கொள்வதற்காக கடும்பிரயத்தனங்களையும் பல்வேறு மூலோபாயங்களையும் அதனில் முதலிட்டிருந்தது. சுகாதார வழியுரைப்புக்களை கடுமையாக பின்பற்றும் கம்பனியின் போக்குவரத்தின ஊடாக மாத்திரமே உயிர் குமிழிகளாக பணியாளர்கள் அவர்களது அலுவல்நேரம் மற்றும் அவர்களது இருப்பிடங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட அதேவேளை அதிகளவான நடமாட்டத்தை குறைக்கும் விதமாக அத்தியாவசிய பணி நிலையங்களில் தனியான பணிக்குழுக்கள் பணிக்கமர்த்தப்பட்டிருந்தன.

1.4 முனையம் 2 - முன்னோக்கி செல்லும் வழியை சவாலிற்குட்படுத்தல்.

பொதி 'அ' - பயணிகள் முனைய கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகள்.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையம் 2 செயற்றிட்டமானது ஒரு நவீன போக்குவரத்து மையமாக விமானநிலையத்தின் அந்தஸ்தினை உயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்டதான ஒரு ஆகர்சமும் புத்தாக்கமும் மிக்க அபிவிருத்திப் பணியாகும். அதனுடைய நவீன வடிவமைப்பு, உயர்தர வசதிகள் மற்றும் மூலோபாய அமைவிடம் என்பவற்றினால், புதிய முனையமானது வரும் காலங்களில் இவ்வலயத்தின் பயணம் மற்றும் வர்த்தகத்திற்கான முக்கிய மையமாக மாறுவதற்கான நிலையை கொண்டுள்ளது.

இக்கலைநயமிக்க முனையமானது அதனது குடிமக்களுக்கும் விருந்தினர்களிற்கும் உலகத்தரமான உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை வழங்குவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பிற்கான ஒரு சான்றாக விளங்குகின்றது. இம்முனையமானது வரியற்ற கொள்வனவு, உணவு விடுதிகள், தங்குமிடங்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடங்கலாக பயணிகளுக்கான பல்வேறு பரப்பிலான வசதிகளுடனான உயர்தர பயணிகள் காட்சியமைப்பு உபகரணங்கள் மற்றும் அதிவேக வைபை தொடர்புகள் உள்ளடங்கலாக நவீன பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல் முறைமைகளையும் உள்ளடக்கியுள்ளது.

இதனது நவீனமானதும் நேர்த்தியானதுமான வடிவமைப்பானது முனையம் 2 செயற்றிட்டத்தின் ஈர்ப்புமிக்க அம்சங்களில் ஒன்றாகும். இம்முனையமானது வினைத்திறன், சௌகரியம் மற்றும் கலைநயம் என்பவற்றில் கவனம் செலுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இவ்வலயத்தின் ஏனைய விமானநிலையங்களிலிருந்து தனித்துவமானதாக நிறுத்தும் பல்வேறு சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளது. முனையத்தின் விலையுயர்ந்த கண்ணாடி சுவர்கள் ஒடுபாதை மற்றும் சுற்றுப்புற நிலவமைப்பின் அற்புதமான பார்வைகோணத்தினை வழங்கும் அதேவேளை அதனது விஸ்தாரமானதும் காற்றோட்டமிக்கதுமான உட்புறமானது திறந்தவெளியானதும் சாந்தமானதுமான உணர்வுகளை உருவாக்குகின்றது.

அனைத்திலும் மிகமுக்கியமாக, தனது பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதிலான இலங்கையின் முயற்சிகளிற்கு முனையம் 2 செயற்றிட்டமானது ஒரு முக்கியமான முன்வைப்பாகும். புதிய முனையமானது புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதும், பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதும், பூகோள மேடைகளில் இலங்கையின் பிரசன்னத்தை அதிகரிக்கக்கூடியதாக, புதிய முனையமானது நாட்டிற்குள் அதிகளவில் சர்வதேச விமானங்களையும் பயணிகளையும் கவர்ந்திழுக்குமென உதிர்பார்க்கப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையம் 2 செயற்றிட்டமானது இலங்கைக்கும் அதன் மக்களிற்கும் அளப்பரிய நன்மைகளை கொணரும் நேர்க்கணிய அபிவிருத்தியொன்றாக காணப்படுகின்றது.

பொதி 'அ' விற்கான ஒப்பந்தம் - பயணிகள் முனைய கட்டுமானம் மற்றும் BIADP கட்டம் II பகுதி 2 இன் ஒருங்கிணைந்த பணிகளானது மார்ச் 2020 இல் தைய்சீ கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டதுடன் கட்டுமான பணிகள் 2020 டிசெம்பரில் ஆரம்பமாகின. கட்டுமான பணிகள் ஆரம்பமானதிலிருந்து, பிரதான முனைய கட்டிடங்கள், குவியங்களின் கட்டுமானம், குவிய கூரைகள், அடித்தள தூண்கள் மற்றும் பயன்பாட்டு சுரங்கங்களின் சில பகுதிகள் போன்ற குவியம் 2 மற்றும் குவியம் 3 இன் உப கட்டுமான பணிகள் 2022 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன. கூடுதலாக, 2022 ஆம் ஆண்டிலேயே பிரதான முனைய கட்டிடத்தின் சிறப்பு கட்டுமான தூண்கள் மற்றும் சில கூரைத்தளங்கள் என்பன பூரணப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், மின்பிறப்பாக்கிகள், நீற்றுலைகள், கூரை உருக்கு கட்டுமானங்கள், கூரைப் பொருட்கள், நீர் வடிப்பான் உபகரணங்கள் போன்ற வெளிநாட்டு இறக்குமதிகடன் அவற்றை உற்பத்திசெய்தலும் உள்ளடங்கலான பணிகள், நாட்டின் எரிபொருள் உள்ளிட்ட கொந்தளிப்பான பொருளாதார சூழ்நிலைகள் நிலவ காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டன என்பதுடன் AASL ஆனது ஒப்பந்தக்காரரிற்கு தேவையான எரிபொருட்களை அவர் பெற்றுக்கொள்ள வசதியேற்படுத்திக்கொடுத்திருந்தது.

எவ்வாறாயினும், இலங்கையின் வெளிநாட்டு பொதுபடுகடன் வழங்கல் தொடர்பில் உள்ளக கொள்கை குறித்த 12 ஏப்ரல் 2022 இல் திறைச்சேரியினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் மற்றும் அதனைத் தொடர்ந்த JICA இனாலான கடன் விநியோகங்களது தற்காலிக இடைநிறுத்தம் என்பவற்றின் காரணமாக, பொதி 'அ' வின் ஒப்பந்தக்காரர் தங்களது வேலைகளை ஜுலை 2022 இல் இடைநிறுத்தியதுடன் 25 ஜுலை 2022 அன்று பொதி 'அ' வினது பணிநிறுத்தத்திற்கான தங்களது அறிவித்தலையும் பொதி 'அ' விற்கான ஒப்பந்தக்காரர் வெளியிட்டார்.

தற்காலிக இடைநிறுத்த காலத்தில், செயற்றிட்ட பகுதியின் காப்பு, பாதுகாப்பு, மற்றும் சுற்றுச்சூழல் கரிசனங்களை ஒப்பந்தக்காரர் மேற்கொண்டதுடன், 2023 ஆம் ஆண்டின் நிறைவிற்குள்ளாக எதிர்பார்க்கப்பட்டவாறு கடன் வழங்கல்கள் மீளா வரம்பமானதும் எஞ்சிய வேலைகளை ஆரம்பிப்பும் வரையில் பாதி கட்டிமுடிக்கப்பட்டு காணப்படும் பிரதான முனைய கட்டிடங்கள், குவியம் 2 மற்றும் குவியம் 3 என்பனவற்றின் உருக்கு நிறுவல்கள் சிதைந்துவிடாமல் காப்பதற்காக அடையாளங்காணப்பட்ட பாதுகாக்கப்படவேண்டிய பணிகளிற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2) யுயுளுடு - ஏறுமுகமான வளரும் பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் மும்மை அடித்தள வரிசை


2.1 2022 ஆம் ஆண்டில் பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்கங்கள்

பருப்பொருள் மட்டத்தில் வளரும் பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகள்


AASL ஆனது இலங்கையின் புவியியல் விஸ்தீரணங்களில் விமான நிலைய சேவைகளையும் கொழும்பு விமான தகவல் வலயத்திற்குள்ளாக வான்வழி வழிகாட்டல்களையும் வழங்குவதற்குமான நம்பிக்கை பொறுப்புடையதாகும். அத்தியாயம் 2 இன் கீழான மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் அடிப்படையில், AASL ஆனது நிலையியற் சேவை வழங்குராக செயற்படுகின்ற ஐந்து விமான நிலையங்கள் AASL இன் கீழ் செயற்படுகின்றன. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையம், மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம் என்பன அவையாகும். இவ்வைந்து விமானநிலையங்களில், விமானநிலைய தேவைப்பாடுகள் பின்னிணைப்பு -14 இனை பூர்த்திசெய்கின்றனவாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் என்பனவே சர்வதேச சிவில் விமானச்சேவைகள் அமைப்பினால் சர்வதேச விமானநிலையங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம் எனும் ஏனைய மூன்று விமானநிலையங்களும் இலங்கை அரசாங்கத்தினால் 2019 ஆம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சர்வதேச விமானநிலையங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன.

முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்


பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்



மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம்



இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையம்



பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்

விமானச் சேவைகள் துறையில் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை நாம் படிப்படியாக உணர்ந்துவரும் நிலையில், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையமானது 5,490,973 சர்வதேச பயணிகள் நகர்வையும், 37,363 சர்வதேச வானூர்திகளது நகர்வுகளையும் 173,595 மெற்றிக் தொன் சரக்கு நகர்வுகளையும் கையாள்வதற்கான இயலுமையுடன் காணப்பட்டது.

புள்ளவிபரத்தரவுகளின் பிரகாரம், சர்வதேச பயணிகளது நகர்வுகள் மற்றும் சர்வதேச வானூர்திகளது நகர்வுகள் என்பன கடந்த வருடத்தைக் காட்டிலும் முறையே 273% மற்றும் 81% என குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளன. எனினும், சரக்கு நகர்வானது 2021 ஆம் ஆண்டிற்கு மாறாக 13% சிறிதளவான குறைவை வெளிப்படுத்தியுள்ளது.

மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம்

18 மார்ச் 2023 அன்று தன்னுடைய பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடிய மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையமானது இரண்டாவது இலங்கை சர்வதேச விமானநிலையமாகவும் நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கு பணியாற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு மாற்று விமானதளமாகவும் பெருமையுடன் விளங்குகின்றது.

இவ்வருடத்தில் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையமானது 11,577 சர்வதேச பயணிகள் நகர்வுகள், 216 சர்வதேச வானூர்தி இயக்கங்கள் மற்றும் 2 மெற்றிக் தொன் சரக்கு இயக்கங்கள் என்பவற்றை கையாளும் இயலுமையுடன் காணப்பட்டது. எனினும், சர்வதேச பயணிகளது நகர்வுகள், வானூர்திகள் மற்றும் சரக்கு நகர்வுகள் என்பன கடந்த வருடத்தைக் காட்டிலும் முறையே 65%, 63% மற்றும் 96% என வீழ்ச்சியடைந்துள்ளன.

இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையம்

இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையமானது தெற்கு கொழும்பிலேயே 1935 முதற்கொண்டு காணப்படுகின்றது. எனினும் அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் பயணிகளும் அனைத்து வித நவீன வசதிகளும் கொண்ட இப்பழமைவாய்ந்த விமானநிலையத்தினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ விருந்துபசாரங்களை அனுபவிக்கக்கூடியதாக காணப்படுகின்றது.

கொழும்பு இரத்மலானை சர்வதேச விமானநிலையமானது முக்கிய சந்தை-சர்வதேச கூட்டுத்தாபன ஜெட் விமானங்களது தெரிவிற்குரிய இடமாக சேவைவழங்குகின்றது. உள்ளூர் விமானச்சேவைகளை மேம்படுத்துவதில் நாட்டின் பிரதான உள்ளூர் விமானநிலையமாக பணியாற்றும் அதேசமயத்தில் கொழும்பு இரத்மலானை விமானநிலையமானது அனைத்து வகையான பயிற்சி விமானங்களிற்கும் வசதியளிக்கின்றது.

இவ்வறிக்கைக்கான வருடத்தில், கொழும்பு இரத்மலானை சர்வதேச விமானநிலையமானது 2,482 உள்ளூர் பயணிகள் நகர்வுகளையும் 16,883 உள்ளூர் வானூர்தி நகர்வுகளையும் கையாண்டுள்ளது. கொழும்பு இரத்மலானை சர்வதேச விமானநிலையம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலைய வானூர்தி தளங்கள் சர்வதேச வானூர்தி தளங்களாக சான்றளிக்கப்பட்டு மதிப்பாய்விற்கான வருடத்தில் CAASL இன் வானூர்தி தள சான்றிதழையும் பெற்றுள்ளதுடன் AASL இன் கண்காணிப்பின் கீழ் தரையிறங்கல் கட்டுப்பாட்டு சேவை அலகும் தாபிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மற்றம் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையங்களின் தரையிறங்கல் கட்டுப்பாட்டுக்கான AASL இன் சான்றிதழானது யுயுளுடுஇன் 30 பணியாட்களிற்கு அனைத்து பரிந்துரைக்கப்பட்ட தரையிறங்கல் கற்கைகளையும் சமாந்திரமாக வழங்கி பயிற்றுவிக்கப்பட்டதாகும்.

யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம்

2022 ஆம் நிதியாண்டின் போது, யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையமானது 2021 ஆம் நிதியாண்டில் அறிக்கையிடப்பட்ட பூச்சிய சர்வதேச நகர்வுகளைக் காட்டிலும் 594 சர்வதேச பயணிகள் நகர்வுகள் மற்றும் 24 சர்வதேச வானூர்தி நகர்வுகளை அறிக்கையிட்டது. மதிப்பாய்விற்கான வருடத்தில் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையத்தின் வானூர்தி தள சான்றிதழானது மீள்புதிப்பிக்கப்பட்டது.

நாட்டின் வடபகுதியின் வான்வழி பயணத்திற்காக அதிகரிக்கும் கேள்வியினைக் கருத்திற்கொண்டு, இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் ஆதரவுடன், எலைன்ஸ் எயார் நிறுவனமானது, எமது அண்டை நாடுகளை இணைத்தல் மற்றும் இலங்கையின் வட பகுதி மற்றும் தென்னிந்தியாவைச் சேர்ந்த அனைவருக்கும் சிறப்பான தொடர்பாடலை வழங்கும் நோக்குடன் 12 டிசெம்பர் 2022 முதல் வாரத்திற்கு நான்கு நாட்கள் நேரடி விமானங்களை இயக்க தீர்மானித்தது.

மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம்

மட்டக்களப்பு விமானநிலையமானது இலங்கையின் கிழக்கு கடற்கரையினை நோக்கியதாக மட்டக்களப்பு நகரிலிருந்து தென்கிழக்கு திசையில் 2.4 கி.மீ தொலைவில் புவியியல் மூலோபாயமாக அமைந்துள்ளது.

மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையமானது 1,321 உள்ளூர் பயணிகள் நகர்வுகளையும் 334 உள்ளூர் வானூர்தி நகர்வுகளையும் 2022 ஆம் நிதியாண்டில் பதிவுசெய்துள்ளது. அதன் பிரகாரம், பயணிகளது நகர்வுகள் மற்றும் வானூர்திகளது நகர்வுகளானவை கடந்த வருடத்தைக் காட்டிலும் முறையே 22%, 29% இனால் அதிகரித்துள்ளன.

AASL ஆனது அதனது பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகளில் ஏறுமுகத்தில் நகர்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும் முகமாக, அனைத்து வானூர்தி தளங்களிலுமான பயணிகளது நகர்வுகள், வானூர்திகளது நகர்வுகள் மற்றும் சரக்கு நகர்வுகளின் பிரகாரம் அவை அனைத்து எதிர்கால நேர்க்கணிய எதிர்பார்க்கைகளது தோற்றப்பாட்டுடன் விரைவான மீட்பினை உறுதிப்படுத்துகின்றன.

நிர்வாக பிரதாதன செயற்பாட்டு குறிகாட்டிகள் உச்சபட்சமாக பலப்படுத்திய AASL இன் அடித்தள வரிசைகளானவை:


அ) வானூர்தி நகர்வுகள்
ஆ) பயணிகள் நகர்வுகள்
இ) சரக்கு நகர்வுகள்


மேலுள்ள பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகளின் விரைவான மீட்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டினை உறுதிப்படுத்தும் முகமாக 2022 ஆம் ஆண்டு முழுவதும் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளின் தொடரானது கீழே சாராம்சப்படுத்தப்பட்டுள்ளது.

அ) வானூர்தி நகர்வுகள் ஊடாக அடித்தள வரிசையை வலுப்படுத்தல்

பல புதிய விமானச்சேவைகள் இலங்கைக்கான பயணத்தை தொடங்கியுள்ள அதே சமயம், நாட்டிற்குள்ளாக எண்ணிறந்த, உவப்பற்ற தொடர்நிகழ்வுகள் மற்றும் மோசமான பொருளாதார பின்னடைவுகள் என்பன காணப்பட்டபோதிலும் உலகளாவியரீதியில் நாடு குறித்து தோற்றம்பெற்ற நேர்க்கணிய தோற்றப்பாடுகளின் பொருட்டு பல விமானச்சேவைகள் தங்களது விமானங்களை மீளவாரம்பித்துள்ளன.

ரஷ்யாவின் பாரிய விமானச்சேவைகளில் ஒன்றான **ரெட் விங்ஸ் எயார்லைன்ஸானது** 2022 ஆம் ஆண்டு இலங்கைக்கான 398 ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுடன் ரஷ்யாவின் மொஸ்கோவிலிருந்து மத்தளை ராஜபக்ஷ விமானநிலையத்திற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்த விமான செயற்பாடுகளைத் தொடங்கியது. இவ்விமானச்சேவையானது 412 இருக்கை வசதிகளை கொண்ட போயிங் 777-200 விமானங்களை வாரத்திற்கு இருமுறை இயக்குகின்றது. இப்பாதை அபிவிருத்தியானது இலங்கையின் சுற்றுலாத்துறையை, குறிப்பாக





முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்



Red Wings விமானச் சேவை நிறுவனமானது மத்தளை ராஜபக்ச விமான நிலையத்துக்கான திட்டமிடப்பட்ட விமானத் தொழிற்பாடுகளை ஆரம்பித்துள்ளது



Alliance Air விமானச் சேவை நிறுவனமானது யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் விமானத் தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது





Edelweiss/Swiss சர்வதேச விமானச் சேவை நிறுவனமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கான நேரடி விமானங்களை மீள ஆரம்பித்துள்ளது

பெருந்தொற்றிற்கு பின்னரான காலகட்டத்தில், ஊக்கப்படுத்தும். ரஷ்யாவானது இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான மிகநம்பகமானதும் நட்புக்குரியதுமான இடமாக விளங்கிவருவதுடன் பல தசாப்த காலமாகவே ரஷ்யர்கள் உள்ளிணைந்த சுற்றுலாத்துறையானது இலங்கையின் பிரயாண மற்றும் சுற்றுலா துறையின் அபிவிருத்திக்கானவொரு முக்கிய மூலச்சந்தையாக அதனது அளப்பரிய இயலுமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

எலைன்ஸ் எயார் அல் எசட்ஸ் ஹோல்டிங் லிமிட்டெட்டின் கிளை நிறுவனத்தின் முழு உரித்திற்குரியதான **எலைன்ஸ் எயார்**, சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையத்திற்கு 2022 டிசெம்பர் முதல் வர்த்தக விமானங்களை மீளவாரம்பித்துள்ளது. இந்நேரடி விமானமானது திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் என வாரத்திற்கு நான்கு நாட்களிற்கு இயக்கப்படும். நாட்டின் வட பகுதிகளில் அதிகரிக்கும் வான்வழி பயணத்திற்கான கேள்வியை கருத்திற்கொண்டு இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் ஆதரவுடன், எலைன்ஸ் எயார் நிறுவனமானது, எமது அண்டை நாடுகளை இணைத்தல் மற்றும் இலங்கையின் வட பகுதி மற்றும் தென்னிந்தியாவைச் சேர்ந்த அனைவருக்கும் சிறப்பான தொடர்பாடலை வழங்கும் நோக்குடன் வாரத்திற்கு நான்கு நாட்கள் நேரடி விமானங்களை இயக்க எலைன்ஸ் எயார் தீர்மானித்தது.

லுப்தான்சா குழுமத்தின் ஒரு உறுப்பினரான, **இடெல்வைஸ்/ சுவிஸ் இன்டர்நே' னல் எயார்லைன்ஸ்**, 2022 நவம்பர் முதல் சுவிட்சர்லாந்து முதல் இலங்கை வரையில் நிறுத்தமற்ற விமானசேவைகளை தொடங்கியது. சூரிச் நகரிலிருந்து கொழும்புவிற்கான முதல் விமானமானது 125 பயணிகளுடன் வந்தடைந்தது. பிரதி வியாழக்கிழமைகளிலான வாராந்த சேவையானது இலங்கையில் லுப்தான்சா குழுமத்திற்கான பொது வியாபார முகமையான யுனைட்டட் வெஞ்சர்ஸ் குழுமத்தினர் செயற்படுத்தப்படுகின்றது. சுவிஸ் இன்டர்நேஷனல் எயார்லைன்சின் துவக்கத்துடன் இது இலங்கைக்கான சுற்றுலாப்பயணிகளது வருகைக்கும் இலங்கை மற்றும் சுவிட்சர்லாந்திற்கிடையிலான வர்த்தகம், முதலீடு, நிதி, கல்வி மற்றும் கலாச்சார விடயங்களில் பொருளாதார கூட்டுறவுகளை வலுப்படுத்தவும் உதவும்.

எயார் பிரான்ஸானது வாரத்திற்கு மூன்று விமானங்கள் வீதம், 2022 நவம்பர் முதல் கொழும்பு-பாரிஸிற்கிடையில் செயற்பாடுகளைத் தொடங்கியது. இவ்வழியிலான எயார் பிரான்சின் செயற்பாடானது பருவத்திற்கானதாகும். கொழும்பிலுள்ள வாடிக்கையாளர்கள் சார்ள்ஸ் த கவுல் எனும் சௌகரியமான பிரான்சின் மையத்தின் வழியாக, 170 இடங்களை உள்ளடக்கும் எயார் பிரான்சின் உலகளாவிய வலையமைப்புடன் மேலும் தொடர்புறலாம்.

ரஷ்யாவின் மிகப்பெரிய வாடகை விமானச்சேவையான **அஸுர் எயார்** பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு நவம்பர் 2022 முதல் விமானங்களை இயக்கத்தொடங்கியது. முதலாவது விமானமானது உத்தியோகபூர்வமாக 335 பயணிகளுடன் தரையிறங்கியது. ரஷ்ய விமானச்சேவைகள் செலஸ்டியல் ஏவியேசன் டிரேடிங் லிமிட்டெட் ஏர்கெப்பின் விசேட தேவை வாகனத்துடனான பிணக்கினால் ஏரோலெப்ட்டினால் இயக்கப்பட்ட யு330-300 குறுகியகாலத்திற்கு தடுத்துவைக்கப்பட்டதிலிருந்து ஜூன் மாதத்தின் ஆரம்பம் முதல் ரஷ்ய விமானச்சேவைகள் இலங்கைக்கான விமானங்களை இயக்குவதில்லை. நீதிமன்றம் வானூர்தியை விரைவாக விடுவித்தும் நாட்டில் மேலதிக தடுத்துவைத்தல்கள் இடம்பெறாதென இலங்கை அரசாங்கம் உத்தரவாதமளித்திருந்த போதிலும் கூட, ரஷ்ய விமானச்சேவைகள் நாட்டிற்கு வரத்தயங்கின. எனினும், 2022 ஆம் ஆண்டின் நான்கு மாத பின்னடிப்புகளிற்கு பின்னரே ரஷ்யாவின் மிக முக்கிய சேவையான ஏரோபுளொட் மொஸ்கோவிற்கும் கொழும்பிற்கும் இடையில் விமானங்களைத் தொடங்கியது.

ஏரோபுளொட் எயார்லைன்ஸானது மொஸ்கோ மற்றும் கொழும்பிற்கிடையில் வாராந்தம் இரு விமானங்கள் வீதம் மொஸ்கோவிற்கும் கொழும்பிற்கும் இடையிலான விமானச்சேவைகளைத் தொடங்கியது. 2022 நவம்பர் முதல் 2023 மார்ச் வரையில் இவ்வெயார்லைன்ஸ் வாரத்திற்கு 3 வாரத்திற்கு 3 விமானங்களை இயக்குவதாக காணப்பட்டது. கொழும்பு மற்றும் மொஸ்கோவிற்கிடையிலான விமானங்களை மீளத்தொடங்கியதில், எயார்பஸ் 252 சுற்றுலா பயணிகளுடன் 10 ஒக்டோபர் 2022 அன்று பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்தது. இலங்கைக்கான ஏரோபுளொட்டின் மீள்துவக்கமானது இலங்கையின் விமானச்சேவைகள், பிரயாணம் மற்றும் சுற்றுலாத்துறையினை மேம்படுத்த பாரியளவில் பங்களிக்கும்.

தாய் எயார்வேய்ஸின் கிளை நிறுவனமான **தாய் ஸ்மைல் எயார்வேய்ஸானது** கொழும்பிற்கான நாளாந்த சேவைகளுடன் மே 2022 முதல் கொழும்பிற்கும் (பசவி) பெங்கோக்கின் சுவர்ணபூமி விமானநிலையத்திற்குமிடையில் நேரடி விமானச்சேவையினை ஆரம்பித்தது.

கட்டார் எயார்வேய்சானது பெப்ரவரி 2022 முதல் தொடங்கிய டோஹா தொடக்கம் கொழும்பு வரையிலான அதனது ஐந்தாவது நாளாந்த விமனாத்தை மீளஅறிமுகப்படுத்தியன் மூலம் ஒரு புதிய மைற்கல்லினை பதிவுசெய்தது. இத்தொடர்ச்சியான அதிகரிப்புடன், கட்டார் எயர்வேய்சானது கொழும்பிற்கான தனது பெருந்தொற்றிற்கு முன்னதான செயற்பாட்டு மட்டத்திற்கு திரும்பியதுடன் ஹமாத் சர்வதேச விமானநிலையத்திற்கும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கும் இடையில் இடையறாத சேவைகளை தொடரும் ஒரே விமானச்சேவையாகவும் விளங்குகிறது.

உஸ்பெகிஸ்தானின் அதிமுக்கிய விமானச்சேவையான **உஸ்பெகிஸ்தான் எயார்வேய்ஸ்**, 2022 பெப்ரவரி முதல் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தது. இவ்விமானச்சேவையானது வாரந்தோறும் பிரதி புதன்கிழமைகளில் உஸ்பெகிஸ்தான் மற்றும் மத்தள ராஜபக்ஸ சர்வதேச விமானநிலையத்திற்கிடையில் இயங்குகின்றது. உஸ்பெகிஸ்தான் எயார்வேய்சின் இவ்வியக்கத்துடன் கொவிட் பெருந்தொற்றினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் சுற்றுலா துறையை மீட்டெடுக்க உதவக்கூடிய இலங்கைக்கான அதிக சுற்றுலா பயணிகளது வருகை எதிர்பார்க்கப்படுகின்றது.



Air France விமானச் சேவை நிறுவனமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அதன் தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது.



Azur Air விமானச் சேவை நிறுவனமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அதன் தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது



Qatar Airways விமானச் சேவை நிறுவனமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அதன் விமானச் சேவைகளை அதிகரித்துள்ளது.



Russian flagship carrier Aeroflot Airlines விமானச் சேவை நிறுவனமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அதன் தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது.



Uzbekistan Airways விமானச் சேவை நிறுவனமானது தனது விமானத் தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது



Thai Smile Airways விமானச் சேவை நிறுவனமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அதன் நேரடி விமானச் சேவையை ஆரம்பித்துள்ளது

ஆ) பயணிகள் நகர்வுகள் மூலமாக அடித்தள வரிசையை வலுப்படுத்தல்

புதிய சேவை உற்பத்திகளை அறிமுகப்படுத்தல்

AASL ஆனது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக பயணிக்கும் அதனது பெறுமதிமிக்க பயணிகளிற்கு 'அதிசிறந்த விமானநிலைய அனுபவத்தினை' வழங்குவதற்காக 2022 ஆகஸ்ட் முதல் **'கோல்ட் ரூட்'** எனும் வர்த்தக நாமத்தின் கீழான தனது புதிதாக தாபிக்கப்பட்ட சேவை உற்பத்தியை அறிமுகப்படுத்தியது. அதிசிறந்த சேவை அனுபவங்களுடன் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் செயன்முறைகளை விரைவுபடுத்த பிரத்தியேக வழியை பயன்படுத்துவதற்காக அதிகூடிய தூரம் பிரயாணிக்கும் பயணிகளிற்கென பிரத்தியேகமானதாக காணப்படுவது இதன் தனித்தன்மையான அம்சமாகும். கோல்ட்ரூட் வழியினூடாக சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு மற்றும் ஏனைய அனைத்து கடப்பாடுகளும் உள்ளடங்கலான ஒரு விரைவான பரிசோதனை செயன்முறையினை விருந்தினர்கள் அனுபவிக்கலாம். ப்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கோல்ட் ரூட் சேவை வசதியானது பயணிகளிற்கு 200 அமெரிக்க டொலர்களில் வழங்கப்படுவதுடன் (உள்வருகை அல்லது வெளிச்செல்லல்) www.airport.lk எனும் இணையத்தளத்தினூடாக முற்பதிவுகளையும் மேற்கொள்ளலாம்.





"Gold Route" Lounge இல் ப்ரீமியம் விமான நிலைய அனுபவம்

ஒரு வாடிக்கையாளர் மைய அரசுடமையாக விளங்கும், யுயுஎல்டு ஆனது உச்சபட்ட பங்குதாரர் திருப்தியினை வழங்குவதற்கு நாள்முழுதும் ஓய்வின்றி பணியாற்றுகின்றது. எனினும் பயணிகளது முறைப்பாடுகளை கையாளல் மற்றும் உரியகால அளவில் விசாரணைகளிற்கு பதிலளித்தலே அதன் அதிமுக்கிய விடயமாகின்றது. அந்நோக்கத்திற்கு அமைவாக யுயுஎல்டு ஆனது எம்முடைய அர்ப்பணிக்கபட்ட முறைப்பாடுகள் கையாளர் முறைமை ஊடாக 2022 ஆம் ஆண்டில் 835 பயணிகளது முறைப்பாடுகளை கையாண்டுள்ளோம். அதே சமயம், விமானநிலைய வசதிகள், செயன்முறை மற்றும் ஒழுங்குமுறை மற்றும் இன்னபிற விடயங்கள் போன்ற பல்வேறு துறைகளிலான 3,702 பயணிகள் விசாரணைகளை ஏற்று தீர்வளித்துள்ளோம். அதிகளவான முறைப்பாடுகள் வான்வழி பிரயாணத்தின் கொவிட்-19 இனுடன் தொடர்புடைய விடயங்களிலான புதிய பயண தேவைப்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்தனவாகும்.

அதிமுக்கிய பிரமுகர்களை கையாளுதல் - இலங்கையின் விமானநிலையங்கள் மற்றும் வானூர்தி தளங்களை பயன்படுத்தும் ஒவ்வொரு பிரயாணியினதும் சௌகரியமே AASL இன் அதிஉச்ச முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். எனினும், பல்வேறு அடிப்படைகளில் வெளிவிவகார அமைச்சு மற்றும் ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட அரச அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்படும் அதிமுக்கிய பயணிகளை கையாளுதலும் கம்பனியின் பொறுப்பாகும். 2022 ஆம் ஆண்டில் தேசத்தின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யும் 2,194 நகர்வுகளில் எல்லாமாக, 4,368 அதிமுக்கிய பிரமுகர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் அதிமுக்கிய பிரமுகர் வழியினால் வசதியளிக்கப்பட்டுள்ளனர்.

பிரத்தியேக செல்வழி வசதி வழங்கலிற்காக இந்திய விமானநிலைய சேவை மதிப்பீட்டு கம்பனியுடன் பங்குதாரராதல் -

யுயுஎல்டு ஆனது தங்களது பயணிகளிற்கு பிரத்தியேக செல்வழி வசதிகளை வழங்குவதற்காக 6 மார்ச் 2022 முதல் செல்லுபடியாகுமாறு இந்திய விமானநிலைய சேவை மதிப்பீட்டு கம்பனியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இந்நிறுவனமே பிரதான பாத்திரமாகவும் மற்றும் இந்தியாவின் பாரிய விமானநிலைய சேவை மதிப்பீட்டாளர் தளமானது தொழிநுட்பம் வழிப்பட்ட மேடையொன்றினை உயர்த்தி பயணிகளிற்கு வசதியான விமானநிலைய அனுபவங்களை வழங்குவதனாலும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு இதுவொரு பாரிய அடைவாக காணப்படுகின்றது. அவர்கள் செல்வழி, உணவு மற்றும் பானங்கள், சந்திப்புக்கள் மற்றும் உதவிகள், ஸபா, விமானநிலைய பரிமாற்றம், தரமான ஹோட்டல்கள் அல்லது தூங்குவதற்கான அறை வசதிகள், பொதி பரிமாற்றம் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளிட்ட சேவைகளிற்கு வாடிக்கையாளர்களிற்கான அணுகல்களை வழங்குகின்றனர்.

இ) சரக்கு நகர்வுகள் ஊடாக அடித்தள வரிசையை வலுப்படுத்தல்

கட்டுநாயக்கவின் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சரக்கு கிராமத்திற்கான நுழைவு/ வெளியேறல் கட்டிடம்

இச்செயற்றிட்டத்தின் நோக்கமாவது சிவில் பணிகள், கட்டமைப்பு உருக்கு பணிகள், உலோக வேலைகள் மற்றும் பீடங்கள், பிரித்தல்கள், உறைப்பூச்சுக்கள், மின்னியல், இயந்திரவியல், தகவல் தொழிநுட்பம் மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகள் கொண்ட வாகன தரிப்பிடங்களுடனான (அண்ணளவாக 464 கனமீற்றர் பரப்பளவு) இரு மாடி கட்டிடங்களை (அண்ணளவாக 575 கனமீற்றர் பரப்பளவு) உள்ளடக்குகின்றது.





கர்கோ கிராம நுழைவு/வெளியேறுதல் கட்டிடத்தின் நிர்மாணம்

அடித்தள உச்சபயன்பாட்டு கலாச்சாரம்
நாட்டின் வரலாறு காணாத பொருளாதார மந்தநிலையின் பாதகமான தாக்கங்களை இழிவளவாக்கும் தேசத்தின் முயற்சிகளிற்கு ஆதரவளிக்கும் முகமாக, ஒரு பொறுப்புடைய அரச நிறுவனமாக AASL ஆனது நாட்டிற்கான கடமையாக கொண்டு அதனது செலவீன சுமைகளை இழிவளவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. ஒவ்வொரு தனிநபரிற்கும் ஏற்கவேண்டிய வகிபாகமொன்று காணப்படுவதனை அடையாளப்படுத்தி சிக்கன கலாச்சாரத்தினை ஊக்குவிக்க AASL இன் அனைத்து பிரிவுகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதன் உச்சமாக, மூலதன மற்றும் மீண்டுவரும் செலவீனங்களை இழிவளவாக்கும் முகமாக 2022 ஏப்ரலின் அரசாங்க சுற்றுநிருபத்திற்கு அமையவொழுக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஒழுங்குபடுத்தல் மற்றும் அத்தியாவசிய பயிற்சி தேவைப்பாடுகளிற்கு மாத்திரமே வசதியளிப்பதாக யுபுளுடு இன் பயிற்சி பாதீடு கடுமையாக குறைக்கப்பட்டுள்ள அதே சமயம், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் செலவுகளும் குறைந்தபட்ச மட்டத்திற்கு கொணரப்பட்டுள்ளது. பிந்தைய நடவடிக்கையானது பெரும்பாலும் செலவற்ற சேவை வழங்கல் வசதிகளின் ஊடாகவாயினும் வளப்படுத்தப்பட்ட வர்த்தக நாம பெறுமதி உருவாக்கத்துடன் பரவலான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களின் மீது கரிசனங்கொள்ள AASL ஐ அனுமதித்துள்ளது.

2.2 AASL – ஏறுமுகமாக வளரும் மும்மை அடித்தள வரிசை

மும்மை அடித்தள வரிசை என்பது என நன்கறியப்பட்ட கோட்பாடான மக்கள் மத்தியிலும் அதைப்போலவே பூகோளத்தின் மீதும் அதேசமயம் இலாபத்தினை ஈட்டுவதிலும் ஒரு நிறுவனம் உருவாக்கும் நேர்க்கணிய தாக்கத்தினை பொருட்கூறும், நிறுவனங்கள் தங்களது சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை அளவிடுவதற்கு அர்ப்பணிப்புடையதாக காணப்படவேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரக் கோட்பாடாகும். இப்பொருண்மையானது தங்களது நிதி செயலாற்றுகையில் மாத்திரம் கவனம் செலுத்த அல்லது இலாபத்தை உருவாக்குவதில் மாத்திரம் கவனம் செலுத்த அல்லது தரப்படுத்தப்பட்ட அடித்தள வரிசையில் கவனத்தை செலுத்துவது என்பது ஒரு வர்த்தக நிறுவனத்தின் அனைத்தளாவிய செயற்பாட்டினை அளவிடுவதற்கு போதுமானதல்ல என்பதற்கு அழுத்தம் கொடுக்கின்றது. மதிப்பாய்விற்குட்பட்ட வருடத்தில் இம்மூன்று தூண்களினதும் ஏறுமுகத்தில் AASL ஆனது TPLஇன் கீழ், இலாபம், மக்கள் மற்றும் பூகோளத்திற்கு அழுத்தம் கொடுத்தது. கம்பனியின் நிதி செயலாற்றுகையானது நிதி மதிப்பாய்வின் கீழ் பாரியளவில் பகுத்தாராயப்பட்ட அதே சமயம், இதன் ஒரு பகுதியான 'மக்கள் உருவகம்' மனிதவள முகாமைத்துவ மதிப்பாய்வில் கலந்துரையாடப்பட்டதுடன் பூகோளத் துறையானது நிலைபேண்தன்மையின் முழுமையாக காணப்பட்டது.

2.2.1 வருமானமீட்டல் இயலுமை மற்றும் விரிதிறனை மேலும் வலுப்படுத்துவதனை நோக்கிய வெற்றிகரமான மூலதனக் கலப்பு மற்றும் மென்பொருள் முதலீடு

இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையத்தின் கவச மற்றும் கிழக்கு வாகனவழியின் புனருத்தாரனம்
இச்செயற்றிட்டத்தின் நோக்கமாவது இரத்மலானை விமானநிலையத்தின் தற்போதுள்ள வடிகால் முறைமையை திருத்தியமைத்தல் உள்ளடங்கலாக கிழக்கு வாகனவழி கட்டுமானம் (அகலம் -25 மீற்றர் மற்றும் நீளம் 400 மீற்றர் அண்ணளவாக) மற்றும் தற்போதுள்ள கவசத்தினை புனருத்தாரனம் செய்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. மொத்த ஒப்பந்த பெறுமதியானது 231 மில்லியன் இலங்கை ரூபா என்பதுடன் செயற்றிட்டமானது 26 மார்ச் 2022 இல் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது.

கட்டுநாயக்கவின் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சரக்கு கிராமத்திற்கான நுழைவு/ வெளியேறல் கட்டிடம்
செயற்றிட்ட நோக்கமானது சரக்கு நகர்வுகளின் ஊடாக அடித்தள வரிசையை வலுப்படுத்துவதின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தள ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்தில் தொடர்பாடல் முறைமையை மேம்படுத்தல்
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் கொழும்பு இரத்மலானை சர்வதேச விமானநிலையத்தின் பகுதி கட்டுப்பாட்டு மையத்தில் மற்றும் குரல் தொடர்பாடல் முறைமைகள் மேம்படுத்தப்பட்டு சோதனை முயற்சி அடிப்படையில் செயற்பாட்டிலுள்ளது. விரிவான சோதனைகளின் போது புதிய முறைமையின் நிலைத்தன்மை நெருக்கமாக கண்காணிக்கப்பட்டதுடன் தொடர்ச்சியான தொழிநுட்ப ஆதரவுடன் முறைமையானது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. முன்னைய வழக்கொழியும் முறைமையை மாற்றீடு செய்து அதேசமயம் VoIP அடிப்படையிலான தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தியதன் ஊடாக கொழும்பு அணுகல் கட்டுப்பாட்டு மையம் மற்றும் பகுதி கட்டுப்பாட்டு மையத்தின் செயற்பாட்டு பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட்டது.

வான்வழி தகவல் முகாமைத்துவ முறைமை
விமான திட்டமிடல், NOTAM முகாமைத்துவம், இணைய கட்டளைகள், மூலோபாய வான்வழி தரவு முகாமைத்துவம் மற்றும் இலத்திரனியல் வான்வழி தகவல் பதிப்பு என்பவற்றிற்கான முறைமை அலகுகளிற்கு விரிவுபடுத்தப்பட்ட பரிசோதனை செயற்பாடுகளின் பின்னர் 2022 ஆம் ஆண்டளவில் அனுமதியளிக்கப்பட்டது. இச்செயற்றிட்டமானது பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தியும் சர்வதேச துறைசார் நியமங்களுடன் வான்வழி செயற்பாடுகளது வினைத்திறனை அதிகரித்தும் சர்வதேச சிவில் விமானச்சேவை அமைப்பின் ஆசிய பசுபிக் வலயத்தின் நவீன ஒழுங்குபடுத்தல் தேவைகளிற்கிசைவாக வான்வழி தகவல்களை வழங்க AASL இனை இயலுமையுடையதாக்கியுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வான் போக்குவரத்து முகாமைத்துவ முறைமை
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கொழும்பு அணுகல் கட்டுப்பாட்டு மையத்தில் வான் போக்குவரத்து முகாமைத்தவ முறைமை நிறுவலானது 2022 ஆம் ஆண்டளவில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டதுடன் ADS-B (தன்னியக்க துணைநில் கண்காணிப்பு ஒளிபரப்பு), Mode-S Radar, AMHS (ATS செய்தி கையாளல் முறைமை), முதலியன போன்ற பல புதிய தொழிநுட்பங்களது கூட்டிணைவுடன் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டது. முறைமை செயற்படுதிறன்களை சான்றுபடுத்துவதற்காக விரிவான பரிசோதனை (நிழல்) செயற்பாடுகள் நடாத்தப்பட்டதுடன் முறைமை விற்பனையாளர் மற்றும் உள்ளக பொறியியலாளர் அணியிடமிருந்து கிடைக்கக்கூடிய தொடர்ச்சியான உதவியுடன் முறைமையானது நேரடி சோதனை செயற்பாட்டிற்கு தயாராகவுள்ளது.

நிதியை வலுப்படுத்தல் மற்றும் விநியோக சங்கிலி நுசீ நிறுவல்
AASL ஆனது 1 ஜுலை 2021 முதல் நிறுவல் செயற்றிட்டத்துடன் IFS ERP நேரடி கண்காணிப்பை மேற்கொண்டது. அது முதல், அம்முறைமை தற்போதுள்ள நிலையான நிலைக்கு கொணர, AASL ஆனது பல தடைகளை வெற்றிகொள்ளவேண்டியிருந்தது. முறைமையானது ஓரளவு நிலையானதும், AASL ஆனது ERP முறைமைக்குள் எமது உள்ளக தகவல் தொழினுட்ப பிரிவினால் விருத்திசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு முறைமையுடன் இணைப்பதற்கான தொடக்கங்களை மேற்கொண்டது. இவ்வொருங்கிணைப்புடன், குறைவான கால தாமதத்துடன் முழுமையான பற்றுச்சீட்டு செயன்முறையும் நடாத்தப்படுவதற்கான நிலையை அடையவும் அவ்வாறே விரிவான தீர்மானங்களை மேற்கொள்ள சிரேஷ்ட முகாமைத்துவ அணிக்கு நேரடி தகவல்கள் கிடைக்கும் நிலையை அடையவும் எதிர்பார்க்கப்பட்டது. ஒரு சுமுகமான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு முறைமை ஒருங்கிணைப்பின் போதும் கடினமான தர உறுதிப்படுத்தல் செயன்முறைகளை AASL பின்பற்றியது. இவ்வாறாக, AASL ஆனது தற்போது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதும் தர உத்தரவாதப்படுத்தல்கள் நிறைவடைந்ததும் குழாய்களில் காணப்படுபவையும் ஒருங்கிணைக்கபடவுள்ளதுமான முறைமையை கொண்டுள்ளதாகின்றது.

2.2.2 மக்கள் துறை கருத்திற்கொள்ளல்

விமானநிலையத்தின் சுகாதார வசதிகளை வளப்படுத்துவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தன்னியக்க வெளிவாரி அதிர்வுறீக்கிகளிற்கான அன்பளிப்பு

ஹேமாஸ் சேர்ஜிகள் அண்ட் டயோக்னோஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்டின் முகாமைத்துவ பணிப்பாளர் அவர்கள் 19 டிசெம்பர் 2022 அன்று யுயுளுடு இன் தவிசாளரிற்கு அன்பளிப்புச்செய்தார். மேலும், AASL இன் பணியாட்களிற்கு AED மற்றும் CPR யின் பயன்பாடுகள் குறித்த பயிற்சியானது இலங்கை மயக்கமருந்து மற்றும் அதிதீவிர நிலை கல்லூரியின் மேற்பார்வையின் வழங்கப்படும்.



ஹேமாஸ் சேர்ஜிகல்ஸ் அண்ட் டியக்னொஸ்டிக்ஸ் (தனியார்) நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட AED

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய திடீர் அனர்த்தப் பயிற்சி - 2022

ஒருங்கிணைக்கப்பட்டவொரு கடத்தல் முறியடிப்பு பயிற்சியானது அனைத்து விமானநிலைய பங்குதாரர்களிற்குமான கடத்தல் அச்சுறுத்தல்களின் போது செயற்படுவதற்கான திடீர் திட்டமிடல் மற்றம் ஒழுங்குமுறைகளது வினைத்திறனை பரிசோதிக்கும் நோக்கில் 2022 மார்ச் மாதத்தின் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சியானது கட்டமைக்கப்பட்ட போலி சூழ்நிலை மற்றும் யுயுளுடு, பாதுகாப்பு படைகள், இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபை மற்றும் ஏனைய அரச முகவரகங்கள் உள்ளிட்ட பல்வேறு முகவரகங்களது பங்கேற்புடன் இடம்பெற்றது. இப்பயிற்சியான பங்குபற்றிய அனைத்து முகவரகங்களிற்கும் கடத்தல் சூழ்நிலையின் சிக்கல் தன்மைகளை கையாளுவதில் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தி வளப்படுத்துவதற்கு உதவியது.





பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அவசரத் தீயணைப்புச் செயற்பாடு

வெடிபொருள் கண்டுபிடிக்கும் கருவிகளை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்டது

2022 மார்ச் 1 அன்று 18 மில்லியன் மதிப்பிலான மூன்று 'வெடிபொருட்களை கண்டுபிடிக்கும் கருவிகளை' அவுஸ்திரேலிய அரசாங்கம் இற்கு அன்பளிப்பாக வழங்கியது. வெடிபொருட்களை கண்டுபிடிக்கும் கருவியானது அதிமேதகு அவுஸ்திரேலிய தூதுவர் டேவிட் ஹோலி அவர்களினால் சிவில் விமானசேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் மற்றும் அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை அரசாங்கங்களது முக்கிய அதிகாரிகள் ஆகியோரின் முன்னிலையில் AASL இன் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது.

வெடிபொருள் கண்டறியும் கருவிகள் அலகானது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வெடிபொருட்களை கண்டறியும் தகமையை வலுப்படுத்தும். பயணிகள், விமான பணிக்குழுவினர் சரக்குகள் மற்றும் வானூர்தியின் கண்ணியம் என்பவற்றை பாதுகாப்பதற்காக அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கான நேரடி விமானங்களை கண்காணிக்க இவ்வுபகரணங்கள் பயன்படுத்தப்படும். மேலதிகமாக, ஏனைய அனைத்து விமானங்களையும் பரிசோதிப்பதற்காகவும் இவ்வுபகரணங்கள் பயன்படுத்தப்படும். வெடிபொருள் கண்டுபிடிக்கும் கருவி அலகுகளது உச்சபட்ச பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கும் சர்வதேச அளவிலான சிறந்த பயிற்சிகள் மற்றும் நியமங்களிற்கு அமைவாக வெடிபொருட்களிற்காக பயணிகளையும் அவர்களது பொதிகளையும் பரிசோதிக்கவுமாக பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விமானநிலைய பாதுகாப்பு பரிசோதனை அதிகாரிகளிற்கு அவுஸ்திரேலியா பயிற்சிகளை வழங்கும். வெடிபொருள் கண்டுபிடிக்கும் கருவி அலகுகளது அன்பளிப்பானது இலங்கை சமீபத்தில் எல்லைகளை மீளத்திறந்துள்ளமையினாலும் சர்வதேச விமானங்களை இயக்குவதாலும் காலத்தின் தேவை கருதியதாக காணப்படுகின்றது.



ஆஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து ஒரு தொகை ETD களை நன்கொடையாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் பெற்றுக் கொண்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையமானது ACI விமானநிலைய சுகாதார அங்கீகாரத்தை தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக 2022-2023 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்கின்றது.

AASL ஆனது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்காக ACI விமானநிலைய சுகாதார அங்கீகாரத்தை தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக 2022-2023 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்கின்றது. எமது விமானநிலையங்கள் எமது பயணிகளதும் பணியாளர்களதும் பாதுகாப்பிற்கு முன்னுரிமையளிக்க நாம் ஏற்றுக்கொண்ட சுகாதார நியமங்களினை இது மேலும் உறுதிப்படுத்துகின்றது.

AASL ஆனது பயணிகளிற்கு பாதுகாப்பான உள்வருகை வெளிச்செல்லல் புள்ளியாக எமது விமானநிலையங்களை பெருந்தொற்றுக் காலத்திலும் கூட சர்வதேச பாதுகாப்பு நியமங்களை பேணுவதனை தொடரும்.



2022-2023 விமான நிலைய சுகாதாரச் சான்றளிப்பு

இலங்கை விமானநிலைய மற்றும் விமானச்சேவைகள் கல்லூரியின் டிப்ளோமா பட்டமளிப்பு

இலங்கை விமானநிலைய மற்றும் விமானச்சேவைகள் கல்லூரியினால் நடாத்தப்பட்ட விமானச்செவைகள் கற்கைகள் டிப்ளோமாவினை பூர்த்திசெய்த 8வது அணி மாணவர்களிற்கு அவர்களது டிப்ளோமாவானது 10 ஜனவரி 2022 அன்று கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டது.

சம்பிரதாய உரையாற்றிய AASL இன் தவிசாளர் சிறந்த பயிற்சி உட்கட்டுமானங்களில் முதலிடுவதன் அவசியம் குறித்து பேசியதுடன் பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து மதிப்பதனால் AASL ஆனது எப்பொழுதும் இம்முதலீட்டினை மேற்கொண்டுள்ளது என்பதனையும் கூறினார்.

இலங்கை விமானநிலைய மற்றும் விமானச்சேவைகள் கல்லூரியானது யுயுஎடு இன் பயிற்சி அலகாக காணப்படுவதுடன் சர்வதேச சிவில் விமானச்சேவைகள் அமைப்பின் அங்கீகாரத்தினையும் கொண்டுள்ளது. அது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழிற்பயிற்சி நிறுவனமுமாகும்.



SLAAA இல் டிப்ளோமா சான்றிதழ்கள்

கூட்டிணைந்த சமூக பொறுப்புடைமையின் ஒரு தூணாக அடுத்த தலைமுறையிற்காக பாடசாலை விஜயங்கள்

கம்பனியின் கூட்டுநிறுவன கூட்டிணைந்த சமூக பொறுப்புடைமை கொள்கையிற்கு இணங்க கூட்டிணைந்த சமூக பொறுப்புடைமையின் துவக்மொன்றாக AASL இனால் ஒரு தொகுதி செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அதன்பிரகாரம் தரைத்தள கையாளல், விமானநிலைய செயற்பாடுகள் மற்றும் வான் வழிகாட்டல் சேவைகள் குறித்து அறிந்திருப்பதற்கும் விமானச்சேவைகள் துறையில் திறந்திருக்கும் தொழில்வாய்ப்புக்கள் குறித்து அறிந்துக்கொள்வதனையும் இலக்காக் கொண்டு வருடம் முழுமையிலும் 113 பாடசாலை விஜயங்களை AASL ஆனது வளப்படுத்தியிருந்தது. அதன் விளைவாக, அடுத்த தலைமுறையின் விரிந்த தொழில்வாய்ப்புக்களுக்கு இளஞ்சந்ததியினர் மத்தியில் விமானச்சேவைகளுடன் தொடர்புடைய துறைகள் குறித்து ஆர்வத்தினை உருவாக்க AASL எதிர்பார்க்கின்றது.



இலங்கை விமான மற்றும் விமான சேவைகளினால் வசதியளிக்கப்பட்ட பாடசாலை விஜயங்கள்



சிறுவர் தினத்தை முன்னிட்டு இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் செவா வனிதா பிரிவினால் விமான நிலையப் பரிச்சய விஜயத்தை ஏற்பாடு செய்தல்

பிள்ளை பராமரிப்பு நிலையத்தை இடமாற்றல்

புத்தம் புதிய பிள்ளை பராமரிப்பு அறையொன்று நிர்மாணிக்கப்பட்டு 23 ஏப்ரல் 2022 முதல் செயற்படுவதற்காக திறந்துவைக்கப்பட்டது. முன்னைய பிள்ளை பராமரிப்பு நிலையமானது ஆரம்பத்தில் கட்டப்பட்டது என்பதுடன், அதன் நிலைமைகள் சாதாரண தரத்திற்கும் குறைவாக காணப்பட்டது. அதனால் அப்புதிய ஈர்க்கும் நிலையத்தின் கட்டுமானத்துடன் இடம்மாற்றப்படவேண்டியதாக காணப்பட்டது.

பயிற்சிகளின் ஊடாக எண்ணக்கரு சேமிப்புகளிற்கு பங்களித்தல்

மதிப்பாய்வின் கீழான வருடத்தில், 2021 ஆம் ஆண்டில் 'இலங்கை விமானநிலையம் மற்றும் விமானச்சேவைகள் கல்லூரி' யாக பெயர்மாற்றம் செய்யப்பட்ட, இன் பயிற்சி நிலையமான சிவில் விமானச்சேவைகள் பயிற்சி நிலையமானது மனித மூலதனத்தின் அபிவிருத்திக்காக வான்வழிகாட்டல் சேவைகள், விமானநிலைய முகாமைத்துவம், விநியோக சங்கிலி முகாமைத்துவம், மனிதவளங்கள், சிவில் பொறியியல் (முகாமைத்துவம்), பாதுகாப்பு சேவைகள், மின்னியல் மற்றும் வான்வழிகாட்டல் பொறியியல், சிவில் விமானச்சேவைகள் பயிற்சி, தகவல் தொழிநுட்பம் மற்றும் வான்வழி தகவல் முகாமைத்துவ பாடத்திட்டங்களில் வழங்கப்பட்ட பயிற்சியின் மூலமான எண்ணக்கரு சேமிப்புகளின் ஊடாக கம்பனியின் அடித்தள வரிசையை வலுப்படுத்த பங்களித்தது. வருடத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட எண்ணக்கருச் சேமிப்பானது 783 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஆகும்.

2.2.3 பூகோள துறையை விளக்குதல்

AASL இன் நிலைபேண் கொள்கை

கடந்த சில வருடங்களில் கூட்டுநிறுவன நிலைபேண்தன்மை கருத்தாக்கமானது சுற்றுச்சூழல் அம்சங்களிற்கு அதிக கனத்தை அளித்து நவீன கூட்டுநிறுவன வளர்ச்சியில் முன்னிலையில் தோன்றுமளவிற்கு பரிணமித்துள்ளது. தொழிலாளர்களிற்கு சிறப்பான நீண்டகால நிலைபேண்தன்மையை முன்னுரிமைப்படுத்துவதும் அனைத்து பங்குதாரர்களும் சுகாதாரமான அடித்தள வரிசைக்கு உச்ச அளவில் மாறுவதற்குமான சிறந்த தீர்வுகளை தொடர்ச்சியாக பின்தொடர்ந்தமையினாலே இச்சிறப்பம்சமானது தோற்றம்பெற்றுள்ளது. AASL இன் நிலைபேண் கருத்தியலானது எளிய பசுமை கொள்கைக்கும் அப்பால் சென்றுள்ளது. நிறுவனத்தின் தீர்க்கமான பங்குதாரராக கூழலே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பரந்த கூட்டுநிறுவன தோற்றப்பாடுகளினால் ஏற்படுவதால் மாத்திரமே நீடித்த பெறுமதி தோன்றும் என்பதனை நாம் நம்புகிறோம். எமது அணுகுமுறையானது நிறுவனத்தினில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக மற்றும் கலாச்சார மூலங்களது முக்கியத்துவத்தை அறிதலாகும். இவ்வாறாக எமது திட்டங்களும் மூலோபாயங்களும் இம்மூலங்களின் நேர்க்கணியத்தன்மையை படம்பிடித்துள்ளதுடன் நிறுவனத்திற்கும் அதனது அனைத்து பங்குதாரர்களிற்குமான நீடித்த பெறுதியை உருவாக்குவதனை நோக்கி அவை திசைமுகப்படுத்தப்படுகின்றன.

அதன் பிரகாரம், புகை கட்டுப்பாடு, காபன் வெளியேற்றத்தை இழிவளவாக்கல், இயற்கை வளங்களை மீளுயிர்ப்பதனை ஆதரித்தல் மற்றும் மனிதனது நிலைபேண்தன்மையை தடுக்கும் தடைகளை அகற்றுதல் எனும் நான்கு பகுதிகளில் கரிசனங்கொள்கின்றது.

உமிழ்வு வெளியேற்றக் கட்டுப்பாடு

இயற்கைச் சூழலுக்கு வெளியேற்றப்படும் அல்லது வெளியாகும் அனைத்து வகையான கழிவுப் பொருட்களையும் நிறுவனம் தொடர்ந்தும் மதிப்பீடு செய்கிறது. இதன் காரணமாக உமிழ்வு வெளியேற்றத்தைக் குறைத்து, பசுமையில்ல வெப்ப விளைவைக் கட்டுப்படுத்துகிறது.

- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்- இதன் மூலம் சுற்றுச் சூழலுக்கு வெளியேற்றப்படும் கழிவுகளின் நச்சுத்தன்மை அளவு கட்டுப்படுத்தப்படுகிறது.
- எரிதொட்டி மற்றும் கழிவு முகாமைத்துவம்- AASL இன் கழிவு முகாமைத்துவ ஏற்பாடானது, மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையினால் (CEA) வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் (EPL) கீழ் செயல்படும் அதிநவீன திடக்கழிவுகளை அகற்றும் எரிதொட்டியாகும்.

காபன் வெளியேற்றத்தை இழிவளவாக்குதல்

- AASL இன் சக்தி முகாமைத்துவ நடைமுறைகள் பல்வேறு விதமான திறன், நிலைபேண் தீர்வுகளின் ஊடாக பிரயோகிக்கப்படுகின்றன.
- தற்போதுள்ள கட்டிடங்கள் சக்தி வினைத்திறன் ஒளிகள், ஒளி கட்டுப்பாடு மற்றும் இயந்திர கட்டுப்பாட்டு முறைமை என்பவற்றால் மீளமைக்கப்பட்டுள்ளன.
  (உம்: T5 fluorescent fittings, C-Bus control system, drives for AHU',PAU's)
- குளிராக்கிகளிற்கான தற்போதுள்ள கட்டிட முகாமைத்துவ முறைமையுடன் புதிய குளிராக்கி முறைமையை ஒருங்கிணைத்தல்
- Use of ballasted and bulbs during remodeling projects.
- மீள்வடிவமைப்பு செயற்றிட்டங்களில் நிலைப்படுத்தப்பட்ட மின்குழிழ்களை பயன்படுத்தல்சுடுநீர் முறைமைக்கு சூரியவொளி வெப்பமாக்கிகளது அறிமுகம்
- சூரிய வெளிச்சத்துடனான இயற்கை வெளிச்சத்தையும் ஒளிஅளவு குறைக்கும் கருவிகளையும் உச்சமாக பயன்படுத்தல்
- பயணிகள் வெளிவரும் கட்டிடங்களில் நடமாட்ட உணரி, நிலைநிற்கும் உணரிகளது பயன்பாடு
- வலு துறை திருத்தங்கள், வெளிக்காட்டும் ஹோட்டல்களில் சாவியுடன் இணைக்கப்பட்ட பிரதான ஆளிகள், சக்தி செமிப்பில் பங்களிக்கும் உணவுகளை சுடாக்குவதற்கான சூடான அலமாரிகளிலிருந்து மைக்ரோவேவ் அவன்களிற்கான மாற்றம்
- அலுவலக நேரத்திற்கு பின்னரும் வாரஇறுதி நாட்களிலும் வளிப்பதனாக்கிகளை பயன்படுத்தாது இறக்கை மின்விசிறிகளை பயன்படுத்துதல்
- உயர் சூழலியல் பெறுதிகளுடன் விமான நிலைய வளாகத்தினுள் அடையாளங்காணப்பட்ட 200 மரங்கள் யுயுளுடு இன் சதுப்பு நில பகுதிகளில் மீள நடப்படுவதற்காக வேரோடு களையப்பட்டுள்ளதுடன் கட்டுமானத் தேவைகளிற்காக வெட்டி அகற்றப்படாமல் பேணிப் பாதுகாக்கப்படவேண்டியதாக மேலும் 200 மரங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன. இப்பாதுகாப்பு திட்டங்களிற்கு மேலதிகமாக, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய செயற்றிட்டத்துடன் இணைந்து யுயுளுடு இனால் ஆரம்பிக்கப்பட்ட புதிய மர நடுகையும் செயற்படுத்தப்பட்டுள்ளது

இயற்கை வளங்களை மீள்புதுப்பிப்பதற்கான ஆதரவு

மீள்புதுப்பித்தல் முயற்சிகளை வினைத்திறனாக ஆதரிக்கும் முகமாக கூட்டுநிறுவன தேவைகளை பூர்த்திசெய்யும் மாற்றுவளங்களை தேடுவதனால் இயற்கை வளங்கள் மீது தங்கியிருத்தலை இலகுவாக்கும் சவாலை AASL ஏற்றுக்கொண்டுள்ளது.

நீர்ப் பாதுகாப்பு - 50% மேலான, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திலான நாளாந்த குடிநீர் தேவையான மொத்த 2,200 கனமீற்றரில் 1,200 கனமீற்றர் நீரானது அதன் வளாகங்களில் குழாய்க் கிணறுகள் மூலமாக பெறப்படுகின்றது.

இலங்கையின் மூன்றாம்நிலை கல்விக்கு உதவி

கம்பனியானது தகவல் தொழிநுட்பம், நிதி, இயந்திர பொறியியல், பொது நிர்வாகம், போக்குவரத்து மற்றும் தளவாட முகாமைத்துவம் மற்றும் வாகனஉதிரிபாக பொறியியல் உள்ளிட்ட பல்வேறு பாடங்களின் இலங்கைப் பல்கலைக்கழக உள்வாரி பட்டதாரி மாணவர்கள், டிப்ளோமா பட்டதாரிகள் மற்றும் துறைசார் பயிலுநர்களிற்கு பயிற்சிகளை வழங்குகின்றது.

- மகரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு நன்கொடைகள்

25 ஒக்டொபர் 2022 அன்று கூட்டிணைந்த சமூக பொறுப்புடைமை தொடக்கமாக, மகரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு 4,338,230 இலங்கை ரூபாய்களை நன்கொடையாக வழங்க யுயுளுடு இனை இயலுமையாக்கிய பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக பயணித்த தாராள உள்ளம்கொண்ட இலட்சக்கணக்கான அனைத்து பயணிகளிற்கும் நன்றிகள். அந்நன்கொடையானது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வெளியேறும் பகுதியில் வைக்கப்பட்டிருந்த தான சேகரிப்பு பெட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்டது.

AASL ஆனது இத்தொண்டு ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தினை பல வருடங்களாக பேணியிருந்ததுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகளது நன்கொடையானது இலங்கை மக்களது வாழ்வில் மாற்றங்களை உண்மையிலும் ஏற்படுத்தியுள்ளது.



அபேக்ஷா மருத்துவமனை, மஹரகமவிற்கு வழங்கப்பட்ட நன்கொடை

- 2022 ஆம் ஆண்டு உலக சிறுவர் தினத்தை நடாத்துதல்

AASL ஆனது 2022 ஆம் ஆண்டின் உலக சிறுவர் தினத்தினை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு அருகிலுள்ள பாடசாலை மாணவர்களிற்கான விசேட விமானநிலைய அறிமுகப்படுத்தல்களுடன் நடாத்தியது. யுயுளுடு ஆனது தன்னுடைய மிகமுக்கிய விடயமாக சிறார்களை ஆதரித்தலை தன்னுடைய அதிமுக்கியமானவொன்றாக எப்பொழுதும் கருதுமொரு அமைப்பாகும்.

சவால்களுக்கு முகங்கொடுக்கத் தயாராகுதல்

எம்மை எதிர்கொள்ளும் எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். சவாலுக்குரிய தொழிற்பாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், நாம் எமது மக்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், மீள்திறன் செய்யவும், மீண்டும் பணியமர்த்தவும் முடிவு செய்துள்ளோம். அதன் விளைவாக, மேம்படுத்தப்பட்ட ஆற்றல்களுடனும், எமது பணியாளர் சக்தி மாற்றமடையாமல் இருப்பதால், மேம்படுத்தப்பட்ட ஆற்றல்களுடன், நாம் துரிதமாக எமது தொழிற்பாடுகளை அதிகப்படுத்தத் தயராகவுள்ளோம். குறிப்பாக, எமது மக்கள் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். ஒன்றிணைக்கப்பட வேண்டியதாக இருந்த பல அசையும் பகுதிகளைப் பிரயோகிப்பதிலும், ஒருங்கிணைப்பதிலும் அவர்கள் முனைப்புக் காட்டினர். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்படக்கூடிய நிலையான மாற்றத்தில் எமது விழுமியங்கள் நிலையானதாக இருக்கும், இலங்கை விமான மற்றும் விமான சேவைகளுக்கு ஆதரவளிக்கும் எமது விழுமியங்களை பற்றிப் பிடித்துக் கொள்வது முக்கியமானதாகும். பெற்றுக் கொண்டவற்றை சமூகத்திற்கு மீண்டும் வழங்குவது எமது இரத்தத்தில் உள்ளதாகும். மேலும், எமது நிறுவனம் ஒரு சூழ்நிலைமண்டலமாகத் தொழிற்படுவதை அங்கீகரிக்கும் அதே வேளை, சூழ்நிலைமண்டலத்தை உள்ளபடி காப்பதற்கும், தொழிற்படச் செய்வதற்கும், விமானச் சேவைப் பங்குதாரர்கள் மற்றும் குத்தகைக்காரர்களுக்கு நாம் தொடர்ச்சியாக ஆதரவளித்தோம். சவால்களை எதிர்கொள்வதில், நாம் வினைத்திறனுடைய, கவனம் செலுத்தக்கூடிய மற்றும் உறுதியான ஒரு நிறுவனமாக நாம் பரிணமித்துள்ளோம். எமது மக்கள் நெகிழ்திறன் மிக்கவர்கள் என்பதுடன், சவால்களை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக உள்ளனர். 2022ஆம் ஆண்டில் துணிச்சலான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு இலங்கை விமான மற்றும் விமான சேவைகளை ஊக்குவித்திருக்கும் இத்தகைய பின்னணியில், அடையாளப்படுத்திக் காட்டப்பட்டுள்ள இந்த வருடம் மற்றும் முன்னோக்கி நகர்வதற்கான எமது திட்டங்கள் ஆகியன பற்றிய ஒரு முழுமையான விளக்கத்தைப் பங்குதாரர்களுக்கு வழங்கும் பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவக் கலந்துரையாடலை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்


DIOR
SAUVAGE
MASCARA
EYES

நிதிநிலை மீளாய்வு

வருமானம்
27,647 மில்லியன்
இலங்கை ரூபாய்
(2021 இலங்கை ரூபாய் 7,879 மில்லியன் ரூபாய்)

நிதி வருமானம்
6,137 மில்லியன்
இலங்கை ரூபாய்
(2021 இலங்கை ரூபாய் 3,321 மில்லியன் ரூபாய்)

தொழிற்பாட்டு
12,705 மில்லியன்
இலங்கை ரூபாய்
(2021 இலங்கை ரூபாய் -3,776 மில்லியன் ரூபாய்)

வரிக்குப் பின்னரான இலாபம்
4,803 மில்லியன்
இலங்கை ரூபாய்
(2021 இலங்கை ரூபாய் -2,084 மில்லியன் ரூபாய்)


ஆதனங்கள்
179,530
மில்லியன் இலங்கை ரூபாய்
(2021 இலங்கை 126,844 ரூபாய்)

கண்ணோட்டம்

2022ஆம் ஆண்டுக் கான உறுதியான நிதிநிலை செயற்பாடுகளை வழங்குவதுடன், இலங்கையின் ஒரேயொரு விமானச் சேவைகள் வழங்குநராக அதன் நிலையைத் தொடர்ச்சியாக இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகள் மேம்படுத்தி வருகிறது. பல தரப்பட்ட முனைகளிலிருந்து உருவெடுக்கும் பல்வகை சவால்களுடன் அவ்வருடம் நிறைவுக்கு வந்தது. ரஷ்யா.்.உக்ரைன் போர் உள்ளடங்களாக பூகோல-அரசியல் முரண்பாடுகளின் தாக்கங்களின் காரணமாக பணவீக்க அழுத்தங்கள் உயர் வலு விலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், மதிப்புக்குறை இடர்களை பூகோலப் பொருளாதாரம் தொடர்ச்சியாக சந்தித்து வருகிறது. 2022ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம், சீன-அமெரிக்க உறவுகள் வலுவிழந்துள்ளமையானது, பல நாடுகளில் பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு மேலதிகமாக, கொவிட்-19ஐ முற்றாக இல்லாதொழித்தல் என்னும் சீனாவின் கொள்கையால் முடக்கநிலை நீட்டிக்கப்பட்டது, அது ஆதன விற்பனைத் துறையில் குறை முதலீட்டை ஏற்படுத்தியதோடு, குறை முதலீட்டின் விளைவாகப் பொருளாதாரப் பின்னடைவு உருவெடுத்து, பூகோல வர்த்தகத்தில் ஒரு தோய்வை ஏற்படுத்தியது. பொருளாதாரச் சூழமைவில் சக்தி, எரிபொருள், உணவு மற்றும் மருந்து ஆகியன உள்ளடங்களாக உள்நாட்டு உறுதியின்மையும் தீவிரமடைந்ததுடன், சுற்றுலாத்துறையிலும் அது ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது. இச்சவால்களுக்கு மத்தியில், இலங்கை விமான மற்றும் விமானச் சேவையானது நிதியியல் ரீதியாகத் தாக்குப்பிடிக்க முடிந்துள்ளதுடன், இலங்கையின் சுற்றுலாத்துறையுடன் சேர்த்து சிறப்பாக மீட்சியடைந்துள்ளது.


வருமானம்

2022ஆம் ஆண்டு 27,647 மில்லியன் இலங்கை ரூபாய்களை அடைவதற்காக இலங்கை விமான மற்றும் விமானச் சேவை அதன் வருமானத்தில் 251% நிலையான வளர்ச்சியைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்திருந்தது. இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் வருமான வழிவகைகளைத் தீர்மானித்த, முக்கிய அடித்தள அளவுருகள் வானூர்திகளின் இயக்கம் மற்றும் பயணிகளின் இயக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கிறது. கடந்த வருடத்தை விட 266% அதிகரிப்பை வெளிப்படுத்தி, சர்வதேசப் பயணிகளின் இயக்கம் மேல்நோக்கிய ஒரு நகர்வைக் குறித்துக்காட்டுகிறது; அதே போல சர்வதேச வானூர்திகளின் இயக்கம் 78% வளர்ச்சி விதத்தைக் குறித்துக்காட்டுகிறது.




விமானப் பயண இயக்கத்தின் போக்கு

சர்வதேசப் பயணிகள் தொழிற்பாடுகள்



சர்வதேச விமானத் தொழிற்பாடுகள்



வான்வழிசார் தொழிற்பாடு மற்றும் வான்வழிசாரா செயற்பாடுகளிலிருந்து உருவான வருமானத்தைப் பிரதானமாக உள்ளடக்கியதாக இலங்கை விமான மற்றும் விமானச் சேவையின் வருமான வழிவகை காணப்படுகிறது. இவ்விரண்டு வருமான மூலங்களினதும் வகைப்படுத்தல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.


பிரதான வான்வழிசார் வருமானம்

- தரையிறக்கம் மற்றும் தரிப்பிடம் மூலமான வருமானம்
- நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்ட பிரத்தியேக விமானப் போக்குவரத்துகளினூடாகக் கிடைக்கப்பெறும் வருமானம்
- பயணிகள் ஏற்று பாலத்தின் மூலமான வருமானம்
- உள்நாட்டுத் தரயிறக்கம் மற்றும் தரிப்பிடம் மூலமான வருமானம்


பிரதான வான்வழிசாரா வருமானம்

- சலுகை
- விமானத்தில் ஏற்றுவதற்கான வரி
- கூலி
- ஏனைய வான்வழிசாரா வருமானம்

வான்வழிசார் வருமானங்கள்



வான்வழிசாரா வருமானம்




கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில் நிறுவனமானது வான்வழிசார் வருமானமாக 6,194 மில்லியன் இலங்கை ரூபாவை வருமானமாக ஈட்டியிருந்தது, இது 2021ஆம் ஆண்டில் ஈட்டிய 2,299 மில்லியன் ரூபா வருமானத்தை விட 169மூ வளர்ச்சியை அடையாளப்படுத்தியது. கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 83மூ ஆகக் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது, இது வான்வழிசார் மற்றும் வான்வழிசாரா வருமான வழிவகைகளில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. தரையிறக்கம் மற்றும் தரிப்பிடம், நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்ட பிரத்தியேக விமானப் போக்குவரத்துகளினூடாகக் கிடைக்கப்பெறும் வருமானம் மற்றும் பயணிகள் ஏற்று பாலம் ஆகியவற்றினூடாக உருவாகும் வருமானங்களும் முக்கிய பங்காளியாகும். உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை வருமான வழிவகைகளை அதிகரிப்பதற்கு நேர்மறையாகப் பங்காற்றியுள்ளது.

வருடத்துக்கான வான்வழிசாரா வருமானம் என 19,812 மில்லியன் இலங்கை ரூபாய் என அடையாளம் காணப்பட்டது, கடந்த வருடம் கிடைத்த 5,087 மில்லியன் இலங்கை ரூபாவுடன் ஒப்பிடுகையில் அது 289மூ அதிகரிப்பாகும். விமானப் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் கவனம் செலுத்தப்பட்ட பரப்புரை ஆகியன சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துள்ளது இது முழு சுற்றுலாத்துறைக்கும் பயனாகப் பார்க்கப்பட்டதுடன், நேர்மறையான எதிர் விளைவுகளை நாட்டில் ஏற்படுத்தியது. ஒப்பிட்டளவில் கடந்த வருடங்களை விட விமான ஏற்று வரி, சலுகை மற்றும் வாடகை வருமானம் ஆகியவற்றின் சீரான ஓட்டத்தை ஏற்படுத்தியது.

இலாபம்

கடந்த வருடம் ஏற்பட்ட 3,776 மில்லியன் ரூபாய் தொழிற்பாட்டு இழப்புடன் ஒப்பிடுகையில் 2022ஆம் நிதி ஆண்டில் 12,705 மில்லியன் இலங்கை ரூபாய் எனும் தொழிற்பாட்டு இலாபத்தை இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் பதிவு செய்தது, இது 436% என்னும் பெரும் சிறப்பு வாய்ந்த அதிகரிப்பாகும். அவ்வருடம் அடையப் பெற்ற வருமான வளர்ச்சியுடன் பிரதானமாக இதனை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். 2021ஆம் ஆண்டில் வைப்பு வீதத்திலான அதிகரிப்பு மற்றும் இலங்கை ரூபாய் மற்றும் அமெரிக்க டொலர்களின் வடிவிலான புதிய வைப்புகளுக்கான முதலீடு ஆகியன மொத்த நிதி வருமானத்தை 3,321 மில்லியன் ரூபாவிலிருந்து 6,137 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பதில் நேர்மறையான ஒரு தாக்கத்தை செலுத்தியுள்ளது.


கடன்கள் மற்றும் கடன் பத்திரங்கள் மற்றும் தொழிற்பாடுச் செயற்பாடுகள், கடன் மாற்றுகை மற்றும் வைப்பு மாற்றுகை ஆகியவற்றின் பரிமாற்றப் பெறுகை.்இழப்பீடு ஆகியன இவ்வருடம் அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தின் மாறும் இயல்பு காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்ட 506 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டு 12,409 மில்லியன் ரூபா நிதிநிலை வருமானமாக அடையாளம் காணப்பட்டது. ஏனைய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி இழப்பானது குறிப்பிடத்தக்கப் பரிமாற்ற இழப்புகளைத் தோற்றுவித்தது. 2021ஆம் ஆண்டில் 2,815 மில்லியன் ரூபாவாக இருந்த நிகர நிதிநிலை வருமானம் 2022ஆம் ஆண்டில் 6,272 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. வரி விதிப்புக்கு முன்பதாக கடந்த வருடம் சந்தித்த 961 மில்லியன் இலங்கை ரூபா இழப்புடன் ஒப்பிடுகையில், வரி விதிப்புக்கு முன்பதாக நிறுவனம் 6,433 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளமையானது மிக முக்கியமானதாகும், இது 769% அதிகரிப்பை அடையாளப்படுத்துகிறது. அதனடிப்படையில், வருமான வரிவிதிப்புக்குத் தேவையான வழங்குகைகளைச் செய்த பின்னர், 2021ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2,084 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு மாற்றமாக, வரிவிதிப்புக்குப் பின்னரான நிறுவனத்தின் வருமானம் 4,803 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்தது.



தொழிற்பாட்டுச் செலவுகள்

இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் தொழிற்பாட்டுச் செலவுகள் பின்வரும் கூறுகளை உள்ளடக்கியுள்ளன: தனிநபர் செலவுகள், நிர்வாகம் மற்றும் ஸ்தாபனம், பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள், மற்றும் மதிப்பிழப்புச் செலவுகள்

கடந்த வருடச் செலவான 11,655 மில்லியன் இலங்கை ரூபாவுடன் ஒப்பிடுகையில் 28மூ செலவு அதிகரிப்பை அடையாளப்படுத்தி, இவ்வருடம் இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள் 14,941 மில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்திருந்தது. மக்கள்சார் தொழிற்பாட்டு செயலடைக் கோவையைக் கையாளுதல் என்பது, மொத்த தொழிற்பாட்டுச் செலவீனத்தில் 67% செலவை உள்ளடக்குகிறது. ஆதலால், கடந்த வருடத்தை விட 33% ஆல் அதிகரித்த பணியாளர் செலவுடன் பிரதானமாக இந்த அதிகரிப்பைத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.




	2021	2022
தனிநபர் செலவுகள்	64%	67%
கடனாளிகளின் தடங்கலுக்கான வழங்குகை	-5%	1%
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	3%	3%
மின்சாரம்	7%	6%
பெறுமானத்தேய்வு மற்றும் கடன்தீர்ப்பு	23%	16%
ஏனைய செலவுகள்	8%	7%

நிகர நிதிநிலை (செலவு)/வருமானம்

நிகர வருமானம் (செலவு)/வருமானம் எனப்படுவது வட்டி வருமானம், வட்டிச் செலவுகள் மற்றும் தொழிற்பாட்டிலிருந்த பரிமாற்றப் பெறுகை/(இழப்பு), கடன்களின் மாற்றுகை மற்றும் நிலையான வைப்பு மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ள ஏனைய மாற்றுகைகளாகும். கீழேயுள்ள அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு, அமெரிக்க டொலர், யூரோ மற்றும் ஜப்பானிய யென் ஆகிய பிரதான நாணயங்களுக்கு எதிரான இலங்கை ரூபாவின் பண மதிப்பிழப்பானது குறிப்பிடத்தக்கப் பரிமாற்ற இழப்புகளைத் தோற்றுவித்ததுடன், இந்த செலவுக் கூறில் தாக்கத்தை ஏற்படுத்தி, வருடத்தின் இறுதியில் 6,272 மில்லியன் ரூபாவை நிகர நிதிநிலைச் செலவைப் பதிவுசெய்திருந்தது. கடந்த வருடம் பெறப்பட்ட 2,815 ரூபா நிகர நிதிநிலை வருமானத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலரின் நிலையான வைப்பு மாற்றுகைகளின் மீதான பெறுகை மற்றும் கடன் மாற்றுகை ஆகியன காரணமாக இழப்புகளின் நிகர விளைவானது, அவ்வருடத்தின் நிகர நிதிநிலை வருமானத்தை -6,272 மில்லியன் இலங்கை ரூபாவாகச் சடுதியாக வீழ்ச்சியடையச் செய்திருந்தது.

	இலங்கை ரூபா (மில்லியனில்)	
	2022	2021
நிதிநிலை வருமானம்	6,137	3,321
கடன் வட்டி	(1,854)	(1,140)
கடன் மாற்றுகை மீதான பரிமாற்றப் பெறுகை/(இழப்பு)	(43,977)	(2,141)
நிலையான வைப்புகள் மாற்றுகை மீதான பரிமாற்றப் பெறுகை/(இழப்பு)	33,422	2,775
நிகர நிதிநிலை (செலவு)/வருமானம்	**(6,272)**	**2,815**


நிகர நிதிநிலைச் செலவு



பரிமாற்ற விகிதங்கள்

வாந ளுசல டுயமெய சுரிநந னநிசநஉயைவநன டில 83% லநயச-ழடி-லநயச யனெ நளஉயடயவநன வழ டுமுசு 372/ருளுனு (ளநடடபைெ சயவந) டில வாந நனெ ழக 2022வாந ளநடடபைெ சயவந ழக வாந ளுசல டுயமெய சுரிநந யபயளைவ வாந ருளு னுழடயச உழவெரைெநன வழ னநிசநஉயைவந யள நஒிழசவ நயசஙைபௌள யனெ றழசமநச சநஅவைவயஎெநள உழஅபைெ வைெழ வாந உழரவெசல வாசழரபா உழஅநசஉயைட டியமௌள னநஉசநயளநன யகவநச வாந ஊநவெசயட டீயமெ ிநைெநென வாந டுமுசு யபயளைவ வாந ருளுனு வழ யளழனை கரசவாநச னநிசநஉயைவழைடி ழக வாந சரிநந. ஐவ றயள யடளழ ழெவநன வாயவ டுமுசு ாயன னநிசநஉயைவநன யபயளைவ வாந தீலு யனெ நுருசு டில 58% யனெ 71% சநளிநஉவளைநடல.

பரிமாற்ற விகிதங்கள்




நிதி நிலை

சொத்துகள்

2022 டிசம்பர் 31ஆம் திகதியன்று, நிறுவனத்தின் நிதி நிலை 179,530 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்தது, நிதியாண்டின் ஆரம்பத்திலிருந்த 126,844 மில்லியன் இலங்கை ரூபாவை விட ஒரு குறிப்பிடத்தக்க 42% வளர்ச்சியாக இது கருதப்படுகிறது. கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் பெறுமதியிலான 39,544 மில்லியன் இலங்கை ரூபாவுடன் ஒப்பிடுகையில், இவ்வருடக் குறுகிய கால வைப்புகளின் அதிகரிப்பினால்-அமெரிக்க டொலரின் அடிப்படையிலான குறுகிய கால வைப்புகளின் மொத்தத்தொகை 75,143 மில்லியன் இலங்கை ரூபா-மேல்நோக்கிய இப்போக்கு தூண்டப்பட்டுள்ளது. மேலும், மூலதனத்திலான அதிகரிப்பு நடந்து கொண்டிருப்பதுடன், முறையே 36,698 மில்லியன் மற்றும் 6,963 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்த நீண்ட கால வங்கி வைப்புகள் நிறுவனத்தின் மொத்த ஆதனத்தினதும் அடித்தளத்தை அதிகரிக்கப் பங்காற்றியது.

சொத்துகள்




பொறுப்புகள்

மொத்தச் சொத்து 48,743 மில்லியன் இலங்கை ரூபாவால் அதிகரித்தது, அமெரிக்க டொலர், ஜப்பானிய யென் மற்றும் யூரோ ஆகியவற்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க பண மதிப்பிழப்பு காரணமாக இலங்கை ரூபாவின் அடிப்படையிலான கடன் நிலுவைகளின் மூடுகையில் ஏற்பட்ட அதிகரிப்பை இதற்குக் காரணமாகக் குறிப்பிடலாம்.

நடப்பு மூலதனம்

2022ஆம் நிதியாண்டுக்கான கணக்குகளுடைய முடுகையின் போது, இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் நடைமுறைச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முறையே 89,740 மற்றும் 21,194 மில்லியன் ரூபாவாக இருந்தது, அது 68,545 மில்லியன் ரூபா நிகர நடப்பு மூலதன நிலுவை ஒன்றைப் பெற்றுக் கொடுத்தது. கடந்த வருடத்தின் நிலுவையிலிருந்து 74% நேர்மறையான இவ் அதிகரிப்பு, நிறுவனத்தின் தற்போதைய தொழிற்பாடுகளுக்கு நிதியளிக்க முடிந்த அதன் திறனையும், எதிர்கால வளர்ச்சியில் முதலிடுவதற்கான திறனையும் தெளிவாகக் குறித்துக்காட்டுகிறது. இவ் அதிகரிப்பு பிரதானமாக, 36,510 மில்லியன் இலங்கை ரூபாவைக் கொண்ட பயனுள்ள குறுகிய கால நிகர வங்கி வைப்புகள் மற்றும் வெளிநாட்டு கடன்களின் குறுகிய கால பங்கீடு, ஆகியவற்றால் ஏற்பட்ட ஒன்றாகும்.




கடன் மற்றும் மூலதனக் கட்டமைப்பு

2022 டிசெம்பர் 31ஆம் திகதி வரை நிறுவனத்தின் முழுமொத்த கடன் பெறுகைகளும் 110,273 மில்லியன் இலங்கை ரூபா வரை அதிகரித்திருந்தது, இது கடந்த வருடத்தை விட 60% அதிகரிப்பைக் குறித்துக்காட்டுகிறது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்கள் மீதான மூலதன மீள்செலுத்துகையை இலங்கை ரூபா 4,706 மில்லியன் மற்றும் இலங்கை ரூபா 267 மில்லியன் என்ற கணக்குகளில் முறையே மேற்கொண்டது. 2,544 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கடன் பகிர்வு அடையாளப்படுத்தப்பட்டது. இது-கட்டம் 2 நிலை 2 செயற்றிட்டத்தை-இயலுமாக்கியது. இவ்வருடம் எவ்வித உள்நாட்டுக் கடன்களும் பெறப்படவில்லை என்பதை அறியத்தருவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

2022 டிசெம்பர் 31ஆம் திகதி வரை, பங்குரிமையாளர் நிதியளிப்புகள் மற்றும் சம பங்கீடு ஆகியன மொத்த ஆதன அடித்தளத்தின் 25% என்னும் 179,530 மில்லியன் இலங்கை ரூபாவைக் கொண்டிருந்தது. அதே வேளை, 63% நடைமுறையல்லாத சொத்துகளையும்இ 12% நடைமுறை சொத்துகளையும் கொண்டிருந்தன.

கருத்திற்கொள்ளப்பட வேண்டிய நிதியாண்டின் ஆரம்பத்தில் சமப்படுத்திய போது, மூலதனக் கட்டமைப்பின் கடன் பங்கீடு 8% அதிகரிப்பைச் சந்தித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.



பணப் பாய்ச்சல்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், கருத்திற்கொள்ளப்பட வேண்டிய வருடத்தில் ஏற்பட்ட 715 மில்லியன் இலங்கை ரூபாவின் பண வெளிப்பாய்ச்சலுக்கு மாற்றமாக, 14,577 மில்லியன் இலங்கை ரூபா நிகர பண உட்பாய்ச்சலை தொழிற்பாட்டு செயற்பாடுகள் தோற்றுவித்தன. அவ்வருடம் நிகர இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மீதான நிகரப் பரிமாற்ற இழப்பு மற்றும் நிலையான வைப்பு மாற்றுகை ஆகியவற்றுக்கான சீராக்கல் ஆகியன இவற்றுக்குப் பிரதானமாகத் தாக்கம் செலுத்தும் காரணியாகக் குறிப்பிட முடியும்.

முதலீட்டுச் செயற்பாடுகளில் முதலிடப்படும் நிகர பணப் பாய்ச்சல் 24% ஆகக் குறைவடைந்தது, ஆதனங்கள், ஆலைகள், மற்றும் சாதனங்களின் கையகப்படுத்தலில் ஏற்பட்ட குறைபாடு காரணமாகவே இது ஏற்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நிதிநிலை செயற்பாடுகளுடாகக் கிடைக்கப்பெற்ற நிகர பணப் பாய்ச்சலில் 119% வீழ்ச்சி ஏற்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கடன் பெறுகையில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியுடன் இதனைத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். மேற்குறிப்பிட்ட காரணங்கள் காரணமாக, பணம் மற்றும் பணச் சமவலு ஆகியன அக்காலப்பகுதியின் நிறைவில் 56% ஆல் அதிகரித்திருந்தது, அது 642 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.

மூலதன முகாமைத்துவம்

கொவிட்-19 பெருந்தொற்று போன்ற எதிர்பாரா நிகழ்வுகள் பணப் பாய்ச்சல் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைத் தணிப்பதற்குத் திரவத்தன்மைக்கான போதிய அணுகல் மற்றும் வியாபார வாய்ப்புகளைத் தொடர்வதற்கான நிதிநிலை வளைதன்மை ஆகியவற்றைத் தக்கவைத்துக் கொள்வதற்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொள்வதுடன், மூலதனத்தின் குறை செலவை அடைவதற்கு கடன் மற்றும் சம பங்கீடு ஆகியவற்றின் வினைத்திறனுடைய ஒரு கலவையைப் பேணுவது நிறுவனத்தின் மூலதனக் கட்டமைப்பின் முகாமைத்துவத்தின் முதன்மைக் குறிக்கோளாகக் காணப்படுகிறது.


பணிப்பாளர்கள் நேரடியாக நிறுவனத்தின் மூலதனக் கட்டமைப்பைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து, பொருளாதார நிலைமைகள், வியாபார மூலோபாயங்கள் மற்றும் எதிர்கால அர்ப்பணிப்புகளைப் பிரதிபலிப்பதற்கான சீராக்கல்களைச் செய்தல்.

நடப்பு மூலதனம், கடன், சம பங்கீடு, மற்றும் பரிமாற்ற மூலதனம் உள்ளடங்களாக நான்கு வகை மூலதன முகாமைத்துவ முறைகள் காணப்படுகின்றன. கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில், நிறுவனமானது அனைத்து வகையான மூலதன மூலங்களையும் கண்டிப்பான முறையுடன் கையாண்டுள்ளது. எவ்வாறாயினும், "இலங்கையின் வெளிவாரிப் பொதுக்கடனுக்கான சேவை பற்றிய இடைக்காலக் கொள்கை" என்னும் தலைப்பில் 2022 ஏப்ரல் மாதம் பிணைமுறி வெளியிட்ட விசேட கடிதத்தின் காரணமாக அதன் கடன் மூலதன முகாமைத்துவம் சற்று சீர்குலைந்தது. அதனடிப்படையில், அரசாங்க நிறுவனங்கள் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டாமெனப் பரிந்துரைக்கப்பட்டது. ஆதலால், கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில் நிறுவனமானது கடன் தவணையை உரிய நேரத்தில் செலுத்தவில்லை.

பெறுமதி சேர்க்கைக்கான கூற்று

	2022 இலங்கை ரூபா 000	%	2021 இலங்கை ரூபா 000	%
வருமானம்	26,006,396		7,386,170	
ஏனைய வருமானம்	1,640,401		492,782	
காப்பீட்டுக் கணிப்பிலுள்ள மாற்றங்களில்	6,136,674		3,321,110	
ஏற்படும் நிதிநிலை வருமானப் பெறுகை/(இழப்பு)	(278,211)		667,426	
	33,505,260		11,867,489	
நிர்வாக ஸ்தாபனச் செலவுகள்	(2,579,345)		(1,509,513)	
பெறுமதி சேர்க்கை	**30,925,915**		**10,357,976**	
பெறுமதி சேர்க்கையின் பகிர்வு				
பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் நலன்கள்	9,995,360	32%	7,496,875	72%
அரசாங்கத்திற்கு வரிகள்	877,224	3%	-	0%
பங்குரிமையாளர்களுக்கு பங்கிலாபங்கள்	500,000	2%	-	0%
கடன் மூலதன வழங்குநர்களுக்காக வரிப்	1,854,365	6%	1,140,366	11%
வணிகத்திற்குள் தக்கவைக்கப்பட்டது பெறுமானத்தேய்வு மற்றும் கடன்தீர்ப்பு	2,366,794	8%	2,648,419	26%
வணிகத்திற்குள் தக்கவைக்கப்பட்டது ஒதுக்குகள்	15,332,172	49%	(927,685)	-9%
	30,925,915	**100%**	**10,357,976**	**100%**

பெறுமதிப் பகிர்வு சேர்க்கப்பட்டுள்ளது



மனிதவள முகாமைத்துவம்



ஒரு வர்த்தக நிறுவனத்தின் வருமானம் உழைக்கும் திறன், உற்பத்தித்திறன் மற்றும் நீண்ட கால நிலைத்தன்மை ஆகியவற்றிற்கு மூலதனம் என்பது முதன்மையான பங்களிப்பாகக் காணப்படுகின்றது. AASL தொடர்ச்சியாகவே அதன் மனித மூலதனத்தை வர்த்தகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக கருதுகிறது. அதாவது, பணியாளர்களின் திறன்கள், ஆற்றல்கள், திறமைகள் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அபிவிருத்தியினை வெற்றியை அடைவதற்கான முன்நிபந்தனையாக நிறுவனம் கருதுகிறது. நிறுவனம் புதிய திறமைசாலிகளை ஈர்ப்பதிலும், திறமையைத் தக்கவைத்துக் கொள்வதிலும், ஊக்குவிப்பதிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை அளிக்கிறது, அதே நேரத்தில் ஊழியர்களின் உற்பத்தித்திறன் மற்றும் திருப்தியை மேம்படுத்துகிறது, இதன் மூலம் ஊழியர்கள் மற்றும் நிறுவனத்திற்கு இடையேயான மதிப்பு உருவாக்கப்படுகின்றது.

AASL நிறுவனம் (2022 இல் உள்ளவாறு) 3,854 பன்மைத்துவமான பணியாளர் குழுவைக் கொண்டுள்ளது, அவர்களது இடையறாத விநியோகம் மற்றும் சமூகப் பார்வையினை உருவாக்குதல் ஆகியவை மூலம் நிறுவனத்தின் நிலையான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கின்றனர். "வேலைக்கான சிறந்த இடம்" என்ற அங்கீகாரம் உட்பட அனைத்து முயற்சிகளிலும் 40 ஆண்டுகால நற்பெயர் AASL ஐ சந்தையில் சிறந்த திறமைகளை கவர்வதற்கும் தக்கவைப்பதற்கும் உதவுகிறது.

மனித வளத் திட்டமிடலும் ஆதாரமும்

2022ல் எதிர்கொண்ட சவால்களுள், பணியாளர்கள் ஆட்சேர்ப்பு, ஊழியர்களின் ராஜினாமா, வெளிநாட்டு வேலை வாய்ப்பு திட்டத்தை அரசு செயல்படுத்தியமை மற்றும் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை மாற்றுவதற்கான அரசின் தீர்மானம் ஆகியவை அடங்கும். 2022 ஆம் ஆண்டில் 188 ஊழியர்களின் செயற்பாட்டிற்கான தேவை இருந்த வேளையில் முக்கியமான பதவிகளில் 61 புதிய பணியாளர்களுக்கு மட்டுமென வெளிவாரி ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டது.


பதவி உயர்வுகள் காரணமாக வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளை நிருவகிப்பது உண்மையில் சவாலாக இருந்தது. உயர் பதவிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிட்கள் காரணமாக மனித வள மேம்பாட்டு செயல்முறையை செயல்படுத்துவது சவாலாக காணப்பட்டது.

அனைத்து விமான நிலையங்களிலும் சுமுகமான செயல்பாட்டிற்கு அத்தியாவசிய பணியாளர்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு நிருவகிக்க மனித வளக் குழு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டது.


எவ்வாறாயினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மனித வளப் பிரிவு கீழே காட்டப்பட்டுள்ள பல்வேறு ஆதாரங்களில் இருந்து பின்வரும் திறமைகளை உள்வாங்க முடிந்தது.

பணியாளர்களின் வகைப்படுத்தலின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

பதவியுயர்வு / ஆட்சேர்ப்பு - 2022




பணியாளர்களின் வகைப்பாட்டின் படி ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள்




பணியாளர்களின் வகைப்படுத்தலின் பிரகாரம் வெளிவாரி ஆட்சேர்ப்பு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

2022 டிசம்பர் 31 ஆந் திகதியன்று மனிதவலுவின் நிலை பின்வருமாறு


வெளிவாரி ஆட்சேர்ப்பின் வகைப்படுத்தல்




பணியாளர் வகைப்படுத்துலுக்கு அமைவாக மொத்தப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை



பால்நிலை அடிப்படையில் பணியாளர்களை வகைப்படுத்தல்





மனித வள அபிவிருத்தி

மனித வள அபிவிருத்தி என்பது மனித வள முகாமைத்துவத்தின் மிக முக்கியமான பகுதியாகும்.

தொற்றுநோய், எரிபொருள் மற்றும் நிதி நெருக்கடிகள் மூலம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியிலும் பணியாளர்களுக்குத் தேவையான அறிவைப் பெறுவதையும் அவர்களின் திறன்களை அவர்களே உணர்ந்து கொள்வதையும் உறுதிசெய்வதற்காக AASL தொடர்ந்து பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்துவருகின்றது.

2022 இல் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்துமிடத்து, ஊழியர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு சமமான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் 2022 ஆம் ஆண்டிற்கென உள்நாட்டு மனித வள மேம்பாட்டு பயிற்சிக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை தாண்ட முடிந்துள்ளது. ஆண்டு முழுவதும் 844 பணியாளர்கள் உள்நாட்டிலும், 46 பணியாளர்கள் சர்வதேச அளவிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.

மேலும், 116 ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு SLAAA, இரத்மலானையுடன் ஒருங்கிணைய முடிந்தது. பல்தேசிய சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 116 தொழில்துறைசார் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான பயிற்சிக் குழுக்கள் அனுமதிக்கப்படாததால், ஆண்டின் முதல் காலாண்டில் உடல் பயிற்சி மட்டுப்படுத்தப்பட்டது. இந்த சிக்கலைச் சமாளிக்கும் பொருட்டு மெய்நிகர் பயிற்சி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன, இது AASL ஊழியர்களின் தொழில்சார் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தது.

குறித்த காலக்கெடுவிற்குள் 40,683,552 ரூபா செலவில் 47,077 பயிற்சி மணிநேரங்களை நிறைவு செய்வதும் புதிய “சாதாரண” (new ‘normal’) நிலைக்கு இயைபாக்கம் செய்து கொள்வதும் இலகுவான காரியமல்ல. தொழில்சார் முன்னேற்றத்திற்கு தேவையான NVQ நிலை சான்றிதழ்களை பெறுவதற்கு முக்கியமான வானூர்தி பயிற்சி தேவையை நிறைவு செய்தமை இந்த ஆண்டில் நடந்த மற்றொரு முக்கியமான சாதனையாகும். மேலும், CIAR மற்றும் JIA இன் செயல்பாடுகளை உத்வேகமளிக்கும் வகையில் குறிப்பிட்ட தரைக் கையாளுகை பயிற்சி திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஊழியர்களின் தற்போதைய வேலைக்கு மேலதிகமாக அவர்களின் பல்வேறு திறன்களை அதிகரிப்பதற்காக ஒரு விசேட திறன் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, மேலும் நிறுவனத்தின் வெற்றியை நோக்கி ஊழியர்களின் திறன்களை பொருத்தமாகவும் உற்பத்தித் திறனுடனும் பயன்படுத்துவதற்காக பொருத்தமான இடங்களில் அவர்களை இணைத்தல். ஆட்சேர்ப்பு கட்டுப்பாடுகள் காரணமாக மனிதவள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, மனிதவளத்தை வழங்குவதற்கான மாற்று தீர்வாகவும் இது அமைந்திருந்தது.

மனித வளத் தகவல் மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவம்

AASL இன் செயலாற்றுகை முகாமைத்துவ முறை நிறுவனத்தின் வணிக நோக்கங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. AASL இன் செயலாற்றுகை முகாமைத்துவ முறைமையின் நோக்கம் AASL இன் அனைத்து ஊழியர்களினதும் செயலாற்றுகையினை மேம்படுத்தும் அதேவேளை நிறுவனத்தின் வர்த்தக நோக்கங்களை அடைவதுமாகும். செயலாற்றுகைப் பெறுபேறுகள், அளிக்கப்படும் பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள், செயலாற்றுகை இடைவெளிகள், பயிற்சி தேவைகள், பதவி உயர்வுகள் மற்றும் வெகுமதிகளை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படுகிற அடுத்தகட்டத் திட்டமிடல் ஆகியவற்றுடனான தொழில் வளர்ச்சி வாய்ப்புகளுடன் தொடர்புபட்டதாகும்.

ஊழியர்களின் செயலாற்றுகையினை அளவீடு செய்வதற்கு AASL தற்போது நடைமுறையில் இரண்டு செயலாற்றுகைப் மதிப்பீட்டு முறைமைகளைக் கொண்டுள்ளது.

செயலாற்றுகை முகாமைத்துவமும் அபிவிருத்தி முறைமையும் (PMDS)

- PMDS இன் கீழ், சிரேஷ்ட முகாமை மற்றும் முகாமை மட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பணியின் நோக்கங்கள் மற்றும் நடத்தை திறன்களின் அளவுகோல்களை பூர்த்தி செய்வதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றனர்.

180⁰ மதிப்பீட்டு முறை


- ஏனைய அனைத்து பணியாளர் வகைகளையும் சேர்ந்தவர்கள் 180⁰ மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றனர். பணியாளர்களின் வேலை தொடர்பான அறிவு, திறன்கள் மற்றும் நடத்தைகள் இந்த செயலாற்றுகை முகாமைத்துவ முறையின் கீழ் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

செயலாற்றுகை முகாமைத்துவ முறை மூலம் மொத்தமாக 3,889 பணியாளர்கள் மதிப்பிடப்பட்டு, 2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகையின் அடிப்படையில் அவர்களின் வருடாந்த வேதன ஏற்றம் வழங்கப்பட்டது.


பணியிலிருந்து விலகுதல்

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2022 ஆண்டு காலப்பகுதியில் AASL இல் பணியிலிருந்து விலகுதல் என்பது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. ஊழியர்களின் ஓய்வூதிய வயது குறித்த அரசாங்கக் கொள்கை இந்த எண்ணிக்கையை பாதித்துள்ளது, அதேவேளை, சமூக மற்றும் பொருளாதார சூழலில் உள்ள சவால்கள் அதிக எண்ணிக்கையிலான பதவியினை இராஜினாமாக்கள் மற்றும் முன்கூட்டியே ஓய்வு பெறுவதற்கு வழிவகுத்தன.

மதிப்பீட்டு வருடம் - 2022



பதவி விலகுதல் - வருடம் 2022



காத்திரமான நலன்புரி நடவடிக்கைகள் மூலம் மனித வள நலன்

பணியாளர்களை மேம்படுத்திப் பராமரிப்பது மனித வளக் குழுவின் ஒருங்கிணைந்த பகுதியாகும், இது நிறுவனத்தை அதன் வர்த்தக நோக்கங்களை நோக்கி நகர்த்துகின்றது.

AASL ஊழியர்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலமும், அதிகபட்ச உற்பத்தித் திறனை வளர்ப்பதன் மூலமும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கவர்ச்சிகரமான வசதிகளுடன் உதவிகளை வழங்குகின்றது. ஊழியர்களுக்கு நல்ல பலன்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிப்பது செலவுகளை ஏற்படுத்தக்கூடிய முடிவாக இருக்கலாம், ஆனால் இந்த உத்திகளின் நீண்டகால நன்மைகள் அளப்பரியனவாகும். நிறுவனம் தனது சிறப்பாக செயல்படும் மற்றும் திறமையான ஊழியர்களை நீண்ட காலத்திற்கு தக்கவைத்துக்கொள்ள இது உதவுகிறது.

AASL தனது ஊழியர்களுக்கு பரந்த அளவிலான வசதிகளை வழங்குகிறது, இதில் நிறுவனத்தின் மருத்துவத் திட்டம், இறப்பு நன்கொடைத் திட்டம், பணியாளர் கடன் வசதிகள், பணியாளர் போக்குவரத்து வசதிகள், விடுமுறை பங்களா வசதிகள், பணியாளர் குடியிருப்பு வசதிகள், வீட்டுக் கடன்களுக்கான 5% வட்டியினை மீளளித்தல் மற்றும் வெளிநாட்டு யாத்திரைகள், விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் வருடாந்த ஒன்றுகூடல்களுக்கான நிதி உதவி ஆகியவை அடங்கும். இந்த நலன்புரி நடவடிக்கைகள் வர்த்தக வளர்ச்சிக்காக உழைக்கும் ஊழியர்களை ஊக்குவிப்பதோடு AASL இன் போட்டித்தன்மையினையும் அதிகரிக்கின்றன.

நிறுவனத்தின் மருத்துவ திட்டம்

AASL ஒரு தனித்துவமான சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுள்ளது, அத் திட்டத்தில் பணியாளர்கள் உள்ளகரீதியாகவோ அல்லது வெளிப்புற சுகாதார சேவை வழங்குநர்களிடமிருந்தோ சிகிச்சையைப் பெறலாம். இந்தத் திட்டம் உறுதிப்படுத்தப்பட்ட பெரும்பாலான ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் உரித்துடையதாகும். இத் திட்டத்தின் மூலமாக 150,000 ரூபா முதல் 350,000 வரை நன்மைகளைப் பெற முடியும். அத்துடன் பணியாளர்கள் தமது தேவைகளுக்கு ஏற்றவாறு தேர்வு செய்ய முடியும். மேலும் உள்ளகச் சேவையை நாடுமுழுவதும் உள்ள 48 பதிவு செய்யப்பட்ட தைத்தியசாலைகளிலிருந்து கடன் அடிப்படையில் பெறமுடியும்.

மரண நன்கொடைத் திட்டம்

இந்தத் திட்டம் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக AASL இல் நடைமுறையில் உள்ளது. நிரந்தர பதவியணியிலுள்ள அனைத்து ஊழியர்களும் இந்தத் திட்டத்தின் உறுப்புரிமையினை பெற தகுதியுடையவர்கள், அத்துடன் இந்தத் திட்டத்தின் பலன்களைப் பெற தமது குடும்ப உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ளலாம். AASL 2022 ஆம் ஆண்டில் 297 உறுப்பினர்களுக்கு 15,425,000 ரூபாவினை கொடுப்பனவு செய்துள்ளது.

பணியாளர் கடன் திட்டம்

பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்கள் தங்கள் நிதித் தேவைகளுக்காக கடனைப் பெற தகுதியுடையவர்கள். கடன் தொகை ரூபா 200,000 ஆண்டு வட்டி வீதம் 4.2மூ மற்றும் அதிகபட்சம் நான்கு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். 2022 ஆம் ஆண்டில், இந்தக் கடனின் மொத்தத் தொகையான 250 மில்லியன் ரூபாய் மூலம் ஊழியர்கள் பயனடைந்தனர்.

ஊழியர்கள் போக்குவரத்து சேவை

பல்வேறு இடங்களிலிருந்து பயணிக்கும் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நிறுவனம் அறிந்திருக்கிறது. இந்தச் சிக்கலைத் தீர்க்கும் வகையில், ஊழியர்களுக்கு பயண வசதியை வழங்குவதற்காக, ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதியை நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் 27 பேருந்துகள் BIA, CIAR, MRIA மற்றும் BIA மற்றும் JIA / BTIA ஆகியவற்றுக்கு இடையேயான போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் ஊழியர்களின் நலன்கருதி பயன்படுத்தப்பட்டன.

பணியாளர் குடியிருப்பு

நிறுவனத்தின் ஊழியர்களுக்கு கட்டுநாயக்க, அத்திடிய, மட்டக்களப்பு, மத்தள ஆகிய இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் ஊழியர் குடியிருப்புகளும் JIA இல் ஊழியர்களுக்கென 09 வாடகை வீடுகளும் உள்ளன.

விடுமுறை பங்களா வசதிகள்

பிதுருதலாகலவில் விடுமுறை பங்களா வசதிகள் மற்றும் கதிர்காமத்தில் யாத்திரிகர்களின் ஓய்வு வசதிகள் சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. ஊழியர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு பங்களாக்களும் அண்மையில் புதுப்பிக்கப்பட்டன. மேலும், வசதிகருதி கட்டடத்தொகுதியில் சாரதிகளுக்கான ஓய்வு அறையும் சேர்க்கப்பட்டது.

வீட்டுக் கடனுக்கான 5% வட்டியினை மீளளிப்புச் செய்தல்

நிறுவனத்தில் ஐந்தாண்டுகள் சேவையினைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு இந்த வசதி கிடைக்கும்.

வெளிநாட்டு யாத்ரீகர்களுக்கு நிதி உதவி

பௌத்த, கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் சங்கங்களில் அங்கம் வகிக்கும் நிறுவனத்தின் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து ஊழியர்களும் இந்த வசதியைப் பெறத் தகுதியுடையவர்கள். உண்மையான பயணச் செலவைப் பொருட்படுத்தாமல் புனித யாத்திரைக்காக வெளிநாடு செல்வதற்கான செலவில் ஒரு பகுதியை ஈடுகட்ட தகுதியான விண்ணப்பதாரர் 4.2மூ வருடாந்திர வட்டியில் (18 மாதத் தவணைகளில் மீளச் செலுத்தப்படும்) அதிகபட்சமாக 50,000 ரூபாவினைப் பெற்றுக்கொள்ள தகுதியுடையவராவர்.

தனிப்பட்ட விபத்துக் காப்புறுதித் திட்டம்

பணியாளரின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தின் மதிப்பை உணர்ந்து, நிறுவனம் தனது அனைத்து ஊழியர்களுக்கும் 24 மணி நேரமும் செயல்படும் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஊழியர்களின் வகையின் அடிப்படையில் இழப்பீடு எல்லைகள் 550,000 ரூபாய் தொடக்கம் 2,200,000 ரூபாய் வரை இருக்கும். இது இயற்கை மரணங்களையும் உள்ளடக்கியதாகும்.

கைத்தொழில்துறை உறவுகளும் தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமும்

தொற்றுநோய் தொடங்கிய சில ஆண்டுகளில், பணியாளர்களை ஈடுபாட்டுடனும் திருப்தியுடனும் வைத்திருப்பது மனிதவளப் பிரிவின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். 2022 ஆண்டின்போது ஏற்பட்ட மந்தநிலை மிகவும் சவாலானதாகும். பொருளாதார நெருக்கடியின் போது, வெளிப்புற அழுத்தத்தின் காரணமாக ஊழியர்களின் செயலாற்றுகை நிலைகள் மற்றும் ஊக்கம் ஆகியவை மாறுபடக்கூடும்.

AASL நிறுவனமும் இந்த சவாலை எதிர்கொண்டதோடு இந்த சூழ்நிலையை சமாளிப்பதற்கான வழிகளைத் தேடியது.

ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொதுப் போக்குவரத்து இன்மை காரணமாக AASL ஊழியர்கள் சமூகமளிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டனர். நிறுவனத்தின் செயல்பாடு மற்றும் ஊழியர்களின் ஈடுபாட்டின் மீதான தாக்கத்தைக் குறைப்பதற்காக, கோவிட் தொற்றின் போது ஆரம்பமாகிய வீட்டிலிருந்து வேலை செய்யும் (WFH) நடைமுறை தொடர்ந்தமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, பொதுப் போக்குவரத்து மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாட்கள் ஆகியவற்றால் எழும் வருகை சிரமங்களின்போது பணிபுரிந்த ஊழியர்களுக்கு சம்பளத்துடனான விசேட விடுமுறை வழங்குவது போன்ற முன்னுதாரணமான நடவடிக்கைகள் AASL ஆல் எடுக்கப்பட்டன. மேலும், இவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில், போக்குவரத்து சிரமங்களினால் கடமைக்கு வருகைதருவதில் ஏற்படும் தாமதங்களுக்கு விசேட அனுமதிகளை வழங்கி ஊழியர்களின் வருகை ஊக்குவிக்கப்பட்டது.

பணியாளர் ஆரோக்கியமும் பாதுகாப்பும்

ஊழியர்களின் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை (OSH) உறுதி செய்வது, இந்த ஆண்டில் HR கவனம் செலுத்தும் மற்றொரு முக்கிய பகுதியாகும். OSH நடைமுறைகளை மறுசீரமைக்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு அடுத்த ஆண்டில் அதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் தொடரவுள்ளன.

அதிகரித்து வரும் சிக்கலான வாழ்க்கை முறை, பொருளாதார நெருக்கடி காரணமாக ஊழியர்களுக்கான உளவள ஆலோசனையின் தேவை மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது. நிறுவன ஊழியர்களுக்கு வாரம் ஒருமுறை உளவள ஆலோசனை சேவை வழங்கப்படுகிறது. ஊழியர்கள் நேரடியான அமர்வுகள் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ ஆலோசனைகளைப் பெறலாம்.

ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

ஊழியர்களின் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை நாம் நம்புகிறோம் மற்றும் தொழிற்சங்கம் ∴ அமைப்பில் பிரதிநிதித்துவம் செய்வதற்கான அவர்களின் உரிமையை அங்கீகரிக்கிறோம். யுயுளுடு 5 அரசியல் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் மற்றும் 26 வர்த்தக அடிப்படையிலான சங்கங்களைக் கொண்டுள்ளது அத்துடன் தொடர்ச்சியான உரையாடல்கள் மூலம் அவர்களுடன் இணக்கமான உறவைப் பேணி வருகிறோம்.



மீளாய்வு

ஏனைய வியாபார ஒழுங்கமைப்புக்களைப் போன்றே, தன்னுடைய எதிர்காலத்தை தீர்மானத்துக்கொள்வதற்காக விமானநிலைய மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் லிமிட்டெட்டிற்கும் (யுயுஎஸ்டு) இடர் முகாமைத்துவமானது இன்றியமையாததாகின்றது. எமது பயணிகளிற்கு உயர்தர விருந்தினர் அனுபவங்களை நாள்தோறும் உறுதிப்படுத்துவதற்கான தீர்மான மேற்கொள்ளல் செயன்முறையின் அத்தியாவசியமான கூறாக வினைத்திறனான இடர் முகாமைத்துவம் காணப்படுகின்றது என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

இலங்கையின் விமானநிலைய இயக்குநராக காணப்படும் நாம், குறிப்பிடத்தக்க சர்வதேச வெளிப்பாடுகளுடன் உயர் சக்தி வாய்ந்த ஒரு துறையை நடாத்திக்கொண்டிருக்கின்றோம். அதன் பெறுபேறாக, நிறுவனத்தின் செயற்பாடு மற்றும் நிதி செயலாற்றுகைகளை மாத்திரமின்றி நாட்டின் நற்பெயரினையுமே அச்சுறுத்தலிற்குள்ளாக்கும் பல்வேறு வகையான இடர்கள் குறித்து எமக்கு அறியக்கிடைத்தது.

AASL இன் இடர் முகாமைத்துவ அணுகுமுறையானது அதனது கூட்டு நோக்கங்களை அடைவதற்கான நிறுவனத்தினது இயலுமையை மேம்படுத்துவதாக காணப்படுகின்றது. கூட்டுத்தாபன அரச சட்டகத்தின் ஒரு பிரதான தூணாக தம்முடைய உறவை அச்செயன்முறை வெளிக்காட்டியிருப்பதினால் AASL இன் இடர் முகாமைத்துவ செயன்முறையின் வெற்றிக்கு பணிப்பாளர் சபையே பொறுப்பானதாக காணப்படுகின்றது.

AASL ஆனது இடர் முகாமைத்துவத்தினூடாக பின்வருவனவற்றை அடைந்துக்கொள்வதை இலக்காக கொண்டுள்ளது.

- பல்வேறு வகையான இடர்களை அறிதலும் மதிப்பிடுதலும்
- கூட்டுத்தாபன சூழலில் புதிய வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் பொழுதான அபாயகரமான அச்சுறுத்தல்களை இழிவளாக்குதல் மற்றும்ஃ அல்லது இல்லாமலாக்குதல்
- நிறுவனத்தின் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதனை ஆதரித்தல்
- நிறுவனத்துடனான இடர்த் தொடர்பாடலை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்தல்
- நாட்டின் பொருளாதாரத்திற்கும், பாரியளவிலும் நீண்டகால மற்றும் குறுகியகால அளவுகளில் சமூகத்திற்குமாக பங்களிப்பதனூடாக யுயுஎஸ்டுஇன் உண்மையான உரிமையாளர்களான பொதுமக்களிற்கு நியாயப்பூர்வமாக காணப்படல்

இடர் முகாமைத்துவம்

விமானப் போக்குவரத்தை இயக்குவதிலான பிரதான சவால்கள்

தமக்கும் அப்பாலான வாய்ப்புக்களை முழுமையாகவும் கட்டுப்படுத்தத்தக்கவாறும் ஒரு வியாபாரத்தினால் எதிர்கொள்ளப்படும் சவால்களுடன் போராடுவதற்கென மிகக் கட்டமைப்பான ஒரு வழியாக இடர் முகாமைத்துவ செயற்பாடுகளை நாம் காண்கிறோம். பின்வரும் சவால்களானவை அவற்றை வெளிப்புற காரணிகளிற்கு பலவீனமானதாக காணப்படும் வகையில் மாற்றியதனால் எம்முடைய இடர் வார்ப்படங்களில் அதீத அழுத்தங்களை செலுத்தியதாக காணப்பட்டன.

உள்ளூர் பொருளாதார நிலைகளிற்கு அதீத பாதிப்பாக காணப்படுபவை

விமானநிலையை நிர்வாகத்திற்கான பல வளங்கள் உள்ளூர் பொருளாதாரத்திலிருந்தே பெறப்படுகின்றன. அதன்காரணமாக, உள்ளூர் மட்டத்தில் சமூக-பொருளாதார சூழல்களில் ஏற்படும் மாற்றமானது விமான நிலைய நிர்வாகத்தினைப் போன்றே விமானநிலை உட்கட்டுமான அபிவிருத்தி செயற்திட்டத்திலான முதலீடுகளிலும் தாக்கத்தை நேரடியாக தாக்கத்தை செலுத்துகின்றன.

இதனை நாம் டொலரிலான சரிவின் காரணமாக பல பொருளாதார மாறிகளும் வியாபார செயற்பாடுகளிற்கு உவப்பற்றதாக மாறிய 2022 ஆம் ஆண்டில் அனுபவித்தோம். இது விமான எரிபொருள் தட்டுப்பாடு, உயர் நிர்வாக செலவு, தொடர்ச்சியான மின் துண்டிப்பு, விமானநிலைய தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியமை முதலிய காரணிகள் விமான நிர்வாகத்தினில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும், பாரிய உட்கட்டுமான அபிவிருத்தி செயற்திட்டங்களை நிறுத்தியும் வைத்தது.

• உயர் பராமரிப்பு செலவுகள்

செலவீன கட்டுமானங்களில் பல்வேறு செலவீனங்களது குறைந்த சராசரியுடன் ஒப்பிடும் பொழுது விமான நிலைய பராமரிப்பிற்கென பாரிய நிலையான செலவீனத்தை கொண்டுள்ளோம். பராமரிப்பு செலவீனத்தை மேலும் மோசமாக்கியது பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்த இலங்கை ரூபாவின் வீழ்ச்சியும் இறக்குமதி கட்டுப்பாடுகளுமாகும்.

• மட்டுப்படுத்தப்பட்ட வியாபார பன்மைத்துவம்

விமானச் சேவைகளிற்கான பௌதீக மற்றும் மனித வளங்கள் குறிப்பிடத்தக்கனவாக காணப்படுகின்றமையினால் ஏனைய கைத்தொழிற் துறைகளுடன் ஒப்பிடும் பொழுது விமானச்சேவையில் வியாபார பன்மைத்துவத்திற்கான வாய்ப்பு என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. நாம் மேலே விவரித்தவாறு குறிப்பாக, வெளிப்புற பாதிப்புக்களினால் விமான போக்குவரத்து அச்சுறுத்தலிற்கு உள்ளாகும் போது கீழ்மட்டத்தைப் போன்றே மேல் மட்டத்திலும் இது பாரிய அழுத்தங்களை பிரயோகிக்கின்றது.

நவீன வசதிகளை உறுதிப்படுத்தல்

சேவை கருதிய துறையாக காணப்படுகையில், அனைத்து விமான நிலைய பயனர்களிற்கும் சௌகரியமானதும் உச்சபட்சமானதுமான விருந்தினர் அனுபவத்தை உறுதிப்படுத்துவது அதிமுக்கியத்துவமானதாகும். இதனை நோக்கியதாக, இப்பிராந்தியத்திலான ஏனைய சர்வதேச விமான நிலையங்களிற்கு ஒப்பாக விமான நிலைய வசதிகளையும் உட்கட்டுமானங்களையும் பராமரிப்பதானது தேவைப்படுத்தப்படுகின்றது.

• சுற்றுலா கைத்தொழிற்றுறையின் நிச்சயமின்மை

விமானச் சேவையானது உலகப் பொருளாதார நிலைகளினைப் போன்றே, பயணம் எனும் முக்கிய துறையான சுற்றுலாத்துறையிலும் தங்கியுள்ளதுடன் சுற்றுலாத்துறைக்கு மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் அதிகுறைவாகவே முக்கியத்துவமளிக்கப்படுகின்றது.

• செலவு போட்டித்தன்மை அழுத்தங்கள் மற்றும் விமானப் பயணத்திற்கான கேள்விகள்

உள்ளூர் மட்டங்களில் நிலவிய பணவீக்க அழுத்தங்களானது உள்ளுறை செலவீனங்களிலும் அதைப்போலவே மூலதன செயற்திட்டங்களிலான ஒப்பந்த விலைகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியதுடன் அவை கைவிட்டுச்செல்லவும் வழிவகுத்தன. மறுமுனையில், சர்வதேசத்திலும் அதேசமயத்தில் உள்:ரிலுமாக அதிகரித்த ஜெட்களிற்கான எரிபொருள் விலை அதிகரிப்பினால் விமானச் சேவை நிறுவனங்கள் திணறத்தொடங்கின. அது பயணச்சீட்டுக்களின் விலை அதிகரிப்பில் முடிந்ததுடன் விமானப் பயணங்களையும் குறைத்தது.

விரைவாக மாற்றமுறும் தொழிநுட்பம

மாற்றமுறும் தொழினுட்பமானது விமான நிலைய இயக்குநர்களை விமான நிலையங்களில் திறன் அம்சங்களை உட்புகுத்த நிர்ப்பந்திக்கின்றது. இது விமான நிலையங்களிற்குள் போட்டிகளை வலுவாக்குவதுடன் இயக்குநர்களை புதிய தொழினுட்பத்திற்காக அதிகளவில் முதலிடவும் தேவைப்படுத்துகின்றது. குறைவான மனிதர்களுடனோ அல்லது மனிதர்களேயற்றோ தொடர்பாடலற்ற விமான நிலைய செயற்பாடுகளே தற்பொழுது அடையப்படவேண்டிய கடினமான இலக்காக மாறியுள்ளது.

• சூழலியல் தாக்கங்கள்

விமான நிலைய செயற்பாடுகள் சூழலில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை கொண்டனவாகவே காணப்படுகின்றன. விமானங்களினால் வெளிவிடப்படும் கார்பன் வாயுவிற்கு விமானச்சேவை நிலையங்களே பொறுப்பானவையாக காணப்படுகின்றமையினால், இது குறித்து செயற்படுவதற்கான வகிபாகத்தையும் அவை கொண்டுள்ளன. விமானச் சேவை நிறுவனங்கள் குறைவான எரிபொருள் மற்றும் குறைவான கார்பன் வெளியேற்றம் என்பவற்றை உறுதிப்படுத்துவதனை மனத்திற்கொண்டு விமான போக்குவரத்து வழிப்பாதைகளை கட்டமைக்கவேண்டும்.

விமான நிலையங்கள் முறையாக வெளியேற்றப்படவேண்டிய கணிசமானளவு கழிவுகளை உருவாக்குகின்றன. சூழலியல் வழிகாட்டியுரைப்புக்களையும் சிறப்பான அறிவுடனும் இதனை ஆற்றப்படுவதை உறுதிப்படுத்துவதானது யுயுஎடு இற்கு ஒரு வரப்பிரசாதமாகும். மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களிடமிருந்து சுற்றுச்சூழல் நேய கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளிற்காக நாம் சான்றிதழ்களையும் பெற்றுள்ளோம்.

நீண்டகால சவால்கள் மற்றும் இழிவளவாக்கும் நடவடிக்கைகள்

மாறும் தொழினுட்பத்தை பெற்றுக்கொள்ளல், நிலைபேண் தன்மையை உறுதிப்படுத்தல், கொள்ளவு முகாமைத்துவம் மற்றும் திறமையுடைய பணியாட்படையை கவர்தல் என்பன நீண்ட காலத்தில் அடைந்துக்கொள்ளப்படவேண்டியன என நாம் ஏற்றுகொண்டுள்ள சவால்களாகும்.

தொழினுட்பத்தில் முன்னேறுவதானது மாறிக்கொண்டிருக்கும் தொழினுட்பத்துடன் இணைந்திருக்கவேண்டிய தொடர்ச்சியான ஒரு செயன்முறையாகும். உயிர்-அளவை அறிதல் முறைமை, தன்னியக்க பரிசோதனை மற்றும் பொதி சோதனை, தன்னியக்க வரவேற்பு கதவுகள் மற்றும் தொலைபேசி மூலமான கொடுப்பனவுகள் என்பவற்றினால் தொடர்பிலா பயணிகள் செயன்முறையை பயன்படுத்துவதானது எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவேண்டியதாக காணப்படுகின்றது. அதன்பொருட்டு, இவ்வசதிகளை எமது விமான நிலையங்களிலும் கூட ஏற்படுத்தவேண்டியது முக்கியமானதாகின்றது. நாட்டின் ஏழ்மையான பொருளாதார நிலைகளிற்கு மத்தியிலும் எதிர்வரும் சில வருடங்களிற்குள் இச்செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படவேண்டியனவாக காணப்படுகின்றன. எனினும், அவை தீர்க்கப்பட வேண்டிய இணையவழி அபாயங்களையும் கொண்டுள்ளன.

உலகமானது மென்மேலும் சுற்றுச்சூழல் சார்புடையதாக மாறிவருகின்றது. இது விமானநிலையங்களது கார்பன் வெளியேற்றத்தில் எதிர்காலத்திலான கட்டுப்பாட்டினை தேவைப்படுத்துகின்றது. அதன்பிரகாரம், அடுத்த சில தசாப்தங்களிற்கான கார்பன் வெளியேற்ற குறைப்பினை வரையறுக்க நாம் நிர்பந்திக்கப்படுகின்றோம். இது AASL கூட்டுத்தாபன இலக்குகளின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கீழ்மட்ட செயற்பாடுகள் மற்றும் அதேபோன்று கொழும்பு எப்ஐஆர் ஊடாக ஆகாய வழி மீள்வடிவமைப்பு என்பவற்றினால் கார்பன் வெளியேற்றத்தினை இழிவளவாக்குவதற்கான மூலோபாயங்களும் விருத்தி செய்யப்படுகின்றன.

ஆசிய வலயமானது உலக பயணிகளது பிரயாண தூரத்தில் முன்றில் ஒரு பங்கை வகிக்கின்றது. இவ்வளவானது எதிர்காலத்தில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உயர் அளவீட்டு வலயத்தில் காணப்படுவதனால், அதிகரிக்கும் பயணிகளது போக்குவரத்தினால் இலங்கையும் கூட பயனடையலாம். செயன்முறை மாற்றங்கள் மற்றும் தொழினுட்ப முன்னேற்றங்களுடன் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள இரண்டாவது முனையமானது தற்காலிகமாக அதன் கட்டுமான வேலைகளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

விமான நிலையங்களிலான உயர்தர விருந்தினர் அனுபவமானது பன்மைத்துவமிக்கதானதால், சவாலானதாக காணப்படும் அவர்களது குடிப்பரம்பல் காரணிகளது அடிப்படையில் விருந்தினர்களது விருப்பங்களை நாம் புரிந்துக்கொள்வதில் தங்கியுள்ளது. இதனை எமது வாடிக்கையாளர் உறவுகள் முகாமைத்துவ செயன்முறைக்கு தொடர்ச்சியான மாற்றங்களை அறிமுகப்படுத்துவதனால் இதனை நிவர்த்திக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

மேலதிகமாக, AASL இன் கூட்டுத்தாபன திட்டங்கள், செயற்றிட்டங்கள் என்பவற்றின் அபிவிருத்தி செயற்பாடுகளின் போது, மேற்குறிப்பிட்ட மாற்றங்களை கருத்திற்கொள்வதற்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றது.

AASL இடர் முகாமைத்துவ சட்டகம்

எமது இடர் முகாமைத்து சட்டகத்தினுள் இடர் அடையாளப்படுத்தலானது அபாயங்களை உணர்தல், தோல்விகளை அடையாளம் காணுதல் மற்றும் மோசமான பின்விளைவுகளை அறிதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. வருமான அதிகரிப்பானது, செலவீன குறைப்பு அல்லது இரண்டும் எனும் வழியில் மாற்றக்கூடியதாக எமக்கான வாய்ப்புக்களை அறிதல் எனும் பொருளிலான, வெளிப்புற வியாபார சூழலில் ஏற்படும் மாற்றங்களினால் தோன்றும் நேர்க்கணிய விலகல்களை மூலதனப்படுத்தலில் ஈடுபடுகின்றது.

எமது இடர் மதிப்பீட்டு செயன்முறையினூடாக, எம்முடைய நோக்கங்களை அடைந்துக்கொள்வதில் தாக்கம் செலுத்தக்கூடிய நிகழ்வுகள் மீது மேலும் சிறப்பானதொரு பார்வையை செலுத்த நாம் எண்ணியுள்ளோம்.

இடர் அடையாளப்படுத்தல் மற்றும் வியாபாரத்தில் அதனது தாக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில், ஒவ்வொரு தனித்துவமான இடர்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமா அல்லது AASLஇன் இடர் கோவைகளுடன் ஒப்பிட்டு கவனிக்கப்படவேண்டுமா என்பது குறித்த தீர்மானங்களை நாம் மேற்கொள்கின்றோம்.

இடர் முகாமைத்துவ நுட்பங்களானவை இடர் அறிக்கையிடல், இடர் பராமரிப்பு, வதிவிட அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்தில் இடர்கள் இழிவளவாக்கப்பட்டதும், இடரினில் தொடர்ச்சியான கட்டுப்பாட்டினை கொண்டிருப்பதற்காக அதனைத் தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டியுள்ளது.

டர் முகாமைத்துவ சட்டகத்தினை நடைமுறைப்படுத்தல்

இடர் முகாமைத்துவமென்பது அனைவரினதும் பொறுப்பாக காணப்படுகையில், வியாபாரத்தின் அனைத்து பகுதிகளையும் ஒருங்கிணைப்பதனால் ஒட்டுமொத்த செயற்பாடும் மத்தியலுள்ளவர்களினால் கண்காணிக்கப்படவேண்டும். இந்நோக்கத்திற்காக, AASLஇன் இடர் முகாமைத்துவ பொறுப்பானது மூலோபாய முகாமைத்துவ பிரிவின் கீழ் காணப்படுவதுடன், நிறுவனத்தின் மூலோபாய நோக்கங்களை அடைந்துக்கொள்வதிலும் எந்தவொரு தடங்கலும் எதிர்படக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்தினுள் பொருத்தமான இடர் முகாமைத்துவ பொறிமுறையை அறிமுகப்படுத்தி பேணுவதற்கும் இடர் முகாமைத்துவ பிரிவே பொறுப்பாக காணப்படுகின்றது. SWOT, PESTEEL, Porter's 05 forces போன்ற கருவிகளை பயன்படுத்தி மூலோபாய திட்டமிடல் செயன்முறைக்காக உள்ளக மற்றும் வெளிப்புற சூழலினை உன்னிப்பாக அவதானித்தலினை அதைப்போலவே அடையாளப்படுத்தல்களிற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலிருந்து கீழ் மற்றும் கீழிருந்து மேல் என இருவழி அணுகுமுறைகளையும் தழுவி அனைத்துப் பிரிவுகளது அனைத்து தரத்தவர்களுடனுமான கலந்துரையாடலுடன் இது மேற்கொள்ளப்படவேண்டும்.

இடர் முகாமைத்துவ குழு மற்றும் இடர் முகாமைத்துவத்தை தொடர்புறுவதற்கான ஏனைய உத்தியோகப்பூர்வ பொறிமுறைகள்

பணிப்பாளர் சபையின் உபகுழுக்களில் ஒன்றாக, இடர் முகாமைத்துவ குழுவானது இடர் முகாமைத்துவ செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இது பிரதானமாக வியாபார இடர்கள், நிறுவன இடர்கள் மற்றும் செயற்பாட்டு இடர்கள் என்பவற்றில் கவனம் செலுத்தும். கைத்தொழிற்றுறை இடர்கள் மற்றும் மூலோபாய இடர்கள் என்பனவும் அதற்கிணங்க கருத்திற்கொள்ளப்படும் என்பதுடன் AASLஇன் மூலோபாய திட்டமிடல் செயன்முறையின் ஊடாக, இடர் எச்சரிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் என்பனவும் பணிப்பாளர் சபை மட்டத்தில் கலந்துரையாடப்படும் அல்லது கலந்துரையாடப்படுவதற்காக பரிந்துரைக்கப்படும்.

இடர்களின் சாதகத்தன்மை மற்றும் தீவிரம் என்பவற்றை அடையாளங்காணுவதற்காக இடர் பதிவேடானது பிரதானமாக பயன்படுத்தப்படும். பிரேரிக்கப்பட்ட இழிவளவாக்கல் நுட்பங்களுடன் இது ஒவ்வொரு பிரிவினாலும் இற்றைப்படுத்தப்படுவதுடன் மூலோபாய முகாமைத்துவ பிரிவினால் மையமாக கண்காணிக்கவும்படுகின்றது. கவனிக்கப்படாத இடர்கள் மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் என்பன அவை குறித்து பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இடர் முகாமைத்துவ குழுவிற்கு அனுப்பப்படும்.

இடர் முகாமைத்துவ குழு கூட்டங்களானவை வியாபாரத்திற்கு சிக்கலான நிர்வாக, தந்திரோபாய மற்றும் மூலோபாய இடர்களை கலந்துரையாடுவதற்காகவும் சிறந்த பொருத்தமான இழிவளவாக்கும் நுட்பத்தை கண்டடையவுமாக AASLஇன் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி மாதாந்த அடிப்படையில் கிரமமாக இடம்பெறும். இவ்வனைத்துக் கூட்டங்களிலும், விரிவாகவும் வினைத்திறனாகவும் கலந்துரையாடப்படுவதற்காக இடர்களின் ஒரு குறிப்பிட்ட பகுதி மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றன. எனினும், நிகழ்ச்சிநிரலிற்கு அப்பாலும் காலத்திற்கு தேவையானதும் முக்கியமானதுமான இடர்களை கலந்துரையாடுவதற்கு பங்குகேற்பாளர்கள் ஊக்குவிக்கவும்படுகின்றனர். சில மூலோபாய இடர்கள், மனித வள முகாமைத்துவ இடர்கள் மற்றும் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய இடர்கள் என்பன பணிப்பாளர் சபையின் ஏனைய உபகுழுக்களின் ஊடாகவும் மதிப்பிடப்படுகின்றன. இது ஒவ்வொரு சாத்தியமான அம்சங்களிலிருந்துமான காரண காரியங்களை அவதானிப்பதனால் இழிவளவாக்கும் நுட்பங்களை வலுப்படுத்த உதவுகின்றது.

மேலும், நிறுவனத்தின் பாதுகாப்பு முகாமைத்துவ அலகினால் ஆகாய விமான நிலைய பாதுகாப்பு விடயங்கள் கவனத்திற்கொள்ளப்படுகின்றன. இது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் வழங்கப்பட்ட வழியுரைப்பினது (பின்னிணைப்பு 19) பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய பொறிமுறைகளானவை விமான நிலையத்தில் பங்கு கொண்டிருக்கும் அனைத்து பங்குதாரர்களது பங்கேற்புடன் காலாண்டு அடிப்படையில் இடம்பெறும் வளப்படுத்தல் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்படும். இடரினையும் பிரச்சினைகளையும் முன்வைக்கவும் கூட்டாகச் சேர்ந்து அவற்றை கலந்துரையாடி தீர்வு காணுவதற்கும் அனைத்து பங்குதாரர்களிற்கும் சமமான வாய்ப்புக்கள் வழங்கப்படும். விமானச்சேவை இயக்க குழு விமானச் சேவை மற்றும் பயணிகளினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை கலந்துரையாடுவதுடன் விமான பாதுகாப்பு குழுவானது அனைத்து விமானநிலைய சொத்துக்களினாலம் எதிர்கொள்ளப்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சாத்தியமான இடர்களினை கலந்துரையாடும். இப்பொறிமுறைகளானவை வெளிப்புற பங்குதாரர்களுடனான இடைவினைகளின் ஊடாக விளக்கப்பட்ட நிறுவனத்தின் நிர்வாக இடர் தோற்றப்பாடுகளுடன் தொடர்புறுகின்றன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது நிதியியல் இடர்களுடன் தொடர்புடைய சமநிலைகளை கவனத்திற்கொள்கின்றது.

இடர் எதிர்வுகூறல்

சாத்தியமான இடர்களை அடையாளம் காணுவதில் இடர் எதிர்வுகூறல் ஒரு விசேட வகிபாகத்தினை வகிக்கின்றது. நிறுவனத்தின் இடர் எதிர்வுகூறல் காலப்பகுதியானது கூட்டுத்தாபன திட்டத்தின் காலக் கிடையில் தங்கியுள்ளதுடன் தற்போது அது 3 வருட காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களில், விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை கேள்விகளின் நிச்சயமின்மைகள் பொறுத்து செயலாற்றும் பொருட்டு, எயார்போர்ட் கவுன்சில் இன்டர்நேசனல் மற்றும் விமானப் போக்குவரத்து சங்கம் போன்ற தொழில்முறை அங்கங்களினால் வெளியிடப்பட்ட எதிர்வுகூறல்கள், ஏனைய வெளியீடுகளில் (அதவாது விமானத் துறைக்கான பிராந்திய அல்லது நாடளாவிய வெளியீடுகள்) AASL பெரிதும் நம்பிக்கைகொண்டுடிருக்கின்றது.
இக்கட்டத்தில் மேலிருந்து கீழ் மற்றும் கீழிருந்து மேல் தொடர்பாடல் முறைமைகளினால் அனைத்து மட்டங்களிலும் பணியாளர்களது பங்கேற்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இடர் அடையாளப்படுத்தலானது மூலோபாய திட்டமிடல் செயன்முறையின் வழமையானவொன்றாக கொள்ளப்பட்டதுடன் பணியாளர்களது பங்களிப்பும் ஊக்கப்படுத்தப்பட்டது.

AASL ஆனது பின்வருவனவற்றை உள்ளடக்கும் இடர்களை அடையாளம் கண்டுள்ளது:

- மூலோபாய மற்றும் நிர்வாக இடர்கள்
- மனித வள இடர்கள்
- காப்பு, பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர்கள்
- நிதியியல் இடர்கள்
- புகழ்சார் இடர்கள்
- சட்ட இடர்கள்

இடர் மதிப்பீடு

இடர்களானவை இரு காரணிகளை கருத்திற்கொண்டு மதிப்பிடப்படுகின்றது

- இடர் பொருள்மையப்படுத்தலின் சாத்தியக்கூறுகள் (அல்லது சாத்தியப்பாடுகள்)
- அத்தகைய இடர்களின் தாக்கத்தின் தீவிரத்தன்மை

மேலுள்ள ஒவ்வொன்றும் 1 இலிருந்து 5 வரையில் வேறுபடும் அடைவுமட்டங்களை எட்டவேண்டியது என்பதுடன் 1 ஆனது குறைவான சாத்தியப்பாடு அல்லது தீவிரத்தன்மையை காட்ட அதற்கிணங்க 5 ஆனது உயர்தரத்தினை காட்கின்றது. பின்னர், சாத்தியக்கூறு மற்றும் தாக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட புள்ளிகளானது உற்பத்தியை பெறுவதற்காக ஒவ்வொன்றுடனும் பெருக்கமுறும். இப்பெறுமதிகள் 1-25 வரையில் வேறுபடுவதுடன் அவை இடர் மதிப்பீட்டு அளவையில் வலது புறத்தில் குறிக்கப்பட்டுள்ளன. புள்ளி 25 இனை நோக்கிய அதிகரிப்பானது அதனை தீர்ப்பதற்கு அவசரமான கவனத்தையும் வினைத்திறனான பொறிமுறையையும் தேவைப்படுத்துகின்றன என்பதனை குறிப்பிடுகின்றது.

இடர் மதிப்பீட்டு அளவை

எமது இடர் பதிவேட்டில் நாம் அடையாளம் கண்ட 186 இடர்கள் சாத்தியக்கூறு மற்றும் தாக்கம் எனும் இரு அடிப்படைகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்விடர் கோவைகள் 2022 ஆம் வருடத்திற்கென கணினியிலும் தரவேற்றப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், அளவையின் ஒவ்வொரு விசேட கூட்டிலுமாக பொருந்தும் இடர்வகைகளின் எண்ணிக்கையானது கீழுள்ளவாறு அடைப்புக்குறியிடப்பட்டு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

நிரை / தாக்கம்	அரிது	விரும்பத்தகாதது	சாத்தியமானது	இடம்பெறக்கூடியது	பெரும்பாலும் நிச்சயமானது
முக்கியத்துவமானவை	1	2	3	4	5
சிறியளவானவை	2 (1)	4	6 (3)	8 (2)	10
மத்தியத்தரமானவை	3 (1)	6 (1)	9 (16)	12	15 (3)
உயர் தரமானவை	4 (1)	8 (5)	12 (51)	16 (40)	20 (4)
அதிஉயர்	5	10 (8)	15 (17)	20 (19)	25 (14)

சாத்தியக்கூறு மற்றும் தாக்கங்களை மதிப்பிடுவதானது பொருத்தமான பிரிவுகளது தொழில்முறை நிபுணர்களுடன் இடம்பெறும் ஒரு தரப்பாட்டு தீர்வாகும். மறுமுனையில், ஒத்த நிகழ்வுகளது கடந்தகால அமைப்புக்களை கருத்திற்கொண்டும் தாக்கங்களை நாணய விதிமுறைகளிற்கிணங்க கணக்கிடுவதுமான சாத்தியக்கூறு மற்றும் ∴அல்லது தாக்கத்தினை.∴ களினை அளவையியலின் பிரகாரம் மதிப்பிடும், நிதியியல் இடர்கள் போன்ற சில இடர்களும் காணப்படுகின்றன.

நாம் சில KPI களை அடையாளப்படுத்தப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டதுமான சில இடர்களிற்கு இணங்க நிர்ணயித்துள்ளோம். நிதிச் செயலாற்றுகையை அளவிடுவதற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர் திருப்தி, பணியாள் திருப்தி, விமானங்களுடன் தொடர்புடைய விபத்துக்கள் மற்றும் சம்பவங்களுடன் தொடர்புடைய நிறுவனத்தின் செயலாற்றுகையையும் நாம் அளவிடுகின்றோம். இது இப்பகுதிகளிலான இடர்களை அடையாளங்கண்டு அவற்றை வெற்றிகொள்வதற்கான பொருத்தமான நடவடிக்கையை பகுப்பாய வழிவகுத்துள்ளது.

பின்வரும் அட்டவணையானது கடந்த நான்கு வருடங்களுடன் ஒப்பிட்ட மீளாய்வின் கீழ் இவ்வருடத்தில் பாரியளவில் மாற்றமுற்ற கோவைகளை காட்டும் பிரதான இடர்களை உள்ளடக்குகின்றது. AASL ஆனது,

இடரின் தன்மை	வியாபாரத்தின் தாக்கம்	இடர் இழிவளவாக்கம்	கடந்த வருடங்களில் இடர் கோவையிலான மாற்றம்				
			2022	2021	2020	2019	2018
வியாபார செயற்பாடுகளிற்கான இடையூறுகளது இடர்	விமானப் போக்குவரத்திற்கான எரிபொருள் விநியோகத்திலான நிச்சயமின்மை காரணமாக விமானங்கள் இந்நாட்டிற்குள் பறக்க தயங்கின. இது எமது நிர்வாகத்தை வெகுவாக பாதித்ததுடன் வருமானத்தையும் பாதித்தது.	• AASL ஆனது பொருத்தமான அரச அதிகாரிகளுன் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்த பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. • உரிய நேரத்திற்கும் பொருத்தமாகவும் தொடர்புடைய NOTAM மை விநியோகிக்க CAASL உடன் நெருக்கமாக பணிபுரிந்தது.	●	●	●	●	●
உட்கட்டுமான அபிவிருத்தி செயற்திட்டங்களின் தாமதத்திலான இடர்	அனைத்து வெளிநாட்டு கடன்களையும் இலங்கை அரசாங்கம் செலுத்த தவறியதும், முனையம் 02 அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான நிதிவழங்கும் முகவரகம் கடன் வழங்கலை நிறுத்தியதுடன் அச்செயற்றிட்டத்தையும் நிறுத்தி வைத்தது. இது பெருந்தொற்றுக்குப் பின்னரான வளர்ச்சி கட்டத்தை இல்லாமலாக்கியது.	• கடனிற்கான சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கை அரசாங்கத்தின் வெற்றிகரமான பேச்சுவார்த்தை முயற்சிகள் முனையம் 2 செயற்றிட்டத்தை மீளத்தொடங்க நிதி முகவரகங்களிடமிருந்து நிதி விடுவிப்பினை உறுதிப்படுத்தியுள்ளது	●	●	●	●	●
பாதுகாப்பு மற்றும் காப்பு இடர்	விமான நிலைய நிர்வாகத்தில் பணயிகளது பாதுகாப்பு மற்றும் காப்பு என்பன முக்கியமானவையாகும். அதன்காரணமாக, எந்தவொரு சிறிய விலக்கும் விமான நிலைய நிர்வாகத்தில் தீவிர விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனால் இவ்வம்சங்கள் உள்;ர் மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளிற்கமைய ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன.	• பாதுகாப்பு மற்றும் காப்பு விவகாரங்களிலான இடர்களை குறைப்பதற்காக உள்ளுர் மற்றும் சர்வதேச வழியுரைப்புகள் முழுமையாக பின்பற்றப்பட்டுள்ளன	●	●	●	●	●
விமானச் சேவை தொழிலாளர்களை வைத்திருப்பதிலான இடர்கள்	கீழான சமூக-பொருளாதார நிலைகளும் வரி சட்டங்களில் விளைவுகளை ஏற்படுத்திய மாற்றங்களும் தொழில்சார் நபர்களை நாட்டை விட்டு வெளியேறச்செய்தது. அதன்விளைவாக, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட விமானச்சேவை தொழிலாளர்களை நிறுவனம் இழக்க வேண்டியேற்பட்டது.	• அக்குறித்த பகுதிகளிற்கு போதுமான எண்ணிக்கையிலான தகுதியான பணியாளர்களை ஆட்சேர்த்து பயிற்றுவிக்க அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டது.	●	●	●	●	●
பிரதான அந்நிய நாணயங்களிற்கு, குறிப்பாக ஐ.அ.டொலரிற்கு எதிரான இலங்கை ரூபாவின் சரிவு	AASL ஆனது கடன்களால் ஆளப்படும் கணிசமானளவு வெளிநாட்டு கடன்களை கொண்டிருந்ததுடன் இலங்கை ரூபாவின் பெறுமதியிழப்பால் அவை சரிக்குசமமான இழப்புகளை சந்திக்கும் பாதகத்தினை கொண்டிருந்தது.	• வெளிநாட்டு நாணயங்களினால் ஆளப்படும் வருமானங்களையும் முதலீடுகளையும் பேணியமையானது மாற்று மற்றும் பரிமாற்ற இடர்களை பாரியளவில் இழிவளவாக்குவதற்கு உதவின.	●	●	●	●	●

இடர் முகாமைத்துவம்

இடரின் தன்மை	வியாபாரத்தின் தாக்கம்	இடர் இழிவளவாக்கம்	கடந்த வருடங்களில் இடர் கோவையிலான மாற்றம்				
			2022	2021	2020	2019	2018
வட்டி வீத இடர்கள்	உள்ளூர் பொருளாதாரத்தில் வட்டி வீதங்களின் மாற்றமானது நிறுவனத்திற்கான உயர் வட்டி வருமானத்தை உறுதிப்படுத்தும். அது நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட கடன் பத்திரங்களின் மீதான வட்டி செலவீனங்களையும் அதிகரிக்கும். எனினும், கடன்கள் மீதான வட்டி அதிகரிப்பானது அவை வெளிநாட்டு கடன்களாக காணப்பட்டமையினால் அவற்றை பாதிக்கவில்லை.	• நிறுவனத்தின் முதலீட்டு கொள்கையானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை இணக்கப்படுத்தியது. அவ்வாறே வட்டி வீத மாற்றங்களும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக காணப்பட்டது.	🔴	🟡	🟡	🟡	🟡
பண்ட விலைகளிலாள இடர்	குறிப்பாக உதிரிப்பாகங்கள், மின்சாரம் மற்றும் எழுதுகருவிகள் முதலியவற்றிலான விலை அதிகரிப்பானது எமது நிர்வாக செலவீனங்களிலான அதிகரிப்பிற்கு காரணமாகியது.	• இவை மையமற்ற சேவைகளின் செலவீன குறைப்பு மற்றும் விலை மறுசீரமைப்புக்களிலிருந்து பெறப்பட்டன.	🔴	🟡	🟡	🟢	🟢
இணையவழி தாக்குதல் இடர்	சாத்தியமான இரணயவழி தாக்குதலானது விமான போக்குவரத்து பாதுகாப்பு இலத்திரனியல் முறைமையையே ஸ்தம்பிதமடையச் செய்துவிடக்கூடும்.	• உயர்தரமான பாதுகாப்பு (அதாவது யைபர்வால்ஸ்) அறிமுகப்படுத்தப்படுவுள்ளதுடன் அவை இற்றைப்படுத்ததப்படவுமுள்ளன.	🟡	🟡	🟡	🟡	🟢


🟢 குறைவானவை
🟡 மத்தியத்தரமானவை
🔴 உயர் தரமானவை

AASL இன் இடர் முகாமைத்துவத்தின் வெற்றி

மேலே விளக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ செயன்முறையானது பின்வரும் விளைவுகளை வழங்கியுள்ளது:

- அவற்றை பல்வேறு கோணங்களில் அவதானித்து விரிவான மதிப்பாய்வை மேற்கொண்டமையின் விளைவாக இடர்களிற்கான வினைத்திறனான இழிவளவாக்கல்
- சாதகமான இடர்கள் மீது முதலிடுவதற்கான மூரோபாயங்களை வரையறுத்தல் (வியாபார வாய்ப்புக்கள்)
- AASL இன் அனைத்து பிரிவுகளும் இடர் அடையாளப்படுத்தல் மற்றும் இழிவளவாக்கும் படிநிலைகளை ஏற்றுக்கொள்வதில்ல ஈடுபட்டடை
- இடர் பதிவேடு பேணலாளது எந்தவொரு காலத்திலும் கவனிக்கப்படாத இடர்களிற்கு தயாராகிவிருந்தமை

இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் அரசாங்கக் கட்டமைப்பு



* இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் போது, தலைவர், தலைவராகவும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் இரண்டு வகிபாகங்களை வகிக்கிறார்.

கூட்டிணைந்த நிர்வாகம்


கூடுடீஜணுங்து ஓழுக்குழும் முற்றுழும் பேர்றுப்புஜடுயு வுணீகு நுடுத்துஜதுகளுக்குப் புஞ்குளீப்புர்ற்றுழும் இயுஞ்குநீஜலு கூடுடீஜணுங்து நீர்ஞர்கு முஜறுஜழும மீது நீறுவுனுழும் குவுனுழும் சேலுத்துகீறுது. இங்நேர்க்குத்துக்குர்கு ஆவுசீயுப்புடுழும் சேயுலுமுஜறுகுளுஞ் முற்றுழும் நுடுவுடீக்ஜகு முஜறுகுளுடுனு கூடீயு சுடுடுகுத்துஜது வுடீவுஜழுமுப்புதுனு மூலுழும், பேர்றுப்புகுளுஞ் தோர்டுஞ்புர்னு தேளுளீஜவு வுழுஞ்கீ, நுலுனுகுளுஞ் சுர்ஞ்நு ஏற்புடுக்கூடீயு முருணுபுர்டுகுஜளுதது துவீர்ஞ்நு கோர்ளுவுதுடுனு தீருப்புதீகுருமுர்னு சேயுலுமுஜறுகுளுஞ் முற்றுழும் ஊளுளுகுக் குடுடுப்புர்டுகுளுக்குர்னு முஜறுஜழுமுகுளுஞ், இடுருஞ் முகுர்ஜமுத்துவும், வேளுளீப்புஜடுத்துனுஜழும முற்றுழும் முழுமோர்த்து பேர்றுப்புஜடுஜழும பேர்னுறுவுற்ஜறு ஊறுதுதி சேய்யுழும் ஒரு தேளுளீவுர்னு முற்றுழும் முஜறுயுர்னு தீருமுர்னுழும் மேறுகோர்ளுளுழும் சேயுலுமுஜறுஜயு இலுஞ்ஜகு வீமுர்னு முற்றுழும் வீமுர்னு சேஜவுகுளுஞ் வுடீவுஜமுத்துளுளுது.

நிறுவனத்தின் தற்போதைய சபையானது, அதன் கூட்டிணைந்த இயங்குநிலை நிர்வாகத்துடன் அவசியமான நிபுணத்துவம், திறன்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட பொருத்தமான சபை உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. பேரினப் பொருளாதாரச் சூழமைவை மாற்றுவதிலும், அதனை சவாலுக்குட்படுத்துவதிலும் வணிகம் எதிர்நோக்கக்கூடிய இடர்கள் பற்றியதொரு முழுமையான புரிதலுடன் அனைத்துப் பங்குதாரர்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் தொழிற்பாடுகளை இயலுமாக்கும் ஒரு திடமான ஆளுமை முறைமையின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு சபை உறுப்பினர்கள் பணியாற்றுகின்றனர்.

இவ் கூட்டிணைந்த நிர்வாக அறிக்கையானது, "அ" வணிக பொது நிறுவனம் என்னும் வகைக்குள் வரக்கூடிய நிதியமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கூட்டிணைந்த நிர்வாகக் கொள்கைகளின் பணிப்புரை, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் 2017 கூட்டிணைந்த நிர்வாகம் தொடர்பான மிகச்சிறந்த நடத்தை நெறிமுறைகள், மற்றும் நல்லாட்சிக்கான பொது நிறுவனங்களுடைய வழிகாட்டுதல்கள் முதலியவற்றுடன் தொடர்புடைய இணக்கத்தின் நிலையை விவரிக்கிறது.

நிறுவனத்தின் கூட்டிணைந்த மூலோபாயத்துடன் ஒருங்கிணைந்த நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் பணி ஆகியன அதன் ஆற்றல்மிக்க பணியாளர்கள், பங்குரிமையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுடனான பயனுள்ள ஊடகங்களின் ஈடுபாட்டை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வதனூடாக - குறிப்பாக அவ்வப்போது நடக்கும் கூட்டங்களின் போது அதன் உபகுழு மூலமாக - மூலோபாய அபிவிருத்தி மற்றும் அதன் நடைமுறைப்படுத்தலுக்கு அவசியமான சவால்களை நிர்வாகக் குழு தொடர்ந்து ஏற்படுத்தவும், அவற்றை விருத்தியடையவும் செய்தது.

அபிவிருத்தி, விருத்தி, மற்றும் நிலைபேறான வியாபார மாதிரி ஒன்றைப் பேணுதல் ஆகிய அனைத்திற்கும் இன்றியமையாததாக அமையும் நியாயம், வகைகூறல், பொறுப்புடைமை, பங்கேற்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் கூட்டிணைந்த நிர்வாகச் சட்டகம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.



நியாயம் மற்றும் நன்னடத்தைக் கலாச்சாரம்

- பங்குரிமையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
- அனைத்துப் பங்குரிமையாளர்கள், பணியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் சமூகங்கள் ஆகிய எல்லோரையும் நியாயமாகவும், சமமான மரியாதையுடனும் நடாத்துதல்
- வன்முறைகளுக்கு எதிரான பயனுள்ள குறைதீர்வை வழங்குதல்
- முழுநிறைவான பணிச் சூழல் எந்நேரமும் ஊக்குவிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல்

மேற்பார்வை மற்றும் தலைமைத்துவம்

- கூட்டிணைந்த விவகாரங்கள் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளின் கண்காணிப்புக்கு சபையே பொறுப்பு.
- சபையானது விழிப்புடன் நிறுவனத்தின் சாத்தியமான மற்றும் நிகழ்கால செயலாக்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டும்.
- ஒரு நிறுவனத்தின் உயர்ந்தபட்ச நலன்களுக்கு ஏற்ப சபை செயலாற்ற வேண்டும்

வகைகூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை

- நிறுவனத்தின் செயற்பாடுகளுடைய நோக்கம் மற்றும் அதன் நடத்தையின் விளைவுகளை சபை விளக்க வேண்டும்
- இலங்கை அரசாங்கத்திற்கு இச்சபை வகைகூற வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
- நிதிநிலை சூழ்நிலை, செயலாக்கம், உரிமை, மற்றும் கூட்டிணைந்த ஆளுகை உள்ளடங்களாக, அனைத்து பொருள் சார்ந்த விவகாரங்களினதும் துல்லியமான மற்றும் உரிய நேரத்திலான வெளிப்படுத்துகையை உறுதிப்படுத்துதல்
- நிறுவனத்தின் செயற்றிறன், ஆற்றல் மற்றும் செயலாக்கத்தின் மதிப்பீடுக்கு சபை மற்றும் நிர்வாகம் ஆகியன வகைகூறல் வேண்டும்.
- பங்குரிமையாளர்களுடன் பிரச்சினையின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுவது சபையின் பொறுப்பாகும்.

சுதந்திரம்

- சபை சுயாதீனமாக இருப்பதுடன், எப்போதும் நிறுவனத்தின் உயர்ந்தபட்ச நலனை முன்னிறுத்தியே அனைத்துத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.
- சபையின் உட்கூறுகள் சமப்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்தல்
- குழுக்களின் நியமனங்களின் போது சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்
- மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் நிறுவப்பட்டுள்ள உள்ளக செயல்முறைகள் ஆகியன புறவயமானவை, செல்வாக்குச் செலுத்தப்பட்டவை அல்ல.

தொடர்ச்சியான விருத்தி

- சபை மற்றும் நிர்வாகம் ஆகியன எல்லா வகையான இடர்களையும் தீர்மானித்து, அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்
- அவற்றைக் கையாள்வதற்கு அவர்கள் அத்தகைய பரிந்துரைகளின்படி செயலாற்ற வேண்டும்.
- நடைமுறையிலுள்ள இடர்கள் மற்றும் இடர்களின் நிலை பற்றி அனைத்து இயைபான தரப்பினருக்கும் அறிவிக்க வேண்டும்

கண்காணிப்பு மற்றும் மூலோபாயம்

- தெளிவான மூலோபாயம் சார்ந்த ஒரு தொலைநோக்கை நிறுவுதல்
- நிறுவனத்தின் மூலோபாயம் சார்ந்த தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையில் பணிப்பாளர்கள் இன்னும் செயலூக்கத்துடன் ஈடுபடுதல்

சபை

சபையின் முக்கிய பொறுப்புகளாவன:

- நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை இலக்கு வைக்கும் நிலைபேறான, உயர் மட்ட, நடுத்தர, மற்றும் நீண்ட கால மூலோபாயங்களின் உருவாக்கத்தில் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல்
- நிறுவன இடர் முகாமைத்துவ சட்டகத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு நடாத்தப்படும் தொழிற்பாட்டுத் தீர்மானங்கள் மற்றும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதில் சிரேஷ்ட நிர்வாகத்தின் மீதான போதியளவு அதிகாரத்தின் ஒப்படைப்பை உறுதிப்படுத்துதல்
- ஆளுகை மற்றும் இணங்கியொழுகுதலுக்கான கண்காணிப்பு முறைமைகள்

சபை அதன் பொறுப்புகளை முன்கொண்டு செல்வதில், தொழிலாளர் ஊக்குவிப்பு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றுடன், அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பெறுமதி சேர்ப்பதற்கு வழிவகுக்கும் ஒரு சூழலை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு வெளிப்படைத்தன்மை கொண்ட கலாச்சாரம், ஆக்கவளமுடைய உரையாடல் மற்றும் ஆக்கபூர்வமான மறுதலிப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. சிரேஷ்ட நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் ஏனைய பணியாளர்களுக்கு வந்தடையக்கூடிய தொழில்முறைசார் நியமங்கள் மற்றும் கூட்டிணைந்த விழுமியங்களை ஊக்குவிப்பதனூடாக நேர்மை மற்றும் நாணயம் போன்றவற்றை சபை பேணிவருகிறது.

சபைக் கூட்டங்கள் மற்றும் சமூகமளிப்பு

சபைக் கூட்டங்கள் வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெறுவதற்கு ஏற்படாகியுள்ளன. கூட்டங்களின் போதான கலந்தாய்வுக்கு அவசியமான முக்கிய மற்றும் மூலோபாயம்சார் தகவல்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் மற்றும் நிர்வாகங்களுக்கு போதியளவு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. சபைத் திரட்டு என்றழைக்கப்படும் செயற்பாட்டுத் திட்டம், சபை ஆணவங்கள் மற்றும் இயைபான ஆவணங்கள் சபைக் கூட்டத்துக்கு 07 நாட்கள் முன்பதாகப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். கூட்டத்தின் போது கலந்துரையாடப்படவுள்ள விடயங்களுடன் அவர்களைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள இது உதவும்.

பொருத்தமானதொரு தீர்மானத்தை எட்டுவதற்கு அனைத்து அம்சங்களும் முறையே கலந்துரையாடப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு செயற்பாட்டுத் திட்டத்துக்கும் முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக் கூட்டங்களை நடத்தும் ஒரு தொழில்முறைசார் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட அணுகுமுறை கடைபிடிக்கப்பட வேண்டும். பிரிவுகளின் தலைமைகள் அழைப்பிதழ் பேரிலும், சபைக்கு மேலதிக தெளிவுரை மற்றும் தகவல்களை வழங்க அவசியப்படும் போதும் சமூகமளிப்பார்கள்.

கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில் 16 சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு கூட்டம், நிறுவனத்தின் உறுப்புரைகள் மற்றும் சங்க அமைப்பு விதிக் குறிப்பின் உறுப்புரை 55இன் பிரகாரம் முன்னர் ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் ஒன்றின் தொடர்ச்சியாக இருந்தது. நாட்டில் நிலவி வந்த எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட பயணத் தடையின் விளைவாக 16 கூட்டங்களுள் 05 கூட்டங்கள் நிகழ்நிலை வழியாக நடந்தது. சபை உறுப்பினர்களின் சமூகமளிப்பு பின்வருமாறு:

சபை உறுப்பினரின் பெயர்	பதவி	வருகை
மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜீ. ஏ. சந்திரசிறி RWP USP VSV ndc psc	தவிசாளர்	16/16
டாக்டர். யூ.ஏ. மெண்டிஸ் (15 ஜூன் 2022 அன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)	உப தவிசாளர்	09/09
ஏ. எஸ். சீ வருஷஹேன்னடிகே	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	16/16
எஸ். என். சுமனசேகர	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	15/16
கேப்டன். மிலிந்த ரத்நாயக்க (20 ஜூன் 2022 அன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	09/09
ஜீ. யூ. கே. அல்கேவத்தகே (15 ஜூன் 2022 அன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	08/09
டப்ளியூ. ஏ. ஏ. விஜேசூரிய (13 செப்டெம்பர் 2022 அன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	06/06
டபிள்யூ. எஸ். டீ டி சில்வா (30 நவம்பர் 2022 அன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	02/02
ஏ. ஏ. ரன்தெனிய (30 நவம்பர் 2022 அன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	01/02
ஜீ. ஏ. ஏ. ப்ரியந்த	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	16/16
ஏ. எச். எஸ் குணவர்தன	துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சிலிருந்து கண்காணிப்பாளர்	16/16

கூட்டிணைந்த நிர்வாகம்

சபை உறுப்பினரின் பெயர்	பதவி	வருகை
பதவி விலகல்கள்		
திரு. ஆர். சூரியாரச்சி (10 ஜூன் 2022 அன்று பதவி விலகினார்)	உப தவிசாளர்	07/07
திரு. யூ மஞ்சநாயக்க (12 ஆகஸ்ட் 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	07/07
திரு. சீ. விதாரென (31 மே 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	01/06
திரு. டீ. ஏ. டீ லிவேரா (11 ஜூன் 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	06/07
திரு. ஆர். ஏ. பீ விஜேரத்னசேகர (10 ஜூன் 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	07/07
திரு. டீ. ஏ. பீ வீரத்ன சனாதிபதி சட்டத்தரணி (11 ஜூன் 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	06/07
திரு. டப்ளியூ ஜிஹான் ரஷ்ந்த (10 ஜூன் 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	07/07
என். எம். பீ. பீ. கே. கே. நவரத்ன (29 நவம்பர் 2022 அன்று பதவி விலகினார்)	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்	04/07

எமது அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்பு

இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் முழுமையாக அரச நிறுவனம் என்பதுடன், அதன் நல்லாட்சியினூடாக நிறுவனத்தின் மூலோபாய வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பு குறித்து அரசாங்கத்திற்கு வகைகூற வேண்டும். அரச துறை தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் பரிந்துரை மூலமாக கூட்டிணைந்த நிர்வாகம் ஒழுங்காக்கச் சட்டகத்தினூடாக நிறுவனம் வழிநடாத்தப்படுகிறது. இந்த நிர்வாகச் சட்டகம் பின்வரும் ஐந்து அடிப்படைக் கொள்கைகளினூடாக வலு சேர்க்கப்படுகிறது

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு மேலதிகமாக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால், வெளியிடப்பட்ட கூட்டிணைந்த நிர்வாகம் பற்றி 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைசார் தேவைப்பாடுகள் மற்றும் மிகச்சிறந்த நடத்தை நெறிமுறை விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னிச்சையான இணங்கியொழுகுதல்கள் ஆகியனவும் எமது நிர்வாகச் சட்டகத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறது.

இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளில், ஆளுகை செயல்முறையின் முக்கியமான கூறு ஒன்றை சபை உப குழுக்கள் கொண்டிருக்கின்றன. தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ள விசாரணை நியதிகளின்படி 6 சபை உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவையாவன; கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு, இடர் முகாமைத்துவக் குழு, மனித வள மற்றும் ஊதியக் குழு, நிதிநிலை மற்றும் வருமான முகாமைத்துவக் குழு, அனைத்து விமான நிலைய வே போர்வர்ட் குழு மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணித்தல் குழு. ஆகையால், இதனுடன் தொடர்புடைய விவகாரங்கள் முழுமையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, சபைக்குப் பரிந்துரைக்கப்படும். இவ்வாறாக, தீர்மானம் மேற்கொள்வதன் கூட்டுப் பொறுப்புடைமையைப் பேணுவதோடு, சபை உறுப்பினர்களின் நிபுணத்துவம் வாய்ந்த அறிவை சபைக்குப் பயன்படுத்த முடியுமாக இருந்துள்ளது.

அதன்படி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, இடர் முகாமைத்துவக் குழு, மனிதவள மற்றும் வருமான முகாமைத்துவக் குழு, அனைத்து விமான நிலையங்கள் அங்கீகாரக் குழு மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணித்தல் குழு ஆகியன எமது ஆளுகைப் பொறிமுறையை மேலும் வலுவூட்டுவதற்கு நிறுவனத்திற்குள் செயற்படுகின்றன.

கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில், கீழேயுள்ள பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளது போல, கம்பனிகள் சட்டம் மற்றும் தன்னிச்சையான இணங்கியொழுகுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கட்டளைசார் கூட்டிணைந்த நிர்வாகத் தேவைப்பாடுகளுடனும் இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் இணங்கியொழுகியது.

இவ் அரசாங்கச் சட்டகம் ஐந்து அடிப்படைக் கொள்கைகளின் மூலமாக வலுவூட்டப்படுகிறது

1) தலைமைத்துவம் மற்றும் பணிப்புரை
2) வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு
3) அதன் முக்கிய பங்குரிமையாளராக அரசாங்கத்துக்கு வகைகூறல்
4) பங்குதாரர்களின் சட்டமுறையான நலன்களை இனங்காணல்
5) உரிய நேரத்திலான மற்றும் சமநிலையான வெளிப்படுத்துகைக் கொள்கை

1. தலைமைத்துவம் மற்றும் பணிப்புரை

வணிக முகாமைத்துவம் மற்றும் நிதிநிலை நிர்வாகம் ஆகிய துறைகளில் அனுபவம் மற்றும் அறிவுடைய உறுப்பினர்களை உள்ளடக்கிய சபையின் மேற்பார்வையின் கீழ் நிறுவனத்தின் வணிகம் மற்றும் தொழிற்பாடுகள் நிர்வகிக்கப்படுகின்றன, அவ் உறுப்பினர்கள் சங்கத்தின் உறுப்புரைகளுக்கு அமைவாக அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர். தலைவர் - நிறுவனத்தின் கூட்டிணைந்த ஆளுகைக் கொள்கைகளை வழிநடாத்துபவர் மற்றும் சபைக்குத் தலைமைத்துவம் வழங்குவதில் பொறுப்பாக இருக்கக்கூடியவர் - நல்லாட்சியை ஏற்படுத்துவதனூடாகவும், பயனுறுதிறனை உறுதிப்படுத்துவதனூடாகவும் அமைச்சரினால் சபை நியமிக்கப்படுகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற சபை உறுப்பினர்களுக்கு இடையே ஆக்கபூர்வமான பணியாற்றல் தொடர்புகளையும் தலைவர் உறுதிப்படுத்துவார். சபை செயலாளரின் உதவியுடன் பின்வருவனவற்றைத் தலைவர் உறுதிப்படுத்துவார்:

- சபை நடவடிக்கைமுறை பின்பற்றப்படுகின்றன
- தகவல்கள் உடனடியாக சபைக்கு வழங்கப்படுகின்றன

அரசாங்கம் மற்றும் அதன் பங்குதாரர்கள் சார்பாக நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் ஒரு நியதிச்சட்டப் பொறுப்புடைமையை பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துகிறது. அவர்களுடைய அடிப்படை செயற்பாடுகளாவன:

- நிறுவனம் தனது தொலைநோக்கை அடைவதற்கு வழிநடாத்திச் செல்லல்
- நிறுவனத்தின் நிர்வாகம் தொழிற்பாடுகள் மற்றும் செயலாக்கத்தை முழுவதுமாக மேற்பார்வை செய்தல்

சபை 12 பணிப்பாளர்களை உள்ளடக்கியிருப்பதுடன், அதில் 10 பேர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாகவும், 02 பேர் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாகவும் உள்ளனர். தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் அத்தகைய ஆற்றலுக்குட்பட்டுப் பணியாற்றுகின்றனர். இலங்கை விமான மற்றும் விமானச் சேவைகளின் தலைவராகவும், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகிய இரட்டை ஆற்றல்களை செயற்படுத்துகிறார். கூட்டிணைந்த நிர்வாக வழிகாட்டுதல்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை சபையின் பெரும்பான்மை உள்ளடக்கியிருக்கிறது. சபைக் கூட்டங்களின் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்டிராத பணிப்பாளர்கள் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. உள்ளமை மற்றும் தோற்றம் ஆகிய இரண்டிலும், நிர்வாகத்தின் சுயாதீனத்தை இச்சபை சேர்க்கை பிரதிபலிக்கிறது. இது பணிப்பாளர்களின் தனிநபர் உறவுமுறைகள், தனிநபர், தொழில்வாய்ப்பு அல்லது வணிகத்தை மையப்படுத்தியதாக மட்டும் இல்லாது, நிர்வாகத்தின் மிகைக் குத்துயரம் மீதும்

தங்கியிருக்கிறது. சபையின் கண்காணிப்பு வகிபாகத்தின் ஆழத்தில் புறவய சுயாதீன தீர்ப்பு வழங்குகை நிலைகொண்டிருக்கிறது.

நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளிவாரி தகவல்களைப் பொருத்தளவில், அனைத்து பணிப்பாளர்களும் சுயாதீன மற்றும் கூட்டு அணுகலைக் கொண்டிருக்கிறது. சபை நடவடிக்கைமுறை பின்பற்றப்படுகிறது என்பதையும், சபை நடவடிக்கைமுறை தொடர்பான சட்டரீதியான தேவைப்பாடுகள் பற்றிய வழிகாட்டுதலும் வழங்கப்படுகிறது என்பதையும் நிறுவனத்தின் செயலாளர் உறுதிப்படுத்துகிறார்.

அதற்கு மேலதிகமாக, தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ள இயலுமாக்குவதற்கு போதியளவு தகவல்களுடன் சபைக் கூட்டங்கள், அறிக்கைகள், சபை ஆவணங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களின் அறிவிப்புகளை செயலாளர் வழங்கி வைப்பார். சபை முடிவுகள் தொடர்பான பின்தொடரும் காரியத்தையும் செயலாளர் ஆற்றுவார்.

1.1 சபைத் தலைமைத்துவத்திற்கு என ஒதுக்கப்பட்டுள்ள விவகாரங்கள் பின்வருமாறு:

நிறுவனமானது அனைத்து வணிக அலகுகளினூடாகவும் தழுவிக்கொள்ளப்பட்டுள்ள நன்கு நிலைநிறுத்தப்பட்ட கூட்டிணைந்த நிர்வாகச் சட்டகத்தைக் கொண்டிருப்பதுடன், நிலைபேறான பங்குரிமையாளர் மதிப்பைப் பேணுவதற்கும், விருத்தி செய்வதற்கும் அது முக்கியமானது.

அ) நிறுவனத்திற்கான தொலைநோக்கு மற்றும் பணிப்புரைகளை வழங்குதல்

ஆ) 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சிவில் விமானச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் நோக்கெல்லைக்குட்பட்டு கட்டியெழுப்பப்பட்டுள்ள அதன் பிரத்தியேகப் பணியை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கம் மற்றும் ஏனைய பங்குரிமையாளர்களின் நலன்களுக்கு ஏற்றாற்போல் எவ்வாறு சிறப்புறச் தொண்டு செய்யலாம் என்பதைக் கருத்திற்கொள்ளல்

இ) சட்டமுறையான தேவைப்பாடுகள் நிறைவேறியுள்ளதை உறுதிப்படுத்துவதுடன், 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கொம்பனிகள் ஏற்பாட்டுக்கும், சங்கத்தின் உறுப்புரைகளுக்கும் அமைவாக நிறுவனம் தொழிற்படுதல்.

ஈ) அரசாங்கம் மற்றும் ஏனைய முக்கிய பங்குதாரர்களின் உச்சநிலை விளைவு மற்றும் பயன்களை அடைந்து கொள்வதற்கு இடர் முகாமைத்துவம் உள்ளடங்களாக வெவ்வேறு வகையான கொள்கைகளை வரையறுத்தல்

உ) காலமுறை தோறும் பொதுக் கொள்கை குறிக்கோள்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான நீண்ட கால இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உருவாக்குவதற்கு மூலோபாய பணிப்புரை வழங்குதல்

ஊ) பொறுப்புகளைக் கையளிப்பதனூடாக போதியளவு பொறுப்புடைமையை உத்தரவாதப்படுத்துதல்

1.2 இத்திறனுக்குட்பட்டு சபைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள விவகாரங்கள் பின்வருமாறு:

தமது அதிகார வரம்புக்குள் நேரடியாக வரக்கூடிய, சபையின் பிரதான நோக்கங்கள் சுருக்கமாக:

அ) முழுமொத்த பணிப்புரையையும் மதிப்பிடுதல் மற்றும் வணிக மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துதல்

ஆ) பங்குதாரர் நலன்களைப் பாதுகாப்பதற்கான அறங்காவலர் பணியின் கடப்பாடுகள்

இ) நிறுவனமானது அதன் தொழிற்பாடுகள் குறித்து சரியான திசையில் பயணிக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதுடன், நிர்வாகத் தகவல் அறிக்கைகளினூடாக சிரேஷ்ட நிர்வாகத்தின் செயலாக்கத்தை மதிப்பிடுதல்

ஈ) நிர்வாக நடைமுறையின் பயனுறுதிறனை உறுதிப்படுத்துதல்

உ) ஏனையோருக்கு மத்தியில் உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளடங்களாக, இடர் மதிப்பாய்வு மற்றும் முகாமைத்துவத்துக்கான ஒரு சட்டகத்தை நடைமுறைப்படுத்துதல்

ஊ) சபைக் கொள்கைகள், பிரதானமாக நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் நலன்களை மையப்படுத்திய வகையிலும், வரையறுக்கப்பட்ட அதே ஊக்கத்துடனும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல்

எ) எதிர்பார்ப்புகளுக்கு இணங்க விளைவுகள் அமையாவிடின், இலக்கை அடைவதற்காகக் காலதாமதமின்றி தீர்வு நடவடிக்கைகளை எடுத்தல்

ஏ) பொருத்தமான பணியாளர்களை முகாமையாளர்களாக நியமித்தல் மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்திற்கு மத்தியில் போதியளவு அதிகார சபையின் கையளிப்பு இருப்பதை உறுதிசெய்தல்

ஐ) பொது நிறுவனங்களுக்கான குழுவினதும், பாராளுமன்ற ஆலோசனைக் குழுவினதும் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் அல்லது தேவைப்படும் போது சிரேஷ்ட நிர்வாகத்திற்கு அதை செய்வதற்காக அதிகார சபை ஒன்றை நியமித்தல்

1.3 கூட்டிணைந்த நிர்வாக அம்சங்களில் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் வகிபாகம்

கணக்காய்வு நிர்வாகக் குழு

இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் விவகாரங்களில் மேற்பார்வை செய்வதில் நிர்வாக சபைக்கு உதவுவதற்கும், நிறுவனத்தினது நிதிநிலை அறிக்கைகள் மற்றும் இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் நடவடிக்கைமுறைகளினது ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும், PED/12 பந்தி 7:4:1 நியதிகளின்படி, கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு உருவாக்கப்பட்டது.

நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளின் ஒருமைப்பாடு, நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகள், மற்றும் சட்டமுறையான மற்றும் ஒழுங்காக்கல் தேவைப்பாடுகளுடன் அதன் இணங்கியொழுகும் தன்மை, வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் செயலாக்கம், உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளின் தகைமைகள் மற்றும் சுயாதீனம் மற்றும் நிறைவு ஆகியவற்றுடன் தொடர்புடைய அதன் கண்காணிப்புப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுவது என்பன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வகிபாகமாகும்.

சபையினால் அங்கீகரிக்கப்பட்டு வருடாவருடம் மீளாய்வுக்குட்படுத்தப்படும், குழுவின் விசாரணை நியதிகளில் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் நோக்கெல்லை தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. கணக்கீடு மற்றும் நிதிநிலைச் செயற்பாடுகள், நிர்வாக ஒழுங்குவிதிகள் (AR), நிதிநிலை ஒழுங்குவிதிகள் (FR) மற்றும் இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசாங்க ஒழுங்குவிதிகளுடனான இணக்கம் மற்றும் இணங்கியொழுகுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு நிதிநிலை அறிக்கைகளை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு செய்துள்ளது.

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலைத் தகவல்களின் ஒருமைப்பாட்டுக்குப் பங்களிப்பாற்றுவதில் வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன. அதன்படி, குறைந்தபட்சம் ஒவ்வொரு காலாண்டிலாயினும் கணக்காய்வுக் குழுவினால் அவை மேற்பார்வை செய்யப்பட்டு பயனுள்ள வகையில் அவை மதிப்பிடப்பட வேண்டும். இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் கணக்காய்வுச் செயற்பாடுகள் பயனுள்ளதாகவும், உறுதியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது என்பதற்கான உறுதிப்படுத்தல், இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் துறைசார் அமைச்சு, துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் பொது திறைசேரி ஆகியவற்றுக்குத் அவசியப்படுகிறது. பின்வரும் அனைத்து சிக்கல்களையும் உள்ளடக்கியதாக மதிப்பீடுகளின் நோக்கெல்லை அமைந்திருக்க வேண்டும்:

- மதிப்பீட்டுக் காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்படும் பணியின் தரம்.
- கணக்காய்வுப் பணியாளர்களின் பண்பாற்றல் மற்றும் அனுபவம்.
- அரசாங்கம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு ஆகியவற்றைக் குறித்து அதன் அறிக்கையிடல் வழித்தடத்தின் பொருத்தம்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது காலத்துக்குக் காலம் அதன் அங்கீகாரத்துக்காகப் பணிப்பாளர் சபைக்கு தற்போதைய முறைமைகளை மேம்படுத்துவதற்கு சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளில் ஏதேனும் பிறழ்ச்சிகள் உள்ளனவா எனக் கண்காணிப்பது பற்றியும், தற்போதைய முறைமைகள் மற்றும்

நடவடிக்கைமுறைகள் பற்றியும் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு தொடர்ச்சியாக மீளாய்வு செய்துள்ளது. கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளையும் குழு மீளாய்வு செய்திருந்ததுடன், தொடர்புடைய இடர்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள திருத்த நடவடிக்கைகள் போதியளவானதாகவும், பயனுள்ளதாகவும் இருப்பதற்கு இயைபான பிரிவுகளினால் பதில்கள் வழங்கப்பட்டன.

2. வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு

விரிவுபடுத்தப்பட்ட நிர்வாகம், பொறுப்புடைமை, மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை வேண்டி நிற்கும் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையிடலின் ஒருமைப்பாட்டை அடையாளம் காண்பதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கும் நிறுவன ரீதியான கலாச்சாரம் மற்றும் நடைமுறைகளை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தொடர்ச்சியாகக் கண்காணித்து, மீளாய்வு செய்துள்ளது. திறைசேரியின் பொதுநிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்ட நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக முழுக் கொள்முதல் செயல்முறையும் காணப்படுவதுடன், பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது முழுமையானதொரு வெளிப்படையான செயல்முறையை அது வழங்குகிறது.

2.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதப் பிரிவினால் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவுக்கு உதவி செய்யப்படுகிறது. உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதப் பிரிவின் தலைமைப் பொறுப்பை வகிப்பவர் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றுவதுடன், அது குறித்து தலைவருக்கு அறிக்கை வழங்குகிறார். விமானச் சேவைகளின் சில பகுதிகளுக்கான தரத்தின் நியமங்கள் திருப்திகரமாக அடையப் பெற்றுள்ளன என்பதுடன், உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுவூட்டுவதற்கு நிர்வாகத்திற்குப் பொருத்தமான பரிந்துரைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் அதேவேளை, உள்ளகக் கட்டுப்பாடுகளின் நிறைவு, ஒருமைப்பாடு, மற்றும் பயனுறுதிறனை மதிப்பிடுவதனூடாக உள்ளகக் கட்டுப்பாட்டின் தற்போதைய முழுமொத்த முறைமை பற்றிய ஒரு சுயாதீன மீளாய்வை நடத்துவதே உள்ளகக் கணக்காய்வு மற்றும் தர உத்தரவாதப் பிரிவின் பிரதான நோக்கமாகும். நிறுவனத்தின் தாபிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களுக்கு அமைவாக உள்ளகக் கட்டுப்பாடுகளின் நிறைவு மற்றும் பயனுறுதிறன் பற்றித் தொடர்ச்சியாகத் தலைவருக்கு உள்ளகக் கணக்காய்வு அறிவித்தது. உள்ளகக் கணக்காய்வு பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது:

அ) உள்ளகக் கட்டுப்பாடுகளின் தற்போதைய முறைமை பற்றிய மீளாய்வு

ஆ) பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட பிரதான தீர்மானங்கள் பயனுள்ள விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துதல்.

இ) இலங்கை விமான மற்றும் விமான சேவைகள், கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு, மற்றும் இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் தலைவர் ஆகியோருக்குக் கீழுள்ள ஒவ்வொரு பிரிவினதும் அதிகார வரம்பிற்குட்பட்ட நிர்வாகத் தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து இடர் மதிப்பாய்வு தொடர்பான மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

ஈ) முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து வெளிவாரி கணக்காய்வாளர்களினால் இடர் மதிப்பாய்வு தொடர்பாகக் கண்காணிப்புகளை மேற்கொள்ளல்

உ) வருமானம், செலவினம், அதன் அங்கீகாரம் மற்றும் அறிக்கையிடலுக்காக அவசியப்படும் போது மற்றும் காலாந்தர நிதிநிலை மீளாய்வுகளை மேற்கொள்ளல்

ஊ) வணிகத்தின் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் தரமான கணக்காய்வுகளை மேற்கொள்ளல்

எ) தேசிய கொள்முதல் முகவர் பிரயோகிக்கப்படக்கூடிய கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு அமைவாகக் கொள்முதல் நடவடிக்கைமுறைகளின் மீளாய்வு.

3. இலங்கை விமான மற்றும் விமான சேவைகளின் முக்கிய பங்குரிமையாளராக அரசாங்கத்துக்கான பொறுப்புடைமை

முழுவதுமாக அரசாங்கத்துக்குச் சொந்தமான வணிகப் பொறுப்புமுயற்சியாக, பின்வரும் பொறிமுறைகளைப் பயன்படுத்தி இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் துறைசார் அமைச்சினூடாக அரசாங்கத்துக்கான வகைகூறல் பிரயோகிக்கப்படுகிறது:

3.1 பாராளுமன்றம்

2002 மே 24 எனத் திகதியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கை PE/PF க்கு இணங்க நிதிநிலை வருடம் நிறைவடைந்து 150 நாட்களுக்குள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகள் மீளாய்வுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.2 பொது முயற்சியாண்மைகளுக்கான குழு (COPE)

பொது நிறுவனங்களுக்கான குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழு ஆகியன எந்த எல்லைக்கு நிறுவனம் செயலாக்க இலக்குகளை அடைகிறது என்பதையும், சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுகிறது என்பதையும் மதிப்பாய்வு செய்வதற்கும், நிறுவனத்தின் செயலாக்கத்தை மீளாய்வு செய்வதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றன. பொது நிறுவனங்களுக்கான குழுவினால் அழைப்பாணை விடுக்கப்பட்டால், தலைவர்கள், பணிப்பாளர்கள் சிரேஷ்ட முகாமையாளர்களுடன் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர், முதன்மை கணக்காய்வு உத்தியோகத்தர் ஆகியோர் மீளாய்வுக்காகச் சமூகமளிக்க வேண்டியதுடன், நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஏதேனும் விவகாரங்களுக்கு பதிலளிக்கவும் வேண்டும்.

3.3 நிதி அமைச்சு/ பொது திரைசேறி

பொது நிறுவனங்கள் உள்ளடங்களாக, பொதுத் துறையில் நிதிநிலை ஒழுக்கங்களுக்காக அவர் சார்பாக நிதியமைச்சு அல்லது பொது திரைசேறி பொறுப்பாக இருக்கும். செயலாக்கத்தைக் கண்காணிப்பதற்கும், நியதிச்சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றில் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், ஏதேனும் விவகாரங்கள் தொடர்பாக அமைச்சருக்கு அறியப்படுத்துவதற்கும், திரைசேறிப் பிரதிநிதியானவர் கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில் இந்தச் செயற்பாட்டை ஆற்றினார்.

நிதிநிலை முகாமைத்துவம் மற்றும் பொது நிறுவனங்களின் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான பொறுப்புடைமை, பொது நிறுவனத் திணைக்களம், பொது திரைசேறி ஆகியவற்றில் தங்கியுள்ளது.

3.4 துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான கணக்காய்வு உத்தியோகத்தர் ஆகியோர் அரசாங்கத்தின் நிதிநிலை நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு வகைகூற வேண்டும், மற்றும் இந்த ஆற்றலில் பின்வரும் விவகாரங்களைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யும்.

அ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீடு

ஆ) மூலதனத்தின் பொருள் சார்ந்த மற்றும் நிதிநிலை செயலாக்கம்

இ) தற்போதைய வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள்

ஈ) முகாமைத்துவக் கடிதம் உள்ளடங்களாக

உ) வருடத்தின் நிதிநிலை செயலாக்கம் முழுவதும்

ஊ) ஏனைய நியதிச்சட்ட அல்லது ஒழுங்குவிதிசார் நிறுனங்கள் அல்லது பொது நிறுவனங்களுக்கான குழுவின் கூட்டங்களில் எழும் விவகாரங்கள்

4. பங்குதாரர்களுக்கு சட்டமுறையான நலன்களை அங்கீகரித்தல்

ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்களை நல்ல முறையில் நடத்துகையில், வளர்ச்சியில் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகையில், குடியுரிமைப் பொறுப்பு மற்றும் சட்டமுறையான இணக்கம் பற்றிய ஒரு மதிப்பைக் கொண்டிருக்கையில் பங்குதாரர்

பெறுமதி விருத்தியடைகிறது. நிறுவனத்தின் பங்குதாரர்களுடைய (பங்குரிமையாளர்கள், வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சமூகம்) நலன்களை அதிகரிப்பதை அதன் முதன்மை நோக்கமாகக் கொண்டு கவனம் செலுத்தும் ஒரு முகாமைத்துவ முறை பங்குதாரர் பெறுமதி என்றழைக்கப்படுறது. நிறுவனத்தின் தயாரிப்புகளுடைய தரத்தை அதிகரிப்பதுடன், நிறுவனத்தின் பணியாளர்களுடைய திறன்கள் மற்றும் பண்புகளை மேம்படுத்தி, நிறுவனமானது வளங்கள் மற்றும் நிலைபேறான தன்மையை சேகரிக்கும் சமூகத்தின் முன்னேற்றத்தை தக்க வைக்கும் அதேநேரம், செலவுக் கட்டுப்பாட்டை மேம்படுத்தும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக பங்குதாரர்கள் பெறுமதியை அதிகரிப்பதே இந்த அணுகுமுறையின் இலக்காகும். அதனடிப்படையில், இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் விவகாரங்கள், பணியாளர்கள், விமான நிலைய வழங்குநர்களின் பயனர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்கள் மற்றும் முழுச் சமூகம் மீதும் கரிசனை கொண்டுள்ள இணைக்கப்பட்ட ஏனைய மற்றும் அரசாங்கம் உள்ளடங்களாக அனைத்து சட்டமுறையான பங்குதாரர்களுக்கும் சட்டரீதியான மற்றும் ஏனைய கடப்பாடுகளை நிறுவனம் அங்கீகரிக்கிறது. நீண்ட கால பங்குதாரர் பெறுமதியை மேம்படுத்துவதற்கான முதன்மையான கடமையின் ஒரு அங்கமாக இப்பொறுப்புகள் முக்கியத்துவப்படுத்திப் பார்க்கப்படுகின்றன.

பின்வரும் பகுதிகளை உள்ளடக்கியுள்ள பொருத்தமான கூட்டிணைந்த நடைமுறைகளுக்கு அதன் அர்ப்பணிப்பை அது பறைசாற்றுகிறது.

அ) ஒழுங்குவிதிசார் சட்டகத்திற்கு சபை மற்றும் நிர்வாகம் மூலமாக உரிய விழிப்புக்கவனம்

ஆ) அரசாங்கத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுதல், விமான நிலையத் தொழிற்பாடுகளுக்கான நியதிச்சட்ட சேவை வழங்குநராகச் செயற்படுதல்

இ) கடன் வழங்குநர்கள் மற்றும் நிதிநிலை நிறுவனங்களுக்கான பொறுப்புகளை துரிதமாக அடைதல்.

ஈ) நியாயமான வணிகத்துடன் தொடர்புடைய பொறுப்புகளைத் தொடர்ச்சியாக அடைதல் மற்றும் வழங்குநர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களைக் கையாளும் ஒரு சமநிலையான தளத்தை உறுதி செய்தல்.

உ) சமூகத்தில் தாக்கம் செலுத்தும் அறநெறிசார் வணிக நடைமுறைகளை உறுதிப்படுத்துதல்

ஊ) சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்துத் தொழிற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்லல் மற்றும் பொருத்தமானதாகக் கருதக்கூடிய சிறந்த நடைமுறைப் பின்பற்றுதல்

எ) அனைத்து விமானச் சேவை பயனர்களுக்கும் பாகுபாடற்ற அனுசரிப்பு.

ஏ) ஊழியர்களை நியாயமாகவும், மரியாதையாகவும், சமமாகவும் நடத்துதல்.

5. சரியான நேரத்தில் சமநிலையான வெளிப்படுத்துகை

மதிநுட்பமான தீர்மானம் மேற்கொள்வதன் ஆழ அகலத்தின் அவசியப்படும் துல்லியமான தகவல் சேகரிப்பை வழங்குவது என்பது எமது தகவல் வெளிப்படுத்துகையை வெளிவாரியாகவும் உள்ளகத்திலும் முக்கியமானதாக ஆக்குகிறது. பொது திறைசேரிக்கான பொது நிறுவனங்களின் திணைக்களம் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் உள்ளடங்களாக, அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளை உள்ளடக்கிய வெளிப்படுத்துகையுடன் இணக்கத்தை உறுதிசெய்வதற்கு, நிறுவனத்தின் தாபிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள்.

வணிகம், இடர் விவரக்குறிப்பு, நிதிநிலை நிலைமை, தொழிற்படும் செயலாக்கம் மற்றும் கூட்டு நிறுவனத்தின் போக்குகளைப் பங்குரிமையாளர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்கு பங்குதாரர்களுடனான பயனுள்ள மற்றும் தெளிவான தொடர்பாடலை இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் அமைப்பு பேணி வருகிறது. நடைமுறையாகவும், கேள்வியாகவும் காலாந்தர மற்றும் அவசியப்படும் பல அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்கள் வழங்கப்படுகின்றன. கூட்டிணைந்த தொழிற்பாடுகள் மற்றும் நிதிநிலை செயலாக்கத்தின் உண்மையான நிலை குறித்து பணியாளர்கள் தகவலளிக்கப்படுகின்றனர். பணியாளர்களின் தகவல் பகிர்வு அதிகப்படுத்தலின் நோக்கத்தை நிறுவனத்தின் அகநிறுவனம் மேற்கொள்கிறது. எமது வணிகத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதுமான, நாம் தொழிற்படும் சமூகத்தில் தாக்கம் செலுத்தக்கூடியதுமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அபிவிருத்தி, சட்டமாக்கல் மற்றும் சீராய்வு காணப்படும் போது பொதுக் கொள்கை உரையாடலுக்கு இலங்கை விமான மற்றும் விமான சேவைகள் பங்களிப்பாற்றுகிறது.

நிறுவனத்தின் செயலாளர்

சபை நடவடிக்கைமுறைகள் பின்தொடரப்பட்டு, அவை தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதில் நிறுவனத்தின் செயலாளர் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கிறார். சபை அறிக்கைகள் மற்றும் பதிவுகளைப் பேணுவதற்கு மேலதிகமாக, வருடம் பூராகவும் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் சபை நடவடிக்கை முறைகள், கூட்டிணைந்த நிர்வாக விவகாரங்களுடன் தொடர்புடைய பரிந்துரைகளுக்கு மேலதிகமாக உரிய நேரத்தில் துல்லியமான தகவல்களை சபை பெற்றுக்கொள்கிறது என்பதை உறுதிப்படுத்துவதில் சபை செயலாளர் ஆதரவளிக்கிறார். எழுப்பப்பட்ட கரிசனைகளும், அவை போதியளவு விவரங்களுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என கருதப்பட்டவையும் செயலாளரினால் பதியப்பட்டுள்ளன.

பிரயோகிக்கக்கூடிய நியதிச்சட்ட, புதிய ஒழுங்குவிதிகளுடன் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தின் செயலாளர் முதன்மையாகப் பொறுப்புடையவராக இருப்பதுடன், அரசாங்க விவகாரங்களுக்கான முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குவிதிசார் அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையேயான இடைமுகப்பாகத் தொழிற்படுகிறது.

எம்முடன் சிறந்த அனுபங்களைப் பெற்றுக்கொள்ளல்



நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. AAV/A/AASL/01/22/26 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 26 May 2023

தவிசாளர்
வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான 31 டிசெம்பர் 2022 ஆம் ஆண்டுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நீதிக் கூற்றுக்குள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) ("கம்பனி") நிறுவனத்தின் 2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சங்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களானவை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கமைய பாராளுமன்றிற்கான என்னுடைய அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படையினில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க கம்பனியின் 2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் ஒத்திசையும் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை

(அ) இலங்கை கணக்காய்வு நியமங்கள் இல.01 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு விடயமும் தனித்தனியாக நிதிக்கூற்றில் காட்டப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றது. எனினும், மேலதிக பணிநேர மற்றும் ஊக்கத்தொகை கொடுப்பனவுகளான முறையே 536 மில்லியன் மற்றும் 358 மில்லியன் ரூபாய்கள் தனித்தனியே காட்டப்படவில்லை.

(ஆ) இலங்கை கணக்காய்வு நியமங்கள் இல.16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், வதிவிட பெறுமதி மற்றும் சொத்தொன்றின் பயன்மிக்க ஆயுட்காலம் என்பன வருடாந்தம் மதிப்பாயப்படவேண்டும் என்பதுடன், முந்தை மதிப்பீட்டுக்களிலிருந்தான எதிர்பார்க்கைகள் வேறுபடுமாயின், அம்மாற்றமானது இலங்கை கணக்காய்வு நியமங்கள் இல.8 இற்கு இணங்க கணக்கிற்கொள்ளப்படவேண்டும். எனினும், 2022 டிசெம்பர் 31 இன் வரையிலான 7 வகைகளுடன் தொடர்புடைய 28,580 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியை கொண்ட சொத்துக்கள் நியமங்களினால் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் மதிப்பிடப்பட்டு கணக்கிற்கொள்ளப்படவில்லை.

(இ) மதிப்பாய்வின் கீழான வருடத்தில், மொத்த பெறுமதி 5,011 மில்லியன் ரூபாய்களுடனான நான்கு (4) செயற்றிட்டங்கள் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும், செயற்றிட்டத்தின் செலவீனமானது இலங்கை கணக்காய்வு நியமங்கள் இல.16 இன் 55 ஆம் பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் மூலதனமாக்கப்பட்ட மற்றும் தேய்மானங்களிற்கு பதிலாக, நிதி நிலைமை கூற்றினில் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதாக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை கணக்காய்வு நியமங்கள் இல.07 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம், பொறுப்புக்களிற்கான துணைமைகளாக உறுதியளிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களது முன்னெடுக்கப்படும் அளவானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவேண்டும். எனினும், 5000 மில்லியன் ரூபா வரையிலான கடன்பத்திர வசதிக்கான பிணையாக வைக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாய்கள் நிலையான வைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக் கூற்றுக்களின் இல. 2.1.4 ஆம் குறிப்பின் பிரகாரம், முதலீட்டு சொத்துக்கள் நியாயமான பெறுமதியின் பேரில் மதிப்பிடப்பட்டுள்ளன. எனினும், கம்பனியினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட நிர்வாக கட்டிடத்தினுள் அமைந்துள்ள 299 அமைவிடங்கள் முதலீட்டு சொத்துக்களாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஊ) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரிற்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 21 டிசெம்பர் 2017 ஆந் திகதிய 2050.'.38 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வானூர்தி தளங்கள் (கட்டுநாயக்க விமானநிலையம் மற்றும் இரத்மலானை விமானநிலையம்) மற்றும் மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏழு வானியல் வசதிதளங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிலம் (அங்கு காணப்படும் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிலம்) என்பன அமைச்சரினால் இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டு பயனுடைத்தாக்கப்பட்டது. கம்பனியானது 1983 இல் தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 31 டிசெம்பர் 2022 வரையில் ஒரு உரித்துடைய சேவை வழங்குநராக நிலங்களின் உரிமையை கைமாற்றாது விமானநிலையங்களது உட்கட்டுமானங்களை விருத்திசெய்வதற்காக மொத்தமாக 76,328 மில்லியன் ரூபாய்களை (தொடரும் பெறுமதி) முதலிட்டுள்ளது.

(எ) பொதி அ- பயணிகள் வழிப்பாதை கட்டிடம் மற்றும் அதனோடிணைந்த பணிகளது கடன் உடன்படிக்கையின் சரத்து I இன் பிரிவு 3 இற்கிணங்க, கடன்பெறுநரானவர், கடன்தொகையின் பயன்படுத்தப்படாது எஞ்சிய மொத்த தொகைக்கு வருடாந்தம் பூச்சியம் தசம் ஒன்று (0.1) எனும் வீதத்தில் அரையாண்டுக்கொருமுறை JICA இற்கு கடப்பாட்டு கட்டணத்தை வழங்கவேண்டும். செயற்றிட்டம் பணியிடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் செயற்றிட்டம் தொடர்புடைய செலவுகளானவை (உம்: ஊதியம், பாதுகாப்பு செலவுகள், தூய்மைப்படுத்தல் சேவைகள், இன்னபிற) 68,980,863 ரூபாய்களாகவிருந்தது. கடப்பாட்டு கட்டணம் மற்றும் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய செலவுகள் சிக்கனமற்றதாக காணப்பட்டாலும், அவை விரிவான வருமானக் கூற்றிலேயே பொறுப்பாக்கப்படவேண்டும். எனினும், இது செயலில் இருக்கும் பணியாகவே கணக்கிற் காட்டப்பட்டுள்ளது. அதன் விளைவாக, மதிப்பீட்டின் கீழான வருடத்தின் இறுதியில், எஞ்சிய வருமானங்கள் மற்றும் செயலில் இருக்கும் பணிகள் அதே தொகையினால் மிகையாக குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஏ) ஆலோசனை சேவை உடன்படிக்கையின் பொதுவான நியதிகள் 6.2 (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம், தனிநபர்களிற்கான கொடுப்பனவுகளானவை சேவையை ஆற்றுவதில் அத்தகைய தனிநபரினால் உண்மையில் காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டும் என்பதுடன் சேவையை ஆற்றுவதில் ஆலோசகரினால் ஏற்படுத்தப்பட்ட உண்மையானதும் நியாயமானதுமான மீளச்செலுத்தப்படும் செலவுகள் ஆலோசகரது சேவைநாடுநரினாலேயே தீர்மானிக்கப்படவேண்டும். எனினும், சேவைநாடுநரினால் ஆலோசகர்களிற்கு வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பகுதியின் பிரகாரமான 120,891,450 யென்களும் உள்ளூர் பகுதியின் பிரகாரமான 147,259,653 ரூபாய்களும் கணக்கிற்கொள்ளப்படவில்லை. அதன் விளைவாக, செயலில் இருக்கும் பணிகள் மற்றும் ஒப்பந்ததாரர் கொடுப்பனவு கணக்குகள் அதேதொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஒ) பொதுத் திறைச்சேரியினால் விடுக்கப்பட்ட 12 ஏப்ரல் 2022 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், 31 டிசெம்பர் 2022 வரையிலாக, 4,278 மில்லியன் ரூபாய்கள் அளவுடைய விமானநிலைய அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று வெளிநாட்டு கடன்களது மீள்செலுத்துகையை நிறுத்தியுள்ளது. கடன் ஒப்பந்தங்களின் பிரகாரம், குறித்த தினத்தில் கடன்பெறுநர் ஏதேனும் தொகையை செலுத்த தவறினால், செலுத்த வேண்டிய திகதியிலிருந்து உண்மையில் செலுத்தப்பட்ட திகதி வரையில் செலுத்தப்படவேண்டிய மேலதிக தொகைக்காக கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின் பிரகாரம் வட்டி ஏற்படும். எனினும், மேலுள்ள மூன்று கடன்களதும் தவணை தவறிய வட்டி குறித்து எந்தவித ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அல்லது மதிப்பீட்டாண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்களுக்கான பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடய அழுத்தங்கள்

(அ) மூலதனச் செலவீனங்கள் (வாக்கு நிதியம்) மற்றும் தக்கவைத்த வருமான நிதியத்திற்கான அரச மானியங்களுடனான கம்பனியின் நிதிக் கூற்றுக்களை ஒன்றிணைப்பதற்கான அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.1 குறித்த கவனத்தை கோருகின்றேன். 17 ஆகஸ்ட் 2005 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், திறைச்சேரி செயலாளர் அவரிற்கான 09 பெப்ரவரி 2006 ஆந் திகதிய இல. PE/GOCO/1/1 கடிதத்தின் மூலம் அரசாங்கத்திற்கு சொந்தமான விமானநிலையத்தின் நிலம் மற்றும் கட்டிடங்களையும் கம்பனி கொண்டிருக்கும் ஏனைய அசையும் அசையா சொத்துக்களையும் மதிப்பிடுவும் அப்போதை இலங்கை அரசாங்கத்தினால் சேவைவழங்கப்பட்ட விமானநிலைய அபிவிருத்தியுடன் தொடர்புடைய பொறுப்புக்களை பொறுப்பேற்கவும் நிகர சொத்துக்களின் பெறுமதிக்கே பங்குகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கவும் பணிக்கப்பட்டார்.

மேலும், மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த கம்பனியின் கோரிக்கையின் பேரில், இது சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் முறையே சொந்தமாக கொள்ளப்பட்டிருக்கும் விமானநிலைய(ங்கள்) நிலம் மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பரிமாற்றும் எனும் இடைத்தொடர்பின் நிமித்தம், புதிய அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுமாறு, சட்டமா அதிபர் அவரிற்கான 08 பெப்ரவரி 2010 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தினார். எனினும், இன்று வரையில் புதிய அமைச்சரவை தீர்மானத்தை பெற கம்பனியினால் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானசேவைகள் சட்டத்தின் கீழ் 21 டிசெம்பர் 2017 ஆம் திகதிய போக்குவரத்து மற்றும் சிவில் விமானச்சேவை அமைச்சரின் வர்த்தமானியினால், கட்டுநாயக்க விமானநிலையம், இரத்மலானை விமானநிலையம், இரத்மலானை சிவில் விமானசேவைகள் பயிற்சி நிலையத்தின் நிலம், கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள், அட்டிய வானியல் தொலைத்தொடர்பு பரிமாற்ற நிலையம், கம்பஹா மற்றும் பமுனுகம ரேடியோ வழிகாட்டல் உதவிகள் மையம், பீதுறுதாலகாலயின் ரேடார் நிலையம், நுவரெலியா மற்றும் அனுராதபுரத்தின் விடுமுறைகால பங்களாக்களின் 0.125 ஹெக்டேயர் நிலம் என்பவற்றை இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைக்கு பரிமாற்றி பயனுறுத்தியாக்கினார். அதன்காரணமாக, கம்பனியினால் பயன்படுத்தப்படும் நிலம் மற்றும் கட்டிடங்களின் உரித்துடைமை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகின்றது. எனினும், மதிப்பாய்விற்கான வருடத்தில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மாத்திரம் மீளமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் வரையில் மதிப்பீட்டு பணிகளை பூர்த்திசெய்யவும் பங்குகளை இலங்கை அரசாங்கத்திற்கு விநியோகிக்கவும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) "இலங்கையின் வெளிநாட்டு கொடுகடன் தொடர்பிலான இடைக்கால கொள்கை" எனும் தலைப்பின் கீழ் பொதுத் திறைச்சேரியின் 12 ஏப்ரல் 2022 ஆந் திகதிய விசேட கடித்தத்தின் பிரகாரம் கட்டம் 2 இன் கட்டுமானப் பணிகளை முடிவுறுத்தியதுடன் மதிப்பாய்வின் கீழான ஆண்டின் எதிர்பாராசெலவீனங்களினை விளக்கும் குறிப்பு இல.29 இன்பால் கவனத்தை கோருகிறேன்.

மேற்கூறிய தீர்மானத்தின் பிரகாரம் கடன் மீளச்செலுத்துகை இயலுமை குறித்து நிதி அமைச்சிடமிருந்தான ஒப்புதல் சமர்ப்பணமின்மையின் காரணமாக, ஒப்பந்ததாரர் தற்காலிமாக செயற்றிட்டத்தை இடைநிறுத்தியுள்ளார். அதன்காரணமாக, ஒப்பந்ததாரரிற்கான காலந்தாழ்த்தியமைக்கான கட்டணம், மேலதிக களஞ்சியசாலைகளுடன் பதிவுசெய்யப்பட்ட நிலைய மற்றும் உபகரண செலவுகள், பணி அக்கறைக்கான செலவீனம் (பாதுகாப்பு, செயற்பாடு, சூழல்), தளங்களின் பூர்த்தியடையாத பணிகளின் பராமரிப்பு செலவு, பொருட்களின் சிதைவு காரணமான இழப்பு, மீளிடமாற்றம் மற்றும் தற்காலிக வேலைகள், ஒப்பந்ததாரர் கருவிகளளது நிலையான வாடகைகளின் செலவீனம், ஒப்பந்த பணியாளர் மற்றும் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களது இழப்பீட்டுச் செலவு, பணியிடைநிறுத்தம் மற்றும் முடிவுறுத்தலின் காரணமாக எழும் ஏதேனும் ஒப்பந்ததாரரது கோரல்கள், பிரதான ஒப்பந்ததாரரால் மீளக்கோரப்படக்கூடிய TC இன் உபஒப்பந்தக்காரர்களினாலான சாத்தியமான சட்ட கட்டணங்கள், தொழில்வழங்குநரின் வருமான இழப்பு, கடன் பயன்பாடு பிரச்சினைகள் இன்னபிற என்பவை உள்ளிட்ட நிலுவையுள்ள கொடுப்பனவுகள் போன்ற கம்பனிக்கு பாரிய நிதி தாக்கங்கள் காணப்படும்.

பணியிடை நிறுத்தங்களினால் எழுந்த ஒப்பந்ததாரர்களது மீளக்கோரல்களின் மொத்த தொகையாக IPA 16 – 20 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாவது இலங்கை ரூபாவில் 15,729,888,690 (ஜப்பானிய யென்னில் 6,352,071,405) ஆக மாற்றப்பட்டுள்ளதுடன் அது ஆலோசகர்களது மீளாய்வின் கீழ் காணப்படுவதுடன் 9 டிசெம்பர் 2022 முதல் செல்லுபடியாகுமாறு அமுலில் காணப்படும் பணிமுடிவுறுத்தங்களினால் இன்னமும் உறுதிப்படுத்தப்படவேண்டியுள்ளதுமாகும். எனினும், ஒப்பந்ததாரர் இடைநிறுத்த கோரல்கள் உள்ளிட்ட பணிமுடிவுறுத்தல் கோரல்களை (இறுதி கோரல்) சமர்ப்பிக்கவேண்டியுள்ளது.

இவ்வியடங்கள் குறித்த என்னுடை அபிப்பிராயங்கள் மாற்றமின்றி காணப்படுகின்றது.

1.4 கம்பனியின் 2022 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

கம்பனியின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டு ஆனால் நிதிக் கூற்றுகள் மற்றும் என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாது, அதன்காரணமாக, இக்கணக்காய்வு அறிக்கையின் பின்னர் கிடைக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படும் தகவல்களை ஏனைய தகவல்கள் உள்ளடக்குகின்றன. ஏனைய தகவல்களிற்கு முகாமைத்துவமே பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகள் குறித்த என்னுடைய அபிப்பிராயங்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்கவில்லை என்பதுடன் அதன்காரணமாக எந்தவொரு வடிவிலுமான உறுதிப்படுத்தல் சாராம்சங்களை நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களுடனான என்னுடைய கணக்காய்வு தொடர்பில், மேலே அடையாளப்படுத்தப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தலும், அவ்வாறு வாசிக்கும் பொழுது, ஏனைய தகவல்களானவை நிதிக் கூற்றுக்கள் அல்லது இக்கணக்காய்வில் பெற்றுக்கொண்ட என்னுடைய அறிவுடன் பொருண்மையுடன் ஒத்திசைகிறதா அல்லது பொருண்மையான பிறழ் கூற்றுக்களா என்பதனை கருத்திற்கொள்வதாகும்.

கம்பனியின் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் பொழுது அதில் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் முடிவிற்கு வந்தால், அதனை திருத்துவதற்கு பொறுப்பான அதிகாரிகரள தொடர்புகொள்ள கோரப்பட்டுள்ளேன். அதன் பின்னரும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் காணப்படுமாயின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் சரத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவை, உரிய காலத்தில் சமர்ப்பித்தாகவேண்டிய, பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடடுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.6 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வதற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்க அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த

நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளார்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது திரட்சியாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன் நான்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்ததுடன், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளையும் பெற்றுக்கொள்கிறேன். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டு விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அன்றி, சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவே கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொளள்ப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்கிறேன்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது குறித்தும் சாராம்சப்படுத்துகிறேன். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிற்கு மத்தியிலும், என்னுடைய கணக்காய்வின் போது அடையாளப்படுத்தப்பட்டதான உள்ளக கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் உள்ளடங்கலாக, முக்கிய கணக்காய்வு கண்டடைவுகள் குறித்து ஆளுகைக்கு தொடர்புடைய நபர்களுடன் தொடர்புகொள்கிறேன்.

2. ஏஜனுயு சுடுடுரீதீயர்னு முற்றும் பீருமுர்ணுரீதீயர்னு தேஜவுப்புர்டுகுளுஞ் முீதுர்னு ஆறீர்க்ஜகு

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்கான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராய பகுதியிற்கான அடிப்படையில் விவரிக்கப்பட்ட விடயங்களது தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளதோடு, என்னுடைய பரீசிலனையில் தோற்றம்பெற்றவாறு, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் வேண்டப்பட்டவாறு, முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (மை) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட தற்போதைய ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (ளை) இன் தேவைப்பாடுகளுக்கிணங்க கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கப்பட்ட தற்போதைய ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.2 பொருண்மைகளிற்கென வரையறுக்கப்பட்டிருந்த ஆற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில், எதுவும் என்னுடைய கவனத்திற்கு கொணரப்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஈ) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம், வியாபாரத்தின் எளிய காரணிகளிற்கு அப்பால், கம்பனியால் எதேனும் உள்நுழைந்த ஒப்பந்தத்துடன் நேரடி அல்லது மறைமுக தொடர்புகளை கம்பனியின் ஆளுகைச் சபையின் ஏதேனும் உறுப்பினர் கொண்டிருந்தாரா என்பதனை குறிப்பிடுவதற்கும்.

2.2.2 பின்வருவன தவிர்த்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஊ) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம், கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதை குறிப்பிடுவதற்கும்;

நிதிநிலை அறிக்கைகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

சட்டங்கள், விதிகளிற்கான தொடர்பு	விபரங்கள்
(அ) 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு	2023 மே 15 வரையிலும் விமான நிலையங்களை நிறுவுதல் அல்லது விரிவாக்கம் செய்தல் தொடர்பான பிரதான திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவும் இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபையின் அனுமதியை பெற்றிருக்கவும் இல்லை.
(ஆ) கூட்டாட்சிக்கான பொது முயற்சி வழிகாட்டிகள் - 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
(i) 2.2.2 ஆம் பிரிவு (ஆ) xii மற்றும் 4.3 (அ) (ஆ)	பணிப்பாளர் சபையின் உபகுழுக்களது முறைமையான செயற்பாட்டினையும் கம்பனியின் இடர் கோவையை அடையாளங்கண்டு மதிப்பிடுவதில் இடர் குழுவின் வகிபாகத்தை உறுதிப்படுத்தவும் இடர் முகாமைத்துவ சட்டகப்பணியை விருத்திசெய்து அமுல்படுத்தவும் இடர்களை இழிவளவாக்கவும் இடர் தரப்படுத்தல் பொறிமுறை உள்ளிட்ட முறைமையை கட்டுப்படுத்தவும் மூலோபாயாங்களை பரிந்துரைக்கவும் தேவைப்படுத்தப்படுகின்றது. எனினும், மேலுள்ள தேவைப்பாட்டின் நிவர்த்தியை மதிப்பிடுவதற்கான தகவல் அல்லது சான்றானது கணக்காய்விற்கு அனுப்பிவைக்கப்படவில்லை
(ii) 2.2.2 ஆம் பிரிவு (ஆ) xiv 2.3	செயற்பாட்டு மேன்மையை மேற்பார்வையிடுவதில், கம்பனியின் நோக்கங்களது அடைவுகளை கவனத்திற்கொண்டு கம்பனிக்குள் பின்மதிப்பாய்வு பொறிமுறையொன்று நிறுவனமயப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், பணிப்பாளர் சபையானது காலத்திற்கு காலம் மூலோபாய திட்டத்தை அமுல்படுத்துவதின் வினைத்திறனை மதிப்பிட்டு உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் தேவையேற்படின் திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். எனினும், முக்கிய திட்டங்கள் அல்லது ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய சிக்கலான பிரச்சினைகளுடனான செயல் திட்டத்தின் செயலாற்றுகையானது பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.
(இ) அரசுடைமை பொது முயற்சிகளின் செயற்பாட்டு வழிகாட்டி - 01.∴2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
(i) பிரிவு 1	தற்போது இருக்கின்ற கட்டமைப்புக்கும் அரசுடைமை முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவற்றிற்கும் இடையிலான இடைவெளியை பகுப்பாய்வதற்கு ஏனைய செயற்பாட்டு தலைவர்களுடன் கூட்டிணைந்து ஒரு இடைவெளி பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என்பதுடன் செயற்பாட்டு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டவாறான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு பொருத்தமானதாக அவர்களது தற்போதிருக்கம் செயற்பாட்டு கட்டமைப்புக்களை வலுப்படுத்த சபைகளுடனான ஆலோசனையுடன் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாடானது கம்பனியினால் இதுவரையில் பூர்த்திசெய்யப்படவில்லை.
(ii) பிரிவு 2.1	தங்களது நோக்கங்களை செயற்படுத்திட கம்பனியை வளப்படுத்தும் இடத்தில் ஒலி முறைமை மற்றும் செயற்பாடுகளானவை காணப்படுகின்றன என்பதனை கம்பனியானது கட்டாயமாக உறுதிப்படுத்தவேண்டும். இம்முறைமைகள் மற்றும் செயன்முறைகளானவை அதனது நோக்கங்களை அடைந்துக்கொள்வதில் கம்பனியை வளப்படுத்தும் இயலுமையை கொண்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்த காலத்திற்கு காலம் மதிப்பாயப்படவேண்டும். மேலும், கம்பனிக்கு பொருத்தமான பாரிய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகப்பணியினுள் ஒவ்வொரு அலுவலரும் தங்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து அறிந்திருப்பதனை சபையானது உறுதிப்படுத்த வேண்டும். எனினும், ஒவ்வொரு பதிவிக்குமான கடமைப்பட்டியல் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒழுங்குவிதி கையேடுகள் 2019ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் அக்குறித்த கையேடுகள் இற்றைப்படுத்தப்படவில்லை.∴ அக்குறித்த கையேடுகள் சபையின் அனுமதியை பெறாமல் இற்றைப்படுத்தப்படவில்லை.
(iii) பிரிவு 3.2 (i)	பணியிடவெற்றிடம், ஆட்சேர்ப்பு திட்டம், சபையின் அனுமதி மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடனான கொடுப்பனவு கட்டமைப்பு மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளடங்கலான பணியிடவெற்றிடத்துடன் தொடர்புடைய தங்களது கோரிக்கைகளை பொருத்தமானவாறு பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் அல்லது தேசிய பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆகியோரிற்கான பிரதியுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியிற்காக சமர்ப்பிக்கவேண்டும். எனினும், கம்பனியின் ஆட்சேர்ப்பு திட்டத்திற்காக சபையின் அனுமதியைப் பெற்றமையை தவிர்த்து கம்பனியினால் மேலுள்ள தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படவில்லை.
(iv) பிரிவு 3.4	கம்பனியானது ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்விற்கான திட்டத்தை வகுக்கும்பொழுது பணி விவரணம், கல்விசார் தகுதிகள் அனுபவம் முதலியனவற்றுடன் ஒத்திசைவதை உறுதிப்படுத்தவேண்டும். எனினும், கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற ஆட்சேர்ப்பு திட்டத்தில் பணி விவரணங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு முறைமைகள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

சட்டங்கள், விதிகளிற்கான தொடர்பு	விபரங்கள்
(v) பிரிவு 4.3 (i), (iii)	கம்பனியானது தன்னுடைய தேவை மதிப்பீட்டினை தீர்மானிப்பதற்கும் தேவைப்படும் பண்டங்களுக்கான சரியான அளவு, தரம் மற்றும் காலத்தை தீர்மானிப்பதற்குமாக ஒரு முறையான பொறிமுறையை கைக்கொள்வது ஒரு தேவைப்பாடாகும். மேலும், உள்ளீடுகளிற்கான முகாமைத்துவத்திற்காக முறையான இருப்பு முகாமைத்துவமும் காணப்படுவதனை கம்பனி உறுதிப்படுத்த வேண்டும். எனினும், 31 டிசெம்பர் 2022 வரையளவில் 955 இருப்பு பொருட்களில் பூச்சிய இருப்பே காணப்பட்டது.
(vi) பிரிவு 6.6	வரையப்பட்ட ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் என்பவை நிதியாண்டின் முடிவின் பின்னரான 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் கையளிக்கப்படவேண்டும். எனினும், கம்பனியின் வரையப்பட்ட ஆண்டறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.
(vii) பிரிவு 6.11	கம்பனியானது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிப்படுத்தும் அதேவேளை அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கம்பனியை வளப்படுத்துவதான உள்ளுர் மற்றும் வெளியூர் எனும் இரு பங்குதாரர்களுடனும் தெளிவான தொடர்பாடல் கொள்கையை கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் கம்பனியின் வலைத்தளத்தில் பெறுகைத் திட்டங்கள் மற்றும் செயற்றிட்ட அமுலாக்க திட்டம் என்பவற்றை பதிவேற்ற வேண்டும் என்பதும் கட்டாயமானதாகும். எனினும், செயற்றிட்ட அமுலாக்க திட்டமானது இற்றைவரையில் கம்பனியின் வலைத்தளத்தில் பதிவேற்றப்படவில்லை.
(viii) பிரிவு 7.1 மற்றும் 7.4	அனைத்து ஆட்சேர்ப்புத் திட்டங்களிற்கும் செயற்பாட்டு மதிப்பீடானது கட்டாயமானது என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களது அடைவுகளிற்கு இணைப்புடையதாக செயற்பாட்டு மதிப்பீட்டின் தாபனத்தை வளப்படுத்துவதான எளிய மற்றும் தெளிவான பொறிமுறையை தாபித்திருக்கவேண்டும் மற்றும் மாதாந்த பணிப்பாளர் சபை கூட்டத்தில் பரிசீலிக்கப்படுவதற்காக செயற்றிட்டங்கள்.·. ஒப்பந்தங்களது பௌதீக மற்றும் நிதியியல் செயலாற்றுகைகளது மேலுள்ள தேவைப்பாடுகளது இணக்கங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டும். எனினும், செயல் திட்டத்தின் செயலாற்றுகை அறிக்கையானது மாதாந்த பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.
(ச) பொது முயற்சிகள் வழிகாட்டிகள் மீதான 2003 ஜூன் 02 ஆம் திகதிய பிஈடி.·.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1, 9.3.1(i) மற்றும் 9.7 ஆம் பிரிவுகள்	பணியிடவெற்றிடங்கள், ஆட்சேர்ப்பு திட்டம், சபையின் அனுமதி மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடனான கொடுப்பனவு கட்டமைப்பு மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளடங்கலான பணியிடவெற்றிடத்துடன் தொடர்புடைய தங்களது கோரிக்கைகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியிற்காக சமர்ப்பிக்கவேண்டும். எனினும், முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும், கம்பனியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பளார் நாயகத்திடமிருந்து அனுமதிப்பெறாமல் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மாத்திரம் மீளாய்வின் கீழான ஆண்டுக்காக திரட்சியாக 2,216 மில்லியன் ரூபாய்களாகும் பல்வேறு வகையிலான 16 மேலதிக கொடுப்பனவுகளை பணியாட்களிற்கு வழங்கியுள்ளது.
(உ) பொது முயற்சிகள் வழிகாட்டிகள் மீதான 25 மே 2015 ஆம் திகதிய பிஈடி 01.·.2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 ஆம் பிரிவுகள் மற்றும் 14 ஜனவரி 2020 ஆம் திகதிய 01/2015 (ii) சுற்றறிக்கை	கம்பனியின் HM 1-1 வகுப்பிற்கு சமமான அல்லது அதற்கு மேலான பதவி அனுமதியை கொண்டுள்ள ஏனைய எந்தவொரு அதிகாரியும் 115 லீற்றர்களிற்கு உரித்துடையவர்களாவர். எனினும், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அனுமதியளிக்கப்பட்ட எல்லைக்கு அதிகமாக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவுகள் மீளாய்வின் கீழான ஆண்டில் 337 அலுவலர்களுக்கு 88.9 மில்லியன் பெறுமதியான 240,280 லீற்றர்கள் வழங்கப்பட்டுள்ளமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டவாறு S_{10} சம்பள அளவுத்திட்டத்திலுள்ள 128 அதிகாரிகளிற்கு 130 லீற்றர்களுக்கும் S_{11} (அதற்கு மேலான சம்பள அளவுத்திட்டங்கள் கம்பனியினால் வழங்கப்பட்டிருக்கும்) அளவுத்திட்டத்திலுள்ள 209 அதிகாரிகளுக்கு 200 லீற்றர்களுக்கும் கம்பனியினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
(ஊ) 27 ஏப்ரல் 2021 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானம் (இல. BP-BM-03-27/04/2021)	கம்பனியின் பிரிவுகளது செயலாற்றுகையை கண்காணிப்பதற்காக உட்கட்டுமான கொத்தணி, நிதி மூலோபாய கொத்தணி, செயற்பாட்டு மூலோபாயம் மற்றும் சந்தைப்படுத்தல் கொத்தணி, வியாபார அபிவிருத்தி கொத்தணி மற்றும் மனிதவள மூலோபாய கொத்தணி எனும் ஐந்து (5) கொத்தணிகள் நியமிக்கப்பட்டுள்ளன. எனினும், மீளாய்வின் கீழான ஆண்டில் அவ்வைந்து கொத்தணிகளும் தங்களது கடமைகளை ஆற்றியிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (எ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியானது அதனது தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயற்படவில்லை என்பதனை குறிப்பிடுவதற்கும்

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் கால வரையறைகளினுள்ளேயும் கம்பனியின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதும் ஆகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.5 ஏனைய விடயங்கள்

(அ) 31 டிசெம்பர் 2022 வரையாக கம்பனியின் 23 பிரிவுகளிற்கு சொந்தமான 7527 பொருட்கள் தொடர்பில் வருடாந்த மதிப்பீட்டு சபை குழு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறான 3,783.8 மில்லியன் தொகையாகும் அசையும் சொத்துக்களானவை, பௌதீக ரீதியில் அடையாளம் காண்பதிலான இயலாமைகளின் காரணமாக பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை. அதன்காரணமாக, அச்சொத்துக்களது நிலைப்பேற்றினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தமுடியவில்லை.

(ஆ) மீளளிக்கப்படாமல் அல்லது முறையேயான கடன் பெறுநர்களிற்கு விலக்களிக்கப்படாமல் கடன் பெறுநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 193 மில்லியன் ரூபா பணம் மதிப்பாய்வின் கீழான வருடத்தின் நிதிக் கூற்றினில் முற்பணமாக காட்டப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்விற்காக படுகடன் நிலுவைகளின் தனியானவொரு வயதுப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை

(இ) இருப்பினும், அனைத்து பிரிவுகள் மற்றும் பகுதிகளது தலைவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட விநியோகத்தர் முற்பணங்கள் அம்முறையேயான வருட நிறைவிற்குள் தீர்க்கப்படவேண்டும். எனினும் கம்பனியின் பல்வேறு பிரிவுகளினால் வருடத்தின் போதும் அதனைத் தொடர்ந்துமாக கொள்வனவிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட திரட்சியாக 100 மில்லியன் ரூபாய்கள் முற்பணமானது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம், மதிப்பீட்டாண்டிற்கான வியாபாரத்திலிருந்தான வருமானத்தை கணக்கிடுவதில், வருடத்தில், வருமானத்தை உற்பத்திப்பதில் ஏற்பட்ட செலவுகள் கழிக்கப்படும். மூலதன இயல்பின் செலவொன்றிற்காக இப்பிரிவின் கீழ் கழிவுகள் அனுமதிக்கப்படமாட்டாது. எனினும், வருமானத்திலிருந்து மதிப்பிடத்தக்க சொத்துக்களை கணக்கிடும் போது, மதிப்பாய்வின் கீழான வருடத்தில் கடன் மீள்செலுத்துகைக்காக கம்பனியால் பொதுத் திறைச்சேரிக்கு செலுத்தப்படவேண்டிய 1255 மில்லியன் ரூபாய் பணமானது IRD இடமிருந்தான முறையான அனுமதியின்றி கழிக்கப்பட்டுள்ளதுடன் இச்சரிப்படுத்தல்கள் 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ளன. அதன் விளைவாக, மதிப்பாய்விற்கான 2021/22 ஆம் வருடத்திற்கான வருமான வரியானது 376.5 மில்லியன் ரூபாய்களாக குறைத்துக்காட்டப்பட்டுள்ளன.

(உ) 31 டிசெம்பர் 2022 வரையாக, கம்பனியின் நிதி நிலைமை கூற்றின் நிறுத்திவைக்கப்பட்ட வரிகள் மற்றும் உத்தேச வரிகளின் பொருட்டு, 1999/2020 மற்றும் 2013/2014 ஆம் மதிப்பாய்வின் கீழான வருடத்தின் பெறத்தக்க வருமான வரியாக 848 மில்லியன் ரூபாய்கள் காட்டப்பட்டுள்ளது. சமாந்தரமாக, ஜனவரி 2023 ஆம் திகதியிலான அதனது கூற்றினில் விரிவான கணக்காய்வின் பேரில் 321 மில்லியன் ரூபாய்கள் மீளவழங்கப்படலாம் என என்பதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. அதன்காரணமாக, 527 மில்லியன் ரூபாய் அளவிலான பெறக்கூடிய வருமான வரியானது, நிச்சயமற்றதாக காணப்படுகின்றது.

(ஊ) 29 மார்ச் 2011 அன்று வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமானநிலையங்கள் மற்றும் விமானச்சேவைகள் நிறுவனத்திற்கும் (AASL) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெடிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெடிற்கு ஏலவே ஒதுக்கப்பட்ட வெளியை AASL தொடர்ந்தும் வழங்கும் என்பதுடன் இரு தரப்பினரும் குத்தகை ஒப்பந்தத்திலும் ஈடுபடவேண்டும். எனினும், குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமால், 2011 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெடிற்கு 3 வெளிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. மேலும் 7 செயற்பாடுகள் மற்றும் வெளிகள் குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படாமல் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெடிற்கு AASL இனால் வழங்கற் பத்திரத்தின் பேரில் வழங்கப்பட்டுள்ளது.

(எ) மதிப்பாய்வின் கீழான வருடத்தின் தரையிறக்கம் மற்றும் தரிப்பிடம், மற்றும் ஏரோபிரிட்ஜ் கட்டணங்கள் மற்றும் வாடகை மற்றும் ஏனைய கட்டணங்களின் தவணைதவறிய வட்டியின் பேரிலான ஸ்ரீ லங்கள் எயார்லைன்ஸின் எஞ்சியிருக்கும் கடன் பெறுநர் நிலுவையானது 1,541.8 மில்லியன் ரூபாய்களாக காணப்பட்டது. எனினும், 365 நாட்களாக தீர்க்கப்படாமல் காணப்படும் எஞ்சியுள்ள நிலுவையை பெற எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இவ்வறிக்கையின் திகதி வரையில் ஸ்ரீ லங்கள் எயார்லைன்ஸ் லிமிட்டெட்டினால் கடன் பெறுநர் நிலுவையானது உறுதிப்படுத்தப்படவுமில்லை.

(ஏ) 2021 ஆம் ஆண்டில் MRIA இன் செயற்பாட்டு செலவீனம் ரூபா 2,033 மில்லியனாக பதிவானதுடன் அது செயற்பாட்டு வருமானத்தை விட 26 மடங்கு அதிகமாக காணப்பட்டது. வெளிநாட்டு நாணயமாற்று இழப்பினுடைய தாக்கத்தின் பிரதான காரணியால், மீளாய்வாண்டிற்கான வரிக்குப் பின்னரான தேறிய நட்டம் ரூபா 22,214 மில்லியனாக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான வரிக்குப் பின்னரான திரண்ட தேறிய நட்டம் ரூபா 42,818 மில்லியனாக இருந்தது. மத்தள விமான நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகளின் இயலளவு சுமார் ஒரு மில்லியனாக இருந்த போதிலும் கடந்த ஆறு வருடங்களில் மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 103,324 மாத்திரமேயானதுடன் கடந்த ஐந்து வருடங்களின் மொத்த விமான நகர்வுகளின் எண்ணிக்கை 2,612 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் இந்த விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ஐ.அ.டொலர் 247.7 மில்லியனிற்குச் சமமான ரூபா 36,564 மில்லியன் மொத்தச் செலவீனமானது வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 190 மில்லியன் கடனுக்கான வட்டி உட்பட வருடாந்த கடன் தவணையாக AASL ஆல் ரூபா 1,842 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஒ) இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் 2017 முதல் 2022 ஆண்டு வரையிலான திரண்ட நட்டமானது 2,827.9 மில்லியன் ரூபா என்பதுடன், இதன் மீளாய்வாண்டின் நட்டம் 1,154 மில்லியன் ரூபாயினையும் உள்ளடக்குகின்றது. கம்பனியினால் வழங்கப்பட்ட கருத்துரையின் பிரகாரம், அது பயிற்சி மற்றும் உள்ளூர் விமானங்களை பிரதானமாக இயக்கி இலங்கை விமானப்படையின் செயற்பாடுகளிற்கும் வசதியளிப்பதனால் CIAR இன் செயற்பாட்டு மாதிரியானது இலங்கையின் ஏனைய விமானநிலையங்களிலிருந்து வேறுபடுகின்றது. மேலும், வான்பறத்தல் வருமானமானது AASL இன் கூட்டுறவு வருமானத்திற்குள் ஈர்க்கப்படுகின்றது. CIAR இன் நிதி இழப்புக்கள் பாரிய பகுதி கட்டுப்பாட்டு மையத்தினையும் - தொடர்புடைய செலவீனமாயினும் உண்மையில் கூட்டிணைந்த வான்பறத்தல் வருமானமானது AASL இன் கூட்டு வருமானத்திற்குள் ஈர்க்கப்படுகின்றது- உள்ளடக்குகின்றது. AASL ஆனது பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களின் கீழ் CIAR இற்குள்ளாகவே வான்பறத்தல் வருமானத்தை ஈர்த்துக்கொள்ளும் சாத்தியக்கூற்றினை அவதானித்து திருத்தத்திற்குள்ளாக்கும் செயன்முறையில் காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் 13 வானூர்தி நகர்வுகள் மாத்திரமே காணப்பட்டதுடன் 2022 ஆம் வருடத்திலான விமான நகர்வுகள் 38 ஆக காணப்பட்டதுடன் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான பயணிகள் நகர்வானது முறையே 60, 28 மற்றும் 54 ஆக காணப்பட்டது.

(ஓ) யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையமானது 17 ஒக்டோபர் 2019 அன்று திறந்து வைக்கப்பட்டது. 166 வானூர்தி நகர்வுகள் மற்றும் 5035 எண்ணிக்கையிலான பயணிகள் நகர்வுகள் தொடக்கத்தில் இருந்து பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட திரண்ட நட்டமானது 232.8 மில்லியன் ரூபாய்களாகும். மீளாய்விற்கான ஆண்டில் வருமான மற்றும் செயற்பாட்டு செலவுகளானவை முறையே 4.7 மில்லியன் மற்றும் 81.8 மில்லியன் ரூபாய்களாகும்.

(ஔ) மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையமானது 25 மார்ச் 2018 அன்று பொதுமக்கள் நடவடிக்கைக்காக மீண்டும் திறக்கப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களாக 86.62 மில்லியன் ரூபா செலவீனம் ஏற்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டிலும் கூட எந்தவொரு வருமானமும் ஈட்டப்பட்டிருக்கப்படவில்லை.

(க) கம்பனியின் ஒவ்வொரு பிரிவினதும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்பதுடன் உண்மைச் செயலாற்றுகையும் அதன் பிரகாரம் மதிப்பிடப்படவேண்டும். எனினும், மீளாய்வாண்டில் பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகளிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ச) வேலைப்பொதி "ஆ" வின் நிர்மாணப்பணிகள் - தொலைதூர கவசம் மற்றும் கார்வழிச்சாலையானது 25 ஏப்ரல் 2017 இல் துவக்கப்பெற்று 24 ஒக்டோபர் 2019 அன்று நிறைவுசெய்ய அட்டவணையிடப்பட்டது. எனினும், நிர்மாணப் பணிகள் 26 ஜனவரி 2021 அன்றே நிறைவடைந்தன. அதன்காரணமாக, செயற்றிட்டத்தின் வாயிலாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை உரிய காலத்தில் அடையமுடியாது போயிற்று.

(ஙு) வேலைப்பொதி அ - பயணிகள் நடைவழிப்பாதை கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த பணிகள்
பின்வரும் குறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

(i) மேற்குறித்த நிர்மாணப்பணிக்கான ஒப்பந்தமானது ஜப்பானிய ஒப்பந்ததாரருக்கு 04 மார்ச் 2020 அன்று வழங்கப்பட்டதுடன் 12 மார்ச் 2020 அன்று ஒப்பந்தம் கைச்சாத்தானதோடு 25 மார்ச் 2020 அன்று செயலாற்றுகை பாதுகாப்பும் அளிக்கப்பட்டது. எனினும், 12 மார்ச் 2020 அன்று ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் 09 மாத தாமதத்தின் பின்னர் 15 டிசெம்ர் 2020 அன்றே ஒப்பந்த பணிகள் ஆரம்பமாகின. மேலும், ஒப்பந்ததாரரது அமுலாக்க திட்டத்தின் பிரகாரம், 31 டிசெம்பர் 2022 வரையான திகதியளவில் ஒப்பந்த செயலாற்றுகையானது 30 சதவீதமாகவே காணப்படும். எனினும், ஒப்பந்தத்தின் உண்மை செயலாற்றுகையானது 5.38 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது.

(ii) ஒப்பந்தத்தின் நிபந்தனை 14.7(ஆ) வின் பிரகாரம், பொறியியலாளர் கூற்றுக்கள் மற்றும் ஆதரவு ஆவணங்களை பெற்றதன் பின்னரான 56 நாட்களிற்குள் ஒவ்வொரு இடைக்கால கொடுப்பனவு பத்திரத்திலும் சான்றுப்படுத்தப்பட்ட தொகையை ஒப்பந்ததாரருக்கு தொழில்வழங்குநர் வழங்க வேண்டும். எனினும், பெப்ரவரி 2022 முதல் ஜூன் 2022 வரையிலான காலப்பகுதிக்கு பெறப்பட்ட இல 5 மற்றும் 6 இன் இலங்கை ரூபா 1486,804,716 இற்கு இணையான ஜப்பானிய யென் 444,498,046 தொகையானது 28 பெப்ரவரி 2023 வரையிலும் கூட ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

முழுமையான வருமானம் பற்றிய அறிக்கை

(மொத்தத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

		31 டிசெம்பர் வருட நிறைவில்	
	குறிப்பு	2022	2021
வருமானம்	5	26,006,395,611	7,386,170,394
ஏனைய வருமானம்	6	1,640,400,773	492,782,034
		27,646,796,384	7,878,952,428
நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்	7	(14,941,498,625)	(11,654,806,923)
தொழிற்படும் இலாபம்/(இழப்பு)		12,705,297,759	(3,775,854,496)
நிதி வருமானம்		6,136,674,362	3,321,110,256
நிதிச் செலவு		(12,408,946,131)	(506,142,527)
நிகர நிதி (செலவு)/வருமானம்	8	(6,272,271,769)	2,814,967,729
இலாபம்/வரி விதிப்புக்கு முன்னரான் இழப்பு)		6,433,025,990	(960,886,767)
வரி வருமான செலவுகள்	9	(1,630,328,423)	(1,122,614,992)
வருடத்திற்கான இலாபம்/(இழப்பு)		4,802,697,567	(2,083,501,758)
ஒவ்வொரு பங்குக்குமான அடிப்படை இலாபம்/(இழப்பு)	10	24,013	(10,417)
ஏனைய முழுமையான வருமானம்			
ஓய்வூதிய பயன் கடப்பாடுகளைக் கணக்கிடுவதன் மூலம் அனுமானங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களினூடாக அடையப்பெறும் (இழப்பு)/இலாபம்	23	(366,067,192)	878,191,927
கணக்கீட்டுப் பெறுகை/(இழப்பு) மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி	13	87,856,126	(210,766,063)
மொத்த ஏனைய முழுமையான வருமானம்		(278,211,066)	667,425,865
வருடத்திற்கான முழுமையான மொத்த வருமானம்		4,524,486,501	(1,416,075,894)

90 முதல் 117 ஆம் பக்கம் வரையான குறிப்புகள் இவ் நிதிநிலை அறிக்கைகள் பற்றிய முக்கியமானதொரு பாகத்தைக் கருத்துருவாக்கம் செய்கிறது

நிதி நிலை தொடர்பான அறிக்கை

(மொத்தத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

	குறிப்பு	31 டிசெம்பர் வருட நிறைவில் 2022	2021
சொத்துகள்			
நடைமுறைச்சாரா சொத்துகள்			
ஆதனங்கள், ஆலைகள் மற்றும் சாதனங்கள்	11	39,630,716,596	41,624,923,625
தொழிற்பாட்டிலுள்ள மூலதனம்	11	36,697,665,852	30,459,475,504
தொட்டறிய முடியாத சொத்து	12	15,931,315	21,835,257
ஒத்திவைக்கப்பட்டுள்ள வரிச் சொத்துகள்	13	3,104,834,912	1,878,384,291
		79,449,148,675	73,984,618,678
நீண்ட கால முதலீடுகள்			
நீண்டகாலக் கடன்கள்		11,588,500	12,788,500
கடன்முறிகளில் முதலீடு செய்தல்	14.1	3,298,300,000	4,088,300,000
நீண்டகால வங்கி வைப்புகள்	14.2	6,962,540,843	1,266,678,125
நிறுவன உத்தியோகத்தர்களுக்கான கடன்கள்	16.1	68,338,785	61,602,205
		10,340,768,128	5,429,368,830
நடைமுறைச் சொத்துகள்			
விவரப்பட்டியல்கள்	15	2,246,363,918	808,185,284
வணிகம் மற்றும் ஏனைய பெறுகைகள்	16	8,734,298,692	3,845,984,745
வருமான வரி பெறுகைகள்	26	91,084,038	848,093,206
குறுகிய கால வங்கி வைப்புகள்	14.2	78,025,787,863	41,515,132,946
பணம் மற்றும் பணச் சமவலு	17	642,335,995	413,045,010
		89,739,870,507	47,430,441,191
மொத்த சொத்துகள்		179,529,787,309	126,844,428,699
பங்கு மற்றும் ஆதனங்கள்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
குறித்துரைக்கப்பட்டுள்ள மூலதனம்	18	20,000,200	20,000,200
ஒதுக்குகள்	19	6,848,033,247	6,846,183,247
வைத்திருக்கும் வருவாய்கள்	20	38,389,121,466	34,448,138,251
		45,257,154,912	41,314,321,698
நடைமுறைச்சார சொத்துகள்			
பெறுகைகள்	21	93,028,636,038	60,435,353,759
கடன் பத்திரங்கள்	22	4,000,000,000	4,000,000,000
ஓய்வூதியப் பயன் கடப்பாடு	23	5,877,345,342	4,837,739,167
ஒத்திவைக்கப்பட்டுள்ள வரி ஆதனங்கள்	13	9,264,909,416	7,373,210,258
ஒத்திவைக்கப்பட்டுள்ள அரசாங்கக கொடுப்பனவுகள்	24	907,164,185	956,671,369
		113,078,054,981	77,602,974,554
நடைமுறை ஆதனங்கள்			
வணிகம் மற்றும் ஏனைய செலுத்துகைகள்	25	7,950,084,768	3,637,802,214
பெறுகைகள்	21	13,244,492,649	4,289,330,231
		21,194,577,417	7,927,132,445
மொத்த ஆதனங்கள்		134,272,632,397	85,530,106,999
மொத்த பங்கு மற்றும் ஆதனங்கள்		179,529,787,309	126,844,428,699

இந்நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், அதனை சமர்ப்பிப்பதற்கும் சபைப் பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்கள் ஆவர். இந்த நிதிநிலை அறிக்கைகள் 2023 பெப்ரவரி 21ஆம் திகதி சபைப் பணிப்பாளர்களினால் அத்தாட்சிடப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கொம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக இந்நிதிநிலைக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.

தலைவர் | பணிப்பாளர் | நிதித் தலைமையகம்

90 முதல் 117 ஆம் பக்கம் வரையான குறிப்புகள் இவ் நிதிநிலை அறிக்கைகள் பற்றிய முக்கியமானதொரு பாகத்தைக் கருத்துருவாக்கம் செய்கிறது

பங்கில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் தொடர்பான அறிக்கை

(மொத்தத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

	குறிப்பு	குறிப்பிடப்பட்டுள்ள மூலதனம்	ஏனைய ஒதுக்குகள்	வைத்திருக்கப்படும் வருவாய்கள்	மொத்தம்
2021 ஜனவரி 1அன்று நிலுவை		20,000,200	1,077,266,769	35,885,634,586	36,982,901,555
முந்தைய வருடத் திருத்தங்கள்		-	-	(18,920,440)	(18,920,440)
வருடத்திற்கான இலாபம்/(இழப்பு)		-	-	(2,083,501,758)	(2,083,501,758)
ஏனைய முழுமையான வருமானம்					
தொழில் வாய்ப்புக்குப் பின்னரான கணக்கீட்டுப் பெறுகை பயன் கடப்பாடுகள்		-	-	878,191,927	878,191,927
கணக்கீட்டுப் பெறுகை மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி		-	-	(210,766,063)	(210,766,063)
ஏனைய முழுமையான வருமானம்		**-**	**-**	**667,425,864**	**667,425,864**
முழுமையான மொத்த வருமானம்		**-**	**-**	**(1,416,075,894)**	**(1,416,075,894)**
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	28	-	-	-	-
FA மீள்மதிப்பீட்டு ஒதுக்கு		-	5,766,416,478	-	5,766,416,478
ஒதுக்கீட்டுக் கணக்குக்கான பரிமாற்றம்		-	2,500,000	(2,500,000)	-
2021 டிசெம்பர் 31அன்று நிலுவை		**20,000,200**	**6,846,183,247**	**34,448,138,251**	**41,314,321,698**
2022 ஜனவரி 1அன்று நிலுவை		20,000,200	6,846,183,247	34,448,138,251	41,314,321,699
முந்தைய வருடத் திருத்தங்கள்		-	-	(81,653,286)	(81,653,286)
வருடத்திற்கான இலாபம்		-	-	4,802,697,567	4,802,697,567
முழுமையான ஏனைய வருமானம்					
குயு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு		-	-	(366,067,192)	(366,067,192)
கணக்கீட்டுப் பெறுகை மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி		-	-	87,856,126	87,856,126
ஏனைய முழுமையான வருமானம்		**-**	**-**	**(278,211,066)**	**(278,211,066)**
முழுமையான மொத்த வருமானம்		**-**	**-**	**4,524,486,500**	**4,524,486,500**
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	28	-	-	(500,000,000)	(500,000,000)
ஒதுக்கீட்டுக் கணக்குக்கான பரிமாற்றம்		-	1,850,000	(1,850,000)	-
2022 டிசெம்பர் 21அன்று நிலுவை		**20,000,200**	**6,848,033,247**	**38,389,121,466**	**45,257,154,912**

90 முதல் 117 ஆம் பக்கம் வரையான குறிப்புகள் இவ் நிதிநிலை அறிக்கைகள் பற்றிய முக்கியமானதொரு பாகத்தைக் கருத்துருவாக்கம் செய்கிறது

பணப் பாய்ச்சல்
தொடர்பான அறிக்கை

(மொத்தத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

		31 டிசெம்பர் வருட நிறைவில்	
	குறிப்பு	2022	2021
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினூடாகப் பணப் பாய்ச்சல்			
வருமான வரிச் செலவீடுகளுக்கு முன்பதாக இலாபம்/(இழப்பு)		6,433,025,990	(960,886,767)
திருத்தம்:			
தேய்மானம்	11	2,354,707,348	2,630,042,901
தொட்டறிய முடியாத சொத்துகளுடைய தவணை முறைக்கடன் கரைப்பு	12	12,086,369	18,376,125
முந்தைய வருடத் தேய்மானம்/தவணை முறைக்கடன் கரைப்பு	11-12	16,674,876	13,631,931
PPE பரிமாற்றம்/மீள்மதிப்பீட்டுக்கான திருத்தங்கள்	11-12	410,106,958	512,203,484
சொத்துகள் இல்லாததாக்கப்படுதல்	11-12	516,596	167,229,652
கடன் மாற்றுகைகள் மீதான பரிமாற்றப் (பெறுகை)/இழப்பு	8	43,977,059,211	2,141,205,420
நிலையான வைப்பு மாற்றுகைகள் மீதான பரிமாற்றப் (பெறுகை)/இழப்பு	8	(33,422,478,229)	(2,775,429,116)
முதலீட்டினூடாக வருமானம்	8	(6,110,206,527)	(3,301,121,938)
ஆதனங்கள், ஆலைகள் மற்றும் சாதனங்களின் விற்பனை ஊடாக (இலாபம்)/இழப்பு		(1,121,060)	9,754,246
முந்தைய வருடத் திருத்தங்கள்	20	(81,653,286)	(18,920,458)
ஒத்திவைக்கப்பட்டுள்ள அரசாங்கக் கொடுப்பனவுகளின் தவணை முறைக்கடன் கரைப்பு	24	(49,507,184)	(48,656,180)
நிதிநிலைச் செலவு	8	1,854,365,149	1,140,366,223
ஓய்வுதிய நலத் திட்டத்துக்கான வழங்குகை	23	1,136,495,208	716,345,888
செயற்பாட்டிலுள்ள மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்		16,530,071,419	244,141,411
விவரப்பட்டியல்களிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு		(1,438,178,634)	28,903,438
வணிகம் மற்றும் ஏனைய பெறுகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு		(2,389,908,897)	(525,569,111)
வணிகம் மற்றும் ஏனைய வழங்குகைகளில் குறைவு/(அதிகரிப்பு)		3,461,203,011	1,204,329,621
தொழிற்பாடுகளினூடாகப் பணம் உருவாக்குதல்		16,163,186,900	951,805,359
செலுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட நலத் திட்டச் செலவுகள்	23	(462,956,225)	(482,947,999)
செலுத்தப்பட்ட வட்டி		(1,003,285,606)	(1,168,965,347)
செலுத்தப்பட்ட வரி வருமானம்	26	(120,214,592)	(14,724,996)
உருவாக்கப்பட்ட நிகரப் பணம்/தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து (பயன்படுத்தப்பட்டவை)		14,576,730,475	(714,832,983)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான பணப் பாய்ச்சல்			
ஆதனம், ஆலை மற்றும் சாதனங்களின் கையகப்படுத்தல்	11	(7,015,703,468)	(22,960,368,432)
நிகர (முதலீடுகள்)/கடன் பத்திரங்களின் மீளப்பெறுகை	14	790,000,000	1,550,000,000
நிகர (முதலீடுகள்)/வங்கி வைப்புகளின் மீளப்பெறுகை		(8,784,039,406)	3,096,129,871
மீட்டுக்கொள்ளப்பட்ட கடன்/விளையாட்டுக் கழகத்திற்கு (வழங்கப்பட்டது)		1,200,000	(12,788,500)
ஆதனம், ஆலை மற்றும் சாதனங்களின் விற்பனையிலிருந்து ஆரம்பித்தல்		1,327,879	2,127,330
பெறப்பட்ட வட்டி		3,611,801,476	3,196,452,332
வழங்கப்பட்ட பணியாளர் கடன் தொகைகள்		(90,623,662)	(101,513,352)
பணியாளர் கடன்களுக்கான பற்றுச்சீட்டு		83,887,082	120,930,596
முதலீட்டுத் தொழிற்பாடுகளிலிருந்து நிகர பணம் உருவாக்கப்படுதல்		(11,418,824,975)	(15,109,030,155)
நிதிநிலை செயற்பாடுகளிலிருந்தான பணப் பாய்ச்சல்			
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	28	(500,000,000)	-
கடன் பற்றுச்சீட்டு	21	2,544,341,074	19,833,345,828
கடன் மீள்கொடுப்பனவுகள் (உள்ளூர்)	21	(266,666,666)	(133,333,334)
கடன் மீள்கொடுப்பனவுகள் (வெளிநாடு)	21	(4,706,288,922)	(4,289,330,231)
நிகர பணம் (பயன்படுத்தப்படுவது)/நிதிநிலை செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்படுதல்		(2,928,614,514)	15,410,682,264
பணம் மற்றும் பணச் சமவலுவில் நிகர அதிகரிப்பு/(குறைவு)		229,290,986	(413,180,873)
வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணச் சமவலு	17	413,045,010	826,225,883
வருட நிறைவில் பணம் மற்றும் பணச் சமவலு	17	642,335,995	413,045,010

90 முதல் 117 ஆம் பக்கம் வரையான குறிப்புகள் இவ் நிதிநிலை அறிக்கைகள் பற்றிய முக்கியமானதொரு பாகத்தைக் கருத்துருவாக்கம் செய்கிறது

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

(குறிப்பிடப்படாத விடுத்து, குறிப்புகளில் முழுத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

1 கூட்டிணைந்த தகவல்கள்

1.1 பொதுவானவை

விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை)(தனியார்) நிறுவனம் என்பது இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும், ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு தனியார் நிறுவனமாகும். நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ளது.

1.2 முதன்மை செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

சர்வதேசத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக விமான நிலையங்களை நிர்வகித்தல், இலங்கை விமானத் தகவல் பிராந்தியத்தினூடாகப் பறக்கும் விமானங்கள் மற்றும் இலங்கையில் தரயிறங்கவுள்ள விமானங்களுக்கான விமான வழிகாட்டுதல் சேவைகளின் வழங்குதல் மற்றும் விமான நிலையப் பயனர்களுக்குத் தேவையான ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றன வருடத்தில் நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடுகளாக இனங்காணப்படுகின்றன.

1.3 விநியோகத்துக்கான அதிகாரமளிப்புத் திகதி

டிசெம்பர் 2022 நிறைவுக்கு வந்த வருடத்திற்கான விமான மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள், 21 பெப்ரவரி 2023 பணிப்பாளர் சபையின் தீர்மானம் ஒன்றிற்கு அமைவாக விநியோகத்திற்காக அங்கீகரிக்கப்பட்டன.

2. முக்குீயமுர்னு குணுக்குீடுடுக் கோர்ஞ்ஜகுகுளீனு சுர்ருர்ம்சும்

இந்த நிதிநிலை அறிக்கைகளின் தயாரிப்பில் தழுவிக்கொள்ளப்பட்ட முதன்மைக் கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்படாது விடுத்து, வழங்கப்பட்டுள்ள அனைத்து வருடங்களுக்கும் தொடர்ச்சியாக இந்தக் கொள்கைகள் பொருந்தக்கூடியனவாக இருக்கின்றன.

2.1 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாகவும், அதற்குப் பொருந்தக்கூடியதாகவும் இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிநிலைச் சொத்துகள் மற்றும் ஆதனங்கள், மற்றும் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதி ஆகியவற்றின் நியாயமான மதிப்பீட்டினூடாக சிறியதொரு மாற்றத்தைச் செய்து, வரலாற்றுச் செலவு அடிப்படையின் கீழ் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக நிதிநிலைக் கொள்கைகளின் தயாரிப்பானது, சில முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளை வேண்டி நிற்கிறது. நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் அவர்களுடைய தீர்ப்பைப் பிரயோகிப்பதற்கு நிர்வாகத்திற்குத் தேவைப்படலாம். நிதிநிலை அறிக்கைகளுக்கு முக்கியமான அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் பகுதிகள் குறிப்பு 4இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிதிநிலை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் வழங்கப்படுகின்றன. இந்த நிதிநலை அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் வழங்குகை ஆகியன 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக உள்ளன.

2.1.1 இணைப்பு

நிறுவனத்தின் இணைக்கப்பட்ட நிலையில் வழங்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கைகள் பின்வருமாறு:

அ) மூலதன செலவுக்கான அரசாங்கக் கொடுப்பனவுகளைப் பிரதிபலிக்கும் வாக்கு நிதி; மற்றும்

ஆ) தக்கவைக்கப்பட்ட வருவாய் நிதிஇ

2011 தனித்தனியாகத் தயாரித்து, வழங்கப்பட்டு, சட்டமா அதிபரிடமிருந்து அது குறித்த கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிலுவையில் உள்ளது

அவசியப்படும் சட்டரீதியான திருத்தங்களுடன் நிறுவனத்துடன் விமான நிலையத்தின் சொத்துகள் மற்றும் ஆதனங்களை ஒருங்கிணைப்பதற்கு 2005 ஓகஸ்ட் 17 எனத் திகதியிடப்பட்ட அமைச்சரவை அனுமதியில் வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை நிருபத்தின் பந்தி 35இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்டத் திருத்தங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கோடு விமானச் சேவைகள் அமைச்சுக்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு பொது விமான சேவைகள் அதிகார சபை மூலமாக சட்டமா அதிபரின் பொது அபிப்பிராயம் கோரப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அமைச்சரவை அனுமதிக்கான தேவை, 1983ஆம் ஆண்டு நிறுவனத்தின் உருவாக்கத்துடன் நிறுவனத்திற்கு முந்தைய விமான அதிகார சபையினூடாகப் பேணப்பட்டு வந்த ஆதனங்களின் ஒரு பகுதியுடைய உரித்து மாத்திரம் மாற்றப்பட்டதன் அடிப்படையில் தங்கியிருக்கிறது, மற்றும் வாக்கு நிதி மற்றும் தக்கவைக்கப்பட்ட வருவாய் நிதி ஆகியவற்றின் கீழ் பேணப்பட்டு வருவதுமான வகைகூறப்படும் மீதமுள்ள சொத்துகள் மற்றும் ஆதனங்களுடனான விமான அதிகார சபையின் கலைப்பு.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகச் செல்வதற்கென 2013 ஜூன் 2013 ஒருங்கிணைப்பை அங்கீகரித்தது, இரண்டு நிதிகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்துகளின் பயன்பாட்டிலிருந்து பொருளாதார நலன்களைப் பெறுவதற்கு அதன் முதன்மை நடவடிக்கைகளில் நிறுவனம் ஈடுபடுவதை அடிப்படையாகக் கொண்டும், தொடர்புடைய பொறுப்பைப் பதிவு செய்யாமல் படுகடன் பணிவிடை மீதான கடப்பாடுகளுக்கு வகைகூறுவதனை அடிப்படையாகக் கொண்டும் அமைந்திருக்கிறது. அதன் காரணமாக, அடிப்படை கணக்கீட்டுக் கருத்தாக்கங்களிலிருந்தும் அது விலகிச் செல்கிறது.

2.1.2 இணக்கக் கூற்று

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் வழங்குகைக்கு சபை பணிப்பாளர்கள்கள் பொறுப்புடையவர்களாவர்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் பொருந்திப் போகும் முழு நிறைவான தகவலுடன் நிறைவடைந்த வருடத்திற்கு, 31 டிசெம்பர் 2022 அன்று நிறுவனத்தின் (”நிதிநிலை அறிக்கைகள்”) குறிப்புகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன், பங்கு மற்றும் பணப் பாய்ச்சலில் மாற்றங்கள், முழுமையான வருமானத்தின் அறிக்கைகள், நிதிநிலை அறிக்கை ஆகியன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நியமங்கள் றறற.உயளசடையமெய.உழஅஇல் பட்டியலிடப்பட்டுள்ளன.

2.1.3 ஒப்பீட்டுத் தகவல்

குறிப்பிடப்படாது விடத்து, வழங்கப்பட்டுள்ள அனைத்து வருடங்களுக்கும் தொடர்ச்சியாக இந்தக் கணக்காய்வுக் கொள்கைகள் பொருந்தக்கூடியனவாக இருக்கின்றன.

2.1.4 அளவீடுகளின் அடிப்படை

நிதி நிலை அறிக்கையிலுள்ள பின்வரும் பொருட்கள் தவிர்ந்து வரலாற்றுச் செலவை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன:

- முதலீட்டுச் சொத்து - நியாயமான பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட குறுகிய கால முதலீடுகள் - நியாயமான பெறுமதி
- வரையறுக்கப்பட்ட நிகர பயன் ஆதனம் - வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதி மற்றும் அடையாளம் காணப்படாத கணக்கீட்டுப் பெறுகைகளாக ஆதனங்கள் அடையாளம் காணப்படுகின்றன. குறைவாக அடையாளம் காணப்பட்ட கடந்த கால சேவைச் செலவு மற்றும் அடையாளம் காணப்படாத கணக்கீட்டு நட்டங்கள்

2.1.5 *செயற்பாட்டு மற்றும் வழங்குகை நாணயம்*

நிறுவனம் தொழிற்படும் (செயற்பாட்டு நாணயம்) முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் தொழிற்பாடு மற்றும் வழங்குகை நாணயமான இலங்கை ரூபாவில் இந்த நிதி நிலை அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் வழங்குகை மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

2.1.6 *நிதிநிலை அறிக்கைகளின் வழங்குகை*

நிதி நிலை, அதன் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் ஆதனங்கள் இயல்பை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுவதுடன், அவற்றின் இயைபான திரவத்தன்மை மற்றும் முதிர் வடிவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு ஒழுங்கு முறைப்படி பட்டியலிடப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கைகளில் தாக்கம் செலுத்தக்கூடிய பணவீக்கக் காரணிகளுக்காக எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. நிதிநிலை ஆதனங்கள் மற்றும் நிதிநிலை சொத்துகள் ஆகியன சமப்படுத்துபவையாக உள்ளன, மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளை சமப்படுத்துவதை சட்டபூர்வமாகச் செயற்படுத்தக்கூடிய உரிமை இருக்கும்போது மட்டும் நிகர தொகை நிதிநிலை அறிக்கையில் அறிக்கையிடப்படுவதுடன், நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ள நிகர பெறுமதி, அல்லது கணக்கீட்டு நியமங்கள் அல்லது விளக்கத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள சொத்துகளை அங்கீகரித்தல் மற்றும் நிறைவேற்றும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

2.1.7 *பொருட்பாடு மற்றும் திரட்சி*

ஒத்த வகைப் பொருட்களினதும் ஒவ்வொரு வகை வெவ்வேறாக நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. "நிதிநிலை அறிக்கைகளின் வழங்குகையில்" இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் அனுமதிக்கப்படும் பட்சத்தில், வேறுபட்ட இயல்புகளை அல்லது செயற்பாடுகளையுடைய பொருட்கள் வெவ்வேறாக வழங்கப்படுகின்றன.

2.1.8 *தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளின் பயன்பாடு*

கணக்காய்வுக் கொள்கைகள் மற்றும் ஆதனங்கள், சொத்துகள், வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் மற்றும் கணக்காய்வுக் கொள்கைகளின் பிரயோகத்தில் தாக்கம் செலுத்தும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்வதற்கு இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நிர்வாகத்துடனான இணக்கப்பாடு அவசியப்படும் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளின் தயார்படுத்தல். உண்மை முடிவுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து மாறுபடும். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. தேவைப்படும் போது சீராய்வுக்கான கணக்காய்வு மதிப்பீடு வருங்காலமாக அங்கீகரிக்கப்படுகிறது.

2.1.9 *நிகழ்காலக் கரிசனை*

நிர்வாகமானது அதன் நிகழ்காலக் கரிசனையைத் தொடர்வதற்கான அதன் திறனை மதிப்பாய்வு செய்துள்ளதுடன், எதிர்நோக்கக்கூடிய எதிர்காலத்திற்காக வணிகத்தை தொடர்வதற்கான வளங்களை அது கொண்டிருப்பதாகத் திருப்தியடைந்துள்ளது. மேலும், ஒரு கரிசனையாகத் தொடரும் நிறுவனத்தின் திறன் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருள் நிச்சயமற்றதன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. அதனால், ஒரு தொடர் கரிசனை அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகள் தொடரச்சியாகத் தயார்படுத்தப்பட வேண்டும்.

2.1.10 *நிதிநிலை சாதனங்கள்*

ஒரு நிறுவனத்தின் நிதிச் சொத்து மற்றும் நிதிநிலைப் பொறுப்பு அல்லது ஏனைய நிறுவனத்தின் பங்குச் சாதனம் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் ஏதேனும் ஒரு ஒப்பந்தம் நிதிநிலை சாதனம் என அறியப்படுகிறது.

2.1.11 *ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள்*

ஒத்திவைக்கப்பட்ட வரி இழப்புகளைப் பொறுத்து, எதிர்கால வரி விதிப்பு இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றன, அதற்கு எதிராக அத்தகைய வரி இழப்புகளைப் பயன்படுத்தலாம். எதிர்கால வரி விதிப்பு மூலோபாயங்களுடன் சேர்த்து, எதிர்கால வரி விதிப்பு இலாபங்களின் சாத்தியமான நேரம் மற்றும் அளவை அடிப்படையாகக் கொண்டு, அடையாளம் காண முடியுமான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகளின் அளவைத் தீர்மானிப்பதற்கு அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1.12 *கணக்கீட்டுக கொள்கை மற்றும் வெளிப்படுத்துகைகளில் மாற்றங்கள்*

புதிய மற்றும் மாற்றியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் விளக்கம்

2022 ஜனவரி 1 தொடக்கம் வருடாந்த கால தவணைகளுக்கான பயனுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கான பல தரப்பட்ட மாற்றங்கள். எவ்வாறாயினும், இந்தத் திருத்தங்கள் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 3 வணிக சேர்க்கைகளுக்கான மாற்றங்கள்: கருத்தமைவுக் கட்டமைப்புக்கான குறிப்பீடுகளைப் புதுப்பித்தல்

இலங்கை கணக்கீட்டு நியமம் 3 வணிக சேர்க்கைகளுக்கான மாற்றங்களை வெளியிட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் - கருத்தமைவுக் கட்டமைப்புக்கான குறிப்பீடுகளைப் புதுப்பிக்கிறது. 2018 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட நிதி அறிக்கையிடலுக்கான கருத்தமைவுக் கட்டமைப்புக்கான குறிப்பீட்டுடன் 1989 வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையின் தயாரிப்பு மற்றும் வழங்குகைக்கான கட்டமைப்புக்கான ஒரு குறிப்பீட்டைப் பிரதியீடு செய்வதை இந்த மாற்றங்கள் இலக்காகக் கொண்டுள்ளன.

இலங்கை நிதிநிலை அறிக்கையிடல் நியமங்களின் துணை நிறுவனத்தை முதற்தடவையாக SLFRS 1 தழுவிக்கொள்ளல்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் செயல்முறைக்கு 2018-2020 வருடாந்த மேம்பாடுகளின் ஒரு அங்கமாக, சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களின் முதற்தடவையான தழுவிக்கொள்ளலுக்கான ஒரு திருத்தத்தை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் வெளியிட்டது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்துக்கான நிலைமாறலின் பெற்றோர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு, பெற்றோரினால் அறிக்கையிடப்பட்ட தொகையைப் பயன்படுத்தி விருத்தியாகின்ற மொழிபெயர்ப்பு வேறுபாடுகளை அளவிடுவதற்கு இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் 1இன் பந்தி ஈ16 (அ)ஐப் பிரயோகிக்கத் தகுதி பெறும் ஒரு துணைமையை இத்திருத்தம் அனுமதிக்கிறது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 1இன் பந்தி ஈ16 (அ)ஐப் பிரயோகிக்கத் தகுதி பெறும் இணைந்த அல்லது ஒரு கூட்டு முயற்சிக்கும் இத்திருத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

2.2 வெளிநாட்டு நாணய மொழிபெயர்ப்பு

(அ) செயற்பாட்டு மற்றும் வழங்குகை நாணயம்

நிறுவனம் தொழிற்படும் (செயற்பாட்டு நாணயம்) முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் தொழிற்பாடு மற்றும் வழங்குகை நாணயமான இலங்கை ரூபாவில் இந்த நிதி நிலை அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. கருத்திற்கொள்ளப்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் வழங்குகை மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

(ஆ) பரிமாற்றங்கள் மற்றும் நிலுவைகள்

பரிமாற்றத் தினங்களின் போது, வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்கள், பரிமாற்றத் திகதிகளைப் பயன்படுத்தி செயற்பாட்டு நாணயங்களாக மொழிபெயர்க்கப்படுகின்றன. அத்தகைய பரிமாற்றங்களின் நிர்ணயம் மற்றும் வருட இறுதிப் பரிமாற்ற விகிதத்தில் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணம் சார்ந்த சொத்துகள் மற்றும் ஆதனங்களின் மொழிபெயர்ப்பு ஆகியவற்றிலிருந்து ஏற்படக்கூடிய வெளிநாட்டுப் பரிமாற்றப் பெறுகைகள் மற்றும் நட்டங்கள் ஆகியன பொதுவாக முழுமையான

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

(குறிப்பிடப்படாத விடுத்து, குறிப்புகளில் முழுத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

வருமானத்தில் அடையாளம் காணப்படுகின்றன. தகுதி பெறக்கூடிய பணப் பாய்ச்சல் தற்காப்பு வழிமுறைகள் மற்றும் தகுதி பெறக்கூடிய நிகர முதலீட்டுத் தற்காப்பு வழிமுறைகளுக்குத் தொடர்புபடுவதாகவும் அல்லது ஒரு வெளிநாட்டுத் தொழிற்பாட்டில் நிகர முதலீட்டின் பகுதிக்குத் தொடர்புபடுத்தக்கூடியதாகவும் இருப்பின், பங்கீடு ஒத்திவைக்கப்படலாம்.

'நிதிநிலை வருமானம் அல்லது செலவு' ஆகியவற்றுக்குள் முழுமையான வருமானத்தின் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பெறுகைகள் மற்றும் பணம் மற்றும் பணச் சமவலு ஆகியவற்றுடன் தொடர்புடைய வெளிநாட்டுப் பரிமாற்றப் பெறுகைகள் மற்றும் நட்டங்கள். ஏனைய அனைத்து வெளிநாட்டுப் பரிமாற்றப் பெறுகைகள் மற்றும் இழப்புகள் ஆகியன "ஏனைய (இழப்புகள்) பெறுகைகள் - நிகர" ஆகியவற்றுக்குள் முழுமையான வருமானத்தின் அறிக்கைகள் வழங்கப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயம் ஒன்றில் ஒரு நியாயமான பெறுமதியைக் கொண்டு அளவிடப்பட்ட பணம் சாராத பொருட்கள், நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்ட தினத்தில் பரிமாற்றப் விகிதத்தைக் கொண்டு மொழிபெயர்க்கப்படுகின்றன. சொத்துகள் மற்றும் ஆதனங்களிலுள்ள மொழிபெயர்ப்பு வேறுபாடுகள் நியாயமான பெறுமதியுடன் முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன், அவை நியாயமான பெறுமதிப் பெறுகை அல்லது நட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, முழுநிறைவான வருமானம் ஒன்றினூடாக நியாயமான பெறுமதியில் பேணப்படும் சமநியாயங்கள் போன்றன நாணயம் சாராத சொத்துகள் மற்றும் ஆதனங்கள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பு வேறுபாடுகள் நியாயமான பெறுமதிப் பெறுகை மற்றும் நட்டம் ஆகியவற்றின் ஒரு அங்கமாக முழுநிறைவான வருமானமாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஏனைய முழுநிறைவான வருமானம் ஒன்றினூடாக நியாயமான பெறுமதியில் பேணப்படுவதாக வகைப்படுத்தப்பட்ட சமநியாயங்கள் போன்றன நாணயம் சாராத சொத்துகளின் மொழிபெயர்ப்பு வேறுபாடுகள் ஏனைய முழுநிறைவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.3 நிகழ்கால மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி

குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வரிச் செலவு நிகழ்கால மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியை உள்ளடக்கியுள்ளது. ஏனைய முழுநிறைவான வருமானம் அல்லது சமநியாயத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பொருட்களுடன் அது தொடர்புபடுவது தவிர்ந்து, முழுநிறைவான வருமானத்தின் கூற்றில் வரி அங்கீகரிக்கப்படுகிறது. இவ்விடயத்தில், வரியானது முறையே ஏனைய முழுநிறைவான வருமானம் அல்லது சமநியாயத்தில் நேரடியாகவும் அங்கீகரிக்கப்படுகிறது.

நிகழ்கால வரி வருமானக் கட்டணங்கள், சட்டமாக்கப்பட்டுள்ள வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது அல்லது நிதி நிலை திகதியின் கூற்றில் பெருமளவில் சட்டமாக்கப்படுகிறது.

விளக்கத்துக்கு உட்படுத்தப்படும் பிரயோக ரீதியான வரி ஒழுங்குவிதிகளிலுள்ள சூழ்நிலைகளுக்கு அமைவாக வருடாந்த வரி அறிக்கைகளில் பெறப்பட்ட நிலைகளை நிர்வாகம் அவ்வப்போது மதிப்பிடும். வரி அதிகார சபைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய எதிர்பார்க்கை தொகைகளின் அடிப்படையில் பொருத்தமான இடங்களில் அது ஏற்பாடுகளைத் தாபிக்கிறது.
சொத்துகள் மற்றும் ஆதனங்களின் வரி அடித்தளங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளிலுள்ள அவற்றின் தொகைகள் ஆகியவற்றுக்கிடையே மேலெழும் தற்காலிக வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒத்திவைக்கப்பட்ட வரி வருமானம் - ஆதன முறைமையைப் பயன்படுத்தி - அங்கீகரிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், ஆரம்பத்தில் ஒரு நல்லபிப்பிராயத்தின் மூலமாக ஏற்படும் அங்கீகாரத்தினூடாக அவை மேலெழுமாயின், ஒத்திவைக்கப்பட்ட வரி ஆதனங்கள் அங்கீகரிக்கப்பட மாட்டா; வணிக ஒருங்கிணைப்பு ஒன்றைத் தாண்டி பரிமாற்றம் - வரிவிதிக்கக்கூடிய இலாபம் அல்லது கணக்கீட்டைப் பரிமாற்றம் பாதிக்காத அதே வேளை - ஒன்றிலுள்ள சொத்துகள் மற்றும் ஆதனங்களின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து அது மேலெழுமாயின், அதற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள வருமான வரி கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. சட்டமாக்கப்பட்டுள்ள வரி விகிதம் (மற்றும் சட்டங்கள்) அல்லது நிதி நிலை தினத்தின் அறிக்கையினால் பெருமளவில் சட்டமாக்கப்பட்டு, இயைபான ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி ஆதனம் அடையாளம் காணப்பட்டவுடன் அல்லது ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி ஆதனம் தீர்த்து வைக்கப்பட்டவுடன் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளவற்றினால் ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி தீர்மானிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் வரிவிதிக்கக்கூடிய இலாபத்திற்கு எதிராகத் தற்காலிக வேறுபாடுகளைப் பயன்படுத்த முடியுமாக இருக்கும் என்னும் நியமத்திற்கு அமைவாக மட்டும் ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிகழ்கால வரிச் சொத்துகளுக்கு எதிரான நிகழ்கால வரி ஆதனங்களை சமப்படுத்துவதற்கான சட்டபூர்வமான உரிமை இருக்கும்போதும், ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள் மற்றும் ஆதனங்கள் அதே வரி விதிப்பு அதிகார சபையினால் விதிக்கப்படும் வருமான வரிகளுடன் தொடர்புடையதாக இருக்கும்போதும், ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள் மற்றும் ஆதனங்கள் சமமானவையாகும்.

2.4 விவரப்பட்டியல்கள்

பழைய மற்றும் குறைவாக விற்பனை செய்யப்படக்கூடிய பொருட்களுக்கான உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்னர், குறை செலவில் அல்லது உணரக்கூடிய நிகர மதிப்பில் விவரப்பட்டியல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2003 டிசெம்பர் 31க்கு முன்னர் வாங்கப்பெற்ற தீயணைப்பு உபகரணங்களுக்கான உதிரிப் பாகங்கள் மற்றும் நுகர்பொருட்களின் பெறுமதியானது மதிப்பீடு மற்றும் அதற்குப் பின்னர் சராசரி அடிப்படையில் அளவிடப்படுகிறது.

நிகழ்கால இடத்திற்கு விவரப்பட்டியல்களை எடுத்து வருவதற்கான செலவு மற்றும் சூழ்நிலைகள் ஆகியன முதலில் சேமிக்கப்படும் பொருட்கள் முதலில் எடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மதிப்பிடப்படும் எரிபொருள் அல்லாத சராசரி அடிப்படையைப் பயன்படுத்திக் கணக்கிடப்படுகின்றன.

10 வருடங்களுக்கு அசையாதிருக்கும் அனைத்து விவரப்பட்டியல்களுக்குமான கொடுப்பனவுகளை நிறுவனம் தயார் செய்துள்ளது.

2.5 கொடுக்கல் வாங்கல் மற்றும் ஏனைய பெறுகைகள்

கொடுக்கல் வாங்கல் பெறுகைகள் ஆரம்பத்தில் ஒரு நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, அதனைத் தொடர்ந்து மிகைப் பெறுமதிக்குக் குறைவான முன்னுரிமை வழங்கி, பயனுள்ள வட்டி முறைமையைப் பயன்படுத்துவதனூடாக தவணை முறைக் கடன் கரைப்புச் செலவினூடாக அளவிடப்படுகின்றன.

மோசமான மற்றும் சந்தேகத்திற்கு இடமுள்ள பெறுகைகளுக்கான குறை செலவுக் கொடுப்பனவுகளினூடாக ஏனைய பெறுகைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.6 பணம் மற்றும் பணச் சமவலுகள்

பணம் மற்றும் பணச் சமவலு ஆகியன கையிருப்பிலுள்ள பணம், கேள்வி வைப்புகள் மற்றும் பெறுமதியில் ஏற்படக்கூடிய சிறிய அபாயத்திற்கு உட்படுபவையாகவும், அறியப்படக்கூடிய பணத் தொகைக்குத் துரிதமாக மாற்றிக் கொள்ளக்கூடியதாக உள்ள குறுகிய கால அதி திரவ முதலீடுகள் முதலியவையாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன.

பணப் பாய்ச்சல் அறிக்கை, பணம் மற்றும் பணச் சமவலு ஆகிய தேவைகளுக்காக கையிருப்பிலுள்ள பணம் மற்றும் நிலுவையிலுள்ள வங்கி மிகைப்பற்றுகளின் நிகர வங்கி வைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. குறுகிய கால முதிர்ச்சியடைவுடன் கூடிய முதலீடுகளும் - மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான கையகப்படுத்தல் காலப்பகுதியைக் கொண்டவை - பணச் சமவலுவாகக் கருதப்படுகின்றன.

2.7 ஆதனம், ஆலை மற்றும் சாதனங்கள்

அனைத்து ஆதனம், ஆலை மற்றும் சாதனங்கள் ஆரம்பத்தில் செலவை மட்டும் கருத்திற்கொண்டதாகப் பதிவிடப்படுவதுடன், அவை வரலாற்றுச் செலவில் குறைந்த திரட்டப்பட்ட தேய்மானத்தினூடாக உள்ளடக்கப்பட்டுள்ளது. வரலாற்றுத் தேய்மானமானது பொருட்களின் கையகப்படுத்தலுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தக்கூடிய செலவுகளை உள்ளடக்கியிருப்பதுடன், பொருளை நீக்குவது மற்றும் அகற்றும் செலவுகளின் ஆரம்ப மதிப்பீடு மற்றும் அது அமைந்துள்ள தளத்தை மீட்டமைப்புச் செய்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது. பொருளைக் கையகப்படுத்தியவுடன் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியில் விவரப்பட்டியல்களைத் தயாரிப்பதற்கான தேவை தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக அக்காலப்பகுதியில் அப்பொருளைப் பயன்படுத்தியதன் விளைவாக ஒரு நிறுவனத்திற்கு ஏற்படும் செலவுக்கான உரிமைப்பாடாகவும் அது காணப்படும்.

நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் அமையப்பெற்றுள்ள சொத்துகளுடைய செலவானது, மூலப் பொருட்களுக்கான செலவு, நேரடி உழைப்பு மற்றும் மறைமுக உற்பத்திச் செலவுகளுக்கான உகந்த விகிதம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

பொருளுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நலன் நிறுவனத்தை வந்தடையும் மற்றும் நம்பகமான முறையில் பொருளின் விலையை அளவிட முடியும் என்கின்ற கருதுகோல்களின் அடிப்படையில் மாத்திரம், சொத்தின் தொகை அல்லது வேறுபட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதில் - எது பொருத்தமாக உள்ளதோ அவ்வாறு - தொடர்ச்சியான செலவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாற்றப்பட்ட பகுதியின் தொகை அங்கீகரிக்கப்படவில்லை. அந்தந்த நிதித் தவணையின் போது ஏற்பட்ட முழுநிறைவான வருமானத்தின் அறிக்கைகளுக்கான அனைத்துத் திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஆகியன அறவிடப்படுகின்றன.

செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தொடர்புடைய சொத்துகள் பயன்பாட்டிற்குக் கிடைக்கப்பெறும் வரை தொழிற்பாட்டிலுள்ள மூலதனச் செயற்றிட்டங்களினூடாக நீண்ட கால செயற்றிட்டங்களின் செலவு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆதனம், ஆலை மற்றும் சாதனத்தின் ஒரு பொருள் பயன்பாட்டுக்குக் கிடைக்கப்பெறும் போதும், அக்குறிப்பிட்ட காலப்பகுதியில் அப்பொருள் பயன்படுத்தப்படாமல் இருந்தாலும் கூட, அவற்றின் அங்கீகாரம் செல்லுபடியற்றதாக ஆகும் வரை தொடரும் போதும் தேய்மானம் அடையும். ஆதனங்கள், ஆலைகள் மற்றும் சாதனங்களின் பொருளுடைய ஒவ்வொரு பகுதியும், பொருளின் மொத்த விலையுடன் தொடர்புடைய குறிப்பிடத்தக்க விலையுடன் தனித்தனியாகத் தேய்மானம் அடையும். நிலம் தேய்மானம் அடையாது. ஏனைய சொத்துகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளை விட அவர்களிடம் உள்ள எஞ்சியுள்ள பெறுமானத்திற்கு செலவை வேறாக்குவதற்கு நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி ஏனைய சொத்துகள் மீதான தேய்மானத்தைக் கணக்கிட முடியும்.

சொத்துகளின் பயனுள்ள ஆயுள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

கட்டடங்கள்	50 வருடங்களுக்கு மேலாக
ஆலை மற்றும் இயந்திரத் தொகுதி	04 முதல் 20 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி
மோட்டார் வாகனங்கள்	04 முதல் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி
தளபாடங்கள், பொருத்தும் பொருட்கள், அலுவலகப் பொருட்கள்	08 வருடங்களுக்கு மேலான காலப்பகுதி
தொடர்பாடல் மற்றும் வழிகாட்டல் கருவிகள்	05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி
ஏனைய கருவிகள்	08 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதி
விமான உட்கட்டமைப்பு வசதிகள்	08 முதல் 50 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி

மதிப்பிடப்பட்ட மீட்டெடுக்கக்கூடிய தொகையை விட சொத்து கொண்டிருக்கும் தொகை அதிகமாக இருக்குமெனின், அதன் மீட்டெடுக்கும் தொகைக்குச் சமமாக உடனடியாக சொத்தின் பெறுமதி எழுதப்படும்

ஒவ்வொரு பிரதான பரிசோதனையும் நடாத்தப்படும் போது, அங்கீகார அளவுகோல்கள் திருப்திகரமாக இருந்தால், ஆலை மற்றும் கருவிகளின் பெறுமதியில் அந்தச் செலவு அங்கீகரிக்கப்படும்.

தேவைக்கு ஏற்றவாறு அல்லது அதன் பயன்பாடு அல்லது தேவைப்பாட்டிலிருந்து எதிர்காலப் பொருளாதாரப் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத போது ஆதனங்கள், ஆலைகள் மற்றும் சாதனங்களுடைய ஒரு பொருள் அங்கீகரிக்கப்படுவதில்லை. சொத்துகளுடைய அங்கீகரிக்கப்படாத நிலையின் மீது எழக்கூடிய ஏதேனும் பெறுகை அல்லது இழப்பு (நிகர தேவைப்பாடுடன் கிடைக்கப்பெற்ற தொகை மற்றும் ஆதனத்தின் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடாகக் கணக்கிடப்படுகிறது) சொத்து அங்கீகரிக்கப்படாத வருடத்தில் முழுநிறைவான வருமானத்தின் கூற்றில் சேர்க்கப்படும்.

எஞ்சியுள்ள பெறுமானங்கள், பயனுள்ள ஆயுள் மற்றும் தேய்மான முறைமைகள் ஆகியன மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், ஒவ்வொரு நிதியாண்டின் நிறைவிலும், பொருத்தமாயின், அவை திருத்தியமைக்கப்படுகின்றன.

கிடைக்கப்பெற்ற தொகையைப் பெறுமதியுடன் ஒப்பிடுவதனூடாக தேவைப்பாடுகள் மீதான பெறுகைகள் மற்றும் இழப்புகள் அளவிடப்படுவதுடன், முழுநிறைவான வருமானத்தின் அறிக்கையில் ஏனைய வருமானம்.'.(இழப்புகள்) ஆகியவற்றுக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், ஆலை மற்றும் சாதனத்தின் மிகைப் பெறுமதி

ஆதனங்கள், ஆலைகள் மற்றும் சாதனங்களின் பெறுமதி மீட்டெடுக்கப்பட முடியாது என்பதை சூழ்நிலைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் சுட்டிக்காட்டும் போது மிகைப் பெறுமதிக்காக அவை மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் அறிகுறி இருக்குமெனின் மற்றும் அதன் பெறுமதி மதிப்பிடப்பட்ட மீட்டெடுக்கக்கூடிய தொகையை விட அதிகமாக இருக்குமெனின், மீட்டெடுக்கக்கூடிய தொகை சார்ந்து அவை குறிப்பிடப்படுகின்றன. அதே சொத்தின் முந்தைய மறுமதிப்பீட்டு உபரியை மாற்றியமைக்காத வரை முழுநிறைவான வருமானத்தின் அறிக்கையில் மிகைப் பெறுமதி இழப்புகள் அங்கீகரிக்கப்படும்.

2.8 குறிப்பிடப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் சமநியாயம் என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

(குறிப்பிடப்படாத விடுத்து, குறிப்புகளில் முழுத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

2.9 வர்த்தக வழங்குகைகள்

வர்த்தக வழங்குகைகள் என்பது வழங்குநர்களிடமிருந்து சாதாரண வணிகப் போக்கில் பெறப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளாகும்.

நிதி நிலையின் அறிக்கையில் வர்த்தகம் மற்றும் ஏனைய வழங்குகைளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆதனங்கள், கோரிக்கையின் பேரில் அல்லது நிதி நிலையின் அறிக்கைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டியவை. நடப்பு அல்லாத ஆதனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் நிதி நிலை அறிக்கையின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தப்பட வேண்டியவை.

பரிவர்த்தனை விலையில் ஆரம்பத்தில் வர்த்தக செலுத்துகைகள் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் பயனுள்ள வட்டி முறைமையினூடாக தவணை முறைக்கடன் கரைப்பு மூலமாக அளவிடப்படுகிறது.

2.10 பெறுகைகள்

பரிவர்த்தனை செலவுகளின் நிகரமாகக் கடன்கள் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர், தவணை முறைக்கடன் கரைப்பில் பெறுகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன; பயனுள்ள வட்டி முறைமையைப் பயன்படுத்துவதனூடாக பெறுகையின் காலப்பகுதியில் முழுநிறைவான வருமானத்தின் அறிக்கையில் கிடைக்கப்பெற்ற தொகை (பரிவர்த்தனைத் தொகையின் நிகர பெறுமதி) மற்றும் மீட்புப் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு அங்கீகரிக்கப்படுகின்றன.

கடன் வசதிகளை நிறுவுவதில் செலுத்தப்படும் கட்டணங்கள் கடனுக்கான பரிவர்த்தனை செலவுகளாக அங்கீகரிக்கப்படுவதுடன், அனைத்து வசதிகளும் குறைக்கப்படும். இவ்விடயத்தில், குறைக்கப்படும் செயற்பாடு நடைபெறும் வரை கட்டணம் செலுத்துவது ஒத்திவைக்கப்படும். கட்டணம் பணப் புழக்க சேவைகளுக்கான முற்பணமாக ஆக்கப்படுவதுடன், அதனுடன் தொடர்புடைய வசதியின் காலப் பகுதியில் தவணை முறைக்கடன் கரைப்பாகவும் ஆக்கப்படுகிறது.

2.11 பெறுகைச் செலவுகள்

அவற்றுக்கென குறித்துரைக்கப்பட்டுள்ள பயன்பாட்டுக்கு தயாராகுவதற்கு கணிசமான நேரத்தை எடுத்துக் கொள்ளும் தகுதியுடைய சொத்துகளின் கையகப்படுத்தல், கட்டுமானம் அல்லது உற்பத்தி ஆகியன பொதுவான மற்றும் குறிப்பிட்ட பெறுகைச் செலவுகளுடன் நேரடியாகத் தொடர்புபடுவதோடு, அச்சொத்துகள் குறித்துரைக்கப்பட்டுள்ள பயன்பாட்டுக்குக் கணிசமாகத் தயாராக இருக்கும் ஒரு நேரம் வரை, அவை அச்சொத்துகளின் செலவுக்குச் சேர்க்கப்படுகின்றன.

குறிப்பிட்ட கடன்களின் தற்காலிக முதலீட்டில் ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானம், தகுதியுடைய சொத்துகளுக்கான அவர்களின் செலவு நிலுவையில் உள்ளதால், மூலதனமயமாக்கலுக்கான கடன் வாங்கும் செலவிலிருந்து கழிக்கப்படும். ஏனைய அனைத்துக் கடன் பெறும் செலவுகளும், அவை ஏற்படும் காலத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.12 ஏற்பாடுகள்

கடந்த நிகழ்வொன்றின் விளைவாக சட்டரீதியான அல்லது தற்கால ஆக்கபூர்வமான கடப்பாடு இருக்கும் போது விதிகள் அங்கீகரிக்கப்படுவதுடன், கடப்பாட்டை நிவர்த்தி செய்வதற்குப் பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்ச்சல் அவசியப்படலாம் மற்றும் கடமையின் அளவு குறித்து நம்பகமான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளலாம். பணத்தின் நேர மதிப்பின் விளைவு பொருளாக இருப்பின், வரிக்கு முந்தைய விகிதத்தில் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பணப்புழக்கங்களைத் தள்ளுபடி செய்வதனூடாக விதிகள் தீர்மானிக்கப்படுகின்றன. இது பணத்தின் நேர மதிப்பினதும், பொருத்தமான நேரத்தில், ஆதனங்களுக்குப் பிரத்தியேகமான அபாயங்களினதும் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கிறது. தள்ளுபடிப் பொறிமுறை பயன்படுத்தப்படும் போது, காலப்போக்கில் வழங்கலின் அதிகரிப்பு வட்டிச் செலவாக அங்கீகரிக்கப்படுறது.

2.13 ஓய்வூதியப் பயன் கடப்பாடுகள்

(அ) வரையறுக்கப்பட்ட பயன் திட்டம்

வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் எனப்படுவது ஒரு ஓய்வூதியத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், நிறுவனம் ஒன்று மற்றுமொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புகளைச் செலுத்துகிறது. நடப்பு மற்றும் முந்தைய காலங்களில் பணியாளர் சேவையுடன் பயன்களை அனைத்து பணியாளர்களும் செலுத்துவதற்குப் போதியளவு சொத்துகளை நிதியம் கொண்டிருக்காவிடின், நிறுவனத்திற்கு மேலும் பங்களிப்புகளை செலுத்த சட்டபூர்மான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகள் இல்லை. வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் எனப்படுவது வரையறுக்கப்படாத பங்களிப்புத் திட்டம் அல்லாத ஓய்வூதியத் திட்டமாகும்.

பொதுவாக வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள், பணியாளர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெறும் ஓய்வூதியப் பயன்களின் அளவை வரையறுக்கிறது. அவை பொதுவாகவே வயது, சேவை ஆண்டுகள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளைச் சார்ந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட பயன் ஓய்வூதியத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நிதி நிலை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு என்பது, திட்டச் சொத்துகளின் நியாயமான மதிப்பைக் காட்டிலும் குறைவான அறிக்கையிடல் காலத்தின் முடிவில் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியாகும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடானது, கணக்கீட்டு மதிப்பீட்டைப் பயன்படுத்தி, சுயாதீனக் கணக்கீடுகளால் கணக்கிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதி, பயன் செலுத்தப்படும் நாணயத்தில் குறிப்பிடப்படும் உயர்தரப் பெறுநிறுவன முறிகளின் வட்டி விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் பாய்ச்சல்களைக் குறைப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன், மற்றும் தொடர்புடைய ஓய்வூதியக் கடமையின் விதிமுறைகளுக்கு நெருக்கமாகவுள்ள முதிர்ச்சி நிலைக்கு விதிமுறைகள் இருக்கவும் வேண்டும். அத்தகைய முறிகளுக்கு ஒரு சந்தை விலை காணப்படாத போது, அரச முறிகளுக்கான சந்தை விலை பயன்படுத்தப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடுகளின் கணக்கீட்டுக்கான வருடத்தின் சுயாதீன கணக்கீட்டு மதிப்பீட்டுச் சேவை ஒன்றை நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது.

அனுபவ ரீதியான திருத்தங்கள், மற்றும் கணக்கீட்டு அனுமானங்களில் மாற்றங்கள் ஆகியவற்றினால் எழக்கூடிய கணக்கட்டுப் பெறுகை மற்றும் இழப்புகள், அவை எழும் காலப்பகுதியில் மற்ற விரிவான வருமானத்தில் பங்கீட்டுக்கு அறவிடப்படுகிறது அல்லது வரவு வைக்கப்படுகிறது.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

இலங்கையிலுள்ள நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் உறுப்பினர்களாக உள்ளனர், அத்தகைய ஊழியர்களின் அடிப்படை அல்லது திரட்டப்பட்ட வேதனம் அல்லது சம்பளத்திற்கு நிறுவனம் முறையே 12% மற்றும் 3மூ பங்களிப்பை ஆற்றுகிறது.

2.14 அளிப்புகள் மற்றும் மானியங்கள்

ஆதனங்களுடன் தொடர்புடைய பண அளிப்புகள் செலவாக அடையாளம் காணப்படுவதுடன், நிதிநிலை அறிக்கையில் ஒத்திவைக்கப்படுகிறது. மேலும், சொத்துடைய பயனுள்ள ஆயுளின் விரிவான வருமான அறிக்கைக்கு வரவு வைக்கப்படுகிறது.

2.15 நிதியில்லா சொத்துகளின் மிகைப் பெறுமதி

கால வரையற்ற பயனுள்ள ஆயுளைக் கொண்ட சொத்துகள் - நல்லெண்ணம் மற்றும் பயன்படுத்தத் தயாராக இல்லாத, தொட்டறிய முடியாத சொத்துகள் போன்றன - தவணை முறைக்கடன் கரைப்புக்கு உட்படுத்தப்படுவதில்லை என்பதுடன் ஒவ்வொரு வருடமும் மிகைப் பெறுமதிக்காக மதிப்பிடப்படுகிறது. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களானது அதன் தொகையை மீட்டெடுக்க முடியாது என்பதைக் குறிக்கும் போது, தவணைமுறைக் கடன் கரைப்புக்கு உட்படுத்தப்பட்ட சொத்துகள் மிகைப் பெறுமதிக்காக மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

சொத்தின் பெறுமதி, அதன் மீட்டெடுக்கும் தொகையை மீறும் தொகைக்காக ஒரு மிகைப் பெறுமதி இழப்பு அங்கீகரிக்கப்படுகிறது. மீட்டெடுக்கக்கூடிய தொகையானது, ஒரு சொத்தின் நியாயமான மதிப்பைக் காட்டிலும் அதிகமாகும், மிகைப் பெறுமதியை மதிப்பிடும் நோக்கங்களுக்காக, தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய பணப் பாய்ச்சல்களுக்காக (பணத்தை உருவாக்கும் அலகுகள்) குறைந்த மட்டத்திலுள்ள சொத்துகள் குழுவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மிகை மதிப்பை எதிர்கொண்ட நல்லெண்ணம் தவிர்ந்த ஏனைய நிதியில்லா சொத்துகள், ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும், மிகை மதிப்பீட்டை இல்லாதாக்குவதற்கு ஆராயப்படுகின்றன.

2.16 நிதிச் சொத்துகள்

2.16.1 வகைப்படுத்தல்

நிறுவனமானது பின்வரும் வகைப்படுத்தல்கள் மூலமாக அதன் நிதிச் சொத்துகளை வகைப்படுத்துகின்றன: இலாபம் அல்லது நட்டத்தினூடாக ஒரு நியாயமான பெறுமதியில் தவணை முறைக்கடன் கரைப்புச் செலவு, மற்றும் முழுநிறைவான வருமானத்தினூடாக நியாயமான பெறுமதி. நிதிச் சொத்துகளின் ஒப்பந்தப் பணப் பாய்ச்சல் பண்புகள் மற்றும் அவற்றைக் கையாள்வதற்கான நிறுவனத்தின் வணிக மாதிரியில் தங்கியிருக்கும் ஆரம்ப அங்கீகாரத்தில் நிதிச் சொத்துகளின் வகைப்படுத்தல்.

(அ) தவணை முறைக்கடன் கரைப்புச் செலவு

ஆரம்பத் தொகை மற்றும் முதிர்வுத் தொகை, மற்றும் அல்லது ஏதேனும் இழப்புக் கொடுப்பனவு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டின் முதன்மை திருப்பிச்செலுத்துகையை ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கழித்தல், மற்றும் விருத்தியாகின்ற தவணை முறைக்கடன் கரைப்பின் கூட்டல் அல்லது கழித்தலில் அங்கீகரிக்கப்படுகின்ற தொகையை அடிப்படையாகக் கொண்டு சொத்து அளவிடப்படுகிறது. வட்டி வருமானமானது பயனுள்ள வட்டி முறைமையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுவதுடன், இலாபம் மற்றும் நட்டத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது. சொத்து மறுவகைப்படுத்தப்படும் போது அல்லது அங்கீகாரம் இல்லாதாக்கப்படும் போது இலாபம் மற்றும் நட்டத்தின் நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) ஏனைய முழுநிறைவான வருமானத்தினூடாக நியாயமான பெறுமதி

கடன்கள் மற்றும் பெறுகைகள் - தவணை முறைக்கடன் கரைப்புக்குப் பயன்படுத்தப்படும் அதே அடிப்படையில் வட்டி வருமானம், மிகை மதிப்புப் பெறுகைகள் மற்றும் இழப்புகள், மற்றும் வெளிநாட்டுப் பரிமாற்றப் பெறுகைகள் மற்றும் இழப்புகளின் ஒரு பாகம் ஆகியன இலாபம் மற்றும் நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. நியாயமான வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஏனைய முழுநிறைவான வருமானத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. சொத்து மறுவகைப்படுத்தப்படும் போது அல்லது அதன் அங்கீகாரம் இல்லாதக்கப்படும் போது, ஏனைய முழுநிறைவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட நியாயமான பெறுமதியிலான மாற்றங்கள் மற்றும் பங்கீட்டில் திரட்டப்பட்டவை ஆகியன ஏனைய முழுநிறைவான வருமானத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் ஒரு சொத்தை மையப்படுத்தியுள்ள இலாபம் மற்றும் நட்டத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. அது தவணை முறைக்கடன் கரைப்புச் செலவில் அளவிடப்பட்டால் இலாபம் மற்றும் நட்டத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமோ, அதே தாக்கத்தை இது ஏற்படுத்துகிறது.

பங்கீட்டுக் கருவிகளில் முதலீடுகள் - ஏனைய முழுநிறைவான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போது, முதலீட்டின் செலவுக்கான ஒரு பகுதியின் மீட்பை அவை தெளிவாகப் பிரதிநிதித்துவப்படுத்தாத வரை, இலாபம் அல்லது நட்டத்தில் பங்கிலாபங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. சொத்து விற்கப்பட்டாலும் அல்லது அதற்கான மிகைப் பெறுமதி வழங்கப்பட்டாலும், இலாபம் அல்லது நட்டத்திற்கு அவை ஒருபோதும் மீள் சுழற்சி செய்யப்படுவதில்லை என்பதுடன், ஏனைய முழுநிறைவான முதலீட்டில் நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(இ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதி

தவணை முறைக்கடன் கரைப்புச் செலவு அல்லது ஏனைய முழுநிறைவான வருமானத்தினூடாக நியாயமான பெறுமதிக்கான அளவுகோல்களை அடையாத சொத்துகள், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

2.16.2 அங்கீகாரம் மற்றும் அளவீடு

தொடர்ச்சியான கொள்வனவுகள் மற்றும் நிதிச் சொத்துகளின் விற்பனை ஆகியன வணிகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன - நிறுவனம் சொத்தை விற்பதற்கு அல்லது வாங்குவதற்கு முடிவு செய்யும் திகதி. முதலீடுகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, மற்றும் அனைத்து நிதிச் சொத்துகளுக்குமான பரிவர்த்தனைச் செலவுகள் இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன, மற்றும் முழுநிறைவான வருமானத்தின் அறிக்கையில் பரிவர்த்தனைச் செலவுகள் செலவிடப்படுகின்றன. முதலீடுகளின் மூலமாகப் பணப் பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமை காலாவதியாகும் போது, அல்லது உரிமத்தின் அனைத்து அபாயங்களும், வெகுமதிகளும் பெருவாரியாக நிறுவனத்தினால் கைமாற்றப்பட்டிருக்கும் போது, நிதிச் சொத்துகளின் அங்கீகாரம் இல்லாதாக்கப்படுகிறது.

ஏனைய பெறுகைகள்/(இழப்புகள்) ஆகியவற்றுக்கு உட்பட்டு முழுநிறைவான வருமானத்தின் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள "பெறுகை அல்லது இழப்பினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துகள்" என்னும் வகைப்படுத்தலின் நியாயமான பெறுமதியிலான மாற்றங்களினூடாக எழும் பெறுகைகள் மற்றும் இழப்புகள் - அவை மேலெழும் காலப்பகுதியிலான நிகர பெறுமதி

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் பங்கிலாப வருமானம், கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான நிறுவனத்தின் உரிமம் நிறுவப்படும் போது ஏனைய வருமானத்தின் ஒரு பகுதியாக முழுநிறைவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகிறது.

விற்பனைக்குக் கிடைக்கப்பெறுவதாக உள்ள பணம் மற்றும் பணம் சாராத பிணைகளின் நியாயமான பெறுமதியில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் ஏனைய முழுநிறைவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.17 நிதிக் கருவிகளை ஈடுசெய்தல்

நிதிச் சொத்துகள் மற்றும் ஆதனங்கள் ஈடுசெய்யப்படுகின்றன மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்ய சட்டமுறையாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருக்கும்போது நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படும் நிகர தொகையும் ஈடுசெய்யப்படுகின்றன. சட்டமுறையாக நடைமுறைப்படுத்தப்படக்கூடிய உரிமையானது எதிர்கால நிகழ்வுகளின் மீது தங்கியிருக்கக்கூடாது மற்றும் வணிகத்தின் போதும், நிறுவனத்திற்கு அல்லது எதிர்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

(குறிப்பிடப்படாத விடுத்து, குறிப்புகளில் முழுத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

தரப்பினருக்குக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத போதும், நிதி ஆதாரங்களின் பற்றாக்குறையின் போதும், திவாலான நிலையின் போதும் இயல்பான போக்கில் செயற்படுத்தப்பட வேண்டும்.

2.18 நிதிக் கருவிகளின் மிகைப் பெறுமதி

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும், நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் குழு மிகைப் பெறுமதி கொண்டுள்ளது என்பதற்கான புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை நிறுவனம் மதிப்பிடுகிறது. ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் தொகை மிகைப் பெறுமதி பெறுகிறது மற்றும் சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர் (ஒரு "இழப்பு நிகழ்வு") ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக குறைபாட்டுக்கான புறநிலை சான்றுகள் இருந்தால் மட்டுமே குறைபாடு இழப்புகள் ஏற்படும். அத்தோடு அந்த இழப்பு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப் பாய்ச்சல்களில் அல்லது நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துகளின் தொகையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கடனாளிகள் அல்லது கடனாளியில் ஒரு குழுவினர் குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடிகள், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமை அல்லது வட்டி அல்லது அடிப்படைக் கொடுப்பனவை மேற்கொள்ள முடியாமை, அவை திவாலாகும் அல்லது ஏனைய நிதி மறுகட்டமைப்புக்குள் அகப்படும் என்கின்ற சாத்தியப்பாடு, மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைகள் மற்றும் நிலுவை போன்றவற்றில் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப் பாய்ச்சல்களில் அளவிடக்கூடிய ஒரு குறைவு ஏற்படுகிறது என்பதைக் குறிக்கும் நோக்குறுத் தரவுகள் ஆகியவற்றை எதிர்கொள்வார்கள் என்பதை உள்ளடக்கிய குறித்துக்காட்டல்களை மிகைப் பெறுமதிக்கான ஆதாரம் உள்ளடக்கியிருக்கும்.

12 மாத அல்லது ஆயுட்கால அடிப்படையில் SLFRS 9 தனது கடன்கள், கடன் பிணைகள் மற்றும் வணிகப் பெறுகைகள் ஆகியவற்றின் மீதான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளைப் பதிவிடுவதற்கு அது எதிர்பார்க்கப்படுகிறது. வாழ்நாள் எதிர்பார்க்கை கடன் இழப்புகளுக்கு சமமான ஒரு தொகையில் எப்போதும் வணிகப் பெறுகைகளுக்கான இழப்புக் கொடுப்பனவு அளவிடப்படுகிறது. ஆரம்ப அங்கீகாரம் மற்றும் எதிர்பார்க்கை கடன் இழப்புகளை மதிப்பிடும் போது நிதிச் சொத்தின் கடன் அபாயம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கு, பொருத்தமற்ற செலவு அல்லது முயற்சியின்றி, இயைபான மற்றும் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் ஆதரவான தகவல்களை நிறுவனம் கருத்திற்கொள்கிறது. எதிர்காலத்-தேடும் தகவல்கள் உள்ளடங்களாக, நிறுவனத்தின் வரலாற்று அனுபவங்கள் மற்றும் தகவல் வழங்கப்பட்ட கடன் மதிப்பாய்வுகளை அடிப்படையாகக் கொண்ட, அளவைசார் மற்றும் பண்புசார் தகவல் பகுப்பாய்வுகளை இது உள்ளடக்கியிருக்கிறது. உரிய நேரத்தைத் தாண்டி 365 நாட்கள் கடந்த பின், நிதிச் சொத்துகள் மீதான குறிப்பிடத்தக்க அளவு கடன் அபாயம் அதிகரித்துள்ளது என்பதாக நிறுவனம் கருதுகிறது.

2.19 நிதி ஆதனங்கள்

வணிகம் மற்றும் ஏனைய வழங்குகைகள், வங்கிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் மற்றும் சாதகமற்ற நாணய முன்னோக்கு ஒப்பந்தம் ஆகியவற்றை நிறுவனத்தின் நிதி ஆதனங்கள் உள்ளடக்கியுள்ளன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக அடையப்பெறும் நியாயமான பெறுமதியிலான நிதி ஆதனங்கள் தவிர்ந்து, அனைத்து நிதி ஆதனங்களும் முதலாவதாக அவர்களுடைய நியாமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதைத் தொடர்ந்து, தள்ளுபடியின் விளைவு புறக்கணிக்கக்கூடியதாக இருக்கும் வரை, பயனுள்ள வட்டி முறைமையைப் பயன்படுத்தி தவணை முறைக்கடன் கரைப்புச் செலவில் அளவிடப்படுகிறது.

2.20 வருமான அங்கீகாரம்

பொருளாதார நலன்கள் நிறுவனத்தை நோக்கிய நகர்வடையும் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய வருமானம் மற்றும் செலவு, அல்லது எற்படவுள்ள செலவு ஆகியன நம்பகத்தன்மையுடன் அளவிடப்படலாம் என்கின்ற அளவிற்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது. பெறப்பட்ட கரிசனை அல்லது வணிக விலைக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகள் பெறக்கூடிய நிகர பெறுமதியின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகிறது. வருமானத்தின் அங்கீகாரத்திற்குப் பின்வரும் குறிப்பிடப்பட்ட அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(அ) சேவை வழங்கல்

சேவைகள் வழங்கப்படக்கூடிய அல்லது நிகழ்த்தப்படக்கூடிய கணக்கீட்டுக் காலப்பகுதியில் சேவை வழங்கலினூடாக வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

(ஆ) வட்டி

சேகரிப்பு சந்தேகத்திற்கு உட்படாத வரை, வருமான வட்டியானது செலுத்தப்படாத வட்டியாகக் கருதப்படும்.

(இ) வாடகை வருமானம்

திரட்டல் அடிப்படையில் வாடகை ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாடகை வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

(ஈ) உரிமையாளர் கட்டணம் மற்றும் சலுகைகள்

இயைபான ஒப்பந்தத்தின் கூறுகளுடன் தொடர்புடைய திரட்டல் அடிப்படையில் உரிமையாளர் கட்டணம் மற்றும் சலுகைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(உ) சர்வதேச/உள்நாட்டுத் தரையிறக்க மற்றும் தரிப்பிட வசதிகள்

தரையிறக்க மற்றும் தரிப்பிட வசதிகள், விமானம் சுமந்து செல்லக்கூடிய உச்சபட்ச பாரத்தை அடிப்படையாகக் கொண்டது, திரட்டல் அடிப்படையில் அங்கீகாரம் பெறுதல் மற்றும் விமான நிலையத்தில் விமானப் பொருட்கள் ஏற்றிடத்தில் அறவிடப்படும் குறைந்தபட்சக் கட்டணம் மற்றும் தரிப்பிடும் காலப்பகுதி ஆகியவற்றுக்கு அமைவாகவும் அவை இருத்தல் வேண்டும்.

(ஊ) வான்வழி வருமானம்

விமானத்தின் MTOWயை அடிப்படையாகக் கொண்டு வான்வழி வருமானம் கணக்கிடப்படுவதுடன், திரட்டல் அடிப்படை ஒன்றில் அவை அங்கீகரிக்கப்படுகின்றன.

(எ) பயணிகளை ஏற்றும் பாலத்திற்கான கட்டணங்கள்

பயணிகளை ஏற்றும் பாலத்தின் பயன்பாட்டு நேரம் மற்றும் விமானத்தின் வகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, பயணிகளை ஏற்றும் பாலத்தின் வருமானம் கணிப்பிடப்படுகிறது. திரட்டல் அடிப்படையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

(ஏ) விமான ஏற்று வரி

நிதிச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையின் சிவில் விமான அதகார சபையினால் விமான ஏற்று வரி சேகரிக்கப்படுகிறது, மற்றும் 9.75 அமெரிக்க டொலர்கள் இலங்கை விமான மற்றும் விமான சேவைகளுக்கு அனுப்பப்படுகின்றன. திரட்டல் அடிப்படையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

(ஐ) நுழைவு அனுமதிக் கட்டணம், தரிப்புக் கட்டணம் (வாகனங்கள்), பெயரட்டை

பண அடிப்படையில் வருமானம் சேகரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

(ஒ) ஏனையவை

கொடுப்பனவு முறைமையைப் பொறுத்து திரட்டல் மற்றும் பண அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது கொடுப்பனவு முறைமையை அடிப்படையாகக் கொண்டு பணம் மற்றும் திரட்டல் அடிப்படையில் ஒய்வறை வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

தேய்மான வருமானம் திரட்டல் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது

கொடுப்பனவு முறைமையைப் பொறுத்து ஏனைய வருமானங்கள் திரட்டல் மற்றும் பண அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

3 நிதி இடர் முகாமைத்துவம்

3.1 நிதி இடர் காரணிகள்

நிறுவனத்தின் செயற்பாடுகள் பல்வகையான நிதி இடர்களைத் தோற்றுவிக்கின்றன: சந்தை இடர் (வெளிநாட்டு நாணய இடர், பணப் பாய்ச்சல் மற்றும் நியாயமான பெறுமதியில் வட்டி விகித இடர் உள்ளடங்களாக), கடன் இடர் மற்றும் திரவ இடர்.

(அ) சந்தை இடர்

(i) வெளிநாட்டு நாணய மாற்று இடர்

நாணய மாற்று விகிதங்களில் ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளுக்கு நிறுவனம் ஈடு கொடுக்கக்கூடியதாக இருப்பதுடன், அமெரிக்க டொலர், யூரோ மற்றும் ஜப்பானிய யென் ஆகியவற்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுக்கும் அவை அடிப்படையாக உட்படுத்தப்படுகின்றன. நிறுவனத்தின் தொழிற்பாட்டு நாணயமாக இருப்பது, அதிகமான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படக்கூடிய இலங்கை ரூபாய் என்பதுடன், பெரும்பாலான ஏனைய நாணயங்கள் கடன் மீள்செலுத்துகை நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட வணிகம் மற்றும் ஏனைய பெறுகைகள் மற்றும் வணிகம் மற்றும் ஏனைய வழங்குகைகள் வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை நாணயத்தில் வழங்கப்படும் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள், மொழிபெயர்ப்பு இடர் மற்றும் பரிவர்த்தனை இடர் ஆகியவற்றினூடாக வெளிநாட்டு நாணய மாற்று ஏற்றத்தாழ்வுகளினால் பாதிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். உதாரணமாக, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியானது, திறைசேரித் திணைக்களத்தினூடாக வெளிநாட்டு நாணயங்களினால் பெறப்பட்ட கடன்களின் மீள்செலுத்துகையின் மீதான அதன் தாக்கத்தின் மூலமாக நிறுவனத்தின் இலாபத்தின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

"ஏனைய அனைத்து மாறிலிகளும் நிலையானதாக இருக்க, அமெரிக்க டொலர், யூரோ மற்றும் ஜப்பானிய யென் ஆகியவற்றுக்கு எதிரான இலங்கை ரூபாவின் நாணய மாற்று விகிதத்தில் சாத்தியமான மற்றும் நியாயமான மாற்றத்தை நிறுவனம் உணர்ந்துள்ளமையை பின்வரும் அட்டவணை காட்டுகிறது. நிறுவனத்தின் காட்சிப்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் நாணயத்திற்குப் பின்னர் - இலங்கை ரூபாய் - நிறுவனத்தின் நிதிக் கருவிகள் குறிப்பிடப்பட்ட பிரதான நாணயங்களாக அமெரிக்க டொலர் மற்றும் ஜப்பானிய யென் ஆகியன காணப்படுகின்றன. அமெரிக்க டொலர், யூரோ மற்றும் ஜப்பானிய யென் ஆகியவற்றின் மாற்று விகிதங்களில் ஏற்படும் தாக்கம் இலாபத்தில் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபாவுக்கு எதிரான அமெரிக்க டொலரின் பரிமாற்ற விகிதத்தைப் புரிந்து கொள்ளல்

	2022	2021
	இலாபத்தில் (இலங்கை ரூபாய்) அதிகரிப்பு/(குறைவு)	இலாபத்தில் (இலங்கை ரூபாய்) அதிகரிப்பு/(குறைவு)
அமெரிக்க டொலரின் 10% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 10%)	(2,295,761,101)	(212,157,236)
அமெரிக்க டொலரின் 15% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 15%)	(3,443,641,652)	(318,235,854)
அமெரிக்க டொலரின் 20% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 20%)	(4,591,522,203)	(424,314,471)

இலங்கை ரூபாவுக்கு எதிரான யூரோவின் பரிமாற்ற விகிதத்தைப் புரிந்து கொள்ளல்

	2022	2021
	இலாபத்தில் (இலங்கை ரூபாய்) அதிகரிப்பு/(குறைவு)	இலாபத்தில் (இலங்கை ரூபாய்) அதிகரிப்பு/(குறைவு)
யூரோவின் 10% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 10%)	(4,578,571)	(34,882)
யூரோவின் 15% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 15%)	(6,867,856)	(52,323)
யூரோவின் 20% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 20%)	(9,157,142)	(69,764)

இலங்கை ரூபாவுக்கு எதிரான ஜப்பானிய யென்னின் பரிமாற்ற விகிதத்தைப் புரிந்து கொள்ளல்

	2022	2021
	இலாபத்தில் (இலங்கை ரூபாய்) அதிகரிப்பு/(குறைவு)	இலாபத்தில் (இலங்கை ரூபாய்) அதிகரிப்பு/(குறைவு)
ஜப்பானிய யென்னின் 10% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 10%)	(2,097,366,253)	(1,928,424)
ஜப்பானிய யென்னின் 15% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 15%)	(3,146,049,379)	(2,892,637)
ஜப்பானிய யென்னின் 20% பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு (2021 - 20%)	(4,194,732,505)	(3,856,849)

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

(குறிப்பிடப்படாத விடுத்து, குறிப்புகளில் முழுத் தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

(ii) பணப் பாய்ச்சல் மற்றும் வட்டி விகித இடர் நியாயப் பெறுமதி

அமெரிக்க டொலர், யூரோ, மற்றும் ஜப்பானிய யென் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நீண்ட கால பெறுகைகளிலிருந்து நிறுவனத்தின் வட்டி விகித இடர் மேலெழுகிறது. இவை நிலையான விகிதத்தில் வழங்கப்படுவதுடன், பெறுகைகள் மீதான பணப் பாய்ச்சல் வட்டி விகித இடர்களை அது தணிக்கிறது. மாறிலி விகிதங்களில் பேணப்படும் பணத்தினால் இவை மேலும் தணிக்கப்படலாம். நிலையான விகிதத்தில் வழங்கப்படும் கடன்கள் நிறுவனத்தை நியாயமான மதிப்பு வட்டி விகித இடருக்கு வெளிப்படுத்துகின்றன.

கடந்த 10 வருடங்களாக நிறுவனமானது இந்த வட்டி விகிதங்களில் மாற்றங்களைக் கருத்திற்கொண்டுள்ளதுடன், வட்டி விகிதத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் பங்கீட்டில் பொருள்சார் விளைவைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுவதில்லை.

(ஆ) கடன் இடர்

வெளிவாரித் தரப்பினரிடமிருந்து வணிகம் மற்றும் ஏனைய பெறுகைகள் மூலமாக கடன் இடர் மேலெழுகிறது.

(இ) திரவ இடர்

பணப் பாய்ச்சல் எதிர்வுகூறல் நிதியியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. தொழிற்பாட்டுத் தேவைகளை அடைந்துகொள்வதற்குப் போதியளவு பணம் அதனிடம் இருப்பதாக உறுதிப்படுத்துவதற்கான நிறுவனத்தின் திரவத் தேவைப்பாடுகளுடைய கடந்த காலத் தரவுகளின் பயன்பாட்டை நிதிப் பிரிவு கண்காணிக்கிறது. நிறுவனத்தின் கடன் நிதித் திட்டங்கள், உடன்படிக்கை இணக்கப்பாடு, மற்றும் நிதி நிலை விகித இலக்குகளின் உள்ளகக் கூற்றின் இணக்கப்பாடு மற்றும், செல்லுபடியாகுமெனின் வெளிப்புற ஒழுங்குவிதிசார் அல்லது சட்டத் தேவைப்பாடுகளை - உதாரணமாக நாணயக் கட்டுப்பாடுகள் - அத்தகைய கடந்த காலத் தரவுகளின் பயன்பாடு கருத்திற்கொள்கிறது.

திரவ இடரைத் தணிப்பதற்காகத் தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவத்திற்குத் தேவையான நிலுவைக்கு மேலதிகமாக நிறுவனம் வைத்திருக்கும் உபரிப் பணம் குறுகிய கால அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்படுகின்றன.

3.2 இடர் முகாமைத்துவம்

